

# ஸ்ரீ சத்குருவின்
# கனராக பஞ்சரத்ன க்ருதிகள்

**Dr. Varadachari Sadagopan**
IBM Research New York USA

*First Edition* 1991
*Second Edition* 2006

© AUTHOR

**Price**
*Book Version Rs.200 /- **
CD Rom Version Rs 100 /- *

*Copies can be had from :*

Mrs.PadmaVeeraraghavan
A5, Kailash Flats
19&20, Station Road,
West Mambalam, Chennai.
Pin 600033

**or**

B.Sreenivas
#102, Ranka Manor
2/9, Artillery Road, Ulsoor,
Bangalore. Pin 560 008

**or**

Send an e-mail to pancharatnakirthis@yahoo.com

*Original book*

| | | |
|---|---|---|
| *Laser Typeset by* | : | **M/s. GUARDIAN** Madras - 600 017. |
| *Printed at* | : | **M/s. RAJAN & CO. PRINTERS** 1, Goomes Street, Madras - 600 001 |

* Proceeds from the sale of this book goes to the developmental activities of the Department of Sanskrit, Rajah's College, Thiruvaiyaru.

# ஸ்ரீ சத்குருவின்

# கனராக பஞ்சரத்ன க்ருதிகள்

ஸ்ரீ சத்குரு த்யாகப்ரஹ்ம்மம், தன் வாழ்நாளிலேயே ஸ்ரீராமசந்திரனை கண்ணால் கண்டு, ஸேவித்துக் கொள்ளும் பாக்யம் பெற்றவர். அந்த ஸ்ரீராமபிரானின் ஸேவையில் தன் வாழ் நாளை கழித்து, அந்த ஸேவையில் ஏற்பட்ட ஆனந்த அனுபவத்தால் ஆயிரக்கணக்கான ஸ்ரீ ராமபக்தி நிறைந்த கீர்த்தனங்களை நமக்கு குலதனமாக அவர் அளித்தார். அந்த கீர்த்தனங்களுள் விசேஷ கொளரவம் பெற்றவை கனராக பஞ்சரத்ன கீர்த்தனங்கள். அவை ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மத்தின் ஆராதனை தினத்தில், ஸங்கீத வித்வான்களால் முதலாக பாடப்படுகின்றன. ஸ்ரீ ராமபக்தி ததும்பும் இந்த கீர்த்தனங்களின் விசேஷ அர்த்தங்கள் பற்றிய கடிதங்கள் இங்கு புஸ்தக ரூபத்தில் வெளியிடப் பட்டுள்ளன.

*Author*

*Dr. Varadachari Sadagopan*

*IBM Research, New York, USA*

ஸ்ரீ:

*டாக்டர். தி. ந. ஆராவமுதன்*
*பேராசிரியர், ஆய்வு மற்றும் முதுகலை ஸமஸ்க்ருதத் துறை,*
*அரசர் கல்லூரி, திருவையாறு.*
*பதிப்பாசிரியர் மற்றும் இணையாசிரியர்,*
*ஸ்ரீ காஞ்சி பேருளாளன். (ஆன்மீக மாதப் பத்திரிக்கை)*
*கௌரவ முதல்வர் மற்றும் செயலர்,*
*ஸ்ரீ ஹயக்ரீவ வித்யாபீடம், சென்னை -113.*

---

மிகப்பெரியதாக உள்ள இப்பூவுலகில் அனைவரும் விரும்புவது இடைவிடாத இன்பமே. இதைப்பெற ஒரே வழி நிலையற்ற சிற்றின்பத்தைத் தவிர்த்து பேரின்பத்தைப் பெற பெரியோர்கள் பகர்ந்தவை பரமனை அடைதலேயாகும். அவன் இனையடிகளை அடைய பக்தி ப்ரபத்தியே உபாயமாகும். இயந்திர வாழ்வைப் பெற்றுவரும் இக்கலியுகத்தில் ப்ரபத்தி என்னும் சரணாகதியே நம்மை உய்விக்கும். இதற்காக ஆயிர நாமம் கொண்டு அரியை அன்றாடம் அர்ச்சிக்க இயலுமோ எனில் கவலை வேண்டாம். 'இராமநாமத்தை' ஜபித்தாலே அனைத்து பலனும் கிடைக்கும் என பரமசிவன் உபதேசத்தை சிரமேற்கொண்டு 96 கோடி ராமஜபத்தினால், கீர்த்தனத்தினால் இராமபிரானை தரிசித்து அவன் அருள் பெற்றவர் 'ஸ்ரீ தியாகபிரஹ்மம்'. இவர் இயற்றிய கனராக பஞ்சரத்ன க்ருதிகள் ஸம்ஸார ஸாகரத்தில் உழன்றுவரும் பாமரர்களும் பரமனிடம் பக்தி கொள்ளச் செய்யவல்லதாகும். இந்த க்ருதிகள் வேத புராண இதிஹாஸங்களின் ஸாரமே என்றும் ஆழ்வார்கள் ஆசார்யர்களின் அருள் மொழியை அனுசரித்தவை என்றும் ஸங்கீதமே அறியாதவர்களும் அறியும்படி ஸ்ரீ தியாகபிரஹ்மத்தின் பஞ்சரத்ன கீர்த்தனைகளில் காணும் அரிய பொருள்களை எளிய தமிழில் முன்னோர்களை அனுசரித்து, கண்ணன் அர்ஜுனனை வ்யாஜமாகக் கொண்டு உலகிற்கு உபதேசித்த கீதை போன்று ஸ்ரீமான் டாக்டர் வரதாசாரி சடகோபன் தம் ஸகோதரிக்குக் கடிதம் எழுதுவதை வ்யாஜமாக வைத்து இசை உலகத்திற்கு மட்டுமன்றி வேதாந்த உலகிற்கும் ஒரு நூலை படைத்துள்ளது பாராட்டத் தகுந்ததாகும்.

இந்நூலின் வாயிலாக இந்நூலாசிரியருக்குள்ள இசைப்புலமை மட்டுமல்லாது ஸம்ப்ரதாய சாத்திரங்களுடன் ஆழ்வார் ஆச்சார்யார்கள் அருளிய பிரபந்தங்கள், ஸ்தோத்திரங்களில் இவருக்குள்ள ஈடுபாடு போற்றத்தகுந்ததாய் அமைந்திருப்பதை வாசகர்கள் உணர்வர். இந்நூல் ஒவ்வொருவரின் இல்லத்தில் இடம்பெற்று பூஜிக்கத்தகுந்த ஒன்றாகும். எனவே இந்நூலின் இரண்டாம் பதிப்பு தற்பொழுது ஆசார்ய பகவத்பாத அனுக்ரஹத்துடன் சி. பா.ஸ்ரீனிவாஸனின் முயற்சியால் வெளிவருவதை நினைத்து பெருமகிழ்வு கொள்கிறேன். இதுபோன்ற இசைத்தொண்டோடு ஸம்ப்ரதாயத் தொண்டுகள் பலவற்றையும் ஸ்ரீமான் வரதாசாரி சடகோபன் அவர்கள் மேற்கொண்டு உலகிற்கு உபசரிக்க ஆரோக்ய திடகாத்ரத்துடன் நீண்ட ஆயுளையும் அருள பேருளாளப் பெருந்தேவி தாயாருடன் ஸ்வாசார்ய ப்ராசார்ய பூர்வாசார்யர்களின் திருவடிகளை தஞ்சமடைகிறேன்.

இவன்

தி.ந.ஆராவமுதன்
தில்லைஸ்தானம்.
ஜனவரி 1, 2006.

## Author’s Preface to Second Edition

Dear Raama BhajthAs :

Some fourteen years ago , adiyEn had the good fortune of sharing some thoughts on the Vaibhavam of the Gana Raaga Pancharathnams of Sadhguru ThyagarAja SwamigaL.

Great NaadhOpaasakAs blessed that monograph with their anugraha bhAshaNams for which adiyEn is grateful.

Few weeks back , a devout rasika with deep roots in Cauvery delta , Sriman B.Sreenivas of Thanjavur wrote to me and mentioned that it would be timely to reprint and release that 1991 Version of the monograph on Gana Raaga Pancharathnams of ThyAga Brahmam . Sriman Sreenivas volunteered to assemble this monograph using multimedia technology ( Text , audio and Images) in the form of a CD ROM. Multiple images of the Archaa Vigrahams of Lord Raamachandra , audio recording of the rendering of Pancharathnams on a previous AarAdhanam day are included with the annotated commentary on the individual Pancharathnams .

Sri Sreenivas has finished the task in an admirable manner and has taken the initative to release it on PaarTiva Samvathsara BaguLa Panchami dinam ( Jan 19,2006) at the BrundhAvanam of Saint ThyagarAja at ThiruvayyARu.

It is a great bhAgyam for me to join in this kaimkaryam and pray to Sadhguru Swamy and his AarAdhana Moorthy , Sri SithA SamEtha Raamachandran to shower all their blessings on Sriman Sreenivas and his family for this labour of love in service to today's NaadhOpAsakAs in all continents!

Last but not the least I would like to thank profusely Dr.T.N.Aravamudhan from the Sanskrit College, ThiruvaiyyARu for providing his valuble inputs in a nutshell as a foreword to this second edition. May the waves of Mother Cauvery moisten the hearts of Sangeetha RasikAs with durable Raama Bhakthi and keep alive Saint ThyagarAjA's Vaibhavam as long as Stars and Moon are here !

AdiyEn , Oppiliappan Koil VaradAchAri Sadagopan
(Camp) : New York , USA
January 3 , 2006

।। श्रीः ।।

श्री जन्द्रमौलीश्वराय नमः

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य

## जगदगुरु - श्रीशङ्करभगवत्पादाचार्यपरम्परागतं ॉ श्रीकामकोटिपीठमहासंस्थानम् ।

काञ्चीपुरम् - ६३१ ५०२

19.2.1990

कलौ चाऽस्मिन्युगे संसारसागरादुज्जीवकं एकमात्रं उपायं भवति भक्तियोगप्रधानभूतं स्वाऽभीष्टदैवनामस्मरणम् । अगणितमूर्तिवैभवस्य चेश्वरस्य असंख्येयेषु नामसु "तारकनाम" इति प्रसिद्धं श्रीराम नाम । इदमेव नाम वाराणसी क्षेत्रस्य मुकिहायकत्वप्रदायकं पूर्णाऽवतारे श्री पुराणपुरूषेणाऽप्यलङ्कृतम् । श्री पंचनदक्षेत्रनिवासिनः पक्वभलयः श्रीत्यागराजस्वामिनः स्वसर्वस्वमपि श्रीरामचन्द्रमेवाऽनुगवितवन्तः। वैदिकधर्मनिरताश्च इमे स्वेष्टदेवोपासनायां सामवेदोद्धतम्य सप्तस्वरप्रधानस्य संगीतस्य मुख्यतामवलम्ब्य श्रीरामचन्द्रस्य जीवनचरितं भावरागप्रधानभूत कीर्तनरूपेण प्रगाच जीवनसफलतां परिगणितवन्तः। श्री त्यागवह्मोपनिषदिति प्रख्यातेषु चैतेषु मध्ये पंचसु घनरागेणु निवद्धानि पंचकीर्तनानि "पंचरत्नकीर्तनानि" इति प्रसिद्धानि ।

एतेषां च पंचानां रत्नत्वप्रतिपादकं भक्तियोग सारगर्भितत्वविशदीकारकं सुषदच्छेयेन दिव्यप्रबन्ध उपनिषदा हानुभवोकि भरितेभ्यः ग्रन्थेभ्यः स्थलोचित्ते ष्वरणैश्च विलसमानां व्याख्यामे कां द्रविडयां कृतवान् ओप्पिलियप्पन्कोविलभिजनः डार-शठकोपः सामान्यतः सर्वेषां विशेषतः गायकानां गम्भीरज्ञानदायिकां सारगर्भितां व्याख्यामेतामालोकय संतुष्यामः । आशास्महे च व्याख्यातुः श्रेयःश्रेयोऽभिवृद्धि श्री सीतालक्ष्मण भरत शत्रुघ्न इनूमत्समेत श्री रामचन्द्रप्रसादेन ।

नारायणस्मृतिः

**Dr. Semmangudi R. Srinivasa Iyer,**
No. 1, Lloyds Ist Lane,
Madras - 600 014.

ஸ்ரீராமஜயம்

ஸ்ரீ சடகோபன் அவர்கள் அமெரிக்காவில் இருந்து கொண்டு சென்னையிலிருக்கும் அவரது ஸகோதரி ஸ்ரீமதி பத்மாவிற்கு, ஸ்ரீ த்யாகப்ரம்மம், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ ச்யாமா சாஸ்திரிகள் முதலான மஹனீயர் களான வாக்கேய காராளின் கீர்த்தன ரத்னங்களை அராய்ந்து அவைகளின் கருத்துரைகளை விரிவாக எழுதியுள்ளதான தொகுப்புக்களை என்னிடம் அனுப்பித்தந்து நான் பார்வையிட்டு ஆச்சரிய மடைந்தேன்.

அவைகளில் ஸ்ரீ த்யாகப்ரம்மத்தினால் பாடி அருளப்பட்ட கனராக பஞ்ச ரத்ன க்ருதிகளுக்கு எழுதியுள்ள விரிவுரை ரொம்பவும் போற்றத்தக்கதாக உள்ளது. ஸ்ரீ சடகோபன் அவர்கள் மிகவும் பரிச்ரமப் பட்டு ஸ்ரீ த்யாகப்ரும்மத்தின் மேம்பாட்டினையும் விவரித்து அவர்களது பஞ்சரத்ன க்ருதிகளில் பொதிந்து கிடக்கும் கருத்துக்களை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக விளக்கியுள்ளார்.

ஸத்குரு ஸ்ரீ த்யாகப்ரும்மம் வைஷ்ணவ ஸித்தாந்த நூல்களையும் இதிகாச புராணங்களையும் எந்த அளவு வேரூன்றி படித்து அவைகளின் ஸாரத்தை உணர்ந்திருந்தால் அவ்வாறு பாடியருளிய பஞ்சரத்ன க்ருதிகளில் உயர்ந்த கருத்துக்களை ரத்னச்சுருக்கமாக கூறி இருக்க இயலும் என்பதை நினைத்துப் பார்ப்போமேயானால் மிகவும் திகைக்கவே செய்கிறது.

ஒவ்வொரு க்ருதியையும் எடுத்துக்கொண்டு அதனதன் ஸாஹித்யத்தின் உட்கருத்திற்கேற்ப ராகங்களின் லக்ஷணத்தை அதற்கேற்றவாறு ஸங்க்ரஹித்துக் கூறியிருப்பதும் மிகவும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது.

ஜகதானந்த காரக என்ற நாட்டை ராக க்ருதியை ஸஹஸ்ரநாம அர்ச்சனாரூபமாக வர்ணித்துள்ளதும், அங்கங்கே காணப்படும் ராமாயணக்கதைக்குறிப்புகளும் விசேஷ அம்சங்களாகும்.

துடுகுகலநன்னே தொரகொடுகு ப்ரோசுரா என்ற கௌளைராக கீர்த்தனையில், பரமகாருணிகரான ஸ்ரீத்யாகப்ரம்மம், அக்காலத்தில் பரவி இருந்த இழிவுகளை தமதாக பாவித்து விளக்கி இருப்பதை அறியலாம். ஆத்ம விமர்சன கீர்த்தனங்களை ஸ்ரீஸத்குரு த்யாகப்ரும்மம் செய்துள்ள ஸம்பிரதாயம், பல ஆழ்வாராதிகள், நாயன்மார்கள் ஆசார்ய புருஷர்கள் வழியில் வந்த பழமையான சம்பிரதாயம் என்பதை ஸ்ரீ சடகோபன் நனகு விளக்கியுள்ளார்.

இவ்வாறு ஒவ்வொரு க்ருதியாக எடுத்துக்கொண்டு அததில் காணும் கருத்துக்களை, ஸ்ரீ சடகோபன் அவர்கள் ஆழ்வார் பாசுரங்களிலிருந்தும், மற்றும் ஏனைய வைஷ்ணவ ஸித்தாந்த நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டி விளக்கி இருக்கும் அற்புதத்தை அவ்வளவு ஸுலபமாக எழுத்தால் விளக்க முடியாத தொன்றாகும்.

ஸாதிஞ்செனே என்ற ஆரபிராக க்ருதியில் ஒரு சரணத்தில் "ரங்கேசுடு" என்ற ஒரு பதப்ரயோகத்திற்கு ஸ்ரீ சடகோபன் காட்டிய மேற்கோள், மிகவும் அற்புதம். ஆழ்வார்களில் சிலர் எங்ஙனம் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தை

கோகுலமாகவே பாவித்து அரங்கநாதனை கோபஸ்த்ரீ ரமணனாகவுமே பாவித்துப்பாடியுள்ளார்கள் என்று ஸ்ரீ சடகோபன் அழகாக வர்ணிதுள்ளது மிகவும் போற்றத்தக்கது.

கனகனருசிரா என்ற வராளி ராக க்ருதியில் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் ரூப லாவண்ய ஸௌந்தர்யத்தை கொண்டாடப்பட்டது. ஸ்ரீராமன், ஸூர்யனைப்போல் உலகங்களை எல்லாம் உடையவன், சந்திரனைப்போல் உலகங்களை எல்லாம் தனது தயையால் குளிரச்செய்பவன், அழகிய மன்மதனைப் போன்றவன் என்று அர்த்தம் பொதிந்த வால்மீகியின் ச்லோகத்தை மேற்கோளாகக்காட்டி விவரித்தமுறை மிகவும் உயர்ந்த கருத்தாகும். இக்கீர்த்தனத்தில் ஸ்ரீ ராமபிரானை மோஹனரூபத்தைக் கண்ணாரக்கண்ட காக்ஷியைக் குறிப்பிட்டிருப்பது உயர்ந்த பாவமாகும்.

எந்தரோமஹானுபாவுலு என்ற ஸ்ரீராக கிருதியில் ஹரிதாஸர்களாகிய மஹானுபவர்களின் உயர்வு காணப்படுகிறது. அத்தகைய பாகவதோத்தமர்களுக்கு வந்தனம் தெரிவிக்கும் ஸ்ரீ தியாகப்ரம்மத்தின் க்ருதிகளில் தலைசிறந்தது ஸ்ரீராக கீர்த்தனம் என்கிறார் ஸ்ரீ சடகோபன்.

ஸத்குரு ஸ்ரீ த்யாகப்ரம்மம் அவர்கள் பாடிஅருளிய பஞ்சரத்ன க்ருதிகளின் ஸாஹித்யங்களும் அவற்றிற்கு ஸ்ரீ சடகோபன் அவர்கள் எழுதியுள்ள விளக்க உரையும், ஒரு பாராயண நூலுக்கொப்பானது என்று கூறினால் மிகையாது என்று கூறிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்

செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாஸன்

*Sahitya Bhushanam Kalaimamani*
**Dr. V.V. SWARNAVENKATESA DEEKSHITAR, D. Litt.**
No.101, East Car Street, Chidambaram-608 001. Tamil Nadu

27.8.90

ஸ்ரீ நடராஜர் துணை

அமெரிக்காவில் வசித்து வரும் அன்பு மிகுந்த Dr.V. சடகோபன் அவர்கள் தனது தூய்மையான, அறிவாற்றல், அனுபவ முதிர்ச்சியால், நமது தென்னிந்திய கர்நாடக இசை சம்பந்தமான ராக லக்ஷண விளக்கங்களையும், சாஸ்திரீய சம்பந்தமாகவும் ராகங் களை, மற்றும் ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் முதலிய வாக்கேய காரர்களின் கீர்த்தனைகளிலிருந்து, அதனதன் ரஸானு பவத்தை அனுபவித்து ஒவ்வொரு கீர்த்தனைகளுக்கு முள்ள விளக்கங்களையும், பல கோட்பாடுகளையும் கூறி அளவோடு ஆராய்ச்சி செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவைகளில் குறிப்பிடத்தக்க வகையில், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் பஞ்சரத்னக் கீர்த்தனைகளுக்கு விளக்கங்கள் எழுதியிருப்பது இசை உலகுக்கு அவர் செய்துவரும் அரிய பணியாகும்.

இவர் தனது சகோதரி திருமதி பத்மா வீரராகவனுக்கு அமெரிக்காவிலிருந்து பல வருடங்களாக எழுதியனுப்பிக் கொண்டிருக்கும் கடிதங்கள் மூலம் இசை உலகுக்கு இவர் செய்யும் பணி மிகவும் பாராட்டத்தக்கது.

இவற்றுக்கெல்லாம் சிகரமாக நடராஜ தத்துவம் என்ற வரலாற்றை எழுதி தன்னுடைய நடராஜ பக்தியை வெளிப்படுத்தியிருப்பது போற்றத்தக்கது.

ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய அனுக்ரஹத்தினாலே ஸ்ரீ சடகோபன் அவர்கள் எல்லாவகையிலும், இஷ்ட சித்திகளை அடைந்து, இனிது நீடூழி வாழ இதன்மூலம் இதயபூர்வமாக வாழ்த்துகிறேன். மற்றவை எல்லாம் நன்மைக்கே. ஏதும் கடவுள் செயல்.

இப்படிக்கு,

Dr.V.V.S. தீக்ஷிதர்

Sangeetha Kalanidhi
Prof. K.V. NARAYANASWAMY
No.21, (Upstairs) Second Main Road,
Ramakrishna Nagar, Madras - 600 028.
Phone : 839510

உப்பிலியப்பன் கோவில் வரதாச்சாரியார் ஸ்வாமியின் குமாரர் Dr.V. சடகோபன் அவர்கள் ஸ்ரீ தியாக பிரம்மத்தின் பஞ்ச ரத்தினக் கீர்த்தனைகளுக்கு, விரிவாகவும், விளக்கமாகவும், தன் மனக் கண்ணில் தோன்றிய காட்சிகளை மிகத் தெளிவாகவும், எல்லோருக்கும் பயன்படும்படியாகவும் எழுதி யிருக்கிறார்.

பல பாஷைகளில் பாண்டித்தியம் பெற்ற திரு. சடகோபன் அமெரிக்காவில் நியூயார்க்கில் பல வருடங்களாக வாழ்ந்து கொண்டு, தனது அருமை சகோதரியாகிய திருமதி. பத்மா வீரராகவனுக்கு எழுதி யனுப்பியிருக்கும் அற்புதமான விளக்கங்களை நான் இதில் கண்டேன். தமிழ்ப் பெரியோர்களின் வாக்குகளையும், பல ஸ்தல புராண மகிமைகளையும் சொல்லி, ஸ்ரீ தியாக பிரும்மம் எப்பேற்பட்ட ராம பக்தர் என்பதை நம் கண்முன் நிறுத்தி, நம்மைப் பல இடங்களில் கண்ணீர் வடிக்கச் செய்திருக்கிறார். இவர் இது மட்டுமல்ல எழுதியிருக்கிறார்.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் நவாவரணக் கிருதிகளுக்கும் இதே போன்று தனது சகோதரிக்கு அமெரிக்காவிலிருந்து எழுதியனுப்பி இசை உலகுக்கு அரிய தொண்டு ஆற்றியிருக்கிறார். அதுவும் பிரசுரமாவதற்கு வாழ்த்துகிறேன்.

திரு. சடகோபன் நியூயார்க்கில் I.B.M. ஸ்தாபனத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் பணிபுரிபவராக இருந்தாலும்,

இசை விளக்கத்துறையில் இவருடைய மேதாவிலாசம் உச்சமாக இருப்பது பாராட்டத்தக்கது.

திரு. சடகோபனுடைய இது போன்ற தொண்டு தொடரவேணுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

K.V. NARAYANASWAMY
21-5-90.

# ஆசிரியரின் முன்னுரை

ஸ்ரீ ஸத்குரு த்யாகராஜ ஸ்வாமிகளின் கனராக பஞ்சரத்ன கீர்த்தனைகள் மிகவும் மங்களகரமானவை. ஸ்ரீ ஸத்குருவின் பகுள பஞ்சமி ஆராதன தினத்தன்று, ஸங்கீத வித்வான்களால் கோஷ்டியாக பாடப்படும் இந்த ஐந்து கீர்த்தனைகளின் உள் பொதிந்துள்ள தத்வார்த்தங் களும், ஸங்கீத நுணுக்கங்களும் விவரிக்கமுடியாதவை. இந்த புனிதமான கீர்த்தனங்களின் விசேஷங்களை எனது அறிவிற்கு எட்டியவரை புரிந்துகொள்ள வேணும் என்பதற்காக என் ஸஹோதரி, ஸங்கீத வித்வாம்ஸினி ஸ்ரீமதி பத்மா வீரராகவனுக்காக இந்த ப்ரசுரத்தில் காணப்படும் கடிதங்களை சமீபத்தில் எழுதினேன். ஸங்கீதத்திலும், பக்தி மார்க்கத்திலும் விசேஷ பயிற்சி இல்லாது, ஸ்ரீ ஸத்குருவின் கீர்த்தனங்கள் பற்றி எழுதப்படும் சமயம் ஏற்பட்டுள்ள தவறுகளை பெரியோர்கள் மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

பேராசிரியர் K.V. ராமநாதன், அவருடைய தர்ம பத்தினியான ஸ்ரீமதி ராதா ராமநாதன் அவர்களுடைய அன்பினாலும், ஆதரவாலும் இக்கடிதங்கள் புஸ்தக ரூபத்தில் வெளியிடப்படும் அளவுக்கு வந்துள்ளன. ஸ்ரீ ராமநாதன் தம்பதிகளும், கடந்த சில ஆண்டுகளாக, என்னை மிகவும் ஊக்குவித்து, இந்த கட்டுரைகளை எழுதவைத்தார்கள். அவர்களுக்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். ஸ்ரீமதி ராமநாதனின் சஹோதரரான ஸ்ரீமான் வைத்யநாதன், இந்த கடிதங்கள் புஸ்தகமாக மாறுவதற்கு செய்திருக்கும் உதவியை என்னவென்று விவரிக்கமுடியாது. அவர்கள் எல்லாவற்றிற்கும் முன்

நின்று மஹோபகாரம் செய்து, இந்த கார்யத்தை முடித்துக் கொடுத்துள்ளார்.

ஸ்ரீ ஸத்குருவின் பஞ்சரத்ன கீர்த்தனைகளுக்கு முன்னுரைகள் எழுதி ஆசீர்வதித்த ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதியான பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதிகளுக்கு எனது ஆழ்ந்த வணக்கங்களை இங்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஸங்கீதத்துறையில் முன்னணியில் நின்று நமது குலதனமான ஸ்ரீ ஸத்குருஸ்வாமிகளின் கீர்த்தனங்களை எங்கும் மங்களமாக ஒலிக்க செய்துவரும் பெரியவர்களான ஸங்கீத கலாநிதி, பத்ம பூஷண் ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐய்யர் அவர்களுக்கு எனது நமஸ்காரங்கள். அவர்கள் இந்த புஸ்தகத்திற்கு முன்னுரை எழுதி ஆசீர்வாதம் செய்தது எனது பாக்யமே !

எனது குடும்பத்துடன், பல ஆண்டுகளாக நட்பு கொண்டு, தனது சஹோதரர் போல் அபிமானித்து வரும் ஸங்கீத கலாநிதி, பத்மஸ்ரீ K.V. நாராயணஸ்வாமி அவர்களுக்கு, முன்னுரை மூலம் ஆசீர்வதித்ததிற்கு, எனது அன்பு கலந்த வந்தனங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பின் அடுத்தபடியாக, ஸாஹித்ய பூஷணம், கலைமாமணி, ஸ்ரீ ஸ்வர்ணவெங்கடேச தீக்ஷிதருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, எனக்கு ஸங்கீதத்தில் ஆஸ்தை ஏற்படுமாறு உதவிய என் ஸஹோதரி சௌ. பத்மா வீரராகவனுக்கும், பல தியாகங்கள் செய்து, எனக்கு படிப்பில் அபிவிருத்தி ஏற்பட ஆசீர்வதித்த என் பெற்றோர்களான உப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ P.S. வரதாச்சாரியார், ஸ்ரீமதி அலமேலு அம்மாள் அவர்களுக்கும் என் அத்யந்த, பரம ப்ராணாமங்களைச் சேர்க்கிறேன்.

ஸ்ரீ பூமிதேவிஸமேத ஸ்ரீ ஒப்பிலியப்பனும், ஸ்ரீ ஸத் குரு த்யாகராஜஸ்வாமிகளும், எல்லோருக்கும் ஸர்வ க்ஷேமங்களையும் அனுக்ரகிக்க ப்ரார்த்திக்கிறேன்.

**Camp : Madras.** **V. SADAGOPAN.**



ஸ்ரீ:

க்ஷேமம் சுக்லஹ, வைகாசி மீ 10 உ

சர்வ ஏகாதசிதினம், உத்திராட நக்ஷத்ரம்

May 16, 1989.

அன்பு நிறைந்த சௌ. பத்மாவிற்கு, அடுத்த ஐந்து கடிதங்களில் 96 கோடி ராமநாம ஜபம் செய்து, தன் வாழ்நாளிலேயே ஸ்ரீ ராமபிரானை நேரில் கண்டு கொண்ட ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனங்களில் நிறைந்து உள்ள அத்புத தத்வங்கள் பற்றி எழுதுகிறேன். இந்த கடிதத்தில், பஞ்சரத்ன கீர்த்தனங்கள் செய்த ஸ்ரீ ஸத்குருவின் ராமபக்தி பற்றி எழுதுகிறேன்.

ஸ்ரீ ராம ப்ரஹ்மம் என்ற பரம பாகவதரையும், ஸ்ரீமதி சாந்தம்மா என்ற நாரீமணியையும் பெற்றோர்களாக அடைந்த ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் காஞ்சிபுரவாசியான ஸ்ரீ உபநிஷத் ப்ரஹ்ம்மத்திடம் ஸ்ரீ ராம மந்த்ரம் என்ற தாரக மந்த்ரத்தை உபதேசமாகப் பெற்று, திருவையாற்றின் திருமஞ்சன வீதியிலே, ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியை தன் மானிடக் கண்களாலே கண்டு, அப்பரம்பொருளின் பரம அனுக்ரஹத்தைப் பெற்றார். தனது உயரிய ராம பக்திமூலம், ருக்வேத மந்த்ரம் பின் வருமாறு தெரிவிக்கும் முறையில், ஈடு இணையில்லாத பரமானந்தத்தை இப்புவியிலேயே அனுபவித்தார்.

तयोरिद्घृतवत्पयो विप्रां रिहन्ति धीतिभिः ।
गन्धर्वस्य ध्रुवे पदे ॥ RIC VEDA I.22.14.

தயோர் இத் த்ரீதவத் பயோ விப்ரா, ரிஹந்தி திதிபி: ।
கந்தர்வஸ்ய த்ருவே பதே ॥

பகவானுடன் நேரிடையே ஸம்பாஷித்து, பரமானந்தக் கடலில் மூழ்கி உள்ள பெரியோர்கள், தங்களுடைய ஞானம், பக்தி என்ற செல்வங்களால், மேன்மேலும் வைராக்யமும், விவேகமும் பெற்று, தர்மானுஷ்டானங்களின் சிகரமாக விளக்கி இம்மையிலும், மறுமையிலும் கொண்டாடப்படுகிறார்கள் என மேற்காணும் வேதப்பகுதி தெரிவிக்கிறது. அப்பேற்பட்ட வேதம் அறிவிக்கும் குண ஸம்பத் கொண்டவர் நமது ஸத்குருவான ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள். மற்ற ஒரு ருக்வேத மந்த்ரம் சொல்லும் வகையில் கண்ணில் காணப்படும் எப்பொருளிலும் ஸ்ரீ ராமனைக் கண்டு களித்தவர் நமது ஸத்குரு ஸ்வாமிகள். விண்ணிலும், மண்ணிலும், அவனைத் தவறாது கண்டு, அவனுடைய அத்புத ஸௌந்தர்யத்தில் மனதை இழந்தார். தன் த்யான பலம் மூலம், தன் ஹ்ருதயத் தாமரையில் ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியை ஸீதா லக்ஷ்மண ஹனுமத் ஸமேதராகக் கண்டு புளகாங்கிதமடைந்தார், நமது குருமூர்த்தி. அவருடைய நிலையையும, அனுபவத்தையும் பின் வரும் ருக்வேத மந்த்ர பகுதிகள் அழகாக விவரிக்கின்றன:

तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति सूरयः।
दिवीव चक्षुराततम्॥
तद्विप्रासो विपन्यवो जागृवांसः समिन्धते।
विष्णोर्यत्परमं पदम्॥ ருக்வேதம் 1.22. 20. & 21.

*தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய: 1*
*திவீவ சக்ஷுராததம் 11*
*தத் விப்ராஸோ விபன்யவோ ஜாக்ருவாம்ஸ: ஸமிந்ததே1*
*விஷ்ணோர் யத் பரமம் பதம் 11*

ஆழ்ந்த த்யானமூலம், தங்களுடைய உள்ளமாகிற குஹையில், பரமாத்மா அமர்ந்திருக்கும் உண்மையை, பரம

பக்தர்கள் கண்டு கொள்ளுகிறார்கள். திறந்த கண்களால், ஆகாயத்தைக் காண்பது போல், தங்களுடைய ஸமாதி நிலையில், உள்ளமாகிற குஹையில் கோயில் கொண்டுள்ள பரந்தாமனை இப்பெரியோர்கள் கண்டு கொள்ளுகிறார்கள் என மேற்காணும் வேத மந்த்ரங்கள் கூறுகின்றன. அப்பேற்ப்பட்ட அனுபவச் செல்வம் பெற்ற ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியின் நாம ஜபத்தால் ஏற்படும் ஆனந்தத்தில் திளைத்து "எந்த ராநி தன கெந்த போனி நீ செந்த விடுவ ஜால ஸ்ரீ ராம" என்று தெரிவித்தார். எனக்கு எந்த கஷ்டம் ஏற்பட்டாலும், எத்தனை நஷ்டம் ஏற்பட்டாலும் உன் திருவடிக்கு அருகில் நின்று ஸேவை செய்யும் பாக்யத்தை ஒருக்காலும் விடமாட்டேன் என நமது ஸத்குரு உறுதியாகச் சொன்னார்.

தன் குருவான ஸ்ரீ உபநிஷத் ப்ரஹ்மம் அறிவித்தபடி (श्रीरामनामसाम्राज्यं स्वाभेदेनैव भावयेत्) அவன் அருளாலேயே ராம பக்தி ஸாம்ராஜ்யத்தை அனுபவிக்கவேண்டும் என்ற உண்மையை ஸரியாக தெரிந்து கொண்டவர் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், அந்த அனுபவத்தை சொல்லால் விவரிக்க முடியாது; தானாகவே அனுபவித்து வரும்போது தான், அந்த ப்ரஹ்மானந்தத்தை சரியான முறையில் அறியலாம் என்று பின்வரும் கீர்த்தன வாக்யங்கள் மூலம் தெரிவித்தார்.

"रामभक्ति साम्राज्य मेमानवुल कब्बेनो मनसा,
आमानवुल संदर्शनमत्यन्त ब्रह्मानन्दमे"

அத்யந்த (Intimate) ப்ரஹ்மானந்தத்தை ஸ்ரீ ராமநாம ஜபம் மூலம் அனுபவித்து, கன்னடராகத்தில் "இதே பாக்யமுகாக யேமி யுன்னதிரா ? ராம ! ஸதா நீ பதபங்கஜமுலனு ஸம்மதமுக பூஜிஞ்சுவாரி

(इदे भाग्यमु गाक-येमि युन्नदिरा राम ! सदा नी पदपङ्कजमुलनु सम्मतमुग पुजिञ्चुवारि'

எனப் பாடிக் கொண்டாடினார். இதுவே உலகில் தலை சிறந்த பாக்யம்; உன் திருவடித் தாமரைகளில் என் ஹ்ருதயபூர்வமான நமஸ்காரங்களை அற்பணித்து, உன்னை ஆராதித்து வரும் பாக்யமே எல்லாவிதமான செல்வங்களை விட உயரிய செல்வமல்லவா என ஸ்ரீ ராமனிடம் சொன்னார். கானடா ராகத்தில் "ப்ரபோ! உன் தாரக மந்த்ரத்தை நாத்தழும் பேறும் வரை உச்சரித்து வீடும், செல்வமும் ஆனந்தமும் அடையும் பேரின்பத்திற்கும், அப்பேற்பட்ட பாக்யம் பெற்ற தன்யவான்களுக்கும் ஈடு ஏதும் உண்டோ" என்ற கருத்தை பின்வருமாறு வெளியிட்டார்:

"सुखि येवरो रामनाम-सुखि येवरो
सुखि येवरो सुमुखि येवरो
अखिल सारमगु तारक नाम !"

"சுகி யெவரோ ராமநாம சுகி யெவரோ
சுகி யெவரோ சுமுகி யெவரோ
அகில ஸாரமகு தாரக நாம !"

அகில தத்வங்களின் ஸாரமான தாரக நாமத்தை பக்தியுடன் ஜபிப்பதால் ஏற்படும் ப்ரஹ்மானந்தத்தை அனுதினமும் அனுபவித்த ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், அப்ப! ராமபக்தியின் மஹிமை தான் என்னே? அந்த மஹிமையால் தானே ஒரு வானரம் கடலைத் தாண்டியது? அந்த ராம பக்தியின் மஹிமையால் தானே மனமாகிற குரங்கு, அங்கும் இங்கும் குதிக்காது ஒருநிலை அடைகிறது! அந்த ராமபக்தி தானே, கண் இமைகள் கண்ணைக்காப்பது போல் நம்மை ஸம்ஸார பீதிகளிலிருந்து காப்பாற்றிக் கொடுக்கிறது என்று பின்வருமாறு பந்துவராளி ராக கீர்த்தன மூலம் நமக்கு விளக்கினார்:—

"अप्प ! रामभक्ति येन्तो गोप्परा; मा
त्रिप्पटलनु दीर्चि कंटि-रेप्पवलेनु गाचु मा"

. . . . . . . . . . .

कपि वारिधि-दाटुना..... अप्प राम भक्ति येन्तो

"அப்ப ! ராமபக்தி யெந்தோ கோப்பரா;மா
த்ரிப்படலனு தீர்ச்சி கம்டி ரேப்பவலேனு காச்சு மா
கபி வாரிதி தாடுனா ..... அப்ப ராம பக்தி எந்தோ"

ஹே, ராமா ! உன் தாரக மந்த்ரத்தை ஜபிப்பதால் ஏற்படும் ஆனந்தத்தையும், ஸௌக்யத்தையும் என்னவென்று விவரிப்பேன் ? உன் மந்த்ர ஜபத்தால் ஏற்படும் பரம பாக்யங்களை யார் தான் முழுவதும் அறிந்தனர் என தனது காபி ராக கீர்த்தன வாக்யங்கள் மூலம் பின்வருமாறு தெரிவித்தார்:

"इन्त सौख्यमनि ने जेप्पजाल;
एन्तो येमो येवरिकि देलुसुनो
दांत ! सीताकान्त ! करुणा स्वान्त !
प्रेमादुलके देलुसुनु गानि"

"இந்த ஸௌக்யமனி நே ஜேப்பஜாலே
எந்தோ யேமோ யெவரிகி தெலுஸுனோ
தாந்த ! ஸீதாகாந்த ! கருணா ஸ்வாந்த !
ப்ரேமாதுலகே தெலுஸுனு கானி"

உனது பக்தி என்னும் அனலில், மெழுகு போல் உருகும் மனதுடைய பெரியோர்களே, அந்த ஆனந்தானுபவம் என்ற ஸௌக்யத்தை அறிவார்கள் என ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் கூறினார்.

ஸீதாகாந்தனான கருணாமூர்த்தி ஒருவனே தெய்வம் என்று தனது அனன்ய பக்தி மேலீட்டால் அறிவித்து, பல ஹம்ஸ ராக கீர்த்தனை வாக்யங்கள் மூலம், राम एव दैवतम रघुकुल तिलको मे, विगतकाममोहमदो विमलहृदयशुभफलदो, राम एक दैवतम् எனத் தன் இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடினார். என் ராமன் ஒருவனே தெய்வம். காமம், மோஹம், மதம், மாத்ஸர்யம், க்ரோதம், அஹங்காரம் எல்லாவற்றையும் அழித்து, தன் பக்தர்களுக்கு அனுக்ரஹம் புரியும் ராமனே என் தெய்வம் என்று ஒருவித குழப்பமும் இல்லாது அவனிடம் தனக்குள்ள மஹா விச்வாஸத்தை நமக்கு அறிவித்தார்.

தனது த்ருட பக்தி மூலம், "ராம ! நீ ஸமானமெவரு ?" உனக்கு நிகரானவர் யார் எனக் கேட்டு நிச்சயமாக ஒருவரும் கிடையாது என்று ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் பதில் சொன்னார். மிகவும் யோஜித்து, உனக்கு நிகரான தெய்வங்கள் ஏதும் உண்டோ என்று தேடிப் பார்த்தாலும், உனக்கு சமானமான தெய்வம் ஏதும் இருப்பதாக தெரியவில்லை. நீரஜாக்ஷா ! ஸ்ரீ ராமய்யா, பட்டாபி ராமசந்த்ரா, நாடகமாட விரும்புவர்கள் உனது ராம சரித்ர மானஸமாகிற நாடகத்தையே நடிக்க வேண்டும் ! ஏதாவது பாடவேண்டும் என்று யாராவது நினைத்தால், உன்னைப் பற்றியல்லவோ பாடவேண்டும் ? யாருடனாவது சேர்ந்திருக்க வேண்டுமானால், உன்னிடமல்லவா சேர்ந்து ஸுகித்திருக்க வேண்டும் ! உன் அந்தரங்க உணர்வை இன்று நான் புரிந்து கொண்டேன் என்று பின் வரும் அழகிய பைரவி ராக கீர்த்தன மூலம் ஸ்ரீ ராமனுடன் ஸம்பாஷித்தார் ஸ்ரீ ஸத்குருநாதர் —

ப: நீ வம்டி தைவமு நே கான (गान) நீரஜாக்ஷ !
ஸ்ரீ ராமய்ய !

அப: பாவிஞ்ச்ச ஜூச்சு பட்ல பட்டாபி ராமசந்த்ர !

ச: ஆடின நின்னாடவலே கா (गा) பாடின நின்னு
பாட வலேகா (गा)

கூடின (गूडिन) நின்னு கூட (गूड) வலனீ

ஜாட தேலிஸின த்யாகராஜுனிகி (நீ வம்டி.)

தனது உயரிய பக்தி மூலம் ஸ்ரீ ராமசந்த்ரனை, எல்லையற்ற கிரணங்கள் உடைய ஸூர்ய மண்டலத்தின் நடுவில் உள்ள ஜ்யோதி ஸ்வருபனாகக் கண்டு கொண்டு, "சண்ட மார்த்தாண்ட மத்ய மண்டல முள செலங்கு உண்டேதி ராமுடு" எனக் கொண்டாடிய மஹிமை உடையவர் நமது ஸத்குரு ஸ்வாமிகள். உன்னை நான் எப்படி வர்ணிக்க முடியும்? உன்னுடைய ப்ரபாவங்களும், ஸௌந்தர்யமும் வாக்கிற்கு அப்பாற்பட்டதே! ஹே ராகவா! நீ புரிந்த வீரச் செயல்களை யாரால் விவரிக்க முடியும் என பின் வரும் கைகவசி ராக கீர்த்தன வாக்யங்கள் மூலம் நமஸ்கரித்துக் கொண்டார்:

"वाचामगोचरमे; मनसा; वर्णिम्प तरमे? राम महिम"

"வாசாம கோசரமே மனஸா; வர்ணிம்ப தரமே? ராம
மஹிம"

அவனுடைய மஹிமைகளைப் பற்றி மேலும் போற்றும் ஸமயத்தில், பூர்வ ஜன்மங்களில் செய்த பாபக் கூட்டங்களால் தடுக்கப்பட்ட மனது உடைய ஜனங்கள், உனது மஹிமையை புரிந்து கொள்ளாது அல்லல் படுகிறார்கள். நீயோ இளம் பிறையை அலங்காரமாக தனது ஜடையில் அணிந்துள்ள பரமசிவனால் கொண்டாடப்படுபவன். நீலமேக ச்யாமளா! ஸத்குணங்கள் நிறைந்து உள்ளவனே! என்ன விபரீதம்! உன் மஹிமையை ஜனங்கள் அறிந்து கொள்ளாது வாழ்நாளை வீணாகக் கழிக்கிறார்களே என்று பின்வருமாறு சொல்லி அங்கலாய்த்தார்:—

"एल देलिय लेरो पुर्वकर्म मेलगुन जेसिरो रामय्य!
बाल शशाङ्कलालंकृतनुत!
नीलवर्ण! सुगुणालय! नी महिम"

"ஏல தெலிய லேரோ பூர்வகர்ம மேலகுன ஜேஸிரோ ?
ராமய்ய !
பாலசசாங்ககலாலங்க்ருதநுத !
நீலவர்ண ! சுகுணாலய ! நீ மஹிம"

ஸ்ரீராமசந்திரனின் குண ஸௌந்தர்யங்களை சிந்தித்து அவனுடைய பக்தியாகிற பாசத்தால் கட்டப்பட்டு, மற்ற எந்த தெய்வங்களிடமும் தன் மனதை இழக்காது, தான் நிற்கும் அதிசயத்தை தனது அடாணா கீர்த்தன வாக்யங்கள் மூலம் நமக்கு ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் பின்வருமாறு தெரிவித்தார்.

"कट्टु जेसिनावु रामबन्दु
मट्टु मितमु लेनट्टि देवता
मतमुललो जोर बदुदामन्न"

"கட்டு ஜேசினாவு-ராம பந்து மட்டு மிதமு லேனட்டி
தேவதா மதமுலலோ ஜோர படு தாமன்ன......."

என்னை நீ உன்னுடைய பந்து என்ற வகையில் ஏற்றுக்கொண்டு, உறவு கொண்டாடி, நான் பல ஸமயாசாரங்களில் ஈடுபட்டு, குழம்பி, மதிமயங்காது இருக்குமாறு செய்து, உன் திருவடிகளிலேயே ஸ்திர பக்தி நிலைக்குமாறு செய்து விட்டாய். இந்த உறவின் பெருமையை நான் என்ன என்று சொல்வேன் என ஸ்ரீ ஸத்குரு இந்த கீர்த்தனத்தில் சொன்னார்.

ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம், தான் ஸ்ரீ ராமசந்த்ரனின் பந்து என்பதை வெகு இடங்களில் ஸ்ரீ ராமசந்ரனுக்கே ஞாபகப்படுத்தி இருக்கிறார். தனக்கும், அவனுக்கும் உள்ள உறவு பற்றிய விபரங்களை "சீதம்ம மாயம்மா" என்ற லலிதா ராக கீர்த்தனத்தில் பின்வருமாறு அழகாக ஞாபகப்படுத்தினார்:-

ப: "सीतम्म मायम्म-श्रीरामुडु मातंड्रि

அப: वातात्मज सौमित्रि वैनतेय रिपुमर्दन
धात भरतादुलु सोदरूलु माकु; ओ मनसा

ச: परमेश वसिष्ट पराशर नारद शौनक शुक
सुरपति गौतम लम्बोदर गुह सनकादुलू
धरनिज भागवताग्रे सरु लेवरो वारेल्लनु
वर त्यागराजुनिकि परम बान्धवलु; मनसा"

ப: "ஸீதம்ம மாயம்ம - ஸ்ரீராமுடு மாதண்ட்ரி

அப: வாதாத்மஜ ஸௌமித்ரி வைனதேய ரிபுமர்த்தன
தாத பரதாதுலு ஸோதருலு மாகு; ஓ மனஸா

ச: பரமேச வஸிஷ்ட்ட பராசர நாரத சௌனக சுக
ஸுரபதி கௌதம லம்போதர குஹ ஸனகாதுலு
தர நிஜ பாகவத்தாக்ரே ஸரு லேவரோ
வாரேல்லனு
வரத்யாகராஜுனிகி பரம பாந்த வலு; மனஸா"

இந்த கீர்த்தன முலம் தன் உறவினர்களை நமக்கு அறிமுகப்படுத்தினார் நமது ஸத்குரு. ஸீதம்மா என்பவள் என்னை பெற்ற தாய்; அவள் நாயகனான ஸ்ரீ ராமசந்த்ரன் எனது தகப்பனார். ஹனுமான், லக்ஷ்மணன், கருடன், சத்ருக்னன், பரதன், ப்ரஹ்மா ஆகியவர்கள் என் சகோதரர்கள்; பரமசிவன், வசிஷ்டர், பராசரர், நாரதர்,

சௌனகர், சுகர், இந்த்ரன், கௌதமர், கணேசன், குஹன், ஸனகர் ஆகிய பாகவதோத்தமர்கள் எனது நெருங்கிய உறவினர் என்று அறிவித்தார்.

இத்தகைய உயரிய செல்வாக்கு கொண்ட உறவினர்களை உடைய என்னை .மற்றவர்கள் சரிவர அறியாது, நான் ஒரு விதமான ஸஹாயமும் கிடைக்காத அனாதை என்று நினைக்கலாம்! என் பந்துக்கள் யார் என்பது எனக்கு நன்றாக தெரியும் எனத் தனது ஜிங்களராக கீர்த்தனத்தில் பின் வருமாறு சொன்னார்.

ப: अनाथुडनु गानु राम ने

அப: अनाथुडवु नीवनि निगमज्ञुल
सनातनुल माट विन्नानु ने

சரணம்: निरादरवु जूचि यी कलि नराधमु लनेदरु
पुराणपुरुष! पुररिपुनुत! नागराट्शयन त्यागराजनुत ॥

ப: "அனாதுடனு கானு; ராம நே

அப: அனாதுடவு நீவனி நிகமக்ஞுஜூல
ஸனாதனுல மாட வின்நானு நே

ச: நிராதரவு ஜூச்சி யீ கலி நராதமு லனேதரு
புராண புருஷ! புரரிபுநுத! நாகராட் சயன!
த்யாகாராஜநுத"

திருப்பாவையை நமக்கருளிய ஆண்டாள் விவரித்த,

"எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும், உன்றன்னோ
டுற்றோமே யாவோமுனக்கே நாமாட் செய்வோம்
மாற்றே நங்காமங்கள் மாறாறேலோரெம்பாவாய்"

என்ற தத்வப்படி ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியிடம் உறவு கொண்டாடி, அனுக்ரஹம் பெற்றவர் நமது ஸத்குரு ஸ்வாமிகள்.

உன்னைத்தவிர வேறு ஒரு தெய்வத்தையும் நினைக்கமாட்டேன்; என் நெருங்கிய சுற்றமாகிய உன்னைத் தவிர வேறு ஒரு தெய்வத்தையும் உதவிக்காக நாட மாட்டேன், உன் புகழ் ஒன்று பற்றித்தான் பாடித் திரிவேன்; உன் திருவடிகள் ஒன்றைத்தான் சரணமென அடைவேன்; மற்ற விதத்தில், எனக்கு இவ்வுலகில் என்ன ஆபத்துக்கள் ஏற்பட்டாலும், எனக்கு லக்ஷ்யமில்லை என பல கீர்த்தனங்கள் மூலம் சொல்லி தான் சரணாகதனாக ஸ்ரீ ராமபத்ரனை அடைந்திருப்பதை அறிவித்திருக்கிறார். இந்தரீதியில், அவர் அசல பக்தியை கடைபிடித்தது, பொய்கை ஆழ்வார் வெளிப்படுத்தின பக்தர்களின் மனோநிலைக்கு உதாரணமாகும். இந்த விதமான த்ருட பக்திக்கு உதாரணமாக உள்ள பொய்கை ஆழ்வாரின் பாசுரம் பின் வருமாறு:

" நாடிலும் நின்னடியே நாடுவன், நாடோறும்
பாடிலும் நின் புகழே பாடுவன், சூடிலும்
பொன்னாழி யேந்தினோன் பொன்னடியேசூடுவோற்கு
என்னாகி லென்ன வேனக்கு"

ஸகல லோக பாலக ! உன்னை மாத்திரம்தான் நான் பாடுவேன் என்று நாட்ட ராக கீர்த்தன வழியாக "நின்னே பஜன ஸேயு வாடனு" என ஸ்ரீஸ்வாமிகள் தெரிவித்தார். ஸீதா நாத ! எந்நேரமும் உன்னையே நம்பியுள்ளேன். (நின்னே நேர நம்மி நானுரா, ஓ ராம, ராமய்ய !) என பந்துவராளி ராக கீர்த்தன மூலம் தனது சஞ்சலமற்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார். பன்னக சயனா ! உனது அனுக்ரஹம் இல்லாவிடில், ஒரு பலனும் கை கூடாது என்பதை நன்றாக அறிந்தவன் நான் ! அதனால், வேத சாஸ்த்ரங்கள் படித்தும், யாக யக்ஞயங்கள் செய்தும், உன் தத்வம் புரிந்துகொள்ளாது, வழிதடுமாறி நிற்கும் ஜனங்களைக் கண்டு வருந்துகிறேன். அவர்கள் வழியில் நான் போகமாட்டேன் !"வேத சாஸ்த்ர புராண வித்யலசே பேத வாதமுல தீரக ப்ரமயு வாரல ஜூசி நின்னே நேர நம்மி நானுரா" என இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

"நீ பத பங்கஜமுல நே நேர நம்மினானு....பாவனீய முனி ஜீவன ! அநிசமு நம்மி நானு" 'என்று பேகடா ராக கீர்த்தன மூலம், ஸ்ரீராமசந்த்ரனுடைய திருவடித் தாமரைகளை ரக்ஷக பலமாக தான் என்றும் நம்பியிருப்பதை நமக்கு சொன்னார். 'பரம ப்ரேமையுடன், ஹுஸேனி ராக கீர்த்தனம் ஒன்று மூலம், "ராமா நான் உன்னையே நம்பியுள்ளேன் ! சுந்தராங்கனான நீயோ கருணாமூர்த்தி ! பரம தயாளு !" நீ என்னை ரக்ஷிக்க வேணும் எனப் பின்வருமாறு வேண்டிக்கொண்டார்:-

"रामा ! निन्ने नम्मिनानु निजमुग सीता
कामजनक ! कमनीयवदन ! ननु काववे कारुण्यजलधी"

"ராமா ! நின்னே நம்மிநானு நிஜமுக ஸீதா
காம ஜனக ! கமனீய வதன ! நனுகாவவே, காருண்யஜலதீ"

மன்மதனைப் பயந்தவனே ! ஸீதாராம ! பரமக்ருபாநிதே ! என்னை கை தூக்கிவிடு என வேண்டினார். "நீ கருண ராஜயோகமுமாகு, நீ மயமே ராஜ போகமுமாகு" என்று ஒரு சாவேரி ராக கீர்த்தனை மூலம் தன் அத்யந்த பக்தியை அவனிடம் தெரிவித்தார். சுபகர மூர்த்தே ! உனது அருளே எனக்கு ஸர்வ ஸம்பத் ! அதுவே ராஜயோகம் என நான் அறிந்துகொண்டது ! உன் நினைவு நிறைந்த மனது உடையவனாய் இருப்பது உயரிய போகமான ராஜபோகம் எனக்கு. மழை ஜலத்தை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் சாதகபக்ஷி போல், உன் கருணை மழையை எதிர்பார்த்து, நான் காத்துக்கொண்டிருக்கிறேன். நீ என்னை காக்க வேணும் என்று தன் அவல நிலையை ஸ்ரீராமபிரானிடம் அறிவித்து, அவனுடைய அருளை வேண்டினார், ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகள்.

ஏதாவது ஒரு ஸமயம், தனது மனது ஸ்ரீராமனைப் பற்றிய விஷயங்களில் ஈடுபடாது, விபரீதமான சமாசாரங்களில் ஈடுபட்டு விடப்போகிறதே என பயந்து, தன் மனதிற்கு பல கீர்த்தனங்கள் மூலம், ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகள் ஹிதோபதேசம் செய்திருக்கிறார். உதாரணமாக தனது விவர்த்தினி ராக கீர்த்தன மூலம், ஹே மனஸே! நான் சொல்வதைக்கேள்! உனக்கு நான் ஸ்பஷ்டமாக சொல்வதைக் கவனத்துடன் கேள். தெரிந்து, துன்மார்க்கத்தில் இறங்காதே. துராசாரங்கள் உனக்கு உதவி செய்யாது. நீ அறிந்து ஈடுபடும் துராசாரங்கள், உன்னை பகவான் அருகில் நிற்கச் செய்யாது. த்யானம், ஜபம், பஜனை, மூலம் உனது மனதை சுத்தப்படுத்திக்கொண்டு, அவனருள் கிடைக்க முயற்சி செய் என பின் வருமாறு தனது மனதிடம் வேண்டிக் கொண்டார்.

ப: विनवे ओ मनसा! विवरम्बुग ने तेल्पेद

அப: मनसेरिङ्गि कुमार्गमुन मरि पोरलुचु चेडवलदे

ச: ई नडतलु बनिकिरादु ईश्वर कृप गलुग बोदु;
ध्यान भजन सेयवे; वर त्यागराज मनविनि

ப: வினவே ஓ மனஸா! விவரம்புக நே தெல்பெத

அப: மனஸேரிங்கி குமார்க்கமுன மரி போரலுசு
சேடவலதே

ச: ஈ நடதலு பனிகிராது ஈஸ்வர க்ருப கலுக போது
த்யான பஜன ஸேயவே; வரத்யாகராஜ மனவினி

மறுபடியும், நல்ல வழிகளில் செல்ல மறுக்கும் தனது மனதிடம், நான் சொல்வதைக் கேள். சூர்யகுல திலகமான ஸ்ரீ ராமபிரானை ஆராதிக்காது, கலியுகத்தின் தூண்டுதலால், ராஜஸ, தாமஸ குணங்கள் மிகுந்த ஜனங்களுடன் கலந்து கொண்டு கெட்டுப்போக

விரும்புகிறாயே! நல்ல நேர்வழி இருக்க, ஏன் தகாத வழிகளில் நீ போக விரும்புகிறாய் என தனது மனதை பின் வரும் மலயமாருத ராக கீர்த்தன வாக்யங்கள் மூலம் கண்டித்தார்.

ப: मनसा येटुलोर्तुने! ना मनवि चे कोनवे ओ

அப: दिनकरकुल भूषणुनि दीनुडवै भजन जेसि
दिनमु गडुपु मनिन नीवु विनवदेल? गुणविहीन

ச: कलिलो राजस तामस गुणमुलु गलवारि चेलिमि
गलसि मेलसि तिरुगुचु मरि कालमु गडपक ने
सुलभमुगा कडतेरनु-सूचनलनु तेलिय जेयु
इलनु त्यागराजु माट विनवदेल! गुणविहीन

ப: மனஸா யேடுலோர் துனே! நா - மனவி சேகோனவே? ஓ

அப: தினகர குல பூஷணுனி தீனுடவை பஜன ஜேஸி
தினமு கடுபு மனின நீவு வினவ தெல? குணவிஹீன

(மனஸா)

ச: கலிலோ ராஜஸ தாமஸ குணமுலு கலவாரி செலிமி
கலஸி மெலஸி திரு குசு மரி காலமு கட பக நே
சுலபமுகா கட தேரனு ஸூசனலனு தெலிய ஜேயு
இலனு த்யாகராஜு மாட வின வ தேல? குணவி ஹீன (மனஸா)

இம்மாதிரியாக, தவறான வழிகளில் போக விரும்பும் மனதுடன் சண்டை போட்டு, அதற்கு கடைத்தேறும் வழி காண்பித்து, ஸகல நியமங்களுடன் ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியை ச்ரவணம், கீர்த்தனம். ஸ்மரணம், பாத ஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம்,

ஆத்ம நிவேதனம் என்ற நவவித பக்தி மார்க்க மூலம் ஆராதித்து, மஹா விச்வாஸத்துடன் அவன் திருவடிகளில் நமது ஸத்குரு சரணாகதி செய்தார். ஸ்ரீ ராமசந்த்ரனின் பரிபூர்ண அனுக்ரஹம் பெற ஸ்ரீ ராம ரஹஸ்யோபநிஷத்தில் அவன் காட்டிக் கொடுத்த 96 கோடி ராம நாம ஜபத்தையும் செய்து முடித்தார். இந்த உபநிஷத் மூலமாக ஸ்ரீ ராம்பிரான் காண்பித்துக் கொடுத்த வழியும், பலனும் பின் வருமாறு:

"यो मम षण्णवतिकोटिनामानि जपति स तेभ्यः पापेभ्यः प्रमुच्यते"

ஸர்வபாபங்களும் விலகி, தன் அனுக்ரஹம் அடைய, தன் நாமத்தை 96 கோடி தடவை ஜபிக்க வேணும் என ஜகத்ப்ரதமமங்கள மூர்த்தியான ஸ்ரீ ராமசந்த்ரன் காட்டிக் கொடுத்தான். ஸ்ரீ த்யாகப்ரஹ்மமும், ஸ்ரீ ராமன் காட்டிக் கொடுத்த வழியில் சென்று, நாத ப்ரஹ்மானந்த ரூபமான பரம்பொருளை 96 கோடி தாரக மந்த்ர ஜபமூலம் வசப்படுத்திக் கொண்டார். அவனை தன்னுடைய கண்களாலே நேரிலே கண்டு, புளகாங்கித மடைந்தார். ஸ்ரீ ராமனை தர்சித்த பாக்யத்தால் ஏற்பட்ட ஆனந்தத்தை விவரிக்கும் போது, அந்த ஆனந்தானுபவத்தை ப்ரஹ்மா, இந்த்ரன், பரமசிவன் ஆகியவரால் கூட விவரிக்க முடியாது எனச் சொன்னார். தன்னுடைய ஆனந்தத்தை ப்ரஹ்மாண்டமான பைரவி ராக கீர்த்தனை வாக்யங்கள் மூலம் பின் வருமாறு விவரித்தார்:

ஆனந்தமானந்தமா யேனு ப்ரஹ்மானந்த

நித்யானந்த ஸதானந்த பர

.................................

சரணம் (9) ராஜஸ குண முனு மானிதி ராம,
நீ ஜப முனு மதி பூனிதி த்யாக-
ராஜ சேஸின புண்ய ராசி யனி யெஞ்சிதி
(ஆனந்த)

பரமானந்த ஸ்வரூபனே! ஸ்ரீ ராமா! ரஜோ குணத்தை ஒதுக்கி, உனது நாம ஜபத்தைக் கடைத்தேறும் வழியாக கைபற்றி, உன் அனுக்ரஹம் பெற்று பரமானந்தக் கடலில் மூழ்கினேன். உன்னுடைய ப்ரஹ்மானந்த ஸ்வரூபத்யானமாகிற இன்ப வாரிதியில் நீந்தி ஆனந்த மயமானேன். இது உன்னுடைய நாம ஜபமாகிற தபஸ்ஸால் ஏற்பட்ட பயனே என்ற உண்மையையும் புரிந்து கொண்டேன் என்று ஸத்குரு ஸ்வாமிகள், இந்த கீர்த்தன மூலம் அறிவித்தார்.

தனக்கு, இந்த ப்ரஹ்மானந்தானுபவத்தை ஸித்திக்குமாறு அனுக்ரஹித்ததற்காக, தன் நன்றியை "தாஸரதி! நீ ருணமு தீர்ப்ப நா தரமா? பரமபாவன நாம!" என தெரிவித்தார். ஐய்யனே! உன்னிடம் நான் பட்டிருக்கும் கடனை எப்படி தீர்க்க முடியும்? இந்த பூமியில், திருவையாற்றின் திருமஞ்சன வீதி அடைந்து, என் வீட்டின் வாசலை மிதித்து, மங்களப்படுத்தி, எனக்கு மோக்ஷ சாம்ராஜ்யத்தை அனுக்ரஹித்து, உன் தெய்வீகமான சரித்ரம் சம்பந்தப்பட்ட கீர்த்தனங்களை பாட வைத்தாயே, இந்த பேரருளுக்கு நான் மிகவும் கடன் பட்டுள்ளேனே; இந்த கடனை எப்படி நான் தீர்ப்பேன் என உருக்கமாக ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் கேட்டார். "தாசரதே! ஆகம வினுத ராக விரஹித த்யாகராஜநுத தாசரதே! தவ தாஸோ ஹம், தவ தாஸோஹம்" என புன்னாகவராளி கீர்த்தன மூலம் வேதங்கள் கொண்டாடும் தசரத ராமனிடம் தன் மனநிலையை தெரிவித்தார். ஸ்ரீ ராமனின் நித்ய ஆராதனத்தில் ஈடுபட்டு, அருணோதய காலத்திலிருந்து, அர்த்த ஜாமம் வரை விதவிதமான உபசாரங்கள் செய்து, அவனை பள்ளி அறையில் மல்லிகை மஞ்சத்தில் தாலாட்டி தூங்க வைத்த பின்னர், தானும் நித்ரை செய்வார். மறுநாள் பொழுது புலர்வதற்கு முன் எழுந்து ஸுப்ரபாதம் கூறி, ஆராதனத்தை ஆரம்பிப்பார். தான் செய்த பூஜாக்ரமங்களை

"கொலுவமரெ கத? கோதண்டபாணி" என்ற தோடி ராக கீர்த்தனத்தில் உருக்கமாக விவரித்தார். கோதண்டராமா! எனக்கு கிடைத்துள்ள ஸேவா பாக்யம் ப்ரஹ்மா, ஸரஸ்வதி, ருக்மிணி, பார்வதி, ஸீதாபிராட்டி, லக்ஷ்மணன் ஆகியவர்களுக்கு கூட கிடைக்காதது. சூர்யோதயத்திற்கு முன் எழுந்திருந்து, குளித்து, புண்ட்ரம் அணிந்து, கையில் தம்புரா எடுத்துக்கொண்டு, உன் குணங்கள் போற்றும் சுப்ரபாதம் பாடி, உனது பசி தீர சூடான பால் ஸமர்பித்து வருகிறேன். உச்சி காலத்தில், உனக்கு அத்தர்,பன்னீர் கலந்த தீர்த்தத்தால் திருமஞ்சனம் செய்து, புது வஸ்த்ரங்கள் சேர்த்து அலங்காரம் செய்து, அறு சுவையுள்ள தளிகை ஸமர்பித்து, பின் வாஸமுள்ள தாம்பூலம் அளித்து வருகிறேன். ஸாயங்கால வேளையில், பாகவதோத்தமர்களுடன் கலந்து கொண்டு, உன்னைப்பாடித் துதித்து, தீபாராதனம் செய்து, உன்னை திருப்பள்ளி அறையில் சேர்ப்பித்து, மலர் பந்தல் கொண்ட மஞ்சத்தில் சயனம் செய்ய வைத்து, மறுநாள் காலை மங்கள கீதம் பாடி எழுப்புகிறேன். இந்த ஸேவா பாக்யம், மற்ற யாருக்கு கிட்டும் என பெருமிதத்துடன் ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியிடம் நமது ஸத்குரு கேட்டார்.

தனக்கு ஸ்ரீ ராமபத்ரன் அனுக்ரஹித்த பாக்யங்களை நினைத்து, அடக்கத்துடன், நான் என்ன தபஸ் செய்ததால் இந்த மங்களங்களைப் பெற்றேனோ? என்ன தானங்கள் செய்து, இந்த ஆனந்த அனுபவம் ஸித்திக்கப் பெற்றேனோ என ஒரு பைரவி ராக கீர்த்தன முலம் கொண்டாடினார். இந்த அழகான கீர்த்தனத்தின் வாக்யங்கள் பின் வருமாறு:

ப: ஏநாடி நோமு பலமோ ஏதான பலமோ

அப: ஸ்ரீநாத ப்ரஹ்ம கைஙர்ந்து ஸேவ தொரகுனா தனகு கலிலேனு

சப: நேனு கோரின கோர்க வெல்லனு நேடு
தனகு நெர வெரெனு
பானு வம்ச திலக நாபாலி பாக்யமா
ஸஜ்ஜன யோக்யமா தன

சப: நீது தாபு நிது ப்ராபு தெர்ரிநெனு
நிஜமுகா நே நீ ஸொம் மைதினி
ஆதிதேவ ப்ராணநாத நாதங்க முனறுஞ்சி
பூஜிஞ்ச தன

சப: ஸுந்தரேச சுகுண ப்ருந்த தசரத நந்தனா
ரவிந்த நயன பாவன
அந்தகாட த்யாகராஜநுத ஸுக மனுபவிம்ப
தொரி கெரா ! தனகிக

ஆதி மூர்த்தியே ! ப்ராண நாதனே ! எத்தவம் புரிந்து, உனக்கு நித்ய கைங்கர்யம் செய்யும் பாக்யம் பெற்றேன் ? எந்த தானங்கள் செய்து, உன்னருகில் நின்று, உன்னை ஆராதனம் செய்யும் பாக்யம் பெற்றேன் ? எனது மன அபிலாஷைகள் எல்லாம் இன்று பூர்ணமாக நிறைவேறின. சதுர்முக ப்ரஹ்மாவிற்கும் கிட்டாத உனது தர்சன பாக்யம் பெற்று, இன்று எனது ஜன்ம சாபல்யம் அடைந்தேன். சாது ஜனங்களுக்காக நீ அருளும் அனுக்ரஹங்களையும், உனது அவதார ரஹஸ்யங்களையும் இன்று புரிந்து கொண்டேன். பல ஆண்டுகளாக உன்னை ஆராதித்ததின் பலனை அடைந்து, பரமானந்தம் அடைந்துள்ளேன். உனது சொத்தாக மாறி, உன்னை பந்து ரத்னமாக கொண்டாடும் பாக்யத்தை நான் அடைந்தேன் என பரம பாவன மூர்த்தியிடம் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் சொன்னார்.

நமது ஸத்குரு, பந்துரத்னமான ஸ்ரீ ராமசந்த்ரனிடம் தன் தீவ்ரமான நன்றியை தெரிவிப்பதற்காக, ஐந்து ரத்னங்களுக்கு சமமான பஞ்சரத்ன கீர்த்தனங்கள் செய்து, நாதோபாஸனை என்ற நைவேத்யமாக சமர்பித்தார்.

ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் பஞ்சரத்ன கீர்த்தனங்கள் "ப்ராண நல ஸம்யோகமு வல்ல ப்ரணவ நாதமு ஸப்த ஸ்வரமுலை பரக" என்ற ஸம்பந்தம் கொண்டவை. ஓங்காரம் என்ற ப்ரணவக்கூண்டில் அமர்ந்துள்ள ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியை, "अतः प्राणाग्निसंयोगात् तेन नादोऽभिधीयते" என்று விவரிக்கப்பட்டிருக்கும் ப்ராணனும், அக்னியும் கலந்த நாதம் .வழியாக வந்த உபாஸனை மூலம் ஆராதித்து, ப்ரணவாகர ஸ்வரூபனான பரம்பொருளின் அருள் நமக்கும் கிட்டுமாறு செய்தார். ஜீவன் முக்தரான ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமக்கு குலதனமாக அருளியிருக்கும் பஞ்சரத்ன கீர்த்தனங்களை பக்தியுடன் பாடி, இந்த கீர்த்தனங்களின் ஸாஹித்யங்களின் அர்த்த கௌரவங்களையும், பதலாலித்யங்களையும் அனுபவிப்பவர்களுக்கு, அவர் "மோக்ஷ முகலதா, ஸீதாவர, விதுலகு, வர ராக லயயக்ருலு ஸ்வர ராக ஸுதா, நாதஸுதா ரஸம்பிலனு" என்ற கீர்த்தனங்களில் விளக்கிய நாதோபாஸனையின் பலன்கள் கிட்டி ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியின் பரிபூர்ண அனுக்ரஹம் கிட்டும் என்பதில் ஐயம் இல்லை. அடுத்த கடிதங்களில் மிகவும் மங்களமான பஞ்சரத்ன கீர்த்தனங்களைப் பற்றி எழுத முயற்சிக்கிறேன். ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் திருவடிகளே சரணம்.

உனதன்புள்ள தம்பி,
சடகோபன்.

May 17, 1989.



Location: Pullambuthankudi



Location: Vaduvoor



Location: Thiruppullani



Location: SriPerumbudur

ஸ்ரீ:

க்ஷேமம் சுக்ல ௵, வைகாசி ௴, பௌர்ணமி தினம், விசாக நக்ஷத்ரம், சனிக்கிழமை

May 20, 1989.

"ஸ்ரீ ஸீதா லக்ஷ்மண ஹனுமத் ஸ்மேத
ஸ்ரீ கோதண்ட ராமஸ்வாமினே நம:"

"வரஸங்கீதமு மோக்ஷ தமனி யெஞ்சி பரமாத்முடைன
ஸ்ரீராமுனி பஜிஞ்சின ஸ்ரீ ஸ்வாமிகி ஸரி எவரு?"

மகர் நோன்புச் சாவடி ஸ்ரீ வெங்கட ஸுப்பய்யர் கீர்த்தனம் (ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் நேர் சிஷ்யர் இவர்)

அன்புடைய சௌ. பத்மாவிற்கு, உன் தம்பி சடகோபன் அநேக நமஸ்காரங்கள். விசாக நக்ஷத்ரம் சேர்ந்த வைகாசி பௌர்ணமி தினமான இன்று "ஸ்வர ராக ஸுதா நிதி சந்த்ருடே ஸ்வாமிகி ஸரி எவரு" என்று கொண்டாடப் பட்டு, ராகம், ஸ்வரம் ஆகிய அம்ருதக் கடலை ஆனந்தத்தால் பொங்க வைக்கும் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் இணையிலா கனராக பஞ்சரத்ன கீர்த்தனங்களில் முதலாக பாடப்படும் "ஸ்ரீ ஜகதானந்த காரக" என்ற நாட்டை ராக கீர்த்தனம் பற்றி இந்த கடிதத்தில் எழுதுகிறேன். அதற்கு முன், கனராக பஞ்சரத்ன கீர்த்தனைகள் உதித்த சமயம், சோழ தேசத்தில் நிலவிய கர்னாடக ஸங்கீத சூழ்நிலை பற்றியும், கனராக பஞ்சரத்ன கீர்த்தனைகளின் நெருங்கிய ராக உறவுகள் பற்றியும் எழுத முயற்சிக்கிறேன்.

ஸ்ரீ ஐய்யர்வாள் காலத்திய ஸங்கீத சூழ் நிலை:

ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் பிறந்த சமயம், மனோதர்ம ஸங்கீதம் உன்னத நிலை அடைந்திருந்த சமயம். ஸங்கீத மஹா மேதைகளான ஸ்ரீ தோடி ஸீதாராமய்யா, அடாணா அப்பய்யா, சங்கராபரணம்

நரஸய்யா, தர்பார் ஸீதாராமய்யா, சௌக்கம் வீரபத்ரய்யா, பச்சிமிரியம் ஆதியப்பையா, ஸொண்டி வெங்கடசுப்பய்யா, ஸ்ரீ ராமஸ்வாமி தீக்ஷிதர், மெலட்டூர் வெங்கடராம சாஸ்த்ரி, ஆகியவர் ஸங்கீதத்துறையில் நக்ஷத்ரங்களாக விளங்கி, கந்தர்வ வித்யையை வளர்த்த சமயம். அவர்கள், தங்களுடைய மனோ தர்மத்தால், பல மணிகாலம், ஒரு ராகத்தை ஆலாபனம் செய்து, தானம், பல்லவி மூலம் ராகத்தின் பலவிதமான ஸஞ்சாரிகளை விளக்கி, பண்டிதர்களையும், ஸங்கீத ரஸிகர்களையும் மகிழ்வித்த சமயம். பாமரர்கள் அறிந்து அனுபவிக்கும் அளவிற்கான ஸங்கீதத்தையோ அல்லது அபூர்வமான ராகங்களையோ, தங்கள் கச்சேரிகளில் அதிகமாக அவர்கள் உபயோகப்படுத்தாத சமயம். ஒரு சிலர், தோடி, அடாணா, தர்பார் போன்ற ப்ரத்யேக ராகங்களை தங்கள் குடும்ப சொத்தாக வளர்த்து, நாதோபாஸனை செய்து, அந்த விசேஷ ராக ஆலாபனத்திறமைக்காக பெயர் எடுத்த சமயம்.

மற்ற ஒரு பக்கத்தில் பஜனை பத்ததியில் ஈடுபட்ட பெரியோர்கள் பக்தியை வளர்க்கும் ச்லோகங்கள், பாசுரங்கள் முதலியவைகளை, ஆலாபனம் அதிகம் செய்யாது, மனோதர்மம் அதிகம் ஏற்பட்டு, ஆணவம் தோன்றாது இருக்கும் வகையில் பாடி, பகவானைக் கொண்டாடினார்கள். பஜனைகளில் ஸங்கீத ரஸிகர்களும், பாமர ஜனங்களும் சேர்ந்து கொண்டு, பக்தியை முதலாகவும், ஸங்கீதத்தை அடுத்தபடியாகவும் நிலை நாட்டிய சமயம், ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம் பிறந்த சமயம்.

இந்த சூழ்நிலையில், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் அவதரித்து, தனது விசேஷ ராமபக்தி மஹிமையால் ஸங்கீத பாவம் (भावम्), , ஸாஹித்ய பாவம், பக்தி பாவம் ஆகிய பாவ (भाव) த்ரயங்களை, அத்யத்புதமாக சேர்த்து, பண்டிதர்கள், பாமரர்கள், எல்லோருடைய உள்ளங்களையும் உருக்கும்

கீர்த்தனங்களை நூற்றுக்கணக்கான ராகங்களில் செய்து ராமார்ப்பணமாக ஸமர்பித்தார். ஸங்கீத ஸித்தாந்தத்தையும், பக்தி ஸித்தாந்தத்தையும், கலந்து பாலும், சர்க்கரையும் சேர்ந்து தயாரிக்கப்பட்ட ஸ்ரீ. ராம நாம ஸித்தாந்தம் என்ற திரட்டுப்பால் ஆக மாற்றி, ஸகல ஜனங்களுக்கும், தனது உஞ்சி வ்ருத்தி பஜனை, ஏகாதசி வ்ரத பஜனை, நித்யோத்ஸவ காலங்கள் ஆகிய சமயங்களில் விநியோகம் செய்தார். இந்த கீர்த்தனங்கள், காவேரி வெள்ளம் போல் பெருகி, மனோதர்ம வித்வான்கள், பஜனையில் ஈடுபடும் பாகவதர்கள் இருவரும் வளர்த்த ஸம்பரதாயங்களான இரு கரைகளையும் நனைத்துக் கொண்டு ப்ரவஹிக்கும் (பெருகும்) வெள்ளமாக, தனது ஸங்கீதம் விளங்குமாறு, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் செய்தார். தனது கீர்த்தனங்களில் காணப்படும் அபூர்வ ஸங்கதிகள் மூலம், கீர்த்தனங்களின் ஸௌந்தர்யத்தையும், மெருகையும் நமக்கு காண்பித்துக் கொடுத்தார். அபூர்வமான ராகங்களில் செய்யப்பட்ட கீர்த்தனங்கள் மூலம், தான் ஸங்கீதக் கடலில் மூழ்கி எடுத்து வந்த முத்துக்களையும், நவமணிகளையும் ஸ்ரீ ராமசந்த்ரனின் திருவடிகளில் சமர்பித்து, அந்த திவ்ய மணிகளின் ஒளி மூலம், தன் ஜீவாதாரமான ராமனிடம், நம்முடைய பக்தி மேலும் வளருமாறு செய்தார்.

தனது ரவை ஜாதி சரீரத்திற்கு அனுஸரணையாக, மத்யமகால சங்கதிகள், த்ரிகால ஸங்கதிகள் கொண்ட கீர்த்தனங்களை சுந்த்ரத் தெலுங்கு பாஷையிலும், மங்களகரமான ஸம்ஸ்க்ருத பாஷையிலும் செய்தார். அவர் மத்யம காலத்தில் கீர்த்தனங்களை அமைத்ததின் காரணத்தை ப்ரொபஸர் P. சாம்பமூர்த்தி பின் வருமாறு விளக்கியிருக்கிறார். சௌக்க கால க்ருதிகள், தாது என்ற ஸாஹித்ய பகுதிகளுக்கு, தான ஜாதி விசேஷங்கள், அலங்கார விசேஷங்கள் சேர்க்க சிரமம் அளிக்கும்; மத்யம கால உபயோகம் (Madhyama Kala Tempo), மூலம், ஸாஹித்ய பகுதிகள் அழகு, விறுவிறுப்பு, ஆனந்தம் கொண்டு,

தடையில்லா வெள்ளம் போல் ப்ரவஹிக்க உதவும். அதனால், ஸ்ரீ ஸ்வாமிகள், தனது கீர்த்தனங்களை மத்யம கால நடையில் அமைத்தார் என பேராசிரியர் நமக்கு விளக்கியுள்ளார்.

## கனராக பஞ்சரத்ன கீர்த்தனைகள் அவதரித்த சமயம்:

ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், பாரத நாட்டின் புண்ய பூமியில் அவதரித்து, தக்ஷிண தேசத்தில் வாழ்ந்த சமயம் 1767 கி.பி. யிலிருந்து 1847 கி.பி. வரை. தன் தகப்பனாரின் பூஜைக்கு சிறு குழந்தையாக இருக்கும் சமயத்திலேயே அவர் உதவி, "நமோ நமோ ராகவாய அனிசம்" முதலிய கீர்த்தனங்களை நமக்கு அருளினார். பிறகு மந்த்ரோபதேசம் பெற்று, முப்பெத்தெட்டாம் வயதிற்குள், 96 கோடி ராமநாம ஜபம் செய்து முடித்து, ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியின் தர்ஸன பாக்யம் கிடைத்து, "ஏல நீ தயராது, பராகு ஜேஸெத வேல ஸமய முகாது" என்ற அடாணா ராக கீர்தனத்தை செய்தருளினார். தேசியத் தோடியில் அமைக்கப்பட்ட "நமோ நமோ ராகவாய" என்ற க்ருதியிலிருந்து, "ஏல நீ தயராது" என்று அடாணா ராக க்ருதி வரை உள்ள காலத்தை ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் ஸங்கீத வாழ்க்கையின் முதல் பகுதி எனக் கூறலாம். இரண்டாவது பகுதி, ஸ்ரீ ராம தர்ஸன சமயத்திலிருந்து ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம், திருவொற்றியூர், திருவல்லிகேணி, ராமேஸ்வரம், நாகப்பட்டிணம் முதலிய திவ்ய தேசங்களை க்ஷேத்ராடனமாக ஸேவித்துக் கொண்டு, திருவையாறு திரும்பிய வருஷங்களைச் சேர்ந்தது இரண்டாம் பகுதி கி.பி. 1805 -லிருந்து கி.பி. 1839 வரை இருந்ததாக அனுமானிக்கலாம். ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் ஸங்கீத வாழ்க்கையின் (Career) இரண்டாவது பகுதியில் கவித்வமும், பாவ, ராக, தாள உயர்வுகள் கலந்ததுமான ஆயிரக்கணக்கான க்ருதிகள் தோன்றின.

க்ஷேத்ராடனத்திலிருந்து திரும்பிய காலத்திலிருந்து தன் இறுதி நாட்கள் வரை உள்ள வர்ஷங்களை (1839-1847) அவருடைய வாக்கேய வாழ்க்கையின் மூன்றாவது பகுதியாக விவரிக்கலாம். இந்த வருஷங்களில் பழுத்த ராம பக்தியுடன், அவர் தீவ்ரமான ஜப .யோகம், கானாஞ்சலி, பஜனை, முதலிய விஷயங்களில் தன் வாழ் நாளைக் கழித்தார். மூன்றாம் பகுதியில் பாடப்பட்ட கீர்த்தனங்களில் இரண்டு, 'கிரிபை நெல கொன்ன' என்ற ஸஹானா ராக கீர்த்தனையும், "பரிதாபமு கனி யாடின பலு குலு மரசிதிவோ ந", என்று மனோஹரி ராக கீர்த்தனையும் ஆகும்.

கனராக பஞ்சரத்ன கீர்த்தனைகள் ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் ஸங்கீத வாழ்நாளின் இரண்டாம் பகுதியைச் சேர்ந்தவை. திருவையாற்றின் திருவீதிகளிலே, உஞ்சிவ்ருத்தி பஜனை சமயங்களில் அநேக தடவை பாடப்பட்டு ப்ரபலமானவை. ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் கீர்த்தனங்கள் எல்லாவற்றிற்கும் தாது, மாது விசேஷங்கள் விஷயத்தில் சிகரங்ளாக நிற்பவை இவை.

ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், கனராக பஞ்சரத்னங்களை செய்வதற்கு இரண்டு காரணங்கள் உண்டு என அறிஞர்கள் தெரிவித்திருக்கிறார்கள்; முதலாவதாக, ராக ஆலாபனத்தில் பெயர் பெற்ற சில மனோதர்ம ஸங்கீத வித்வான்கள் ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தன விசேஷங்கள் புரிந்து கொள்ள முடியாததால், ஸ்ரீ ஸ்வாமிகள் லேசான உருப்படிகள் (Light Poetry) செய்யும் வாக்கேயக்காரர் என விவரித்தார்கள். இந்த விமர்ஸனை, மனோ தர்ம ஸங்கீத வித்வான்களின் ஞானக் குறைவாலே உதித்தது. இந்த அபிப்ராயத்தை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் மாற்ற விரும்பி, கவித்வமும், ஸங்கீத ஸாரமும் நிறைந்த பஞ்சரத்ன கீர்த்தனைகளை செய்தார்.

இரண்டாவதாக, ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் சில சிஷ்யர்கள், ஸங்கீத அப்யாஸத்தில் முன்னேறுவதற்காக, தானவர்ண பாணியில், தங்கள் குரு, சில கீர்த்தனங்கள் செய்து உதவ வேணும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் வேண்டு கோளுக்கிணங்கி, ஸ்ரீ ஸ்வாமிகள் பல ஸங்கீத நுணுக்கங்களை தங்களுக்குள் அடக்கிக் கொண்டுள்ள அழகிய பஞ்சரத்ன கீர்த்தனங்களை, கனராகங்களில் செய்து அனுக்ரஹித்தார். ஆகவே, இரண்டு விஷயங்களை மனதில் வைத்து, ஸங்கீத சக்ரவர்த்தியான ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கனராக பஞ்சரத்ன கீர்த்தனைகளைச் செய்து, ஸ்ரீ ராமபிரானின் பரிபூர்ண அனுக்ரஹ விசேஷம் பெற்றார். இந்த ஐந்து கீர்த்தனங்களும், ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் வார்ஷிக ஆராதன உத்ஸவ தினத்தில், திருவையாற்றிலும், மற்ற எல்லா நகரங்களிலும், நாடுகளிலும், முதலாவதாகப் பாடப்படுபவை.

<u>கனராக பஞ்சரத்ன கீர்த்தனங்களின் சிறப்பு.</u>

இந்த கனராக பஞ்சரத்ன கீர்த்தனங்களின் உயர்வை பேராசிரியர் ஸ்ரீ P. சாம்பமூர்த்தி பின்வருமாறு புகழ்ந்திருக்கிறார்:

"The Pancharatnam, (five gems) in the Ghana Rāgās Nāta, Gaula, Ārabhi, Śri Raga and Varali — is Tyagarāja's most scholarly contribution to South Indian Music. There is nothing to surpass them from the point of view of richness of musical composition or the flowing character of their Sāhitya. His talent for conceiving melodies of variegated beauty, interwoven with phrases of sparkling designs is seen clearly in these pieces. Even ragas of admittedly limited scope like Gaula become major rāgas in his hands. This pancharatnam has earned for him universal admiration.... Lofty heights have been reached in the Sphere of Sangita Kavitvam in these compositions. The Sahityas herein are noted for their fine poetic imagery.

These five Compositions serve to reveal the depth of his learning and his gifts in Sanskrit and Telugu. To the student of Rāgā and Rasa, these Compositions are monumental examples to show how such feelings as rapture, self-introspection, prudence, admiration, sustained joy and humility resulting from the recognition of greatness in others could be effectively portrayed by particular rāgās and special phrases in them ..... The pancharatnam has a powerful appeal. A high degree of technical skill is required to render them ...... They constitute fine examples of musical architectures. They are without a parallel and are noted for their peerlessness."

காவேரி, கொள்ளிடம், குடமுருட்டி, வெண்ணாறு, வெட்டாறு என்ற ஐந்து நதிகள் நாம ஸங்கீர்த்தனம் செய்து வலம் வரும் பஞ்சநதீச்வர க்ஷேத்ரத்தில், "கண்டறியாதன கண்டோம்" என ஸ்ரீ அப்பர் ஸ்வாமிகளால் விவரிக்கப்பட்ட தக்ஷிண கைலாஸ க்ஷேத்ரத்தில், கேட்டறியாதன கேட்டோம் என்ற வகையில், திரு ஐயாறப்பனின் ஐந்து நதிகள் செய்யும் ஸ்ரீ ராம நாம கோஷமாக ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் தனது கனராக பஞ்சரத்ன கீர்த்தனைகளை நிர்மாணித்து அருளினார்.

தன் பார்யையான தர்மஸம்வர்த்தினி கேட்ட பின்வரும் கேள்விக்கு. பதில் சொல்லி, ஸ்ரீ ராம நாமத்தின் மஹிமையை உணர்த்தியவர் ஸ்ரீ ஐயாறப்பன்:

**पार्वत्युवाच:-**

केनोपायेन लघुना विष्णोर्नामसहस्रकम् ।
पठ्यते पण्डितैर्नित्यं श्रोतुमिच्छाम्यहं प्रभो ॥

श्री ईश्वर उवाच:-

श्रीराम राम रामेति रमे रामे मनोरमे ।
सहस्रनाम तत्तुल्यं रामनाम वरानने ॥

श्रीरामनाम वरानान ओं नम इति

ஸ்ரீ ஐயாறப்பன் ஸ்ரீ தர்மஸம்வர்த்தினி ஸம்பாஷணை மூலம் ஞாபகப்படுத்தப் பட்ட ஸ்ரீ ராமநாம மஹிமையைப் போற்றுபவை ஸ்ரீ த்யாகராஜரின் பஞ்சரத்ன கீர்த்தனங்கள்.

சிஷ்யர்களின் உதவிக்காக தானவர்ண பாணியில் அமைக்கப்பட்ட பஞ்சரத்ன கீர்த்தனங்கள்.

முன் பகுதி ஒன்றில், ஸங்கீத அப்யாஸத்தில் முன்னேற்றம் அடைய, ஸ்ரீ ஸ்வாமிகளின் சிஷ்யர்கள் தானவர்ண ரீதியில் கீர்த்தனங்கள் செய்து கொடுக்க வேணும் என்று கேட்டுக் கொண்டதை தெரிவித்தேன். அந்த வேண்டுகோளுக்கிணங்கி, கனராக பஞ்சரத்ன கீர்த்தனைகளை ஸ்ரீ ஸ்வாமிகள் செய்தார் என்றும் குறிப்பிட்டேன். தான வகையில், நீண்ட சரணங்கள் கொண்ட பெரிய கீர்த்தனங்களைச் செய்தபோது தனது கவித்திறனுக்கும், ஸங்கீத ஞானத்திற்கும் நிறைய உதாரணங்களை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் அளித்தார். சிஷ்யர்களுக்கும் ஸங்கீத அபிவிருத்தி ஏற்படச் செய்தார்.

அவர் தானவர்ண பத்ததியில் பஞ்சரத்ன கீர்த்தனங்களை சுலபமாகச் செய்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, அவருக்கு வீணை வாசிப்பதில் மிகுந்த ஸாமர்த்யம் உண்டு. தனது பூஜை

அறையில் வைக்கப்பட்டிருந்த வீணையில் அவர் கீர்த்தனங்களை தான ரீதியில் வாசிப்பதுண்டு. அவருடைய வீணைத்திறமை தெரிந்த வீணை குப்பைய்யர் என்று பின்னர் ப்ரபலமான சிஷ்யர், தனக்கு வீணை வாசிக்கத் தெரியும் என்று கூட பல வருஷம் தன் குருவிடம் சொல்லத் தயங்கினார். வீணைக்கு விசேஷமானவை களில் இரண்டு தானமும், கமக உபயோகமும் எனச் சொல்லலாம். தானம் என்பது, ராகம், தானம், பல்லவி என்ற மூன்று விதமாய் சேரும் சம்ப்ரதாயத்திற்கு நடு நாயகம் வஹிப்பது. தானம் என்பது "அனந்தம் த்வம்" என்ற வேத கோஷத்தை அனுஸரித்து, "Endless Thou art" என்று பகவானுடைய அகிலாண்ட கோடி ப்ரஹ்மாண்ட ஸ்வரூபத்தைப் போற்ற உதவும் ஸங்கீத ஸம்ப்ரதாயம்.

வேத ஸம்ஹிதைகளும், ஸங்கீத ஸம்ப்ரதாயமும் பகவானை உபாஸிக்க உதவும் வழிகளே! அதனால் தான், ஸங்கீத சாஸ்திரத்தை, நாம் உபவேதம் என்று கூறுகிறோம். வேதமும், ஸங்கீதமும் "அனந்தம் த்வம்" என்ற மஹாவாக்யத்தை தான ரூபமாக கொண்டாடி, அவனை தான ரூபியாக அறிகின்றன. வேத ஸம்ஹிதைகளையும் அவைகளின் அர்த்தங்களையும் ஸரிவர புரிந்து கொண்டு, ஸ்வரம் தவறாது, மனதில் நிறுத்திக் கொள்ள தான ரூபமாக "கனம்" என்ற ஒரு வழியை வித்யார்த்திகளுக்கு, ஆசார்யர்கள் (கனபாடிகள்) சொல்லிக் கொடுக்கிறார்கள். அதே மாதிரி, ஸங்கீத வித்யார்த்திகளுக்கு, தானவர்ணங்கள், பத அர்த்தங்கள், ஸங்கீத நுணுக்கங்கள் புரிந்து கொள்ளவும், நிலைத்திருக்கவும் உதவுகின்றன. வேத ஸம்ஹிதை, ஸங்கீத ஞானம் இரண்டும் அபிவிருத்தி அடைய கன பாடம், தான வர்ண அப்யாஸம் இரண்டும் முக்யமானவை. இந்த இரு அப்யாஸங்களுக்கும் உள்ள பொதுவான தத்வங்களை வீணை M.நாகேச்வரராவும்,

ஸ்ரீ ஜான் பார்லோவும் பின் வருமாறு விளக்கியிருக்கிறார்கள்.

"The word Tānam is related to the Sanskrit 'Anantam tvam' meaning endless thou art. The endlessness reflects that manner of reciting a chant, which involves the breaking up of a text into syllables and the subsequent reordering of them in all Combinations Both as a means of obtaining mastery over the sound system of the chant and of acquiring insight into the truths behind the text. This technique is also known as Ghānam, which gives a Second probably related meaning for this term.

Since the Sanskrit vowels are quantitative (long and short in the temporal sense), the application of Ghana produces chains of rhythmic units (Different groups of longs and shorts) of a nonrepetitive nature. This rhythm is characteristic of *TĀNAM*. The technique of Ghanam and the resulting rhythm represent an "instrumentalization" of the voice, that is, an emphasizing of the articulative possibilities of the vocal apparatus (the Consonants of the Language) at the expense of the tonal capabilities (vowels and Diphthongs), the hierarchical rhythmic structure known as Tanam (based on Ghanam), consists of melodic lines built up over a constant pulse from short phrases 2 or 3 beats in length- To present this hierarchical rhythmic structure, two types of articulation or means of disjunction are needed, one to distinguish, phrases, and the other to articulate the beats or pulses within the phrases.....from these building blocks, larger architectonic units (melodic lines, section) are shaped. The phrases, when properly ordered, acquire a vector - like quality, which points towards silence. This silence is a positive Rhythmic entity, Somewhat akin to a cadence, but with its temporal force removed: the Silence is both the end of the preceding line or Section and the beginning of the following, just as the ultimate in musical control is the mastery of silence, so silence, is the resolution of the endlessness (Anantam) of Tanam."

தான [illegible]தின் ஸ்வரூப விசேஷங்களையும், தான (வர்ண) கீர்த்தனைகளை அப்யஸிப்பதால், வித்யார்த்திகளுக்கு ஏற்படும் நன்மைகளையும் மேற்காணும் ஆங்கிலப் பகுதி விபரமாக தெரிவிக்கிறது. தன் சிஷ்யர்களுக்கு நாதோபஸனைத் துறையில் அபிவிருத்தி ஏற்பட்டு, ஸர்வ மங்கள்ங்களும் கிட்ட, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கனராக/தான வர்ண பஞ்சரத்ன கீர்த்தனங்களை செய்தருளினார்.

## பஞ்சரத்ன கீர்த்தனைகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து கனராகங்கள்.

ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் பஞ்சரத்ன கீர்த்தனங்களை, நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீ என்ற ஐந்து கன ராகங்களில் அமைத்தார். அதற்கு காரணம், இந்த ஐந்து ராகங்களில் காணப்படும் ரிஷப ஸ்வர ஸம்பந்தமான உறவே. மேற்பகுதியில் தெரிவிக்கப்பட்ட கனம், தானம். ஸம்ப்ரதாயப்பட்ட உறவை வெகுவாக இந்த ஐந்து ராகங்களில் காண்கிறோம். ரிஷப ஸ்வரம், கனராகங்களாகிய ஐந்தில் எப்படி மாறி, விசேஷமான ஸம்பந்தங்கள் கொண்டுள்ளன என்பதை ஸ்ரீமான் நாகேச்வரராவும், ஸ்ரீமான் பார்லோ அவர்களும் பின்வருமாறு விவரித்திருக்கின்றனர்:

"The five Ragas are in a state of equilibrium, as suggested by the following scheme:.....

1. NATA ↓ 2. GOULA ↗ 3. ARABHI ↓ 4. VARALI ↓ 5. SRI

The balance pivots around the changing character of the note Ri (2nd degree of the scale). Thus the Ri of Nata is high (sharp) pointing and striving upwards, while the Low (flat) Ri of Goula falls back to the tonic (1st degree or Sa.)

Arabhi balances the ascension and depression with its median Ri (natural). The Ri of varali lies in the shadow of more powerful Ga (3rd Degree); It is a point lightly touched upon in the fall from the flat Ga. Sri raises the Ri again to its natural position and presents it in its simplest, purest form, an unvaried tone freed now from the curves and implied directionality, which it carried in previous Ragas. This tonal purity is the melodic Correlate of Silence; as the Silence resolves the rhythmic movement, so the natural, unornamented Ri resolves in stillness the striving of the tonal movement.

There is a point where movement ceases, where Sound (*நாதோபாஸனை*) fades into Silence, where the active individual melts into the passive tradition (*நிர்விகல்ப ஸமாதி*). The "endless" Rhythm of *TANAM*, the Oscillating Ri's of Nata and Goula, the Spiritual enthusiasm evidenced in the Constant repetition of a chant, all take this point as their goal."

இனி, பஞ்சரத்ன கீர்த்தனைகளுள், முதலாவதாக பாடப்படும், "ஜகதானந்த காரக" என்ற நாட்டைராக கீர்த்தனம் பற்றி எழுதுகிறேன்.

<u>முதல் பஞ்சரத்னம், நாட்டை ராக கீர்த்தனம்.</u>

"ஜகதானந்த காரக" என்ற மிடுக்குடன் ஆரம்பமாகும் வீரராகவனைப் பற்றிய முதல் பஞ்சரத்னம் வீரரஸ ப்ரதானம் கொண்ட நாட்டை ராகத்தில் ஸ்ரீ அய்யர்வாளால் அமைக்கப்பட்டது. நாட்டை 36 வது மேள கர்த்தாவாகிய சல நாட்டையின் ஜன்யராகம். ஸரிகமபதநிஸ - ஸநிபமரிஸ என்ற ஆரோஹண அவரோஹணம் கொண்ட ஸம்பூர்ண ஔடவராகம், ருகுமதுநு என்ற குறிப்புகளுடன், ஷட்ஸ்ருதி ரிஷபம்,

அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், ஷட்ஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம் ஆகிய ஸ்வரங்களைக் கொண்டது. நாட்டையின் ரிஷபம், ஜீவாத்மா பரமாத்மாவை தேடும் விறுவிறுப்புடன் உயரே செல்லும் தீவ்ர உத்ஸாகம் கொண்ட ரிஷபம், ரகுவீரனின் வீர ரஸத்தை ஸேவித்துக் கொள்ளும் மிடுக்கு உடைய ரிஷபம். பேராசிரியர் சாம்பமூர்த்தி நாட்டை ராக கீர்த்தனத்தின் ஸங்கீத உயர்வு, ஸாஹித்ய உறவு இரண்டை பின்வருமாறு விவரித்தார்:

"The Nāta Rāgā Pancharatnam, noted for the dignity of the Dhātu and Mātu, took the critics of his time by storm. It is all praise and consists mainly of doxologies. It is suggestive heroic praise."

இந்த கீர்த்தனத்தில் பத்து சரணங்களை நாம் ஸேவித்துக் கொள்கிறோம். பத்து சரணங்களுள் மூன்றில், "ஸ்ரீ த்யாகராஜனுத, ஸ்ரீ த்யாகராஜ ஸன்னுத, வர த்யாகராஜாதிநுத" என்ற முத்ரைகளைக் காண்கிறோம். இதற்கு காரணம், முதலில் செய்த சுருக்கமான கீர்த்தனத்திற்கு அனுபந்தமாக பின்னர் ஸ்ரீ த்யாகப்ரம்மம் சரணங்கள் சேர்த்ததே என்று பெரியோர்கள் தெரிவிக்கிறார்கள். சரணங்கள் தான் செய்த சரணங்கள் தான் என்பதைக் குறிப்பிட அந்த அந்த இடங்களில் தன் நாமாங்கிதத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் சேர்த்தார் என்பது ப்ரஸித்தம். இந்த கீர்த்தனத்தை ஸ்ரீ சாம்பமூர்த்தி, "ராம ஸ்தோத்ரமணி மாலை (garland of panegyrics on Sri Rama) எனவும், ஸங்கீத ரஹஸ்ய ப்ரதர்சினி (Musical Revelations) எனவும், நாத ஸாதனைக்கு இன்றியமையாதது (ideal for voice - training exercises) எனவும் விவரித்திருக்கிறார்.

நாட்டை ராக கீர்த்தனமும், மற்ற பஞ்சரத்ன கீர்த்தனங்களும் தஞ்சாவூர் ராம ராவ் என்ற ப்ரதம சிஷ்யரின் வேண்டுகோளால் செய்யப்பட்டன என்றும் சொல்வார்கள். ஸ்ரீ ராம ராவ், தனது குருவினிடம், பகவத் ஆராதனத்திற்கும், ஸ்துதிக்கும் உபயோகப்படும் தோடய மங்களமாக சில க்ருதிகள் செய்து அருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும், அதற்கிணங்கி ஸ்ரீ ஸ்வாமிகள் நாட்டை ராக கீர்த்தனத்தை செய்து முடித்ததாகவும் நாம் அறிகிறோம். முன்னர் குறிப்பிட்டபடி, முதலில் நாலு சரணங்கள் கொண்ட சுருக்கமான கீர்த்தனமாக "ஜகதானந்த காரக" என்ற கீர்த்தனத்தை செய்தார்; அதற்கு பின் மூன்று சரணங்கள் சேர்த்து மற்ற ஒரு நாமாங்கிதத்தை வைத்து, தான் செய்ததாக முத்ரை மூலம் தெரிவித்தார். கடைசியாக, மேலும் மூன்று சரணங்கள் சேர்த்து மற்ற ஒரு விதமான நாமாங்கிதத்தையும் சேர்த்து, கீர்த்தனத்தின் நீளத்தை மற்ற பஞ்சரத்ன கீர்த்தனங்களுக்கு அளவு கோலாக இருக்கும்படி வைத்தார். பல்லவி, அனுபல்லவியுடன், பத்து சரணங்களை சேர்த்ததற்கு காரணம், இந்த கீர்த்தனத்தின் ஸ்துதி வாக்யங்களை தனித்தனியாக நாமாவளியாகச் சொன்னால், அஷ்டோத்ர சத நாம அர்ச்சனை முடிக்க உதவும் என்ற காரணத்தை மனத்தில் வைத்து, இரண்டு தடவை அதிகப்படியான சரணங்களையும், நாமாங்கிதங்களையும் ஸ்ரீ ஸ்வாமிகள் சேர்த்தார்கள். தனது பூஜையில்,

"ஓம் ஜகதா நந்த கார காய நம:
ஓம் ஜய ஜானகீ ப்ராண நாதாய நம:
ஓம் ககனாதிப ஸத்குல ஜாய நம:
ஓம் ராஜ ராஜேச்வராய நம:
ஓம் ஸுகுணா கராய நம:
ஓம் ஸுர ஸேவ்யாய நம: ..........என்றபடியாக

உபயோகப் படுத்தப் படக்கூடிய அஷ்டோத்ர சத நாமாவளிகளை நாட்டை ராக கீர்த்தன மூலம் ஸமர்பித்தார். மற்ற ஒரு சிஷ்யர் கோரிக்கைக்கு அனுகூலமாக தான வர்ண ரீதியில் ஆரபி பஞ்சரத்னத்தை செய்தருளினார். ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் தன் சிஷ்யர்களிடம் காண்பித்த அன்பை நாட்டை, ஆரபி முதலான பஞ்சரத்ன கீர்த்தனங்கள் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோம்.

நாட்டை ராக கீர்த்தனங்களில் காணப்படும் ஸ்வராலங்காரங்கள் அநேகம். பேராசிரியர் சாம்பமூர்த்தி பின் வரும் இரண்டு விசேஷங்களை விளக்கியிருக்கிறார்:

1. மூன்றாவது சரணமாகிய "இந்த்ர நீல மணி ஸன்னிபாப" என்பதிலிருந்து ஏழாவது சரணமாகிய "புராண புருஷ" என்பது வரை, சரணங்கள் பா, ப, ஸா, பா, பஸா என்ற ஒற்றுமையுடன் ஆரம்பமாவது ஒன்று.

2. எட்டாவது சரணத்தில், "ஓம்காரபஞ்ஜர" என்று ப்ரணவநாத முழக்கத்தை கேட்கும் ஸமயம், மத்ய ஷட்ஜமத்திலிருந்து தாரஸ்தாயி ஷட்ஜமம் கலந்த உல்லாஸித கமக ப்ரயோகம் ஸாஹித்ய பகுதியின் அர்த்த காம்பீர்யத்துடன் அழகாக பொருந்துவது மற்றது. அழகிய ஸம்ஸ்க்ருத ஸமாஸங்கள் நிறைந்த நாட்டைராக பஞ்சரத்ன கீர்த்தனம் ஒரு அத்புத மாணிக்கம். இனி, பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் தங்களுக்குள் அடக்கிக் கொண்டிருக்கும், அர்த்த கௌரவங்களை பற்றி எழுதுகிறேன்.

நாட்டைராக பஞ்ச ரத்னத்தின் பல்லவி:

"ஜகதானந்தகாரக- ஜய ஜானகீ ப்ராண நாயக" என்பது பல்லவி வாக்யங்கள்.

பல அபராதங்கள் செய்த போதிலும், தன்னை சரணம் என்று அடைந்தவர்களுக்கு அஞ்சற்க எனச் சொல்லி ரக்ஷிக்கும் ஸத்யவ்ரத தர்ம விக்ரஹனான ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி, உலகங்கள் எல்லாவற்றிற்கும் பயத்தை நீக்கி ஆனந்தத்தை அளிக்கும் ஜகதானந்தகாரகன் என ஸ்ரீ ஸ்வாமிகள் தன் இஷ்ட தெய்வத்தை நமக்கு அறிமுகப்படுத்தினார். சத்ருக்களையும், மித்ரர்களையும் அன்றும் இன்றும், என்றும், ஸமமாக பாவித்து, காப்பாற்றி அருள் புரிந்து அவர்களுக்கு எல்லாம் உன் பேரருளாகிய ஆனந்தத்தை அளிக்கும் ராம ப்ரபோ என இங்கு நமஸ்கரித்துக் கொள்கிறார். நீ ஸுக்ரீவன் என்ற வானர அரசனுடைய பயத்தை போக்கி, அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்து அவனை ஆனந்தப் படுத்தினாய்! விபீஷணன் என்ற தர்மாத்மாவின் கஷ்டங்களை விலக்கி, சரணாகத ரக்ஷணம் புரிந்து, லங்கா ஸாம்ராஜ்யத்தை அவனுக்களித்து, அவனை ஆனந்தப்படுத்தினாய்! "ப்ரகட கீர்த்தி கல்கின கோதண்டபாணி"! உனது கோதண்டத்தின் இடி முழக்கம் போன்ற டங்கார த்வனியுடன் விரைந்து செல்லும் பாணங்கள் மூலம், ராவணன் என்ற துஷ்டனை வதம் செய்து, உலகங்கள் எல்லாம் ஆனந்தம் அடையச் செய்தாய். இப்படியாக, ரகுவம்சமாகிய ஸமுத்ரத்திற்கு சந்த்ரன் போல் ஆனந்தமளிப்பவனும் ஸீதாதேவியின் மனதாகிற குமுத புஷ்பத்தை மலரவைக்கும் சந்த்ரன் போன்றவனும் சுக்ரீவனின் கண்களுக்கு ஆனந்தத்தை அளிப்பவனுமாகிய ஸ்ரீ ராமசந்த்ரனை பின் வரும் ச்லோகம் போற்றும் வகையில் ஞாபகப்படுத்திக் கொண்டு, ஜகதானந்த காரகா, ஹே ராமா என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் வணங்கிக் கொண்டார்.

**श्रीरामचन्द्र करुणाकर राघवेन्द्र, राजेन्द्रचन्द्र रघुवंशसमुद्रचन्द्र।**
**सुग्रीवनेत्रयुगलोत्पलपूर्णचन्द्र, सीतामनः कुमुदचन्द्र नमो नमस्ते॥**

ஸ்ரீ ராமசந்த்ர கருணாகர ராகவேந்த்ர,
ராஜேந்த்ர சந்த்ர ரகுவம்சஸமுத்ரசந்த்ர 1
ஸுக்ரீவ நேத்ர யுகளோத்பல பூர்ணசந்த்ர,
ஸீதாமன: குமுத சந்த்ர நமோ நமஸ்தே 11

பல்லவியின் இரண்டாவது வாக்யத்தில் "ஜய ஜானகி ப்ராணநாயகா" என ஸ்ரீ த்யாகப்ரம்மம், ஸீதாராமனை, ஜானகிரமணனை நமஸ்கரித்துக் கொள்கிறார். ஜானகி தேவியின் ப்ராண நாதனே ! உனக்கு ஸர்வ மங்களங்களும் உண்டாகட்டும். நீ ஸாக்ஷாத் மஹா லக்ஷ்மியான ஸீதாபிராட்டியின் ஸம்பந்தத்தால் மிகவும் உன்னதமாக ஸேவை தருகிறாய் ! பல்லாண்டு ! பல்லாண்டு ! பல்லாயிரத்தாண்டு என அன்புடன் வாழ்த்தினார் ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள். இந்த பல்லாண்டு "ஸீதா முகாம்போருஹ சஞ்சரீக: நிரந்தரம் மங்களம் ஆதநோது" என்ற த்யான ச்லோக பகுதிக்கு ஸமானமான பல்லாண்டு !

<u>நாட்டை ராக பஞ்சரத்னத்தின் அனுபல்லவி வாக்யங்கள்:</u>

வேதத்திற்கு ஆதாரமான நிஷாத ஸ்வர மூலம் அனுபல்லவியை ஆரம்பித்து, வேதம் வணங்கும் சூர்ய மூர்த்தியின் குலத்தில் உதித்த ஸ்ரீ ராமசந்த்ரனை ராஜாக்கள் எல்லோருக்கும் ராஜாவான சக்ரவர்த்தியாக ஸ்ரீ தியாகப்ரம்மம் பின் வருமாறு வணங்கிக் கொண்டார்.

ககனாதிப ஸத்குலஜ ராஜராஜேச்வர 1
ஸுகுணாகர ஸுரஸேவ்ய பவ்ய தாயக ஸதா ஸகல 11
(ஜகதாநந்த காரக)

"அஸாவாதித்யோ ப்ரஹ்ம" என்று ஸந்த்யாவந்தனத்தில் சூர்யன், பரப்ரஹ்மமாக அறிமுகப்படுத்துகிறார்.

உதிக்கும் ஸமயத்திலும், அஸ்தமிக்கும் ஸமயத்திலும் ஸூர்ய பகவானை ப்ரம்மம் என்று வழிபடுபவன் "ஸகலம்பத்ரமச்னுதே" என்றபடி ஸர்வமங்களங்களையும் அடைகிறான் என்று தைத்ரீய ப்ராஹ்மணம் தெரிவிக்கிறது. அப்பேற்பட்ட கீர்த்தி உடைய ஸூர்யனின் ஸத்குலத்தில் உதித்தவர் ஸ்ரீ ராமசந்த்ரன். ஸூர்யவம்சத்தில் பிறந்து, சக்ரவர்த்தியாக விளங்கும் ஸ்ரீ ராகவனை, த்யாக ப்ரமம், "ககனாதிப ஸத்குலஜ ராஜ, ராஜேச்வரா", என நமஸ்கரித்துக் கொண்டார். இந்த நமஸ்காரம் ஸ்ரீ ஸீதா ராம ஸ்தோத்ர மூலம் ஸ்ரீ ஆஞ்சநேயர் செய்த பின்வரும் ச்லோகப் பகுதியை ஞாபகப் படுத்துகிறது:

"ரகூணாம் குலதீபம் ச, நிமீனாம் குலதீபிகாம் I
ஸூர்ய வம்ச ஸமுத்புதம், ஸோம வம்ச ஸமுத்பவாம்" II

இங்கு, ஆஞ்சனேயர், ஜானகி ப்ராண நாதனையும், ஜானகியையும் சேர்த்தே நமஸ்கரித்துக் கொள்கிறார்.

அடுத்த அனுபல்லவி பகுதி "ஸுகுணாகர ஸுர ஸேவ்ய பவ்யதாயக ஸதாஸகல (ஜகதானந்த காரக) என்பது.

"ரமயதே இதி ராம:"என்றபடி உலகங்களை எல்லாம் தன் ஸத்குணங்களாலே மகிழ்விக்கும் ஜகதானந்தகரனான ராமனை "ஸுகுணாகரன்" என ஸ்ரீ ஸ்வாமிகள் போற்றினார். அந்த ஸுகுணாகர ராமனை ஸ்ரீ வால்மீகி முனிவரின் ச்லோகமாகிய

த்வம் ஹி ஸத்ய வ்ரதசூரோ:
தார்மிகோ த்ருட விக்ரம: I
பரீக்ஷ்யகாரீ ஸ்ம்ருதிமான்
நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச II

என்று போற்றியது, ஸ்ரீ த்யாகப்ரம்மத்தின் ஸ்துதிக்கு ஆதாரமளிக்கிறது. ஸ்ரீ வால்மீகி பகவான் நீ கொடுத்த வாக்கை தவறாது காப்பாற்றும் தர்ம ஸ்வரூபி, ஸத்யத்தையே வ்ரதமாகக் கொண்டவன், எல்லையற்ற பராக்ரமம் கொண்டவன்; விஷயங்களை விபரமாக ஆராய்ந்து சரியான முடிவுக்கு வருபவன்; உனக்கு உபகாரம் செய்த நண்பர்கள் விஷயத்தில் மிகவும் கடமைப்பட்டவன் என ஸுகுணாகர ராமனைப் புகழ்ந்தார்.

நற்குணக் கடலான ஸ்ரீ ராமன், தேவர்களால் துதிக்கப்பட்டவன் என்பதை அடுத்தபடியாக "ஸுர ஸேவ்ய" என ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் அறிவித்தார். ராவணனின் அக்ரமங்களை பொறுக்காது, க்ஷீராப்தி நாதனை பூமியில் அவதாரம் செய்ய வேணும் என தேவர்கள் ப்ரார்த்தித்தார்கள். அதனால், ஸ்ரீ மந்நாராயணன், பூமியில் தசரதகுமாரனாக அவதரித்தார்; ராவணனை வதம் செய்தபின் தேவர்கள் புஷ்பமாரி செய்து, ஸ்ரீ ராமனை தேவர்கள் துதித்தார்கள். இந்த மாதிரி தேவர்கள் துதித்ததை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், "ஸுரஸேவ்ய" என விவரித்தார்.

அனுபல்லவியின் கடைசி வாக்கியத்தில் "பவ்ய ஸதா ஸகல தாயக" என ஸ்ரீ ஸ்வாமிகள் நமஸ்கரித்துக் கொண்டார். ஜகதானந்த காரணான ஸ்ரீ ராமனின் பெயர் ராம, என்ற இரண்டு எழுத்துக்கள் கொண்டது. இந்த இரண்டு எழுத்துக்களாலான திரு நாமத்தை, வினயத்துடன் ஜபிப்பதால் ஸகல மங்களங்களும் ஏற்படும் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தெரிவித்ததற்கு ஆதாரம் பல உண்டு. உதாரணமாக கம்பர் தனது இராமாயண ச்லோகமொன்று மூலம், ராம ஜபத்தால் ஏற்படும் மங்களங்களை பின்வருமாறு விவரித்தார்.

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே I

சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இன்மையே இராம என்று இரண்டு
எழுத்தினால்"

கம்பர், "ராமா" என்ற இரண்டு எழுத்துக்களைச் சொன்னால், அந்த இராமன் இந்த ஜன்மத்திலேயே எப்போதும், எல்லா மங்களங்களையும், ஸம்பத்துகளையும் கொடுத்து அருள்வான் என்று சொல்கிறார். அதற்கு மேல், "ராமா" என்று கூறுபவர்க்கு, தீய நடத்தையும் தீவினையும் அழிந்து மறையும்; பிறப்பு, இறப்பு இனி ஏற்படாது. அவனுடைய மோக்ஷ ஸாம்ராஜ்யம் தவராது கிடைக்கும் என கம்பர் "ஸதா ஸகல தாயகனான" ராமனைக் கொண்டாடினார்.

<u>முதல் சரண வாக்யங்கள்:</u>

"अमरतारक निचय कुमदहित परिपूर्णानघ सुरसुर
भूजदधि पयोधि वासहरण सुन्दरतर वदन सुधामयवचो
बृन्द गोविन्द सानन्द मावराजराप्त शुभ करानेक (जगदा) "

"அமரதாரக நிசய குமுதஹித
பரிபூர்ணாநக ஸுரஸுர
பூஜததி பயோதி வாஸ ஹரண
ஸுந்தரதர வதன ஸுதாமய வசோ
ப்ருந்த கோவிந்த ஸாநந்த மா
வராஜராப்த சுபகராநேக (ஜகதா)"

என்பது பத்து சரணங்களுள் முதலான சரணத்தின் வாக்யங்களாகும்.

ओं अमरतारक निचय कुमुदहिताय नमः என்பது இந்த சரணத்தின் முதல் நமஸ்கரணம். இங்கு தேவர்களை இரவின் நக்ஷத்ர கூட்டங்களுக்கு உபமானமாக ஸ்ரீ

ஐய்யர்வாள் சொல்கிறார். தாரகை என்பது நக்ஷத்ரத்தைக் குறிப்பிடும் சொல். निचय என்பது Numerous அல்லது அநேகம் என்பதைக் குறிப்பிடும். அதனால் "அமரதாரக நிசய" என்ற பதங்கள் மூலம், இரவில் மின்னும் அநேக நக்ஷத்ரங்களை, முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கு ஸமானமாக ஸ்ரீ ஸ்வாமிகள் சொன்னார். இத்தனை நக்ஷத்ரங்களுக்கு நடுவில், குளிர்ந்த ஒளியுடன் அத்புதமாக ப்ரகாசிக்கும் சந்த்ரனாக ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமஸ்கரித்துக் கொள்கிறார். வெள்ளை அல்லி (குமுதம்) புஷ்பங்களுக்கு நண்பனாக விளங்கி, அவைகளை மலரவைக்கும் சந்த்ரனாக ஸ்ரீ ராமன் விளங்குவதை "குமுதஹித" என ஸ்ரீ ஸ்வாமிகள் தெரிவித்தார். அல்லி புஷ்பக் கூட்டங்கள் சந்த்ரனைக் கண்டு மலர்ந்து, தங்கள் மகிழ்ச்சியை தெரிவிப்பது போல், தேவர்களாகிய நக்ஷத்ரகூட்டங்களின் மனதை மகிழ்விக்கும் சந்த்ரனாக ஸ்ரீ ராமன் சோபிப்பதை "அமரதாரக நிசய குமுதஹித" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் இங்கு விவரித்தார்.

அடுத்தபடியாக, "ஓம் பரிபூர்ணாய நம:" என அவர் ஸ்ரீ ராமனை நமஸ்கரித்துக் கொண்டார்.

"पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ।।"

என்று ஈஸாவாஸ்ய உபநிஷத் கூறும் வகையான பரிபூர்ணன் ஸ்ரீ ராமசந்த்ரன், The upanishadic portion asserts, when this whole is taken out of that whole, the whole remains". பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்த போதும், எஞ்சியிருப்பது பரிபூர்ணமே என உபநிஷத் சொல்லி பரப்ரஹ்ம ஸ்வரூபியான ஸ்ரீ ராமனின் பரிபூர்ண தத்வத்தை விளக்குகிறது. இந்த தத்வத்தை மனதில் வைத்து, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ஸ்ரீ ராமனை "ஓம் பரிபூர்ணாய நம:" என வணங்கிக் கொண்டார்.

"அமர தாரக நிசய குமுதஹித பரிபூர்ண" என்று வணங்கிய பின், ஸ்ரீ ராமபிரானின் தோஷம் ஏதும் கலக்காத மங்கள, பரம பாவன ஸ்வரூபத்தை "ஓம் அனகாய நம:" என நமஸ்கரித்துக் கொண்டார். எல்லா பாபங்களையும், தோஷங்களையும் காட்டுத் தீ போல் எரிக்கும் அவனுக்கு என்ற பெயர், மிகவும் பொருந்தும் திருநாமம்.

"ஸுராஸுர பூஜததிபயோதி வாஸ ஹரணாய நம" என்பது அடுத்த இரு அஷ்டோத்ர சத நாமாவளிகள். நன்னடத்தை கொண்ட ஸாதுக்களாகிய தேவர்களுக்கு அவன் கல்பகவிருக்ஷம் போல் விளங்கி, ஸர்வ அனுக்ரஹங்கள் புரிவதையும், துஷ்டர்களான அசுரர்களை நிக்ரஹம் செய்து அழிப்பதையும் இந்த இரு நாமாவளிகள் குறிப்பிடுகின்றன. தேவர்கள் ஸ்ரீ ராகவேசனை

"श्री रामचन्द्र रघुपुङ्गव राजवर्य,
राजेन्द्रराज सुरनायक राघवेश।
राजाधिराज रघुनन्दन रामभद्र,
दासोऽस्म्यहं च भवतश्शरणागतोस्मि ॥"

ஸ்ரீ ராமசந்த்ர ரகுபுங்கவ ராஜவர்ய,
ராஜேந்த்ரராஜ ஸுரநாயக ராகவேச 1
ராஜாதிராஜ ரகுநந்தன ராமபத்ர,
தாஸோஸ்ம்யஹம் ச பவதச்சரணாகதோஸ்மி 11

என ஸேவித்துக் கொண்டு, அவனைத் தங்கள் சக்ரவர்த்தியாக அறிந்து வணங்கி ஸர்வானுக்ரஹங்களையும் பெறுகிறார்கள்.

அகந்தை மிகுந்த ராக்ஷஸர்களோ, அவனை சாதாரண மனிதனாக நினைத்து, அவனை எதிர்த்து, தீயில் சேர்ந்தழியும் மின் மினி பூச்சிபோல் அழிந்து அவனுக்கு

"रामो राक्षस नाशनोऽमित बल: ।।"

"ராமோ ராக்ஷஸ நாஸனோ மித பல:11"

என்ற பெயர் நிலைக்கச் செய்கிறார்கள்.

இதுவரை, "அமரதாரக நிசய குமுதஹித பரிபூர்ணா நக ஸுரா ஸுர பூஜததி பயோதி வாஸஹரணாய நம:" என்று வணங்கிக் கொண்ட ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், அவனுடைய பூர்ண சந்த்ரனுக்கு சமமான திருமுக மண்டலத்தையும், அவனுடைய அம்ருத மயமான ஸம்பாஷணையையும், "ஓம் ஸுந்தர தர வதனாய நம:, ஓம் ஸுதாமய வசாய நம:" என நமஸ்கரித்துக் கொண்டார். "ராகேந்து பூர்ணா நனன்" என்று ஸ்ரீ ராமகர்ணாம்ருதம் விவரிக்கும் முழுமதி முகத்து ஸ்ரீ ராமனின் ஸௌந்தர்யத்தை, வால்மீகி மஹர்ஷி

"चन्द्रकान्ताननं राममतीवप्रियदर्शनम् ।
रूपौदार्यगुणै: पुंसां दृष्टिचित्ताप हारिणम् ।।"

"சந்த்ரகாந்தானனம் ராமமதீவ ப்ரியதர்சனம்
ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்ட்டி-
சித்தாபஹாரிணம்"

என விவரித்தார். "அதீவ ப்ரிய தர்சனம்" என்றபடி காணக்காண திகட்டாத அழகு உடைய ஸ்ரீ ராமனின் திருமுக மண்டலத்தின் அழகை "ஓம் ஸுந்தர தர வதனாய நம:" என நாட்டை ராக பஞ்சரத்ன கீர்த்தனத்தின் முதல் சரணத்தில் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் துதித்தார்.

ஸ்ரீ கல்யாணராம சந்த்ரனின் பேச்சழகே "ஓம் ஸுதாமய வசாய நம:" என மங்களாசாஸனம் செய்தார், நமது ஸத்குரு. ஸ்ரீ ராமனுடன் ஸம்பாஷணை செய்யும் பாக்யம் பெற்ற ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ஸ்ரீ வால்மீகி முனிவர் விவரித்த ஸ்ரீ ராமனின் வாக் மாதுர்யத்தின் உயர்வை நன்கு

அறிந்தவர். ஸ்ரீ வால்மீகி முனி பின் வருமாறு விவரித்த ஸ்ரீ ராமனின் அம்ருத வாக்கை, தனது பல கீர்த்தனங்களில் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் கொண்டாடியிருக்கிறார்.

"स्मितपूर्वाभिभाषी पूर्वभाषी प्रियंवदः स्मितपूर्वं च
भाषते, मृदुपूर्वं च भाषते, प्रियवादी च भूतानाम्॥

என்பது ஸ்ரீ வால்மீகியின் விவரணம். புன்னகை மலரும் முகத்துடன், எல்லோரையும் வரவேற்று, அம்ருதத்திற்கு ஸமமான தீஞ்சுவையுடைய வாக்கால், அவர்களுடைய க்ஷேமலாபங்களை விஜாரித்த மோஹன ராமனின் ஸௌந்தர்யத்தையும், ம்ருதுவான ஸம்பாஷணையையும், ஸ்ரீ ஸத்குரு என்றும் தான் மறக்கமுடியாது என தெரிவித்தார்; அவனுடைய கண் ஒளி, குரல் ஒலி இவைகளில் தன் மனதை இழந்திருப்பதை தேவகாந்தாரி கீர்த்தனம் ஒன்றில் பின்வருமாறு அவர் தெரிவித்தது உண்டு.

"மரவகரா நவ மன்மத ரூபுனி
நீடோ மெல்லனி மாடோ கன்னுல
தேடோ மரிவலு வாடோ மனஸா
......ஆ ஜன்மமு ஹ்ருத்ரா ஜீவ முதோ
பூஜிந்துர த்யாக ராஜனு துனி மனஸா"

அப்பேற்பட்ட லாவண்ய ராமனின் அழகையும் மதுர வாக்கையும் முதல் சரணத்தில் "சுந்தர தர வதன ஸுதாமய வச" என வணங்கினார்.

மிகுந்த முதல் சரண ஸாஹித்ய பகுதியில், ப்ருந்தாவனத்தில், அவன் க்ருஷ்ணாவதாரம் செய்தபோது, பசுக்களை மேய்த்துக் காப்பாற்றிய அழகையும்; ஆனந்த

ஸ்வரூபத்தையும், லக்ஷ்மீ நாயகனாக ஸேவை தந்து, தேவர் கணங்களுக்கும், மனிதர்களுக்கும் ஸகலவிதமான மங்களங்களை அனுக்ரஹிப்பதையும்

"बृन्द गोविन्द सानन्दमावराजराप्त शुभकरानेक-
जगदानन्दकारक"

என அன்புடன் விவரித்தார்.

என்ற சொல்லிற்கு அநேகம் என்ற அர்த்தமும் உண்டு. அநேகமாயிரம் பசுக்களை, ராஜகோபாலனாக மேய்த்துக் காத்து, ஆனந்தத்துடன் ப்ருந்தாவனத்தில், புல்லாங்குழல் வாசித்து ராதாரமணனாக ஸேவை தந்த ராமக்ருஷ்ணஸ்வரூபமாக, ஸ்ரீ குரு இங்கு வணங்கிக் கொண்டார்.

முதல் சரணத்தில், அநேகம் தேவர்களையும், அநேகம் பசுக் கூட்டங்களையும் காப்பாற்றி அனுக்ரஹிக்கும் பரம் பொருளை "அமர நிசய ஜகதானந்த காரக", "ப்ருந்த கோவிந்த" என்று ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் அழைத்தார். தேவர்கள், பசுக்கள் போன்ற எண்ணற்ற ஜீவராசிகளுக்கும், பரம் பொருளான ஸ்ரீ ராமனுக்கும் உள்ள பாசப்பிணைப்பையும், விலக்க ஒழியா உறவையும் இந்த வாக்யங்கள் மூலம் விவரித்தார். அந்த பாசத்தால் ஜீவன்களை அணைத்துக் காப்பாற்றும் ஸ்ரீ ராமனுடைய அழகு, மாதுர்ய வாக்கு, ப்ரஹ்மானந்த ஸ்வரூபம் ஆகியவைகளை பின்வரும் ஸ்ரீ ரஞ்சனி ராக கீர்த்தனை வாக்யங்களை ஞாபகப்படுத்தும் வகையில் போற்றினார்.

"ப்ரோசு வாரே வரே, ரகுபதி, நினுவினா....
பவாப்தி தர ணோபாயமு நேரனி
த்யாகராஜுனி கரம்பிடி, ஸகலலோக நாயக,
நரவர, நீ ஸரி ப்ரரோசு வாரே வரே"

இங்கு ரகுபதே! உன் போல் அன்புடன் காப்பாற்றுபவர்கள் யார்? உன்னைப் போல் அழகு உடையவர் யார்? உன்னைப் போல் மனது இங்கிதம் அறிந்து, மதுரமாக ஸம்பாஷிப்பவர் யார்? லக்ஷ்மீபதே! மங்களமூர்த்தே! நரோத்தமா! ஸம்ஸாரமாகிற கடலைத்தாண்ட வழி தெரியாது கலங்கி நின்ற என்னை, கையால் பிடித்துக் கொண்டு, அக்கரைக்கு சேர்த்து வைத்தாயே? உனக்கு ஸரிநிகர் யார் எனப்புகழ்ந்து, தனது நன்றியை தெரிவித்தார்.

இந்த கருணைக்கு ஆதாரமான ஜீவாத்மா-பரமாத்மா உறவு ஸர்வமங்களகரமானது அல்லவா என்று முதல் சரணத்தில் கேட்டு, தனது வினயபக்தியை வெளிப்படுத்தினார்.

<u>இரண்டாவது சரணத்தின் கருத்துக்கள்:</u>

இரண்டாவது சரணவரிகள் பின்வருமாறு:

"निगमानीरजामृतजपोषकानिमिषवैरिवारिद समीरण
खगतुरङ्ग सत्कविहृदालयाका गणित वानराधिपनताङ्घ्रियुग"
(जगदानन्दकारक)

"நிகம நீரஜாம்ருத ஜபோஷ க(ா)
நிமிஷவைரி வாரித ஸமீரண
கக துரங்க ஸத்கவி ஹ்ருதாலயா-
கணிதவானராதிபந்தாங்க்ரியுக"
(ஜகதாநந்தகாரக)

வேதங்களாகிய தாமரைப் புஷ்பங்களை அம்ருத ஆஹாரம் மூலம் போஷிக்கும் ஜகதானந்தகாரகனை, நிகம (வேதங்களாகிய) தாமரை (नीरज)· புஷ்பங்களுக்கு அம்ருதத்தை ஆஹாரமாக அளிப்பவனாக (अमृत पोषका) ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் அறிவிக்கிறார். அவனோ தேவர்களின்

(निमिष) எதிரிகளான (वैरि) மேகங்களுக்கு (वारिद:) சூறாவளி (समीरण)- போல் இருப்பவனாக ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியை நமக்கு விவரித்து, அந்த மஹாவீரனை ஸ்ரீ ஸ்வாமிகள் நமஸ்கரித்துக் கொள்கிறார். தன் வாஹனமாகிய கருடன் தோளில் ஏறிக் கொண்டு, ஆபத்துகளில் மாட்டிக்கொண்டிருக்கும் பக்தர்களை காப்பாற்ற ஓடிவரும் கஜேந்த்ர வரதனை 'खगतुरङ्ग' என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமஸ்கரித்துக் கொள்கிறார். தனது காங்கேய பூஷணி ராகக்கீர்த்தனத்தில்

एव्वरे रामय्य ! नी सरि, रव्वकु दावलेक सुजनुलनु राजिग रक्षिंचु वा ॥

எவ்வரே ராமய்ய ! நீ ஸரி,
ரவ்வகு தாவலேக சுஜனுலனு ராஜிக ரக்ஷிம்சு வா

என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், கேட்டு, உனக்கு ஸமானமாவர்கள் யாரும் இல்லை ! நீ ஸத் ஜனங்களை தடபுடல் இல்லாது, த்வரையுடன் காப்பாற்றி வருகிறாய்; ஹே ராமய்ய ! உனக்கு நிகரானவன் நீயே என்று அறிவித்தார். இந்த சரணப்பகுதியில் மேற்காணும் விதமாக "நிகம நீரஜாம்ருத போஷக நிமிஷவைரிவாரித ஸமீரண கக துரங்காய நம:" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் வணங்கிக் கொள்கிறார். வேதங்களால்,

सुष्टामा रथ: सुयमा हरीं ते मिभ्यक्ष वज्रौ नृपते गभस्तौ ।
शीभं राजन्त्सुपथा याह्यर्वाङ्वर्धाम ते पपुषो वृष्ण्यानि ॥

சுஷ்டாமா ரத: ஸுயமா ஹரி தே
மிப்யக்ஷ வஜ்ரோ ந்ருபதே கபஸ்தௌ1
சீபம் ராஜன்த்ஸுபதா யாஹி
அர்வான் வர்த்தமா தே பபுஷோ வ்ருஷ்ண்யாணி11

எனக் கொண்டாடப்படும் பரம்பொருளை, தர்மஸம் ரக்ஷகனாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கொண்டாடி, ஆபத்பாந்தவனாக விவரித்து ஓம் ககதுரங்காய நம: என நமஸ்கரித்துக் கொண்டார். மேற்காணும் ருக்வேதப் பகுதி அறிவிப்பதின் ஸாராம்சம் பின்வருமாறு:

O, Sovereign protector of Men, thy Cosmic chariot is well established; your rays are well controlled; your hand firmly grasps the bolt of justice: O, Lord of All, come quickly towards us by glorious paths. We shall augment your energies through our loving prayers and exhilarating praises".

ஹே, ஹரி, ராகவா, தர்மஸ்வரூபனான நீ எங்களை காக்க விரைந்தோடி வா! எங்களுக்கு இடையூறு செய்ய விரும்பும் துஷ்ட ஜனங்களை, சூறாவளிக் காற்று மேகங்களை அடித்து துரத்துவது போல் விலக்கி, "ஓம் நிமிஷவைரி வாரிச ஸமீரணாய நம:" என்ற எங்களுடைய ஸ்துதிக்கு அர்த்தமளி என்று ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் வேண்டிக் கொண்டார்.

அவன் தூயமனது உடையோரின் ஹ்ருதயமாகிற குஹையில் கோயில் கொண்டிருப்பதை, அடுத்தபடியாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் "ஸத்கவி ஹ்ருதாலயகாய நம:" என நமஸ்கரித்துக் கொண்டார். ஸ்ரீ ராமபிரானை,

"ராமம் ரத்னகிரீட குண்டலதரம்
கேயூர ஹாரான்விதம்
ஸீதாலங்க்ருத வாம பாக மதுலம்
ஸிம்ஹாஸனஸ்தம் ப்ரபும்.

ஸுக்ரீவாதி ஸமஸ்த வானர வரை-
ஸ்ஸம் ஸேவ்ய மானம் ஸதா
விச்வாமித்ர பராசராதி முனி-
பிஸ்ஸம் ஸ்தூயமானம் பஜே".

என்று நமஸ்கரித்துக் கொள்ளும் கவிபுங்கவரின் ஹ்ருதயத் தாமரையில் அவன் கோயில் கொண்டிருப்பதை, ஸ்ரீ ஐய்யர்வாள் "ஓம் ஸத்கவி ஹ்ருதாலயகாய நம:" என வணங்கிக் கொண்டார். இந்த உண்மையையே ருக்வேதமும் பின் வருமாறு தெரிவித்து, ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் வாக்கியங்களுக்கு ஆதாரம் அளிக்கிறது.

इमं विधन्तो अपां सधस्थे पशुं न नष्टं पदैरनुग्मन्।
गुहा चतन्तमुशिजो नमोभिरिच्छन्तो धीरा भृगवोऽविन्दन्॥

இமம் விதந்தோ அபாம் ஸதஸ்தே
பசும் ந நஷ்ட்டம் பதை ரனுக்மன்.
குஹா சதன்தமுசிஜோ நமோ பிரிச் சந்தோ
தீரா ப்ருகவோவிந்தன்.

மேற்காணும் வேதரிக்கின் கருத்து பின்வருமாறு.

"The Sages Seek him, when, he is concealed in the midst of Cosmic vapours, and follow him by his footprints as men follow an animal that is missing or lost. By their constant prayers and meditations, the wise glorious sages, yearning in their heart, discover him lurking in the remotest Cavity."

தங்களுடைய த்யானங்கள் மூலமும், ப்ரார்த்தனைகள் மூலமும், முனிபுங்கவர்கள், மறைந்திருக்கும் பரம்பொருளை தேடி, தங்கள் ஹ்ருதய கமலங்களில் கோயில் கொண்டிருப்பதை தெரிந்து ஆனந்தமடைகிறார்கள் என மேற்காணும் வேதப் பகுதி கூறுகிறது.

அடுத்தபடியாக, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ஸ்ரீ ராமசந்த்ரனை வானரச்ரேஷ்ட்டரான ஆஞ்சனேயரால் துதிக்கப்பட்ட திருவடிகளை உடையவனாக நமஸ்கரித்துக் கொண்டார். இந்த நமஸ்கரணம்

"गणित वानराधिपनताङ्घ्रियुगाय नमः" என்ற ஸ்வரூபத்துடன் ஸ்ரீ ஐய்யர்வாளின் திருமுகத்திலிருந்து வெளிப்பட்டது. गणित என்பது Arithmetic (கணக்கு) என்ற அர்த்தத்தையும், Most Respected (மிகவும் உயரியவன்) என்ற மற்ற ஒரு அர்த்தத்தையும் கொண்ட சொல். "இங்கு கணித வானராதிப" என்ற சொற்கள் மூலம் கபி ஸ்ரேஷ்ட்டரான ஆஞ்சநேயரை குறிப்பிட்டார். அப்பேற்பட்ட கபிவரரான ஸ்ரீ ஆஞ்சநேயரால் துதிக்கப்பட்ட திருவடிகளை உடைய நீ (கணித வானராதிப நதாங்க்ரியுகாய நம:), ஸர்வோத்க்ருஷ்ட்டனாய் விளங்குகிறாய் என தெரிவித்து, இரண்டாவது சரணத்தை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் முடித்தார்.

மூன்றாவது சரணவாக்யங்களின் அர்த்த விசேஷங்கள்:

**"इन्द्रनीलमणि सन्निभापघन चन्द्रसूर्यनयना प्रमेय।**
**वागीन्द्रजनक सकलेश शुभ्रनागेन्द्रशयन शमनवैरिसन्नुत ॥**
**(जगदानन्दकारक)**

"இந்த்ர நீலமணி ஸந்நிபாப கன
சந்த்ர ஸூர்ய நயனா ப்ரமேய
வாகீந்த்ர ஜனக ஸகலேச
சுப்ர நாகேந்த்ரசயன சமனவைரிஸன்னுத"
(ஜகதாநந்தகாரக)

என்பது மூன்றாவது சரண வாக்யங்களாகும்.

"ஸுக்ரீவஸ்ச்ச விபீஷணஸ்ச்ச
யுவ ராட் தாராஸுதோ ஜாம்பவான்
மத்யே நீல ஸரோஜ கோமள ருசிம்
ராமம் பஜே ச்யாமளம்"

என்றபடி தர்பாரில், ஸுக்ரீவன், விபீஷணன், அங்கதன், ஜாம்பவான் இவர்கள் நடுவில் நீல ரத்னங்களை வெல்லும் காந்தியுடன் விளங்கும் நீலமேக ச்யாமளனை, ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் "ஓம் இந்த்ர நீலமணி ஸந்நிபாப கனாய நம:" என நமஸ்கரித்துக் கொண்டார்.

அடுத்தபடியாக சந்த்ரனையும், சூர்யனையும் தன் இரு கண்களாகக் கொண்டு, 'रामं श्यामाभिरामं रावशशिनयनं कोटिसूर्यप्रकाशं' எனப் புகழப்படும் ராமனை "ஓம் சந்த்ர ஸூர்ய நயனாய நம:" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் துதித்தார்.

அதற்கு மேலே, மூன்றாவது சரணத்தில், வேதமோதும் வாகீந்த்ரனை தன் நாபியிலிருந்து மலரும் கமலத்தின் மேல் உண்டு பண்ணிய பத்மநாபனாக நமஸ்கரித்துக் கொண்டார். முன் சரணத்தில் "ஸத்கவி ஹ்ருதாலயாக" என்று அழைத்த ஸ்ரீ ராமனை,

"ஹ்ருத் பத்மே பத்மநாபோ மே
ஸஹஸ்ரார்க்க ஸமப்ரப:
ஸர்வாயுத: ஸர்வ சக்தி:
ஸர்வக்ஞ: ஸர்வதோமுக:"

என்று விதமாக அறியப்படும், பால் கடலில் துயிலும் பத்மநாபனாக நமஸ்கரித்துக் கொண்டார். இந்த நமஸ்கரணம் "ஓம் ப்ரமேய வாகீந்த்ர ஜனகாய நம:" என்ற விதமாக ஸ்ரீ ஸ்வாமிகளின் வாக்கிலிருந்து ஜனித்தது.

அடுத்த நமஸ்காரம், "ஓம் ஸகலேசாய நம" என்பது விஷ்ணு தர்மம் "सहस्रशुभनामानम् आदिदेवम् अजं विभुं" என்று கொண்டாடும ஸ்ரீ ராமன், ஸர்வேச்வரன். ஜங்கமாஜங்கமங்களுக்கும், மானிடர்களுக்கும், தேவர் களுக்கும் ப்ரபுவாய், ஸகலேசனாய் உள்ள ஸ்ரீ ராமசந்த்ரனை, ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம் "ஜகத் ப்ரபும் தேவதேவம் அனந்தம் புருஷோத்தமம்" என்று பீஷ்மாச்சார்யாரின் வாக்கால் கொண்டாடியிருக்கிறது. மற்ற தெய்வங்களை வேண்டுவதால் ஏற்படும் பலன்கள் நிலைக்கக் கூடியவை அல்ல (अन्तवत्तु फलं तेषां) அதனால், பரிமிதம் இல்லாது, அபரிமிதமான வரங்களை அருளும் ஸகலேசனை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியாக அறிந்து இங்கு வணங்கிக் கொண்டார்.

அடுத்தபடியாக, ஸ்ரீ ஸ்வாமிகள், ஸ்ரீ ராமசந்த்ரன், ராவணனின் கொடுமைகளிலிருந்து உலகத்தைக் காப்பாற்ற அவதரித்த விஷயத்தை "ஓம் சுப்ர நாகேந்த்ர சயனாய நம:" என ஞாபகப்படுத்தினார். உலகங்களை எல்லாம் தன் தவ வலிமையால் துன்புறுத்தி வந்த இராவணனை வதம் செய்து, தங்களைக் காப்பாற்றவேணும் என . தேவர்களும், ப்ரஹ்மாவும், பரமசிவனும் பாற்கடலில் பள்ளிகொண்டிருந்த பத்மநாபனிடம் வேண்டிக் கொண்டார்கள். வெண் திரைகள் மோதும் பாற்கடலின் கரையில் நின்று, ஒப்பற்ற ஆதிசேஷன் என்ற வெண்ணிறம் (சுத்த ஸத்வ ஸ்வரூபம்) உடைய பாம்பின் மேல் சயனித்திருக்கும் ஸ்ரீ மந் நாராயணனை தேவர்கள், சதுர்முகப்ரஹ்மா, கைலயங்கிரி நாதன் ஆகியோர் வேண்டிக்கொண்ட ஸம்பவத்தை "ஓம் சுப்ரநாகேந்த்ர சயனாய நம:" என ஸ்ரீ ஸ்வாமிகள் நமஸ்கரித்துக் கொண்டார். ஸ்ரீ மந் நாராயணனும் அவர்களுடைய ப்ரார்த்தனைக் கிணங்கி தான் பூமியில் தசரதனுக்கு ராமன் என்ற பிள்ளையாக அவதரித்து, ராவணனை அழிக்கப் போவதாக அறிவித்தார். இந்த நமஸ்காரத்திற்கு ஆதாரமான பாற்கடல் சம்பவத்தை கம்பர் பின் வருமாறு விவரித்தார்.

"அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மீமிசை
மலை என விழிதுயில் வளரும் மாமுகில்
கொலை தொழில் அரக்கர் தம் கொடுமை தீர்ப்பேன் என்று
உலைவுறும் அமரருக்கு உரைத்த வாய்மையே"

மூன்றாவது சரணத்தின் கடைசிப் பகுதியில் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ஸ்ரீ ராமபிரானை, "शमनवैरिसनुत ஜகதானந்தகாரக" என நமஸ்கரித்துக் கொண்டார். "சமனவைரி" என்ற பதம் யமனைக் காலால் உதைத்து, மார்க்கண்டேயனை சிரஞ்சீவியாக இருக்கச் செய்த ம்ருத்யஞ்ஜயனை குறிக்கும் பதமாகும். அப்பேற்பட்ட மஹேஸ்வரனாலும் துதிக்கப்படும் ஸர்வேஸ்வரா என ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ ரகுபதியை வணங்கிக் கொண்டார்.

<u>நான்காவது சரணத்தின் கருத்துக்கள்:</u>

"करधृत शरजालासुरमदाप हरणावनीसुरसुरावन।
कवीन बिलज मौनिकृत चरित्र सन्नुत श्रीत्यागराजनुत॥
(जगदानन्दकारक)

"கரத்ருத சரஜாலா சுரமதா
பஹரணா வனீஸுர ஸுராவன
கவீன பிலஜ மௌனிக்ருத சரித்ர
ஸன்னுத ஸ்ரீத்யாக ராஜனுத"
(ஜகதாநந்தகாரக)

என்பது ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், முதலாவதாகச் செய்த நாட்டை கீர்த்தனத்தின் கடைசி சரணமாகும். அதனால் இங்கு தன் நாம முத்ரையைச் சேர்த்தார். பின்னர் அனுபந்தங்கள் சேர்த்து, மற்ற இரு நாமங்கிதங்களை சேர்த்தது பற்றி முன் பகுதியில் தெரிவித்திருக்கிறேன்.

கைகளில் அம்பு, வில் ஏந்தி, கோதண்டபாணியாக நிற்கும் தன் குல தெய்வத்தை, கோதண்ட சரமண்டிதகரனாக பின் வருமாறு த்யானித்து,

'குலதைவத மஸ்மாகம் கோதண்டசரமண்டிதம்
இஷ்ட தைவத மஸ்மாகம் இக்ஷ்வாகு குலதைவம்

"ஓம் கரத்ருத சர ஜாலாய நம:" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் போற்றினார். ஸ்ரீ ராமசந்த்ரனை கோதண்டபாணியாக ஸ்ரீ ஸ்வாமிகள் பாடிப் போற்றிய கீர்த்தனங்கள் அநேகம். கையில் வில்லும், அம்பும் தரித்து, துஷ்டநிக்ரஹம் செய்யும் தர்ம விக்ரஹமான கோதண்டபாணியைப் பாடிப் போற்றிய கீர்த்தனங்களில் ஒன்று பின்வரும் பிலஹரி ராக கீர்த்தனம்.

ப: கோரி வச்சிதினய்ய, கோதண்டபாணி நினுனே

அப: ஸுரவினுத! யெந்தோ ஸுந்தரமூர்த்தி வடம்சு (வட்சு)

ச: சித்தமுனகு நீக்ருப வித்த மனசு சால
மேம் டு (ஈது) குணமுலசே நிண்டு கோன்னா
வடம் சு
ராஜாதிராஜ த்யாகராஜனுத சரித (கோரி
வச்சிதினய்ய)

ஸத்குண ஸம்பன்னனான உன்னை கோதண்டபாணி யாகக் கண்டு உன் திவ்ய ஸௌந்தர்யத்தை என் கண்களால் தெவிட்டாது பருகி, உன் கல்யாண குணங்களை மனதில் தேக்கி த்யானிக்க உன்னிடம் நான் வந்துள்ளேன் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் இந்த கீர்த்தன மூலம் சொன்னார்.

அடுத்த நமஸ்காரம் "அஸுரமதாபஹரணாய நம:" என்பது. அப்ரதித்வந்த்வ பௌருஷ (अप्रतिद्वन्द्व पौरुष) என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகனால் வணங்கப்பட்ட ஸ்ரீ ராமன் இணையில்லாத வீரமுடையவன். ஒப்பற்ற பராக்ரமத்தை உடையவன். அவன், விராதன், த்ரிசிரஸ், தூஷணன், கரன், ராவணன் என்ற அரக்கர்களின் கர்வத்தை அழித்து, வதம் செய்தவன். அப்பேற்பட்ட வீரராகவனை, ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், "ஓம் அஸுரமதாபஹரணாய நம:" என வணங்கிக் கொண்டார்.

அடுத்தபடியாக கவி ஸ்ரேஷ்ட்டரான வால்மீகியால் துதிக்கப்பட்ட சரித்ரமுடைய ஸ்ரீ ராமனை "ஓம் கவீனபிலஜ மௌனிக்ருத சரித்ர ஸன்னுதாய நம:" என நமஸ்கரித்துக் கொண்டார். கவிதை என்ற மரத்தின் கிளையில் அமர்ந்து, ராமா, ராமா என்ற மதுரமான நாம ஜபம் செய்யும் வால்மீகி என்ற குயிலை இங்கு ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ஸ்ரீ ராமனைக் கொண்டாடும் போது ஞாபகப்படுத்திக் கொள்கிறார்.

"यः पिबन्सततं रामचरितामृतसागरम्।
अतृप्तस्तं मुनिं वन्दे, प्राचेतसमकल्मषम्॥

"ய: பிபன் ஸததம் ராமசரிதாம்ருத ஸாகரம்
அத்ருப்த ஸ்தம் முனிம் வந்தே ப்ராசேத ஸமகல்மஷம்"

என்றபடி ராமசரிதம் என்ற அம்ருதமாகிற கடலின் நீரை ஸதா அருந்தும் வால்மீகி முனியையும், அவர் அருளிய ஸ்ரீமத் ராமாயணம் என்ற இதிஹாஸத்தையும், அந்த இதிஹாஸத்தின் காரண பூதனான ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமஸ்கரித்துக் கொண்டார்.

<u>ஐந்தாவது சரண வாக்யங்கள்:</u>

இந்த சரணத்தில், ஓம் ஸ்ருஷ்ட்டி ஸ்தித்யந்தகாரகாய நம:, ஓம் அமித காமித பலதாய நம:, ஓம் அஸமான காத்ராய நம:, ஓம் சசிபதி நுதாய நம:, ஓம் அப்தி மத ஹராய நம:, ஓம் ஆனுராக ராஜித கதா ஸாரஹிதாய நம: என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் ஸ்ரீ ராமபிரானை ஸேவித்துக் கொண்டார்.

இந்த சரண வாக்யங்கள் பின்வருமாறு:

"सृष्टिस्थित्यन्तकारका अमितकामित फलदासमानगात्र।
शचीपतिनुत अब्धिमद हरानुरागराजितकथासारहित॥
(जगदानन्दकारक)

"ஸ்ருஷ்ட்டி ஸ்தித்யந்தகாரகா,
அமித காமித பலதாஸமான காத்ர
சசிபதி நுத அப்தி மத ஹர
ஆனுராக ராஜித கதா ஸாரஹித"
(ஜகதாநந்தகாரக)

ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் புரியும் ஸர்வேச்வரனாக ஸ்ரீ ராமனைக் கொண்டாடி, "ஓம் ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தகாரகாய நம:" என வணங்கினார். இங்கு, ஸ்ரீ ராமனை முத்தொழில் புரியும் ஸர்வேச்வரனாக அறிவித்தபோதிலும், அவன் ப்ரஹ்ம்மா, ருத்ரன், சிவன் என்ற த்ரிமூர்த்திகளை விட உயர்வான பரப்ரஹ்மம் என்பதை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், தனது பல கீர்த்தனங்களில் ஸ்பஷ்டமாக தெரிவித்திருக்கிறார். மும்மூர்த்திகளுக்கு ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற தொழில்களை செய்யுமாறு உத்தரவிட்டு, தான் பக்தர்களுக்கு அனுக்ரஹங்கள் புரியும் வ்யாபாரத்தில் ஈடுபட்டிருப்பதை ஸ்ரீ ஸ்வாமிகள் "மனஸா நீ ராமசந்த்ருனி, மரவகே, யேமராகெ, ஓ" என்ற ஈசமனோஹரி கீர்த்தனத்தில் பின் வருமாறு விளக்குகிறார்:

ஹே மனஸே! ஸ்ரீ ராமசந்த்ரனை மறந்துவிடாதே! அசட்டையாக இருந்து விடாதே! ஸ்ருஷ்ட்டி, ஸம்ரக்ஷணம், ஸம்ஹாரம் ஆகிய மூன்று தொழில்களையும் அவ்வளவு உயரியவை அல்ல என அனுமானித்து, மும்மூர்த்திகளுக்கு அவைகளைப் பார்த்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டு, உயரிய தொழிலான பக்த மனோபீஷ்டங்களை நிறைவேற்றி வைப்பது என்பதை கடைபிடிக்கும் பரந்தாமன் ராமன் என தனது மனதுக்கு தெரிவித்தார். அதனால் "ஓம் ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தகாராய நம:" என்று வணங்கும் போது, ஸ்ரீ ராமன் மும்மூர்த்திகளுக்கு யஜமானன் என்ற ரீதியில், முத்தொழில்களை புரிகிறான், அவர்களுக்கு சக்தி அளித்து, அந்த கார்யங்களை நடத்தி வைக்கிறான் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் குறிப்பிடுகிறார். இந்த கருத்துக்கள் கொண்ட ஈசமனோஹரி ராக கீர்த்தன வாக்யங்கள் பின் வருமாறு:

सुष्टि पुष्टि नष्टि जेयु पनुलु निकृष्ट मनचुनु त्रिमूर्तुल कोसगि तुष्टुडै बरगे सद्भक्त मनोभीष्टमुलिच्चु त्यागराजनुतुनि (मनसा)

மற்ற ஒரு கீர்த்தனத்தில் (ஸிக்கு மாவி நாவலெதர-கேதாரகௌளை) "முக்குரிவோ மேலைன ராம" என்று ஸ்ரீ ராமனை விவரித்து, மும்மூர்த்திகளை விட மேலான ஸ்ரீ ராமா என நமஸ்கரித்துக் கொண்டார்.

தனது பக்தியை தெரிவிக்கும் வகையில், இன்னும் ஒரு கீர்த்தனத்தில் மும்மூர்த்திகளுக்கும் மேலான பரதெய்வம் நீயே அன்றோ, ஸ்ரீ ராமா எனக் கேட்டார். இந்த கீர்த்தனப் பகுதி "மூடு மூர்துலகாதி மூலமு நிவே ராமா !" என்பது.

தனது "ரமணி பொகடுதுரா ஸ்ரீ ராம" என்ற வீரவஸந்த கீர்த்தனத்தின் சரணத்தில், பரமசிவனுக்கு தமோகுணத்தையும், ப்ரஹ்மாவுக்கு ரஜோகுணத்தையும், தந்து, இந்த்ரனையும் கர்வம் நிறைந்தவனாக்கி, இப்படி ஸர்வ வல்லமையும் பொருந்திய பரமரத்மாவாகிய உன்னை நான் என்னென்று போற்றுவேன் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கேட்டார். இந்த கருத்துக்கள் கொண்ட வீரவஸந்த கீர்த்தனப் பகுதி பின்வருமாறு:

"சிவுனிகி தாமஸ குணமிச்சி,
கமல பவுனிகி ராஜஸ குண மொஸகி,
சசிதவுனி கர்வ ஹ்ருதயுனிகா ஜேஸின,
தாசரதி, ஏமனி, பொகுடு துரா ஸ்ரீ ராமா"

தனது அடாணா கீர்த்தனமொன்றில், ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய த்ரிமூர்த்திகளும் ஒன்று கூடி ஸ்ரீ ராமனை பாராட்டும் செய்தியை நமக்கு பின்வருமாறு தெரிவித்தார்:

रोक्षमुतो रघुरामुनि गुणमुल रूटिग दम गुणमुल नटु व्रासि
त्रासुन निड सरिनिल्वग लेदनि त्यागराजनुतु डेवडो यनुचुनु
(मुम्मूर्तुलु गुमिगूटि पोगडोडि-मुच्चट विनुकोनरे)

பல்லவி: மும்மூர்த்தலு குமிகூடி பொகடே
முச்ஸட வினுகோரே

சரணம்: ரோஸமுதோ ரகுராமுனி குணமுல
ருடிக தம குணமுல நடு வ்ராஸி
த்ராஸுன நிட ஸரி நில்வலே தனி
த்யாகராஜநுத டேவடோ யனுசுனு

இந்த அடாணாராக கீர்த்தன சரணத்தில், மும்மூர்த்திகள் ஸ்ரீ ராமனுடைய குண விசேஷங்களை எழுதி, ஒரு தராசின் தட்டில் ஸமர்ப்பித்தனர்; மற்ற தட்டில், தங்களுடைய உயரிய குணங்களை எழுதிச் சேர்த்தனர். தட்டுகளுள், ஸ்ரீ ராமன் குணங்கள் கொண்டது கீழேயும் மும்மூர்த்திகள் குணங்கள் கொண்ட தட்டு மேலேயும் போனது. அதனால், ராஜகுமாரனான ஸ்ரீ ராமன் தங்களை விட உயர்ந்தவன் என்ற பரதத்வத்தை மும்மூர்த்திகள் புரிந்து கொண்டார்கள் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தெரிவித்தார்.

ஸ்ரீ ராமபிரான், த்ரிமூர்த்திகளை விட உயர்ந்த பரம் பொருளாக இருந்த போதிலும், தன் ஸர்வஜீவஹிததயை என்ற ஸத்குண விசேஷத்தால், சிறிய எறும்பிலிருந்து, ப்ரஹ்மாண்டமான கீர்த்திகள் கொண்ட த்ரிமூர்த்திகள் வரை உள்ள எல்லா ஜீவன்களையும் அன்புடன் நோக்கி ப்ரகாசித்து பிருது பெற்று வருவதை ராம நன்னுப்ரோவரா என்ற ஹரிகாம்போஜி கீர்த்தனத்தில், பின்வருமாறு அறிவித்தார்.

चीमलो ब्रह्मलो शिव केशवादुललो प्रेममीर
मेलगुचुण्डे बिरुदु वहिंचिन सीता (राम नन्नु)

சீமலோ ப்ரஹ்ம்மலோ சிவ கேசவாதுலலோ ப்ரேமமீர
மேலகுசுண்டே பிருது வஹிம்சின ஸீதா (ராம நன்னு)

ஸ்ரீ ராமனை, ஓம் ஸ்ருஷ்டி ஸ்தித்யந்த காரகாய நம என்று வணங்கிய பின், ஓம் அமித காமித பலதாய நம என்று ஸ்ரீ ஸ்வாமிகள் போற்றினார். இந்த நமஸ்கரணத்தின் மூலமாக அவன் பரப்ரஹ்மம் என்ற வகையில், வேண்டும் வரங்களை எல்லாம் பக்தர்களுக்கு வாரி வழங்குகிறான் என்று ஸ்ரீ ஸ்வாமிகள் தெரிவித்தார். ஆப்த ஸுலபனான ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தி, தன்னிடம் சரணாகதி செய்த பக்தர்களுக்கு இருள் மயமான தீமைகளை அகற்றும் கதிரவனாக (பவரோக ஹரண பாபதிமிரவிபாகரனாக) விளங்குகிறான் என்று ஸ்ரீ ராமனின் அத்யந்த பக்ததரான ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் இங்கு சொன்னார். தீன சரண்யனான ஸ்ரீ ராமன், அமித சுபகரன், அளவில்லா நன்மைகளை அனுக்ரஹிக்கும் மங்கள மூர்த்தி என்று வணங்கிக் கொண்டார்.

எளியோரின் புகலிடமாகவும், ஸாதுக்களின் ஸர்வ ஸ்வமாகத் திகழும் ஸ்ரீ ரகுராமனின் திவ்ய ஸௌந்தர்யத்தை, அடுத்த நமஸ்காரத்தில், "ஓம் அஸமானகாத்ராய நம:" எனப் பாடி பணிந்தார். ஸ்ரீ ராமனுடைய திவ்ய லாவண்ய ஸ்வரூபத்தை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் அநேக கீர்த்தனங்களில் வாயாற ருசித்துப் பாடியிருக்கிறார். அவனுடைய ஸுந்தர காத்ரத்தைக் கொண்டாடும் கீர்த்தனங்களில் ஒன்று, பின் வரும் பந்துவராளி கீர்த்தனம்:

"ஸுந்தர தர தேஹம் வந்தேஹம் ராமம்
குந்த ரதன மாப்த குமுத சசாங்கம்
கந்தர்ப சதகோடி காந்தி மதி நிஷ்களங்கம்"

மல்லிகை மொட்டுகள் போன்ற பல் வரிசையுடன் விளங்கி, நூறுகோடி மன்மதர்களின் சோபையுடன் ப்ரகாசித்து, குமுதத்தை மலர்விக்கும் சந்த்ரன் போல், தன் "அஸமான காத்ரத்துடன்" ஜ்வலிக்கும் ஸர்வாங்க சுந்தரனை இங்கு ஸ்ரீ ஸ்வாமிகள் நமஸ்கரித்துக் கொண்டார்.

ஐந்தாவது சரணத்தின் அடுத்த நமஸ்காரம், "ஓம் சசிபதி நுதாய நம:" என்பது, ஸ்ரீ ராமன் தேவர்களுக்கெல்லாம் அரசனான இந்த்ரனால் துதிக்கப்படுபவன் என இங்கு சொல்கிறார்.

இதற்கு அடுத்த நமஸ்காரம், 'ஓம் அப்தி மதஹராய நம:" என்பதாகும், ஸமுத்ர ராஜனின் கர்வத்தை அழித்து, தன் பாணங்களின் பராக்ரமத்தை ப்ரபலப்படுத்தி "सागरदर्पभञ्जविशिखं वन्दे" என்று வணங்கப்படும் ஸ்ரீ ராமனாக இங்கு நமக்கு அறிமுகப்படுத்தினார். ஸேதுக் கரையில், ஸ்ரீ ராமனை ஸாதாரண மனிதனாக நினைத்து ஸமுத்ரராஜன் அவனை அசட்டை செய்தார். ஸமுத்ரராஜனின் அகந்தை கண்டு, கோபத்தால் சிவந்த கண்களுடன் கோதண்டத்தை நாணேற்றிய ஸ்ரீ ராமனைக் கண்ட ஸமுத்ரராஜன், தன் அலைகளின் கோஷத்தை அடக்கிக் கொண்டு குளம் போல் ஆனான். வருணாலயத்தில் வாழும் எல்லா ஜந்துக்களும் தங்கள் உயிருக்கு ஹானி ஏற்படப் போகிறது என பயந்து நடுங்கின. பீதி மிகுதியால் துடிக்கும் அங்கங்களுடன், ஸமுத்ரராஜன் "ஸ்ரீ ராமா சரணம், நிருபா சரணம், என்னை மன்னித்துக் காப்பாற்று" எனக் கதறி, ஸ்ரீ ராமன் திருவடிகளில் வீழ்ந்தான். ஜகதேக வீரனாகவும் கோதண்ட தீக்ஷா குரு என்றும் அறியப்படும் ஸ்ரீ ராமனும், தனது மாமனாரான ஸமுத்ரராஜனை க்ஷமித்தார். இந்த "அப்தி மதஹரண" ஸம்பவத்தை ஸ்ரீமத் பாகவத பகுதி பின் வருமாறு விவரிக்கிறது.

यद्रोषविभ्रमविवृत्तकटाक्षपात
संभ्रान्तनक्रमकरो भयगीर्णघोषः ।
सिन्धुः शिरस्यर्हणां परिगृह्य रूपी
पादारविन्दमुपगम्य बभाष एतत् ॥

யத்ரோஷ விப்ரம விவ்ருத்த கடாக்ஷ பாத
ஸம்ப்ராந்தனக்ரமகரோ பயகீர்ணகோஷ:
ஸிந்து: சிரஸ்யர்ஹணாம் பரிக்ருஹ்யரூபி
பாதாரவிந்தமுபகம்ய பபாஷ ஏதத்

நாட்டைராக பஞ்சரத்னத்தின் ஐந்தாவது சரணம் "ஓம் ஆனுராக, ராக ராஜித கதா ஸாரஹிதாய நம:" என்ற நமஸ்கரணத்துடன் முடிவடைகிறது. இந்த நமஸ்கரண மூலம், ஸ்ரீ ராமசந்த்ரன், பாகவதம், புராணங்கள் முதலியவைகளுக்கு காரணகர்த்தாவாக நிற்பதையும், வேத, சாஸ்த்ர புராணங்களால் நன்கு துதிக்கப்பட்டவனாகவும் விளங்குவதை, ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் நமக்கு விளக்குகிறார். மகாபாரதத்தின் ஆதிபர்வம் விவரிக்கும் "यत्रेहास्ति न तत क्वचित्' வகைப்பட்டவன் ஸ்ரீ ராமன் என்ற பரதெய்வம். Whatever is not found in him (here), cannot be found elsewhere என்ற ஸர்வஸத்குண ஸம்பன்னன். அழகிலோ, "श्यामाङ्ग शशकोटि पूर्णवदनं चंचत्कलाकौस्तुभम्' என்று சுகாச்சார்யாளால் விவரிக்கப்பட்ட ஸௌந்தர்யமுடையவன். குணங்களுடைய ஸௌபாக்யங்களிலோ, "श्रुति गीता ब्रह्मसूत्रयोगसूत्रादिवर्णितम्" என்று ஸ்ரீ காளிதாஸனுடைய வாக்கிற்கு உண்மையளிப்பவன். திருக்கண்கள் வெளிப்படுத்தும் தயை, வாத்ஸல்யம் என்ற குணங்களினால், "அனவதிக தயா ஸௌஹார்த்த அனுராக கர்ப்பமயம்" என்ற ஸ்ரீ ஸ்வாமிதேசிகன் வாக்கை ஸத்யமாக்குபவன். நடை அழகிலோ, "ஸாமஜவர கமனா" என்று ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் போற்றும் மத்த கஜ

நடையுடையவன். ஒளியில் "சபல கோடி நிபாம்பர தரன்", கோடி மின்னல்களின் ப்ரகாசத்திற்கு ஸமானமானவன். இப்பேற்பட்ட ஜகதானந்தகர ஸ்ரீ ராமனை, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் "ஓம் ஆனுராகராக ராஜித கதாஸாரஹிதாய நம: என்று வணங்கிக் கொண்டு, ஐந்தாவது சரணத்தை முடித்தார்.

ஆறாவது சரண வாக்யங்கள்:

"பாதவிஜித மௌனி சாப
சமபரிபாலவர மந்த்ரக்ரஹண லோல
பரம சாந்த சித்த ஜனக
ஜாதிப ஸரோஜ பவ வரதாகில (ஜகதானந்தகாரக)"

என்பது ஆறாவது சரணத்தின் வாக்கியங்கள்.

இந்த சரணத்தின் நமஸ்கரணங்கள் பின்வருமாறு:

1. ஓம் பாத விஜித மௌனி சாபாய நம:
2. ஓம் சம பரிபாலாய நம:
3. ஓம் வர மந்த்ர க்ரஹண லோலாய நம:
4. ஓம் பரம சாந்த சித்தாய நம:
5. ஓம் ஜனக ஜாதிபாய நம:
6. ஓம் ஸரோஜ பவ வரதாகிலாய நம:

"ஓம் பாதவிஜித மௌனி சாபாய நம:" என்ற முதல் நமஸ்காரத்தின் மூலம் "கௌதமன் ஆசிரமம் சேர்கால், காடதிலே, ரகுராமன் பதத்தாள் சிந்தக்கல்லுருபோய், நல்லுருவாய் விளங்கி நின்ற பாடகக் கால் அகலிகை" என்ற பெண்மணி பெற்ற அனுக்ரஹ விசேஷத்தை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமக்கு விளக்கினார். ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியின் பாததூளியின் மஹிமையை ஸ்ரீ த்யாகப்ரஹ்மமும், அருணாசலக் கவிராயரும் மேற்காணும்

விதமாக நமக்கு விவரித்தனர். அந்த மங்களகரமான ஸ்ரீ பாதரேணு, 'नित्यं गौतमपलिशापदलन श्रीपादरेणुं शुभं' என போதேந்த்ராள் என்ற ராமசைதன்யரால் நமஸ்கரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ராமனின் திருவடிப் புழுதியின் மஹிமையால் சிலை உருவிலிருந்து மீண்டும் தனது பெண் உருவை பெற்றவள் அகல்யை. இப்பேற்ப்பட்ட அனுக்ரஹ சக்தி கொண்ட, ஸ்ரீ ராமனின் திருவடி மஹிமையை, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், "ஸ்ரீ ராம பாதமா நீக்ருப சாலுனே" என்ற அம்ருத வாஹினி கீர்த்தனத்தின் சரணத்தில் பின் வருமாறு புகழ்ந்தார்.

"தாரினி சிலயை தாபமு தாளக,
வாரமுகன்னீருனு ரால்சக
சுர அஹல்யனு ஜூசி
ப்ரோசிதிவியாரீதி தன்யு ஸேயவே
த்யாகராஜகேயமா (ஸ்ரீராம பாதமா)"

தனது தவற்றை உணர்ந்து, கஷ்டம் பொறுக்காமல் கண்ணீர் விட்டபடியே, சிலை உருக்கொண்டு, வழியில் கிடந்த கௌதமரின் தர்மபத்னியான அஹல்யைக்கு, உன் பாத ஸ்பர்சத்தால் ஸ்வய உருவைக் கொடுத்த ஸ்ரீ ராமா, உனது திருவடியின் க்ருபை எனக்கு கிடைத்தால் போதுமே என்று ஸ்ரீ ஸ்வாமிகள் இங்கு ப்ரார்த்தித்துக் கொள்கிறார். 'தலசினந்தனே' என்ற மற்ற ஒரு முகாரி ராக கீர்த்தனத்திலும் "பாத விஜித முனி தருணீ சாப, தல சினந்தனே நா தனுவை தே ஜல்லனெரா" என்று வணங்கிக் கொண்டார். உனது திருவடிப்பொடியின் மஹிமையை நினைத்தால் சில்லென எனது மெய் சிலிர்க்கிறதே, ராமா, என இங்கு சொன்னார். உனது பாத ரேணு ஸம்பந்தத்தால் அகல்யையின் சாபம் அழிந்து, அவள் கல் உரு விலகி, அழகிய பெண் உரு பெற்றாளா என, ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் கேட்டு ஆச்சர்யப்பட்டார்.

ஆறாவது சரணத்தில் எதிர்படும் அடுத்த நமஸ்கரணம், "ஓம் சம பரிபாலாய நம:" என்பது. இங்கு "कोदण्डी कौशिकस्य क्रतुवरमवितुं लक्ष्मणेनानुयातो" என்று ஸ்ரீமத் நாராயணீய க்ரந்த கர்த்தா விவரிக்கும் விச்வாமித்ர யாக ஸம்ரக்ஷண மூர்த்தியை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் வணங்கிக் கொண்டார்.

தம்பியான லக்ஷ்மணன் பின் தொடர, அயோத்தி நகர ஜனங்கள் எல்லாம் துதிபாட, அழகிய சிரஸ்ஸின் மேல் உள்ள கொண்டை அசைய, திருமார்பில் உள்ள முத்துமாலைகள் ஜ்வலிக்க, திருக்கரங்களில் வில்லும், அம்பும் துலங்க, மங்கள வாத்தியங்கள் இனிதே முழங்க, தேவர்கள் எல்லாம் போற்ற, தான் வழிபடும் கோதண்ட ராமன், ஸித்தாச்ரம வாசிகளான முனிவர்களின் இன்னல்களை அகற்ற விச்வாமித்ரர் என்ற மஹர்ஷியுடன் புறப்பட்டதை பின் வரும் தோடி ராக கீர்த்தன மூலம், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் நமஸ்கரித்துக் கொண்டார்:

ப: வெடலெனு கோதண்டபாணி
அனுஜ ஸௌமித்ரினி கூடி

அப: புடமிலோ ஜனுலெல்ல பொகட,
பூஜிதுடௌ மௌனி வெண்ட

ச: சிரமுன கொண்டேயு ஜாரயுரமுன
ஹாரமுலமெறய,
கரமுன சரசாபமுலு கனமுக வெலய
ஸுருசிர வாத்யமுலும் ரோய
ஸுருலெல்லரு வினுதி ஸேய
வர த்யாகராஜ நுதுடு வஸுத
பாரமெல்லனு தீர்ப (வெடலெனு)

விச்வாமித்ர முனிவருடன் நடந்து, அவர் கன்ஜாடை அறிந்து, மாரீசனை தனது அம்புகளின் பலத்தால் அடக்கிய ஸ்ரீ ராமனின் முன் நெற்றியில் திகழ்ந்த "காக பக்ஷம்" என்ற சுருட்டை மயிர் கற்றைகளை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ஞானக் கண்களால் கண்டு, பரமானந்தத்தில் மூழ்கினார். வால்மீகியின் அவதாரமான ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், விஸ்வாமித்ரர் கண்டனுபவித்த யக்ஞரக்ஷண மூர்த்தியின் ஸௌந்தர்யத்தை "அலகலல்ல லாடக கனியாரான் முனியெடு பொங்கெனோ" என்ற கீர்த்தன மூலமும் விவரித்திருக்கிறார்.

ஆறாவது சரணத்தின் அடுத்த நமஸ்கரணம், "ஓம் வர மந்த்ர க்ரஹண லோலாய நம:" என்பதாகும். "முனி கண யாக பாலன பக்த பாக தேய பாவன" என்று நாராயணி ராக கீர்த்தனத்தில் வணங்கப்பட்ட ஸ்ரீ ராம சந்த்ரமூர்த்தி, ஸ்ரீ விச்வாமித்ர முனிவரின் மனதை மிகவும் ஆனந்தப்படுத்தியவன். தன்னுடன் நடந்து வரும் குமார ரூபம் கொண்ட ஸ்ரீ ராமனுக்கு, பசி, தாகம், வெப்பம் இவைகளால் சோர்வு ஏதும் ஏற்படாதிருக்கவேண்டுமென்பதற்காக, ஸ்ரீ விஸ்வாமித்ர முனிவர் ச்ரேஷ்டமான பலா, அதிபலா என்ற இரு மந்த்ரங்களை உபதேசித்தார். ப்ரஹ்மாவால் உண்டாக்கப்பட்ட இந்த இரு மந்த்ரங்களும், உடல் நோய் உண்டாகாது இருக்கவும், உருவம் மாறாது இருக்கவும், தோள் வலிமை நிலைத்திருக்கவும் உதவி புரிபவை. அந்த இரு மந்த்ரங்களை, கவனத்துடன் க்ரஹித்து தம் மனதில் இருத்திக் கொண்ட ஸ்ரீ ராமசந்த்ரனை, ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் "ஓம் வர மந்த்ர க்ரஹண லோலாயா நம:" என ஸேவித்துக் கொண்டார். இந்த சம்பவத்தையே கம்பர்,

"......நான்முகன்
ஆக்கின விஞ்சைகள் இரண்டும் அவ்வழி

ஊக்கினான் அவை அவர் உள்ளத்து உள்ளினார்" என விவரித்தார். தனது பவப்ரியா கீர்த்தனப் பல்லவியில், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளும் "ஸ்ரீ காந்த நீயெட பலாதி பல செலங்கக லேதா வாதா" எனக் கேட்டார். ஸ்ரீ காந்தனே ! உன்னிடம் பலை, அதிபலை என்ற மந்த்ர ரூபமான பாணங்கள் விளங்கவில்லையா எனக்கேட்டு தனது ஆச்சர்யத்தை தெரிவித்தார்."

ஆறாவது சரணத்தின் நான்காவது நமஸ்கரணம், "ஓம் பரம சாந்த சித்தாய நம:" என்பது. "श्यामं शान्तं सुरेन्द्र सुरमुनिविनुतं कोटिसूर्यप्रकाशम्' என்று போதேந்த்ராளால் துதிக்கப்பட்ட ராமன் பரம சாந்த மூர்த்தி. "श्रीराम दैत्यान्तक शान्तरूप श्रीतारकब्रह्म नमो नमस्ते" என்று ஸ்ரீ போதேந்த்ரர் வணங்கிய தெய்வம். வலது கரத்தில் சின்முத்ரை தரித்து முனிவர்களுடன் சாந்த ரஸத்துடன் ஸம்பாஷணை செய்து கொண்டிருக்கும் பட்டாபிராமன். இவையுதிர்காலத்து சந்த்ரனின் குளிர்ந்த திருமுக மண்டலத்துடன் தன்னை ஸேவிக்க வந்துள்ள ஜனங்களின் க்ஷேமலாபங்களை சாந்த ஸ்வரூபத்துடன் விஜாரிக்கும் ராமன் "शान्तं शारदचन्द्रकोटिसदृशं चन्द्राभरमानन" என்ற வகையில் அறியப்படும் ஸ்ரீ ராமன்.

'மாதுர்ய பூர்ணதரன்' என்ற ஸ்ரீ ராமன், இன் சொற் பொழியும் அன்பன். கருணாரஸபூர்ண மனத்துடன், தன்னை அண்டிய ஜனங்களுக்கு பரம சாந்த ஸ்வரூபியாய் அனுக்ரஹிக்கும் ராமனை "ஓம் பரம சாந்த சித்தாய நம:" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் வணங்கிக் கொண்டார்.

ஆறாவது சரணத்தின் ஐந்தாவது நமஸ்கரணம் "ॐ जनकजाधिपाय नमः (ஓம் ஜனகஜாதிபாய நம:) என்பது. இங்கு ஸ்ரீ ராமனை நிழல் போல் தொடர்ந்து அயோத்தியிலும், கடுங்கானகத்திலும் ஸேவை செய்த ஜானகி தேவியை நமக்கு ஞாபகப்படுத்துகிறார். ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீ தேவியை முன்னிட்டே பகவானை நமஸ்கரித்துக் கொள்வது என்பது ப்ரஸித்தம்.

அந்த ரீதியில், ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ஸீதாராமனை, ஜனகஜாதிபா என நமஸ்கரித்துக் கொண்டார். அம்மா, ஜானகி, உனக்கு சமானமாவர் யாராவது உண்டா? பயங்கரமான வனத்தில் அவனுடன் தொடர்ந்து, நடந்து, அவனுக்கு ராஜோபசாரம் செய்து, அவனை மகிழ்வித்தாய். பரமாத்மாவான ஸ்ரீ ராமன் ஸர்வ மங்களங்களும் நிறைந்திருப்பதற்கு நீ அல்லவோ காரணம் என தனது "ஸரியெவ்வரே? ஸ்ரீ ஜானகி, நீ" என்ற ஸ்ரீ ரஞ்ஜனி ராக கீர்த்தனத்தில் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் பின்வருமாறு கேட்டார்:

"வனமந்து பயங்கரமைன தாவுன நில்துனனி
மனஸு தெலிஸி, கனகாங்கி யந்தந்துன ராஜ
சுகம்பனு கல்க (஗ா) ஜேஸிதிவே, ஸரியவ்வரே,
ஸ்ரீ ஜானகி, நீ"

ஜானகிதேவியின் யஜமான ராமா! எங்கள் வைதேஹியை கைப்பிடித்து திருமணம் செய்து கொள்ளாது இருந்தால், இவ்வளவு புகழும், பேரும் உனக்கு எப்படி ஏற்பட்டிருக்ககூடும் எனக் கேட்டார். உனக்கு ராவணாரி என்ற பெயர் ஏற்பட அவள் தானே காரணம்? தனது ஒரு ஹுங்காரத்தால், ராவணனை பஸ்மமாக்கும் சக்தி உடைய பராசக்தி, அவனை ஸம்ஹாரம் செய்யாது விட்டு, உனக்கு ராவணமர்த்தனன் என்ற க்யாதி ஏற்படச் செய்தாள். எங்கள் வைதேஹியைக் கைபிடித்த விசேஷம் தான், உன்னுடைய ப்ரதாபத்தின் பின் நிற்கும் ரஹஸ்யம் என தனது காம்போஜி ராகக் கீர்த்தனத்தின் மூலம் பின் வருமாறு தெரிவித்தார்.

"மா ஜானகி செட்ட பட்டக- மஹாராஜ வைதிவி
ராஜராஜவர ராஜீவாக்ஷ வினு ராவணாரியனி
ராஜில்லு கீர்த்தியு ....... ஸ்ரீ நாயக!
யசமு நீகே கல்க ஜேய வேதா த்யாகராஜ பரிபால"

ஆறாவது சரணத்தின் கடைசியான நமஸ்கரணம், "ஓம் ஸரோஜ பவ வரதாய நம:" என்பது இங்கு ஸ்ரீ ராமனை, ப்ரஹ்மாவுக்கு வரமளித்த வரதராஜனாக நமஸ்கரித்துக் கொண்டார். பிரமன் முன்பு செய்த அஸ்வமேத யாகத்தில், அவன் அளித்த ஹவிஸ்ஸை அமுது செய்ய, புண்ய கோடி விமானத்துடன் யாக குண்டத்திலிருந்து எழுந்து, அவனை அனுக்ரஹித்து, மங்களமான வரங்கள் கொடுத்த வரதராஜனாக இங்கு த்யாகப்ரஹ்மம், ஸ்ரீ ராம சந்த்ரமூர்த்தியை நமஸ்கரித்துக் கொண்டார். இந்த கருத்தையே, ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் தனது ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத் ஸ்தோத்திரத்தில்

"हैरण्यगर्भहयमेध हविर्भुजं त्वां __ अनुस्मरेयम्"

என தெரிவித்தார். ஹிரண்யகர்ப்பன் என்ற சதுர்முக ப்ரஹ்மா செய்த அஸ்வமேத (ஹயமேத) வேள்வியின் ஹவிஸ்ஸை அமுது செய்தவனாயுள்ள அக்னியான உன்னை நான் இடைவிடாது சிந்திக்கக் கடவேன் என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் கூறினார். ஸ்ரீ த்யாகப்ரஹ்மமும், அகில ஜகதானந்தகாரகா! வரதராஜா! ஜனகஜாதிப, பரம சாந்த சித்தா! சமபரிபாவா! உன்னை நான் என்றும் மறக்காத மனமுடையவனாக இருப்பேனாக என வேண்டிக் கொண்டார்.

தன் மனதிடம்,

"ध्याये रामं सुधाशुं नतसकलभवारण्यतापप्रहारं
श्यामं शान्तं सुरेन्द्रं सुरमुनिविनुतं कोटिसूर्यप्रकाशम्"

எனக் கேட்டுக் கொண்டு, ஆறாவது சரணத்தை முடித்துக் கொண்டார்.

ஏழாவது சரண வாக்கியங்கள்; ஏழு நமஸ்காரங்கள்

"புராண புருஷ ந்ருவராத்ம ஜாச்ரித
பராதீன கரவிராத ராவண
விராவண அனக பராசர
மனோஹர விக்ருத த்யாகராஜ ஸன்னுத"
(ஜகதாநந்தகாரக)

என்பது ஏழாவது சரணத்தின் வாக்கியங்கள்.

இந்த சரணத்தில் காணப்படும் நமஸ்காரங்கள் பின் வருமாறு:

1. ஓம் புராண புருஷாய நம:
2. ஓம் ந்ரு வராத்மஜாய நம:
3. ஓம் ஆச்ரித பராதீனாய நம:
4. ஓம் கரவிராத ராவண விராவணாய நம:
5. ஓம் அனகாய நம:
6. ஓம் பராசர மனோஹராய நம:
7. ஓம் விக்ருத த்யாகராஜ ஸன்னுதாய நம:

"அநாதி நிதனம் விஷ்ணும் ஸர்வலோக மஹேஸ்வரம்" என்று ஸ்ரீ வ்யாச பகவான் போற்றிய ஆதியந்தமில்லா (अकालोपधिकं) பரம்பொருளை, "ஓம் புராணபுருஷாய நம" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ஏழாவது சரணத்தில் முதலாவதாக வணங்கிக் கொண்டார்.

ஸ்ரீ ராமனை புராண புருஷனாகக் கொண்டாடும்போது வால்மீகி முனிவரின் பின் வரும் வாக்கியங்களை மனதில் வைத்துக் கொண்டு ஸ்வாமிகள் நமஸ்கரித்துக் கொண்டார்.

"ये त्वां ध्रुवं भक्ताः पुराणपुरुषोत्तमम्
प्राप्नुवन्ति सदा कामान् इह लोके परत्र च"

புராண புருஷோத்தமனாகிய உன்னை நினைப்பவர்கள், இஹ, பர போகங்களை எல்லாம் நிச்சயமாக அடைகிறார்கள், என ஆதி கவி சொன்னார். அப்பேற்பட்ட अनादिनिधन स्वरूप விசேஷம் கொண்ட ரகுநாதனை "புராண புருஷா" என அன்புடன் ஸ்ரீ ஸ்வாமிகள் அழைத்தார்.

அடுத்த நமஸ்கரணம், "ஓம் ந்ருவராத்மஜஸ்ய நம:" என்பது, "ந்ருவரன்" என்பது சக்ரவர்த்தியான தசரத மஹாராஜவை குறிப்பிடும் சொல். "ஆத்மஜன்" என்பது, அவர் குழந்தை என தெரிவிக்கும் சொல். ஆதலால் "ந்ருவராத்மஜன்" என்ற ஸம்போதனம், சக்ரவர்த்தி திருமகனான தாசரதியைக் கொண்டாடும் நமஸ்காரம். தசரத சக்ரவர்த்தியின் திருக்குமாரனான ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியை பல கீர்த்தனங்களில் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் "தாசரதி" எனக் கூப்பிட்டுக் கொண்டாடியிருக்கிறார். உதாரணங்கள் சில பின்வருமாறு:

1. தாசரதே தயா சரதே ஆ சுர ஹரண
   பராசரகேய கவீ ஹ்ருதய நிவேச கருணாகர
   (கோகிலப்ரியா ராகம்)

2. தசரத நந்தன தானவ மர்தன
   தயயா மாம் பாஹி ஹரே
   (அடாணவேரி ராகம்)

3. தாசரதீ நீ ருணமு தீர்ப நா தரமா
   பரம பாவன நாம
   (தோடி ராகம்)

"ந்ருவராத்மஜ" என்று அழகாக கூப்பிடும் போது, தனது இனிய தெய்வமான தாசரதியைத்தான் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் அழைத்தார்.

ஏழாவது சரணத்தின் மூன்றாவது நமஸ்காரம், "ஓம் ஆச்ரித பராதீனாய நம:" என்பது, பக்தர்களின் அன்பு வலையில் சிக்கி, அவர்கள் வசப்பட்ட ஸ்ரீ ராமனை "ஆச்ரித பராதீனன்" என ஸ்ரீ ஸ்வாமிகள் குறிப்பிட்டார். "பக்த ப்ரியம் பக்த சமாதி கம்யம், சிந்தாஹரம் சிந்தித காம

தேனும்" என்று அறியப்படும் ராமன், பக்தர்களுக்கு அவர்கள் த்யானமூலம் சுலபமாக அடையப்படுபவன். அவனுடைய நாமம்ருதத்தை பருகுபவர்களுக்கு, ஸர்வ பாபங்களையும் விலக்கி, மேலும் பாபங்கள் சேராது இருக்கச் செய்பவன். பக்தர்களிடம் தனக்கு உள்ள பரிவால் ராமா, என்ற இரண்டு அக்ஷரங்கள் கொண்ட தன் திருநாமத்தை ஜபிப்பவர்களுக்கு, அவன் செய்யும் அனுக்ரகஹங்களை பின் வரும் ஸ்லோகம் விளக்குகிறது:

राशब्दोच्चारमात्रेण मुखान्निर्याति पातका: ।
पुन: प्रवेशभीत्या च मकारस्तु कवाटवत् ॥

*ரா சப்தோச் சாரமாத்ரேண முகாந் நிர்யாதி பாதகா:*
*புன: ப்ரவேச பீத்யா ச மகாரஸ்து கவாட வத்*

"ரா" என்ற சப்தத்தை உச்சரித்த மாத்திரத்திலே, ஸகல பாதகங்களும் முகத்தின் வழியாக வெளிப்பட்டு ஓடிவிடுகின்றன. "ம" என்ற அடுத்த அக்ஷரத்தை உச்சரிக்கும்போது, வெளியேறிய பாதகங்கள் திரும்பி நுழையாதபடி, பக்தர்களின் மனதாகிற கதவு படேலன மூடிக் கொள்கிறது என மேற்காணும் ஸ்லோகம் சொல்லி பக்தர்களுக்கு தன் நாம ஜபம் மூலம் ராமன் எப்படி உதவுகிறான் என விளக்குகிறது.

தன்னை அண்டிய பக்தர்களை காப்பாற்றும் ராமன் எப்படி அவர்கள் யோகக்ஷேமத்தை விசாரித்து, ஸகல ஆரோக்யங்களையும் அருளி "ஓம் ஆஸ்ரித பராதீனாய நம:" என்ற நமஸ்கரணத்தை ஏற்றுக்கொள்கிறான் என்பதை பின் வரும் சுலோகம் விவரிக்கிறது:

नित्यं श्रीराममन्त्रं निरूपममाधिकं नीतिसुज्ञानमन्त्रं ।
सत्यं श्रीराममन्त्रं सदमलहृदये सर्वदारोग्यमन्त्रं ।

அமலஹ்ருதயம் கொண்ட சாதுக்களாகிய பக்தர்கள், ஸ்ரீ ராம தாரக நாம ஜபத்தால், அவனை வசீகரித்து, ஸர்வானுக்ரஹங்களையும் பெறுகிறார்கள் என இந்த ஸ்லோக மூலம் அறிகிறோம்.

ஏழாவது சரணத்தின் அடுத்த நமஸ்கரணம் "ஓம் கர விராத ராவண விராவனாய நம:" என்பது இருடீகேச னெம்மான் இலங்கை யரக்கர் குலம் முருடு தீர்த்த பிரான், எம்மான் அமரர் பெம்மான்" என்று நம்மாழ்வார் போற்றிய வீரராகவனை இந்த நமஸ்காரம் மூலம் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் வணங்கிக் கொண்டார். "खलदव दहनः कोसलेन्द्राऽवतात्" என்ற பாகவத புராண ப்ரார்த்தனைப்படி அசுரர் குலமாகிய காட்டில் உதித்த கரன், விராதன், ராவணன் என்ற வ்ருக்ஷங்களை அழிப்பதில் காட்டுத் தீ போல் விளங்கும் உத்தர கோசல நாட்டின் சக்ரவர்த்தியான ஸ்ரீ ராமனின் பராக்ரமத்தைக் கொண்டாடி, அவன் நம் எல்லோரையும் ரக்ஷிக்க வேண்டும் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் ப்ரார்த்தித்தார்.

ஏழாவது சரணத்தின் அடுத்த நமஸ்கரணம் "ஓம் அனகாய நம:" என்பது, பரமபாவனமான ராமனை எல்லோருடைய தோஷங்களையும், பாபங்களையும் அழிக்கும் "அனகனாக (अनघाय नमः)" நாட்டை ராக பஞ்சரத்னத்தின் முதல் சரணத்திலேயே முன்னர் ஸ்ரீ ஸ்வாமிகள் தெரிவித்திருக்கிறார். அங்கு காணப்பட்ட நமஸ்காரம், "பரிபூர்ண அனகாய நம:" என்பது. எந்த விதமான தோஷமும் சேராத பரிபூர்ண மங்கள சம்பத்துகள் நிறைந்த அனக ராமன், "अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम" (அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம) என்ற சரணாகதி தத்வத்தை நிருபித்துக்கொண்டு நிற்பதை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் இங்கு துதித்தார்.

ஏழாவது சரணத்தின் அடுத்தபடியான நமஸ்காரம், "ஓம் பராசர மனோஹராய நம:" பராசரர் என்ற மஹாமுனிவர் விஷ்ணு புராண க்ரந்த கர்த்தா ஸ்ரீ ராமன் என்ற விஷ்ணுவின் நாம பாராயண மஹிமையை பின் வருமாறு நமக்கு தனது புராணவாக்ய மூலம் விளக்கியவர் பராசர முனிவர்.

यस्मिन् न्यस्तमतिः न याति नरकं स्वर्गोऽपि यच्चिन्तने विघ्नः
यत्र निवेशितात्ममनसो ब्राह्मोऽपि लोकोऽल्पकः।
मुक्तिं चेतसि यः स्थितोऽमलधियां पुंसां ददात्यव्ययः
किं चित्रं यदघं प्रयाति विलयं तत्राच्युते कीर्तिते॥

யஸ்மின் ந்யஸ்தமதி: ந யாதி நரகம்
ஸ்வர்க்கோபி யச்சிந்தனே விக்ன:
யத்ர நிவேசிதாத்ம மனஸோ
ப்ராஹ்மோபி லோகோல்பக:

முக்திம் சேதஸி ய: ஸ்திதோமலவித்யாம்
பும்ஸாம் ததாத்யவ்யய:

கிம் சித்ரம் யதகம் ப்ரயாதி விலயம்
தத்ராச்யுதே கீர்த்ததே

கருத்து:

ஸ்ரீ ராமனின் ஸ்வரூபத்யானம், மந்த்ரஜபம் இவைகளில் ஈடுபட்டவர்கள் ஒரு நாளும் நரகத்தில் விழமாட்டார்கள். அவனை த்யானித்து, அவன் நாமருசியை அறிந்தவர்களுக்கு, தேவர்கள் வாழும் ஸ்வர்க்க லோகமும் அவ்வளவாக பிடிக்காது; ப்ரஹ்மாவின் லோகமும் ஒரு அல்பதனமாகத் தோன்றும். ஸனாதன, ஸாஸ்வத ப்ரஹ்மமாக விளங்கும் ப்ரபு, ஸாதுக்களாகிற தனது பக்தர்களின் ஹ்ருதயத்தில் கோயில் கொண்டு, அவர்களுக்கு சுலபமாக

கிடைக்காத, தனது மோக்ஷ சாம்ராஜ்யத்தை அளிக்கிறான். இந்த அனுக்ரஹங்கள், நாம ஜபத்தால் கிடைக்கும் எனத் தெரியும்போது, அவனை அனகன், ஸர்வ பாப நாசி என்று அறிவதில் ஆச்சர்யம் ஏதும் இல்லை.

இப்படி, விஷ்ணுபுராணத்தின் மூலம் ஸ்ரீமந் நாராயணனின் நாம ஸித்தாந்தத்தை பரப்பிய பராசர முனிவரிடம் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளுக்கு அத்யந்த பக்தி உண்டு. அவரை தனது மார்க்கதர்ஸியாக பல கீர்த்தனங்களில் நமஸ்கரித்துக் கொண்டிருக்கிறார். वचसां वाच्यम् उत्तमम् (வசஸாம் வாச்யம் உத்தமம்) என்றபடி, எல்லா வாக்யங்களும் குறிப்பிடும் பரம் பொருள் அவன் ஒருவனே, எல்லா வாக்யங்களுக்கும் பின் நிற்பவன் அவன் ஒருவனே என்ற தத்வத்தை விளக்கிய பராசர முனிவரை, தனது கோகிலப்ரியா கீர்த்தனத்தில் பின்வருமாறு ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கொண்டாடியிருப்பதை முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன்:

பராசர கேய கவீஹ்ருதய நிவேச கருணாகர (தாசரதே)

ஏழாவது சரணத்தின் கடைசியான நமஸ்கரணம் "ஓம் விக்ருத த்யாகராஜ ஸன்னுதாய நம:" என்பது. இங்கு "விக்ருத" என்ற சொல்லை ஸ்ரீ த்யாகராஜர் உபயோகப்படுத்தியிருப்பதை புரிந்து கொள்வது சிரமம். இந்த திருநாமத்தை, "ஓம் விக்ருத்யாய நம:", "ஓம் த்யாகராஜ ஸன்னுதாய நம:" என்று இரு வகையாகவும் பிரித்துக் கூறலாம். "ஓம் விக்ருத்யாய நம:" என்ற நமஸ்கரணம், ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டோத்ர சத நாமாவளியின் இரண்டாவதான "ஓம் விக்ருத்யை நம:" என்பதுடன் சம்பந்தப்பட்டது. விக்ருதி என்ற சொல்லிற்கு பல அர்த்தங்கள் உண்டு. ஒரு அர்த்தம் மாறுபட்டது என்பது. மற்ற ஒரு அர்த்தம் முடிவில்லாதது (Limitless) என்பது. இங்கு ஆதியந்தம் இல்லாத பகவானைக் குறிப்பிடும் சொல்லாக, நாம் "விக்ருதி" என்ற நாமத்தை எடுத்துக் கொள்ள வேணும்.

"ஓம் விக்ருத த்யாகராஜ ஸன்னுதாய நம:" என்று சேர்த்து எடுத்துக் கொண்டால், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் தீன நிலையைக் குறிப்பிடும் நாமகரணமாக அறிய வேண்டும். த்ருவ ஸ்ம்ருதி (unceasing remembrance-இடைவிடா பக்வத்யானம்), என்ற கொள்கையின் உயர்வைக் குறிப்பிட தன்னை விக்ருத த்யாகராஜன் எனக் கூறிக் கொண்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. அவனை க்ஷண காலம் அல்லது முஹூர்த்த காலம் கூட நினைக்காது மறந்து மற்ற லோக ருசிகளில் ஈடுபடுபவர்களுக்கு, என்ன விக்ரியைகள் ஏற்பட்டு, அவர்கள் விக்ருதர்கள் ஆகிறார்கள் என்பதை பின் வரும் கருட புராண ஸ்லோகம் விளக்குகிறது:

यन्मुहूर्तं क्षणं वाऽपि वासुदेवो न चिन्त्यते।
सा हानिः तन्महच्छिद्रं सा भ्रान्तिः सा च विक्रिया॥

யன் முஹூர்த்தம் க்ஷணம் வாபி
வாஸுதேவோ ந சிந்த்யதே
ஸா ஹானி: தன் மஹச் சித்ரம்
ஸா ப்ராந்தி: ஸா ச விக்ரியா

வாஸுதேவனை ஒரு க்ஷண காலம் கூட மறந்திருப்பவர்களுக்கு, பெரிய நஷ்டங்கள் ஏற்படுகின்றன; தகாத எண்ணங்களும், அவைகள் மூலம் தகாத பாபச் செயல்களும் அந்த த்யான ஹீனிகளுக்கு ஏற்படுகின்றன என மேற்காணும் ஸ்லோகம் சொல்கிறது.

ஸ்ரீ ராம நாம ஜபத்திலும், த்யானத்திலும், ஆராதனத்திலும், ஸங்கீர்த்தனத்திலும் எப்போதும் ஈடுபட்டிருந்த ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், தன்னை த்ருவ ஸ்ம்ருதி இல்லாததற்காக கடுமையாக கண்டித்தது உண்டு.

உதாரணமாக, 'நோரேமி ஸ்ரீ ராம நின்னாட" என்று வராளி ராக கீர்த்தனத்தில் பின் வருமாறு தன்னை "விக்ருத த்யாகராஜனாக" அறிந்து நொந்து கொண்டார்:

'நோ ரேமி ஸ்ரீ ராம நின்னாட,
ஸாரே ஸாரெ குஞு பாப கர்ம முலு,
ஸ்ப்பு சனுண்டே நாவண்டி வானிகி;
பாபாலை குரு வச்யுலுகாக்
பண்ட்லி கிலின்சுக தருணுலகை
ஸீதாபதி நிஜபக்தியு தெலியனி
த்யாகராஜுனிகி யொரு லகைன"

இங்கு, ஸ்ரீ ராமா! உன்னை குறை சொல்ல எனக்கு வாய் ஏது? ஓயாது பாப செயல்களைச் செய்து கொண்டிருக்கும் என்னை போன்றவனுக்கு உன்னை குறை கூற என்ன உரிமை? காமம், க்ரோதம், மதம், மாத்ஸர்யம் முதலிய ஆறுவகை துர்கணங்களால் பீடிக்கப்பட்டு, ஸ்த்ரீகளைக் கண்டு பல்லைக் காண்பித்து, உண்மையான ராம பக்தியை அறியாத என்னைப் போன்றவனுக்கு, உன்னைக் குறை கூற வாயேது என்று இந்த கீர்த்தனத்தில் சொன்னார். "மீவல்ல குண தோஷ மேமி, ஸ்ரீ ராமா" என்ற காபி ராக கீர்த்தனத்திலும் தன்னுடைய விக்ருதிகளை நினைத்து, தீனமாக ப்ரார்த்தித்தார். தன் "பாஹி கல்யாண ஸுந்தர" என்ற புன்னாக வராளி கீர்த்தனத்தில், "ஸம்ஸார சுகமு ஸதமனி நாம ஸார மேருக மரசிதினி, விஷய ஸுகாதுல ரோயலேக விர்ரவீகி மோஸமாயே" என்று தன்னை நொந்து கொண்டார். ஸம்ஸார ஸுகங்கள் நிரந்தரமானவை என நினைத்துக் கொண்டு, உனது நாம மஹிமை அறிந்து கொள்ளாது காலத்தை கழித்துவிட்டேன்; விஷய சுகங்களை விலக்க முடியாது, அவைகளை மோஹித்து மோசம் போனேன். இந்த விக்ருதிகள் சூழ்ந்த என்னை நீ காப்பாற்று என இந்த கீர்த்தனத்தில் வேண்டிக் கொண்டார்.

நிஜபக்தனின் சோதனைகள், கதறல்களை, ஞாபகப்படுத்த "ஓம் விக்ருத த்யாகராஜ ஸன்னுதாய நம:" என வேண்டிக் கொண்டாரோ எனத் தோன்றுகிறது. இந்த இரண்டாவது சரண அனுபந்தத்துடன் ஏழாவது சரணம் முடிவடைகிறது.

<u>எட்டாவது சரண வாக்யங்கள்:</u>

"ஸஜ்ஜனமானஸ அப்தி ஸுதாகர
குஸும விமான ஸுரஸா ரிபு
கராப்ஜ லாலித சரணாவ குண அஸுர
கண மத ஹரண ஸனாதன அஜநுத"

(ஜகதாநந்தகாரக)

என்பது எட்டாவது சரண வாக்யங்கள். இவை பின் வரும் நமஸ்காரங்களாக பிரிகின்றன:

1. ஓம் ஸஜ்ஜன மானஸ அப்தி ஸுதாகராய நம:
2. ஓம் குஸும விமானாய நம:
3. ஓம் ஸுரஸா ரிபு கராப்ஜ லாலித சரணா வகுணாய நம:
4. ஓம் அஸுர கணமத ஹரணாய நம:
5. ஓம் ஸநாதனாய நம:
6. ஓம் அஜநுதாய நம:

நிரதிசய ச்ரத்தா, பக்தி, விஸ்வாஸத்துடன் ஸ்ரீமந் நாராயணனை த்யானிக்கும் சபரி, த்ருவன், ப்ரஹ்லாதன், பீஷ்மர், விதுரர், வ்யாஸர், சுகர், பராசரர், ஆகிய நல்லோர்களின் மனதாகிற ஸமுத்ரத்திற்கு சந்த்ரன் போல் விளங்குபவன் ராமன் என்ற, கருத்தை "ஓம் ஸஜ்ஜன மானஸ அப்தி ஸுதாகராய நம:" என்ற நமஸ்காரத்தால் வெளிப்படுத்தினார், நமது ஸத்குரு ஸ்வாமிகள்.

இந்த சரணத்தின் இரண்டாவது நமஸ்கார மூலம் யுத்த காண்டத்தில் ராவண வதம் பின்னர், தனது தேவியுடனும், விபீஷண, சுக்ரீவ, லக்ஷ்மண, ஹனுமத் ஸமேதராயும், புஷ்பக விமானம் ஏறி லங்கையை விட்டு, அயோத்யா நகரம் வந்து சேர்ந்த ராமனை, "ஓம் குஸும விமானாய நம:" என ஸேவித்துக் கொண்டார். ஸ்ரீ ராமன் வானரக் கூட்டங்களுடனும், லங்காதிபதியான விபீஷணனோடும், आत्मसंदर्शनाह्लाद विकसन्मुखपङ्कजाम् என்ற தேவியான சுமுக ஸீதையோடும், ஸப்ரிய: என்ற அன்பிற்குரிய தம்பி லக்ஷ்மணனோடும் தன் நகரமான அயோத்தியை குறித்து, புஷ்பக விமானத்தில் சென்றதை ஸ்ரீ நாராயண பட்டதிரி பின்வருமாறு விவரித்தார்:

देवश्रेणीवरोज्जीवित समरमृतैरक्षतै ऋक्षसङ्घै।
लङ्काभर्त्रा च साकं निजनगरम् अगा: सप्रिय: पुष्पकेण ॥

தேவச் ரேணிவ ரோஜ்ஜீவித ஸமரம்ருதை
ரக்ஷதைர் ருக்ஷ ஸங்கை:
லங்கா பர்த்ரா ச ஸாகம் நிஜநகரம் அகா:
ஸப்ரிய: புஷ்பகேண

அப்பேற்பட்ட புஷ்பக விமான ஸஞ்சாரியான ராகவன், தன் மனதில் விளையாட வேணும் என ஸ்ரீ ராம கர்ணாம்ருத ஸ்லோகமும் பின்வருமாறு ப்றார்த்தித்துக் கொள்கிறது:

श्वेतपुष्पकमारुह्य सीतया सह राघव:।
सुग्रीवादिभवद्भक्तैर्मनोमध्ये रमस्व मे ॥

ச்வேத புஷ்பக மாருஹ்ய ஸீதயா ஸஹ ராகவ: 1
ஸுக்ரீவாதி பவத் பக்தைர் மனோமத்யே ரமஸ்வ மே 11

எட்டாவது சரணத்தின் மூன்றாவது நமஸ்கரணம் சுந்தரகாண்டத்தில் விளக்கப்படும் ஸம்பவத்துடன் சேர்ந்தது. ஹநுமார், ஸமுத்ரத்தைத் தாண்டி, லங்கையை அடைய விரும்பினார். ஸமுத்ர லங்கனம் செய்து கொண்டிருக்கும் போது ஆகாய வழியில், ஸூர்யனுக்கு சமமான காந்தியை உடையவளும், ஸர்பங்களுக்கு மாதாவான ஸூரஸா என்ற பெண்மணி, ராக்ஷஸரூபம் எடுத்து, ஹனுமாரை தடுத்து, நீ எனக்கு ஆஹாரமாக வேண்டும். அதனால் நீ என்னுடைய வாயில் புக வேண்டும் என்று அதட்டினாள். நினைத்த உருவத்தை எடுக்கும் ஸூரஸையால் தடுக்கப்பட்ட ஹனுமார், தனது ப்ரஹ்மாண்டமான சரீரத்தை, கட்டைவிரல் ப்ரமாணமாக சுருக்கிக் கொண்டு, அவளுடைய திறந்த வாயில் புகுந்து, உடனே வெளிக் கிளம்பினார். அவள் வாயிலிருந்து ஜயத்துடன் வெளிப்பட்ட ஹனுமாரை, வால்மீகி 'वदनान्मुक्तं चन्द्र राहुमुखादिव' என வர்ணித்தார். ஹனுமார், ராஹூவின் வாயிலிருந்து வெளிப்பட்ட சந்த்ரன் போல் இருந்தார் என வால்மீகி பகவான் மேலே சொன்னார். ஸூரஸையும், தன் பயங்கர உருவை மாற்றிக்கொண்டு, அழகிய பெண்ணாக மாறி, ஸ்ரீ ராம கார்யஸித்திக்காக செல்லும் வானர ச்ரேஷ்டனே! மஹாத்மாவான ஸ்ரீ ராமனுடன் ஸீதையைச் சேர்த்து வை என்று ஆசிர்வாதித்து, அனுப்பினதை பின் வரும் ஸூந்தர காண்ட ஶ்லோகம் கூறுகிறது:

अब्रवीत्सुरसादेवी स्वेन रूपेण वानरम् ॥
अर्थसिद्ध्यै हरिश्रेष्ठ गच्छ सौम्य यथासुखम् ।
समानयस्व वैदेहीं राघवेण महात्मना ॥

அப்பேற்பட்ட ஸூரஸா தேவியை வென்ற ஆஞ்சநேயரை, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் "ஸூரஸாரிபு" என வணங்கி, பின், அந்த ஸூரஸையை வென்ற

ஆஞ்சநேயனின் ம்ருதுவான கைகளினால் பிடிக்கப்பட்ட பாதங்களை உடைய ராமா ("ஓம் ஸுரவா ரிபு கராப்ஜ லாலித சரணாவகுணாய நம:") என நமஸ்கரித்துக் கொண்டார்.

ஸ்ரீ ராமனின் பாதங்கள் ராஜகுமாரனின் ம்ருதுவான பாதங்கள் கானகத்தில், முள்ளும், கல்லும், நிறைந்த பாதைகளின் கொடுமைகளை ஸஹிக்கமுடியாத பாதங்கள். அந்த பாதங்களின் நோவுதீர, வைதேஹியின் தாமரைக் கரங்கள் அவைகளைப் பிடித்தன. அவளுடைய மென்மையான பிடிப்பைக் கூட பொறுக்கமுடியாத மென்மையுள்ளவை ஸ்ரீ ராமனின் பாதங்கள். ஸீதாபஹரணத்திற்கு பின் அந்த பாதகமலங்களை ஆஞ்சநேயரும், லக்ஷ்மணனும் பிடித்து, 'கானகத்தில் அலைந்த ச்ரமத்திற்கு பரிஹாரம் செய்தனர்' என சுகாச்சார்யாள் தனது ஸ்ரீமத் பாகவத ஸ்லோகப் பகுதியில் பின் வருமாறு கூறினார்:

"ப்ரியாயா பாணி ஸ்பர்ச சாக்ஷமாப்யாம்
ம்ருஜித பதருஹோ யோ ஹரீந்த்ரானு ஜாப்யாம்"

ஸ்ரீ ஸ்வாமிகள், அடுத்தபடியாக "ஏர்கொள் இலங்கையை நீறே செய்த நெடுஞ்சுடர் சோதியை", ஓம் அஸுரகண மத ஹரணாய நம: எனப் பாடிப் போற்றினார். அறிவிழந்த ராக்ஷஸக் கூட்டங்களின் கொழுப்பை அடக்கி, அவர்களை ஹதம் செய்த ராமனாக, ஜகதானந்தகாரகனை ஸ்ரீ ஸத்குரு வணங்கிக் கொண்டார்.

எட்டாவது சரணத்தின் அடுத்தபடியான நமஸ்கரணத்தில், ஜீவகோடிகளை உன் வசப்படுத்தும் ராமா! நீ ஸனாதனன் அல்லவா என்று கேட்டு, "ஓம் ஸனாதனாய நம:" என ஸேவித்துக் கொண்டார். அண்டமெல்லாம் பரந்து ஸகல மங்களங்களையும் அனாதிகாலத்திலிருந்து இன்று வரை பக்த ஜனங்களுக்கு அளித்து, ஸனாதன புருஷனாய், புராண புருஷனாய் திகழும் ஸ்ரீ ராமனின் பெருமையை பின் வரும் ஸ்லோகம் விளக்குகிறது.

वेद्यं विश्वमयं स्वलीनभुवनस्वाराज्यसौख्यप्रदं।
पूर्णं पूर्णतरं पुराणपुरुषं रामं भजे तारकम्॥

ஸம்ஸாரக் கடலைத்தாண்ட வகை தெரியாதவர்கள் கடைத்தேற பரமசிவனே உப்தேசிக்கும் தாரக மந்திரத்தை, தன் பெயராகக் கொண்டு, ப்ரஹ்ம்மாவினால் புகழப்பட்டு, ஸூர்ய வம்சத்தில் உதித்து, ஸீதாநாயகன் என்ற கீர்த்தி வாய்ந்த என் ராமனே பரதெய்வம், அவனே ஆதியந்தமில்லா ஸனாதன மூர்த்தி என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், மற்ற ஒரு சமயத்தில், வாடேரா என்ற பந்துவராளி கீர்த்தன வாக்ய மூலம் பின் வருமாறு சொன்னதுமுண்டு:

दारि देलिय लेनि यज्ञुलकु भव नीरधि दाट
मोक्ष मन्दुटकु, नीरजारिधरुहुपदेशिञ्चे
तारक नाममुतोनु वेलसिन, वाडेरा दैवमु; मनसा

ஸீதாபதி யனி பேரு கலிகின ராமா! நீ ஒருவனே தான் எல்லா தெய்வங்களிலும் மேம்பட்ட புராதன தெய்வம் எனக் கூறி, "ஓம் ஸனாதனாய நம:" என்ற துதிக்கு விளக்கம் தெரிவித்தார். ஸ்ரீ ராமசந்த்ரன், ப்ரஹ்மாவால் துதிக்கப்பட்டு வருவதை "ஓம் அஜநுதாய நம:" என்று அறிவித்து, நாட்டை ராக பஞ்சரத்னத்தின் எட்டாவது சரணத்தை ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் முடித்தார்.

ஒன்பதாவது சரண வாக்யங்கள்: ஒன்பது நமஸ்காரங்கள்

"ஓம்கார பஞ்ஜரகீர புரஹர
ஸரோஜபவ கேசவாதி ரூப
வாஸவரிபு ஜனகாந்தக
கலாதர கலாதராப்த க்ருணா கர

சரணாகத ஜன பாலன
ஸுமனோ ரமண நிர்விகார நிகம ஸாரதா
(ஜகதாநந்தகாரக)

என்பவை ஒன்பதாவது சரணத்தின் அழகிய ஸமாஸங்கள் கொண்ட வாக்யங்கள். இவை பின் வரும் நமஸ்கரணங்களாக பிரிகின்றன:

1. ஓம் ஓம்கார பஞ்ஜர கீராய நம:
2. ஓம் புரஹர ஸரோஜ பவ கேசவாதி ருபாய நம:
3. ஓம் வாஸவரிபு ஜன காந்தகாய நம:
4. ஓம் கலாதர கலாதராப்தாய நம:
5. ஓம் க்ருணாகராய நம: (ॐ घृणाकराय नमः)
6. ஓம் சரணாகத ஜன பாலனாய நம:
7. ஓம் ஸுமனோ ரமணாய நம:
8. ஓம் நிர்விகாராய நம:
9. ஓம் நிகம ஸாரதராய நம:

இந்த ஒன்பதாவது சரணத்தில், ஒன்பது திரு நாமங்களால், ஸ்ரீ ராமனை ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் அர்ச்சித்தார்.

தாஸ போஷக, ஆப்த ஸுலப, பவரோகஹரண என்ற மற்ற இடங்களில் நமஸ்கரிக்கப்பட்ட தன் இஷ்ட தெய்வமான ராமனை ப்ரணவம் என்ற கூண்டில் வசிக்கும் கிளியாக இங்கு விவரித்து, "ஓம்கார பஞ்ஜரகீராய நம:" என ஸ்ரீ த்யாகராஜர் நமஸ்கரித்துக் கொண்டார். ஸ்ரீ ராமன் ப்ரணவ நாதத்தால் அறியப்படும் பரப்ரஹ்மம் என ஸ்ரீ ஸ்வாமிகள் கூறியது கீதையில், அவன் அறிவித்த உண்மையை பொறுத்தது. ஓங்காரத்தால் அறியப்படும் பரப்ருஹ்மமான தன்னை நினைத்துக் கொண்டு, தேஹத்தை விடும் ஜீவன், தன் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை தவறாது அடையும் என கீதாச்சார்யன் பின் வருமாறு சொன்னார்:

"ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन्
यः प्रयाति त्यजन् देहं स याति परमां गतिम्"

"ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம்ம
வ்யாஹரன் மாமனுஸ்மரன்
ய: ப்ரயாதி த்யஜன் தேஹம்
ஸ யாதி பரமாம் கதிம்"

"ப்ரணவபீஜஸாராத்மகன்" என்று விளக்கிய ஸ்ரீ ராமனை அடுத்தபடியாக "ஓம் புரஹர ஸரோஜபவ கேசவாதி ரூபாய நம:" என ஸ்ரீ ஸ்வாமிகள் ஸேவித்துக் கொண்டார். த்ரிபுரம் அழித்த செஞ் சடையன், தாமரை வாழ் பிரமன், கேசிஹந்தாரன் என்ற பெயர் பெற்ற கேசவன் ஆகிய மூவர் ரூபத்துடன் விளங்கும் த்ரிமூர்த்தி ஸ்வரூபனான ஸ்ரீ ராமனை இந்த நமஸ்கரண மூலம் ஸேவித்துக் கொண்டார்.

ஒன்பதாவது சரணத்தின் மூன்றாவது நமஸ்கரணம், "ஓம் வாஸவரிபு ஜனகாந்தகாய நம:" என்பது. வாஸவரிபு என்பது இந்த்ரஜித்தின் பெயர். இந்தரஜித்தின் தந்தை லங்கேச்வரன் என்ற ராவணன். அந்த அகந்தை மிகுந்த ராவணன் என்ற துஷ்டனை வதம் செய்த ராமனை "வாஸவ ரிபு ஜனகாந்தகன்" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் ஸேவித்துக் கொண்டார். லோக ரக்ஷணார்த்தம், ஜகதேக வீரனான ஸ்ரீ ராமன், ராவணனுக்கு யமனாகத் தோன்றி, "दशवदनशिरः पंक्तिविच्छेदकारि" என்ற பிருதைப் பெற்றான். எதிரிகள் ஏதும் அறியா ராவணனும், யுத்த களத்தில், ராமனின் வீரத்தைக் கண்டு, "தம் மன்யே ராகவம் தைவம் நாராயணம் அனாமயம்" எனப் புரிந்து கொண்டு, தன் எதிரில் நிற்பவன் ஸாதாரண அரசகுமாரன் அல்ல, ஸ்ரீமந் நாராயணனே என ஊஹித்து, அவர் பாணங்களால் வதம் செய்யப்பட்டான்.

ஒன்பதாவது சரணத்தின் நான்காவது நாமாவளி, "ஓம் கலாதர கலாதராப்தாய நம:". சந்த்ரகலையை தனது ஜடையில் அணிந்துள்ள ஸகலகலாதரனான சந்த்ரசேகரனின் ஆப்த நண்பன் ஸ்ரீ ராமன் என இங்கு தெரிவித்தார். தன்னுடைய தாரக நாமத்தை ஜபித்துவரும் சந்த்ரசேகரனுக்கு அன்பனாக இருக்கும் ராமனாக இங்கு நமஸ்கரித்துக் கொண்டார். ஜகதேக மங்கள ஸ்வரூபனான ஸ்ரீ ராமனின் தாரக மந்த்ரத்தை ஸ்ரீ பரமசிவன் ஜபித்து, அந்த தாரக மந்த்ரத்தின் பெருமையை தனது தேவியான பார்வதிக்கும் விளக்கியிருப்பதை தனது காபி ராக கீர்த்தனமான " இந்த ஸௌக்யமனி" என்பதிலும், "ஸாரமே கானி" என்ற பந்துவராளி கீர்த்தனத்திலும் பின்வருமாறு விவரித்து, சந்த்ரசேகரனுக்கும், ஸ்ரீ ராமனுக்கும் உள்ள நெருங்கிய உறவை நமக்குப் புரியவைத்தார்.

"स्वररागलयसुधारसमन्दु वररामनाममने कंडचककरे
मिश्रमुजेसि भुजिञ्चे शंकरुनिकि देलुसुनु त्यागराजविनुत
(इन्त सौख्यमनि ने जेप्पजाल)

काபி கீர்த்தனம்.

सामगानलोलुडौ रजतगिरिधामुडैन त्यागराज शिवुडतिनेममुतो
नामामृतपानमु येमरकनु जेसि राम राम राम यनुचु सततमु
श्रीमदादिगौरिकि श्रृङ्गारिकि या महिमलना रहस्यमुल नति
प्रेमनु युपदेशिञ्च लेदा (सारमे गानि यन्यमार्गविचार मेटिके)

பந்துவராளி கீர்த்தன சரணம்

ஸ்வர, ராக, லயம் கூடிய அம்ருத மயமான பாலில் ராம நாமம் என்ற கற்கண்டைச் சேர்த்து, அந்த தித்திக்கும் ராம நாம பானத்தை அருந்தும் ஸ்ரீ சங்கரன், அந்த நாம ஜபத்தின் ஸௌக்யததை நன்கு அறிந்தவன் என

மேற்காணும் காபிராக கீர்த்தன சரணத்தில் கூறினார். பந்துவராளி கீர்த்தனத்தில், ஸாம கான லோலனான ஸ்ரீ சங்கரன் ராம தாரக நாமத்தை இடை விடாது ஜபித்து, அந்த நாம மஹிமையை தன் தர்ம பத்தினிக்கும் விளக்கியிருக்கும்போது, மற்ற வழிகளை தேடுவானேன் எனக் கேட்டார்.

ஒன்பதாவது சரணத்தின் ஐந்தாவது நமஸ்கரணம் "ஓம் க்ருணாகாய நம:" என்பது. ঘৃণা என்ற சொல் கருணையை குறிக்கும் சொல். அபார கருணாமூர்த்தியான ராகவன், தன் தேவியிடம் அபராதப்பட்ட காகத்தையும், தன்னிடம் சரணாகதி செய்த மஹா பாபிகளையும் மன்னித்துக் கடைத் தேற்றும் கருணை ஸாகரம்.

அவனுடைய சரணாகதி தத்வத்தை மனதில் வைத்து அடுத்த நமஸ்காரத்தில் ஸ்ரீ ராமனை "ஓம் சரணாகத ஜன பாலனாய நம:" என மங்களாசாஸனம் செய்தார். சரணாகத ரக்ஷகனுக்கு இருக்க வேண்டிய குணங்கள் ஞானம், சக்தி, கருணை என்ற மூன்று குணங்கள். ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியோ இந்த த்ரிகுணங்கள் நிறைந்தவர். அவருடைய கல்யாண குணங்களை விவரிக்கும் ஹநுமார், பின் வரும் ச்லோகம் மூலம் அவருடைய சக்தி, ஞானம், கருணை, பராக்ரமம் முதலியவைகளை நமக்கு அறிவித்தார்.

द्विः शरं नाभिसन्धत्ते द्विः स्थापयति नाश्रितान्।
द्विर्ददाति न चार्थिभ्यो रामो द्विर्नाभिभाषते ॥

ஹனுமார் சொன்னது: ராமன் இருமுறை அம்பு தொடுப்பதில்லை; அண்டியவர்களை இருமுறை நிலைபெறச் செய்வதில்லை; தன்னிடம் யாசிப்பவருக்கு இரு முறை தானம் கொடுப்பதில்லை; கேட்ட கேள்விக்கு இரு முறை பதில் பேசுவதில்லை. முதல் முறையிலேயே, எல்லாம் பூர்த்தியாக்கி, இரண்டாம் முறைக்கு அவச்யம்

இல்லாத பெருந்தகை ஸ்ரீ ராமன் என ஹனுமார் சொல்லி, ஸ்ரீ ராமனைப் போல் சரணாகதர்களை ரக்ஷிக்கும் தெய்வம் வேறு யாரும் இல்லை என தெரிவித்தார். சுக்ரீவன், விபீஷணன், காகாஸுரன், ஸமுத்ரராஜன் முதலியவர்களை சரணாகதர்களாக ஏற்றுக்கொண்ட ஸ்ரீ ராமன், அவர்களை செவ்வனே காப்பாற்றினார். தனது உதார குணத்தால், நூற்றுக் கணக்கான குற்றங்களை சரணாகதிக்கு முன் செய்திருந்தபோதிலும், சரணாகதி செய்தவுடன் அத்தனை தவறுகளையும் மன்னித்து விடுவான் ஸ்ரீ ராமன். சரணாகதி செய்தவன், ஏதாவது வகையில் உதவி செய்தாலும், அதனால் ராமன் மகிழ்ந்து பரமானுக்ரஹங்களைச் செய்கிறான் என்று ஸ்ரீ வால்மீகி பின் வரும் ஸ்லோகம் மூலம் சொன்னார்:

न स्मरत्यपकाराणां शतमप्यात्मवत्तया।
कथंचिदुपकारेण कृतेनैकेन तुष्यति॥

தாக்ஷிண்ய பரதந்த்ரனான ஸ்ரீ ராமனை, த்யாகப்ரஹ்மம் அடுத்தபடியாக, "ஓம் ஸுமனோரமணாய நம:" என வணங்கிக் கொண்டார். இங்கு "ச்யாம ஸுந்தராங்க ஸகலசக்தியு நீவேரா" என்ற தன்யாஸி ராகத்தின் சரணத்தில் விளக்கப்பட்ட தத்வங்களை மனதில் வைத்துக் கொண்டு, ஸஜ்ஜனங்களை சந்தோஷப்படுத்துபவனாக ஸ்ரீ ராமனை நமக்கு அறிமுகப்படுத்தினார். மேற் சொன்ன தன்யாஸி ராக சரண வாக்யங்களும், அவைகளின் கருத்தும் பின் வருமாறு:

"துஷ்ட ஜனுல மத விகார
சிஷ்ட ஜன ஹ்ருதய விஹார
இஷ்ட தைவமு நீவேர இலனு
த்யாகராஜு வேரா"

(கருத்து)

துஷ்ட ஜனங்களின் கர்வத்தை அடக்கி, நல்ல நடத்தை உள்ள ஜனங்களின் உள்ளத்தில் அமரும் ராமா, கார்மேகத்தின் காந்தி பொருந்திய ஸுந்தராங்கனே! நீயே எனது இஷ்ட தெய்வம் நான் உனது அடிமை.

ஒன்பதாவது சரணத்தின் அடுத்த நமஸ்கரணம், "ஓம் நிர்விகாராய நம:" என்பது. இங்கு லாவண்ய ராமனை பின் வருமாறு ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமஸ்கரித்துக் கொள்கிறார்:

इन्दीवरदळश्याममिन्दु कोटिनिभाननम् ।
कंदर्पकोटिलावण्यं वन्देऽहं रघुनन्दनम् ॥

"த்ரைலோக்ய ஸம்மோஹனம்" என்றபடி மூன்று லோகங்களையும் தன் ஸௌந்தர்யத்தால் மயங்க வைக்கும் ராமனை, மாசு மறுவற்ற ஸர்வாங்க ஸுந்தரனாக ஸ்ரீ ஸ்வாமிகள் தர்ஸித்துக் கொண்டு, "ஓம் நிர்விகாராய நம:" என ஸேவித்துக் கொண்டார்.

ஒன்பதாவது சரணத்தின் கடைசி நமஸ்கரணம், "ஓம் நிகம ஸாரதராய நம:" என்பது. நீலாம்பரி ராக கீர்த்தனத்தில் விளக்கிய 'வேத ஸார ஸபலனி ஜசுசு ஸ்ரீ ராமா" என்ற வேத ஸாரமாய் அவதரித்த ராமனாக அவனைக் கொண்டாடி "ஓம் நிகம ஸாரதராய நம:" என வணங்கிக் கொண்டார். வேதத்தின் உட் பொருளே! 'வேதாந்த வேத்யா! த்வாம் வினா நான்யத்ர ஜானே ராமா!" என்ற தீனமான ப்ரார்த்தனையுடன் ஒன்பதாவது சரணத்தை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் முடித்தார்.

<u>பத்தாவது சரண வாக்யங்கள்: பத்து நமஸ்காரங்கள்</u>

"அகணித குண கனக சேல
ஸாலவிதளநாருணாப ஸமான சரணா
பாரம ஹ்மாத்புத ஸுக விஜன
ஹ்ருத் ஸதன ஸுர முனிகண
விஹித கலச நீரநிதிஜாரமண
பாபகஜன் ந்ருஸிம்ஹ வர
த்யாகராஜ நுத (ஜகதானந்த காரகா-
ஜய ஜானகீ ப்ராண நாயக)"

என்பது இந்த சரண வாக்யங்களாகும்.

ஸந்திகளை பிரிக்கும் போது, பத்தாவது சரணம் பின்வருமாறு பிரிந்து கொள்கிறது:

1. ஓம் அகணித குணாய நம:
2. ஓம் கனக சேலாய நம:
3. ஓம் ஸால விதளனாய நம:
4. ஓம் அருணாப ஸமான சரணாய நம:
5. ஓம் அபாரமஹிமாத்புதாய நம:
6. ஓம் ஸுகவிஜன ஹ்ருத் ஸதனாய நம:
7. ஓம் ஸுர முனிகண விஹிதாய நம:
8. ஓம் கலசநீரநிதிஜாரமணாய நம:
9. ஓம் பாப கஜ ந்ருஸிம்ஹ வராய நம:
10. ஓம் த்யாகராஜநுதாய நம:

ஒன்பதாவது சரணத்தில், ஒன்பது நமஸ்காரங்கள் மூலம் ஸ்ரீ ராமனை ஸேவித்துக் கொண்ட ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், பத்தாம் சரணத்தில் பத்து நமஸ்காரங்கள் மூலம் தன் பக்தி கலந்த வந்தனங்களை ஸ்ரீ ராமனின் திருவடிகளில் ஸமர்ப்பித்தார்.

அவனுடைய எல்லையில்லா நற்குணங்களை "ஓம் அகணிதகுணாய நம:" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் புகழ்ந்தார். "அக்ஷரं ब्रह्म सत्यं" என ஸ்ரீ வால்மீகி முனிவரால் நீ மாறுபாடு அடையாத பரப்ரஹ்மம், எந்நாளும் அழியாத ஸத்குணக்கடல் என புகழப்பட்ட ராமனை ஸ்ரீ ஸ்வாமிகள் "அகணித குணன்" என வணங்கிக் கொண்டார். ஸ்ரீ ராமசந்த்ரனின் அளவற்ற ஸத்குணங்களை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், தனது வாக்கு என்னும் அம்ருதப் பெருக்கால் பல, பல கீர்த்தனங்கள் மூலம் கொண்டாடியிருக்கிறார். ஸ்ரீ ராமனின் அகணித குணங்களை விவரிக்கும் ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனங்களில் ஒன்று பின் வரும் உசேனி ராக க்ருதியாகும்:

ப: பஜ ராமம் ஸததம் மானஸ

ச: அமித சுபாகரம் பாபதிமிரவிபாகரம்
சதமகநுதகீதம் ஸகலாச்ரித பாரிஜாதம்
பாலிதலோக கணம் பரம கபாலி விநுத ஸுகுணம்
ஸரோஜவர நாபம் யமபுராராதி லாபம்
வராநந்த கந்தம் நத ஸுராதி முனி ப்ருந்தம்
கமனீய சரீரம் தீரம் மம ஜீவாதாரம்
கரத்ருதசர சாபம் ராமம் பரிதகுண கலாபம்
பவ ஜலநிதி போதம் ஸாரஸபவமுக நிஜதாதம்
வாதாத்மஜ ஸுலபம் வரஸீதா வல்லபம்
ராஜரவி நேத்ரம் த்யாகராஜ வரமித்ரம் (பஜராமம்)

இங்கு ராமனின் குண ஸம்பத்துக்களைப் புகழ்ந்து, தன் மனதை அவனிடம் ஈடுபடு என ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் வேண்டிக் கொண்டார். அவனுடைய அகணித குணங்களை விவரிக்கும்போது, அவன் எல்லையில்லா நன்மைகள் குமிந்திருக்கும் களஞ்சியம், பயங்கரமான இருட்டு போல் விளங்கும் தீமைகளை விரட்டும் ஜ்யோதிர்மயமான

கதிரவன், இந்திரனை துதிக்கும் பரதெய்வம், லோகங்களை எல்லாம் ஸம்ரக்ஷித்து அனுக்ரஹம் புரியும் கருணாநிதி, காபாலி என்ற சிவனார் வணங்கும் பரம்பொருள், அவருக்கு செல்வமாய் உள்ள பரமபாவன மூர்த்தி, ஜகத்துக்களின் ஆனந்தம் என்ற பயிரின் ஆணிவேர், கொடுமையான ஸம்ஸாரக்கடலைத் தாண்ட உதவும் கப்பல், என்றெல்லாம் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் போற்றி, "அகணித குணங்களைக்" கொண்டாடினார்.

பத்தாம் சரணத்தின் இரண்டாவது நமஸ்கரணத்தில் பீதாம்பரதாரியான ஸ்ரீ ராமனை "ஓம் கனக சேலாய நம:" என ஸேவித்துக் கொண்டார். அவனுடைய பொன் ஆடையின் அழகை இங்கு தன் ஞானக் கண்களால் கண்டானந்தித்தார்.

பத்தாம் சரணத்தின் மூன்றாவது சரணத்தில், ஏழு சால வ்ருக்ஷங்களை ஒற்றை பாணத்தால் தகர்த்தெறிந்து, ஸுக்ரீவனின் ஸந்தேஹத்தை விலக்கிய ஸ்ரீ ராமனின் பராக்ரமத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் நமஸ்கரித்துக் கொண்டார். இந்த நமஸ்கரணம், "ஓம் ஸாலவிதளனாய நம:" என்பது. தனது ஹரிகாம்போஜி ராக கீர்த்தனம் ஒன்றில், தவறாத சக்தி உடைய ஸ்ரீ ராமனின் பாணத்தின் மஹிமையை, "ஒக மாட, ஒக பாணமு, ஒக பத்னீவ்ரதுடு" என அறிவித்தார். ஏழு மராமரங்களை ஒரு பாணத்தால், கீழே சாய்த்த ராமனின் பராக்ரமத்தை "ராமபாணத்ராண செளர்ய மேமனி பொகடுரா, ஓ மனஸா" என்ற சாவேரி ராக கீர்த்தனத்திலும் நமக்கு விளக்கியிருக்கிறார்.

பத்தாம் சரணத்தின் நான்காவது நமஸ்கரணத்தில், ஸ்ரீ ராமனின் செந்தாமரைத் திருவடிகளின் ஸெளந்தர்யத்தை "ஓம் அருணாப ஸமான சரணாய நம:" எனப் பாடி புகழ்ந்தார்.

ஐந்தாவது நமஸ்கரணம், "ஓம் அபாரமஹிமாத்புதாய நம:" என்பது. அவனுடைய ஈடு இணை இல்லாத மஹிமைகளை, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தனது பல கீர்த்தனங்களில் விவரித்து ஆனந்தப் பட்டிருக்கிறார். அவர் கொண்டாடிய ராம மஹிமையை விளக்கும் கீர்த்தனங்களின் உதாரணங்கள் சில பின் வருமானவை:

1. காபிராக கீர்த்தனை: நித்யரூப எவரி
   பாண்டித்ய மேமி நடுசுரா ?

இங்கு, உன்னுடைய கட்டளையால் அல்லவோ சூரியன் மேருமலையை தினமும் சுற்றி வருகிறான்; உன்னுடைய அனுக்ரஹத்தால் அல்லவோ, ஆதிசேஷன் மிகுந்த கனமுள்ள பூமியைத் தன் தலையின் மேல் சிரமம் இல்லாது தூக்கி வருகிறான்? உன் அனுக்ரஹத்தால் அல்லவோ, ஸ்ரீ சங்கரன், உன் தாரக நாமத்தை ஜனங்களுக்கு உபதேசித்து, உன் அனுக்ரஹம் ஸித்திக்க செய்கிறான் என ஸ்வாமிகள் தெரிவித்தார்.

2. பாகாயனய்ய நீ மாய லெந்தோ, ப்ரஹ்மகைன
   கொனியாட தரமா - சந்த்ரஜ்யோதி கீர்த்தனம்.

இங்கு த்யாகப்ரஹ்மம், உன் மாயைகள் ரொம்பவும் நன்றாக இருக்கின்றன. உறவினர்களான கௌரவர்களை கொல்வது பாபம் என்று நினைத்த அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்து, உன்னையும், என்னையும் வினைப் பயன் பாதிக்காது என்று ஸ்பஷ்டமாக விளக்கி அவனைக் காப்பாற்றினாயே! என்னே உனது மஹிமை என ஸ்ரீ ஸ்வாமிகள் கொண்டாடினார்.

3. ஏல தெலியவேரோ பூர்வ கர்ம மே வாகுன
   ஜேஸிரோ ராமய்ய- தர்பார் கீர்த்தனம்.

இங்கு ஸீதா ஸ்வயம்வர மண்டபத்தில், மஹத்தான சிவதனுஸ்ஸை விளையாட்டாகவே முறித்து, உன் மஹிமையை வெளிப்படுத்தினாயே, ராவணனின் மூல பலத்தை அனாயாஸமாக அழித்தாயே, இப்பேற்பட்ட பராக்ரமசாலியான உன் மஹிமைகளை என்னவென்று சொல்வேன் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் சொன்னார்.

நாட்டை ராகத்தின் பத்தாவது சரணத்தின் ஆறாவது நமஸ்கரணம் "ஓம் ஸுகவிஜன ஹ்ருத் ஸதனாய நம:" என்பது. ஸத்கவிகளான வால்மீகி, வ்யாஸர், பராசரர் ஆகியவர்களின் உள்ளத் தாமரைகளில் கோயில் கொண்ட ராமனை இங்கு ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமஸ்கரித்துக் கொண்டார்.

அடுத்த நமஸ்கரணம், "ஓம் ஸுரமுனிகண விஹிதாய நம:" என்பது. தேவர்கள், முனிவர்களுக்கு அனுக்ரஹங்கள் புரிபவனாக ராமனை இங்கு ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் அறிமுகப்படுத்துகிறார். முனிவர்களின் மனதை ஸந்தோஷப்படுத்தும் ராமனை போதேந்த்ராள் பின்வருமாறு நமஸ்கரித்துக் கொண்டு, ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் நமஸ்கரணத்திற்கு எதிரொலி அளிக்கிறார்.

ध्यान रूढमुनीन्द्रमानससरोहंसाय संसार।
विध्वंसायाद्भुततेजसे रघुकुलोत्तंसाय पुंसे नमः॥

அத்புத தேஜஸுடைய ராமன், த்யான ஸமாதியில் ஆழ்ந்திருக்கும் முனிவர்களின் மனதாகிற தடாகத்தில் விளையாடும் ஹம்ஸமாக விளங்குகிறான் என போதேந்த்ராள் தெரிவித்தார்.

பத்தாவது சரணத்தின் எட்டாவது சரணம், ராமனை திருப்பாற் கடலில் உதித்த லக்ஷ்மீ தேவியின் காந்தனாக நமஸ்கரித்துக்கொண்டு, "ஓம் கலசநீரநிதிஜாரமணாய நம:"

என்ற நாமாவளியை நமக்கு அளித்தார்.

"कलश नीर निधिजा" என்ற வாக்யம், "कननीय कमला" என்று ஸ்ரீமத் நாராயணீயம் ஸேவித்துக் கொள்ளும் மஹா ஸௌந்தர்யம் கொண்ட மஹா லக்ஷ்மியைக் குறிப்பிடுகிறது. அவள் பாற்கடலிலிருந்து, அம்ருதமதன ஸமயம் உதித்ததை சுகாச்சார்யாள் ஸ்ரீமத் பாகவத புராணத்தில் பின்வருமாறு விவரித்தார்:

ततश्चाविरभूत्साक्षाच्छ्रीरमा भगवत्परा ।
रञ्जयन्ती दिशः कान्त्या विद्युत्सौदामनी यथा ॥

*ததச் சாவிர பூத் ஸாக்ஷாச் ச்ரீரமா பகவத் பரா 1*
*ரஞ்ஜயந்தீ திச: காந்த்யா வித்யுத் ஸௌதாமனீ யதா1*

மின்னல் கொடிபோல், தனது தேஹ காந்தியால் திக்குகளை எல்லாம் ஒளி மிகச் செய்துகொண்டு, ஸ்ரீமந் நாரயணனிடம் மிகுந்த ப்ரீதிகொண்ட ஸாக்ஷாத் ஸ்ரீ தேவியான லக்ஷ்மீ பாற்கடலிலிருந்து உதித்தாள் என இந்த சுலோகம் சொல்கிறது. அப்பேற்பட்ட ஸாகர ஜாதையான மஹாலக்ஷ்மியின் ப்ராண நாதன், ஸ்ரீ ராமன் என்ற உண்மையை "ஓம் கலசநீரநிதிஜாரமணாய நம:" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமக்கு தெரிவித்தார்.

பத்தாவது சரணத்தின் ஒன்பதாவது நமஸ்கரணம், "ஓம் பாபகஜந்ருஸிம்ஹவராய நம:" என்பது. தன்னை வணங்கும் பக்தர்களின் பாபங்களை அழிக்கும் ராமன் பாபங்களாகிற யானைகளுக்கு ஸிம்ஹம் போன்றவன் என இங்கு த்யாகப்ரஹ்மம் சொன்னார்.

பத்தாவது சரணத்தின் பத்தாவதும், கடைசியுமான நமஸ்கரணம், "ஓம் த்யாகராஜநுதாய நம:" என்பது, "வேத சிரோ மாத்ருஜ ஸப்தஸ்வர நாதாசல தீப"

என்று ராமனை நாதோபாஸனை மூலம் ஸேவித்துக் கொண்டவர் ஸ்ரீ த்யாகராஜர். உபநிஷத்துக்களுக்கு தாயான ஓங்காரத்திலிருந்து எழுந்த ஸப்த ஸ்வரங்கள் என்ற இன்னிசையாகிற மலை மீது ஜாஜ்வல்யமான தீபகமாக விளங்கும் ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியை, நாதோபஸனை மூலம் நமஸ்கரித்துக் கொள்ளாத நாள் ஏதும் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் வாழ்க்கையில் கிடையாது. அவனைப் பாடிப் போற்றி அடையும் ஆனந்தத்திற்கு ஸமமான ஏதும் இந்த புவியில் கிடையாது என உறுதியுடன் தனது பிலஹரி ராக கீர்த்தனமான "இந்தகன்னயானந்த மேமி, ஓ ராம ராம" என்பதில் பின்வருமாறு சொன்னார்.

आडुचु नादमुनपाडुचु येदुटरा
वेडुचु मनसुन गडियुण्डुट चालु
श्री हरि कीर्तन चे देहादि यिन्द्रिय
समूहमुलु मरचि सोहमैनदे चालु
नी जपमुलु, वेळ नी जगमुलु नीवै
राजिल्लुनैय; त्यागराजनुत चरित (इन्तकन्नानन्दमेमि)

உன்னை நினைத்து, ஆடிப் பாடி, உன் தர்சனம் கிடைக்க விரும்பி, அந்த ஸ்மரணைத்தால் புளகாங்கிதம் அடைந்து, உன்னைக் கண்டு, உன்னுடன் இரண்டறக் கலந்து, சித்த தெளிவு ஏற்பட்டு, உன்னுடைய உருவத்தில் அண்ட சரா சரங்கள் எல்லாம் அடங்கியிருக்கும் நிலையை அறிந்து கொள்வது ஒன்றே போதுமே! இந்த அனுபவத்தைவிட உயரிய ஆனந்தம் இந்த உலகில் ஏது? ஸாதுக்கள் தேடுவதும், அடைய விரும்புவதும் இந்த ஆனந்தம் ஒன்றுதானே என ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் ஸ்ரீ ராமசந்த்ரனிடம் கேட்டார். இப்பேற்பட்ட ஆனந்தத்தை அளிக்கும் ஜகதானந்தகரனை சரணா

கதனாக அடைந்த ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், மற்ற ஒரு ராமசைதன்யரான போதேந்த்ராள் அனுக்ரஹித்த பின் வரும் ச்லோக கருத்துகள் ஸாரமாகக் கொண்டாடி, நமக்கு மிகவும் மங்களகரமான நாட்டை ராக பஞ்சரத்ன கீர்த்தனத்தை அருளினார்.

नीलभ्रदेह ! निखिलेश ! जगन्निवास ! राजीवनेत्र ! रमणीयगुणाभिराम ।
श्रीदाम ! दैत्यकुलमर्दन ! रामचन्द्र ! त्वत्पादपद्ममनिशं कलयामि चित्ते ।
दशरथवरपुत्रं जानकीसत्कलत्रं दशमुखहरदक्षं पद्मपत्रायताक्षम् ।
करधृतशरचापं चारुमुक्ताकलापं रघुकुलनृवरेण्यं राममीडे शरण्यम् ॥

ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளை ப்றார்த்தித்துக் கொண்டு, இந்த நாட்டை ராக பஞ்சரத்ன கீர்த்தனை ஸம்பந்தமான கடிதத்தை ராமார்பணமாக ஸ்ரீ ராமபிரானின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கிறேன்.

சுக்ல ளு, வைகாசி மீ 19உ த்வாதசி திதி

உனதன்புள்ள தம்பி
சடகோபன்.

वदतु वदतु वाणी रामरामेति नित्यं
जपतु जपतु चित्तं राम पादारविन्दम् ।
नमतु नमतु देहं सन्ततं रामचन्द्रम्
न भवतु मम पापं जन्मजन्मान्तरेषु ॥



ஸ்ரீ

க்ஷேமம்

சுக்லஞு வைகாசி மீ 27 உ
வெள்ளிக்கிழமை, சுக்ல ஷஷ்டி
ஸ்ரீ அப்பாவின் வர்ஷாப்தீக தினம்
June 9, 1989

மிக்க அன்புடைய சௌ. பத்மாவிற்கு, உனது தம்பி சடகோபனின் அநேக நமஸ்காரங்கள். க்ஷேமம், ஸ்ரீஸத்குரு த்யாகராஜ ஸ்வாமிகளின் இரண்டாவது பஞ்சரத்னமான "துடுகுலநன்னே" என்பது பற்றி இந்த கடிதத்தில் எழுதுகிறேன்.

தனது இரண்டாவது பஞ்சரத்னத்திற்கு, பதினைந்தாவது மேளகர்த்தாவான மாயாமாளவகௌளையில் ஜனித்த கௌளை ராகத்தை ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம் தேர்ந்தெடுத்தார். "ஸரிம பநிஸ - ஸ்நிபமரிகமரிஸ" என்ற ஆரோஹண - அவரோஹண முறை கொண்ட ஔடவ வக்ர ஷாடவ ராகம் கௌளை.

உபாங்கராகமான கௌளை, எல்லா காலங்களிலும், ஸ்ரீ ராமானுக்ரஹம் பெற பாடுவதற்கு உபயோகப்படும் ராகம். இந்த ராகத்தின் ரிஷபமும், நிஷாதமும், லாவண்ய ராமனின் திவ்ய ஸௌந்தர்யத்தைக் கொண்டாட தனி அழகு கொண்டு, "கௌள ரிஷபம், கௌள நிஷாதம்" எனக் கூறப்படும் கீர்த்தி கொண்டவை. போன கடிதத்தில் "The Low (Flat) Rishabham of Gaula falls almost back into the tonic Sa" என்று தெரிவித்திருக்கிறேன். "ரகு மதநு" என்ற ஸ்வர குறிப்பு கொண்ட கௌளை, D - Flat, E, F, A - Flat, B ஆகிய Scale களை உடையது.

ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், கௌளை ராகத்தில் "துடுகு கல" என்ற ஒரு கீர்த்தனத்தை தவிர, வேறு ஒன்றும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. அவருடைய ஸம காலத்தவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், "ஸ்ரீ த்யாகராஜ பாலய ஆசுமாம், மஹிஷாஸுரமர்த்தினி மாம்பாஹி, நீலோத்பாலாம்பிகாயா: பரம் நஹிரே ரே, ஸ்ரீ மஹாகணபதிரவது மாம்" என்ற நான்கு க்ருதிகளை கௌளி ராகத்தில் அமைத்திருக்கிறார்.

## ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கௌளை பஞ்சரத்னம் செய்தபோது அடைந்திருந்த மனோநிலை

ஸ்ரீ ராம சைதன்யரான த்யாகப்ரஹ்மம், பக்தி மார்க்கமாக தனது உபாஸனா மூர்த்தியை ஆராதிக்கும் போது, பல கீர்த்தனங்கள் மூலம் தனது ஆனந்தத்தையோ, அவன் பிரிவால் ஏற்பட்ட சோகத்தையோ, அவனுடைய தர்சனம் கிடைக்க வேணும் என்ற ஆவலையோ வெளிப்படுத்தியிருக்கிறார். அந்தந்த மனோநிலைக்கு தகுந்த ராகங்களையும், ஸாஹித்ய வாக்யங்களையும் உபயோகப்படுத்தியிருக்கிறார். அவர் கௌளை பஞ்சரத்னம் செய்த ஸமயம் இருந்த மனோநிலைக்கு "ஆத்ம கர்ஹணம்/நைச்யானுஸந்தானம்" என்று பெயர். தன்னுடைய குணஹீனங்களை ஸ்ரீ ராமனிடம் தெரிவித்து, தான் மஹா அபராதி எனத் தன்னை நொந்துகொள்ளும் மனோநிலைக்கு ஆத்ம கர்ஹணம் (Self Depreciation or Self - condemnation) என்பது பெயர். ஆத்ம கர்ஹணத்துடன் சேர்ந்தது நைச்யா நுஸந்தானம் (Recounting of one's Shortcomings) என்பது. தன் குறைகளை பகவானிடம் எடுத்துச்சொல்லி' க்ஷமாபணம் வேண்டி, அவனிடம் கருணை பிச்சை கேட்பதற்கு நைச்யானுஸந்தானம் என்று பெயர். இந்த மனோநிலையில் செய்யப்பட்டிருக்கும் சிலக்ருதிகளின்

உதாரணங்களாக "துடுக்குல, எடுல ப்ரோதுவோ தெலிய (சக்ரவாகம்) ப்ராலப்த (ஸ்வராவளி) தெலிஸே ஜேயு (கோகிலத்வனி), நோரேமி ஸ்ரீ (வராளி)" என்ற க்ருதிகளை Dr. V. ராகவன் குறிப்பிட்டுள்ளார். இந்த கீர்த்தனங்கள் மூலம், மிகுந்த தாழ்வுடன், தன் சிறுமையை ஸ்ரீ ராமசந்த்ரனுக்கு தெரிவித்து, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம்தான் ஆகிஞ்சயன் என இவரிடம் தன்னை பல துர் குணங்கள் நிறைந்தவன், மஹா அபராதி என்று இந்த ஆத்மகர்ஹண/நைச்யானுஸந்தான கீர்த்தனங்களில் விவரித்துக்கொள்வது, பாபங்களை எல்லையில்லாது செய்யும் நம் பொருட்டே. அவரோ மஹா புண்யசாலி, நாம் புரிந்து கொள்வதற்காக, பக்தனின் மனோநிலைகள் (ஸஞ்சாரி பாவங்கள் - Moods) பற்றிப் பல கீர்த்தனங்களை அருளி, நமக்கு வழிகாட்டியிருக்கிறார்.

Late Dr. V. Raghavan, தனது "Spiritual Heritage of Sri Thyagaraja" என்ற உயரிய நூலில், ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் என்ற பக்தரின் மனோநிலைகளையும், அந்த மனோநிலைகள் நிறம்பியிருந்த சமயம் செய்யப்பட்ட கீர்த்தனைகளையும் பின்வரும் பதின்மூன்று வகைகளாக பிரித்துவிளக்கியிருக்கிறார்.

(1) ஔத்ஸுக்யம்:-

என்ற ஸஞ்சாரி பாவம்: இந்த மனோநிலையில், ஸ்ரீ ராமனைக் காணவும், அவனருகிலேயே இருக்கவும், அவனைப் பற்றி பாடவும், அவனுடன் பேசவும், அவனுக்கு ஸேவைசெய்யவும் துடித்தார்.

(2) நிர்வேதம்:-

அவனை தர்சிப்பது என்றபலன் நிறைவேறுவதில், காலதாமதம் ஏற்படுவது கண்டு, தன் மனோ பலத்தை இழந்து சோகத்தில் மூழ்கினார்.

(3) ஆத்ம கர்ஹணம் / நைச்யானுஸந்தானம்:-

நிர்வேதத்திற்கு அடுத்த மனோநிலையில், பகவானே ! உன் பெருமை என்ன ? என் சிறுமை என்ன ? என்பதான நொந்து கொள்ளும் ஸஞ்சாரி பாவத்தில் ஈடுபட்டார்.

(4) தைன்யோக்தி:-

இந்த மனோநிலையால் பீடிக்கப்பட்டபோது, ஐய்யனே ! என்னைக் கைவிட்டுவிடாதே என்று தீனமாக கதறினார்.

(5) ரோஷோக்தி:-

இவ்வளவு தூரம் கதறி, துக்கப்படும் தன்னிடம் இரங்காததற்காக, பகவானிடம் கோபித்து, என் முறையிடலை ஏன் கேட்கமாட்டேன் என்கிறாய் என்று உரிமையுடன் கேட்கும் மனோநிலைக்கு ரோஷோக்தி என்று பெயர்.

(7) ஶ்ரத்தா, விஶ்வாஸம்:-

பகவான் தன்னைவிடப் பெரியவன், அதனால் அவன், தன் கோபம், புகார்களைத்தள்ளி, தன்னை நிச்சயமாக காப்பாற்றப்போகிறான் என்ற நம்பிக்கை ஏற்படும் மனோநிலைக்கு ஶ்ரத்தா/விஶ்வாஸம் எனப்பெயர்.

(8) நர்மஸ்துதி, நர்மப்ரார்த்தனை: -

மறுபடியும், சற்று ஸந்தேஹம் ஏற்பட்டு, ஏனய்யா உன்னை நம்பியுள்ள என்னை காப்பாற்றப்போகிறீரா, இல்லையா எனக்கிண்டல் கலந்த உரிமையுடன் கேட்கும் நிலைக்கு நர்ம ஸ்துதி, நர்ம பிரார்த்தனை எனப் பெயர்.

(9) ஸ்வயோக்யதாகதனம்: -

(Claims for qualification for Rescue) தன்னுடைய அனுஷ்டானங்கள், ஆஸ்திக்யம், தளராத பக்தி எல்லாவற்றையும் எடுத்துக்கூறி, தான் ஸ்ரீராமனால் ரக்ஷிக்க தகுந்தவன் என்று விளக்கும் மனோநிலை இது.

(10) பக்த சோதனை: -

முழு ரக்ஷணமும் கிடைக்கும் முன் பகவான், பக்தனை சற்றே சோதித்து வருந்தவைக்கிறார். இந்த சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்போதும், தன் விச்வாஸத்தை இழக்காமல், இதுவும் உன் திருவிளையாடல் என்ற பக்குவமான மனோநிலையை பக்தன் அடைகிறான்.

(11) மானஸ ஸம்போதனம்: -

(Exhortation to his mind): சோதனைக்கு உட்பட்ட பக்தன், என் ராமன் இதுமாதிரி செய்யமாட்டான், நிச்சயமாக அருள்புரிவான் எனத்தன் மனதிடம் சொல்லி, நீ தவறாத வழிகளில் செல்லாதே என்று ஸம்பாஷிக்கும் நிலைக்கு மானஸ ஸம்போதனம் என்று பெயர்.

(12) மங்களாசாஸனம்: -

தன் பக்தி மேலீட்டால், ஸ்ரீ ராமனுக்கு பல்லாண்டு கூறி, அவனுடைய தர்சன பாக்யம் பெற்று, ஆனந்தத்தில் ஈடுபடும் மனோநிலையாவது, இது.

(13) க்ருதக்ஞதை:-

(Expression of Gratitude for his blessings) ஸ்ரீ ராமனின் அனுக்ரஹம் கிடைத்த ஸந்தோஷத்தில், தன்னை அந்த அனுக்ரஹம் கிட்ட அருகதையுள்ளவனாகச் செய்ததற்காக அவனுக்கு நன்றி தெரிவிக்கும் பரம பாகவதனின் மனோநிலை இது.

"துடுக்குகல" என்ற கௌளை ராக கீர்த்தனம், மேற்காணும் 13 பக்த ஸஞ்சாரி பாவங்களில் மூன்றாவதான "ஆத்ம கர்ஹணம், நைச்யானுஸந்தானம்" என்ற மனோநிலையில் இருந்த சமயம், ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தால் செய்யப்பட்ட கீர்த்தனம். இந்த மனோநிலை பற்றியும், இந்த கீர்த்தனத்தின் மூலம் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமக்கு காட்டிக்கொடுத்த உண்மைகள் பற்றியும், பேராசிரியர் ஸ்ரீ ஸாம்பமூர்த்தி பின் வருமாறு கூறினார்: ("The Sahitya of துடுகு கல reflects the pathetic state of mind and the penitent mood the composer had at that time. The Sahitya is Confessional in its tone; but the fact is Thyagaraja never Committed the sins enumerated therein. Indirectly, it is provided as a lesson to others to desist from committing such sins". பரம காருணிகரான ஸ்ரீ த்யாமப்ரஹ்ம்மம், தனது சூழ்நிலையில் பரவியிருந்த இழிவுகளைத் தமதாக பாவித்து, துடுகுகல, इन्दुका ई तनुवु बेंचिन (முகாரி), எடுல ப்ரோதுவோ தெலிய (சக்ரவாகம்), எந்நாள்ளு திரிகேதி (மாளவ ஸ்ரீ), எடுல காபாடுதுவோ ? ஸ்ரீ ராமசந்த்ரா (ஆஹிரி), நேநந்து வேதுகுதுரா. ஹரி, (ஹரிகாம்போஜி) சிக்கு மாவி நா வலே தர - நேவரு திருக ஜாலரய்ய (கேதார கௌளை) निम्ननवलसिनदेमि ? राम नन्ननवलेनुगाक (கல்யாணி) நோ ரேமி ? ஸ்ரீராம (வராளி), கட்டிகானு நனு சேயி பட்டே தேன்னடி கோ (பேகட), பாஹி கல்யாண சுந்தர ராம மாம் (புன்னாக வராளி), நீ சித்தமு நிச்சலமு

நிர்மலமணி நின்னே நம்மினானு (தன்யாஸி) என்ற பல ஆத்மகர்ஹண கீர்த்தனங்களை நமக்கு அருளினார்.

ஆத்மகர்ஹண கீர்த்தனங்களை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் செய்துள்ள ஸம்ப்ரதாயம், பல ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஆசார்ய புருஷர்கள் வழியில் வந்த பழமையான ஸம்பரதாயம், ·பக்தி மார்க்கத்தை கடைபிடித்து, பகவானுடைய அனுக்ரஹம் கிடைப்பதில் காலதாமதம் கண்ட பல ஆசார்யர்கள் "துடுகு கல" என்ற கீர்த்தனத்தில் காணப்படும் கருத்துக்கள் கொண்ட ஸ்லோகங்கள், பாசுரங்கள், பதிகங்கள் மூலம் தங்களை நொந்து கொண்டது உண்டு. உதாரணமாக, ஆளவந்தார் என்ற வைஷ்ணவ குரு, தனது ஸ்தோத்ர ரத்ன ஸ்லோகம் ஒன்றில் தன்னை நொந்து கொண்டு, பின் வருமாறு கதறுகிறார்.

"ந நிந்தி தம் கர்ம ததஸ்தி லோகே
ஸஹஸ்ரசோ யந்நமயாவ்தாயி 1
ஸோ ஹம் விபாகாவஸரே முகுந்த
க்ரந்தாமி ஸம்ப்ரத்யகதிஸ் தவாக்ரே" 11

கருத்து:-

ஹே, முகுந்தா! பல்லாயிரம் தடவை என்னால் செய்யப்படாததும், சாஸ்த்ரங்களாலும், நல்லோர்களாலும் நிந்திக்கப்படாததுமான பாப கர்மாக்கள் இந்த உலகில் இல்லை. நான் திருப்பித் திருப்பி செய்யாத தீவினைகள் ஏதும் இருப்பதாக தெரியவில்லை. அந்த பாபகர்மாக்கள் பழுத்து, பலன் கொடுக்கும் இத் தருணத்தில், வேறு கதியற்றவனாய், என்னை யார் காப்பாற்றப் போகிறார்கள் என்று உன் முன் நின்று கதறுகிறேன்.

ஸ்ரீ வேதாந்த தேசிகன் என்ற மற்ற ஒரு வைஷ்ணவ குருவும், தனது ஆத்மகர்ஹணை மனோ நிலையை பின் வருமாறு வெளியிட்டார்.

"जानन्नादि विहितानऽपराधवर्गान्
स्वामिन् भयात् किमपि वक्तुमहं न शक्तः।"

ஜானன் அனாதி விஹிதான் அபராத வர்க்கான்
ஸ்வாமின் பயாத் கிமபி வக்தும் அஹம் ந சக்த: 1

கருத்து:-

ஸர்வேஸ்வரா! அனாதிகாலமாக செய்யப்பட்ட பாபக் கூட்டங்களை சுமந்து நிற்கும் நான், அதனால் ஏற்படும் அச்சத்தால் உன் பெருமையைப்பற்றி எதையும் சொல்லவல்லேன்.

தன்னுடைய விபரீதமான நிலையைப்பற்றி ஸ்ரீ வேதாந்த தேசிகன் மேலும் பின் வருமாறு விவரித்தார்:

"संतन्यमानमपारधगणं विचिन्त्य,
त्रस्यामि हन्त भवतीं च विभावयामि"

என்னாலே தொடர்ந்து செய்யப்படுகின்ற பாபக்கூட்டங்களை நினைத்து என்ன ஆகப்போகிறதோ என்று நான் அஞ்சுகிறேன், ஆச்சரியம்! அதே ஸமயத்தில் உன்னையும் நான் த்யானித்து வருகிறேன். இந்த என்னுடைய நிலை "आशीविषग्रहणकेलिनिभाम्" என்றபடி இருக்கிறது. அதாவது, விஷப்பாம்பை கையில் பிடித்து விளையாடுதல் போன்ற நிலையாய் இருக்கிறது; இந்த பாபக் கூட்டங்களின் குவியலால் நான் அபராத சக்ரவர்த்தி என்ற பிருது பெற்றுள்ளேன். மிகுந்த ஆபத்துக்களால் சூழப்பட்ட என்னை, தாயார், பால் குடிக்கும் தன் சிசுவை கையால் எடுத்து ஸ்தன்ய பானம் செய்வித்து காப்பாற்றுவதுபோல் நீ காப்பாற்றவேண்டும் என பின்வருமாறு வேண்டிக்கொண்டார்:

अच्युत विषयाक्रान्तं भवार्णवावर्तभ्रमिनिमज्जन्तम्।
जननी स्तनंधयमिव मामुद्धृत्य सेवस्व स्वयं पथ्यम्॥

அச்யுத விஷயாக்ராந்தம்
பவார்ணவாவர்த்த ப்ரமி நிமஜ்ஜந்தம் 1
ஜனனீ ஸ்தனந்தயமிவ மாம்
உத்த்ருத்ய ஸேவஸ்வ பத்யம் 11

மேற்காணும் ச்லோகத்தில், தனக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை, ஸம்ஸாரம் ஆகிய கடலில், உலக சுகங்கள் என்ற சுழலில் மாட்டிக்கொண்டு மூழ்க இருக்கும் நிலையாக ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் தெரிவித்தார்.

உலக சுகங்களில் ஆசை கொண்டு, பகவானை மறந்த தன்னை, "अधर्मप्रवणानामग्रस्कन्धप्रवृत्तम् अघटमानविप्रतीसारम् माम्" என ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அறிமுகப்படுத்திக்கொண்டார். துர் விஷயங்களில் ஆசைப்பட்டு, மானிட ஜன்மம் கிடைப்பது அரிது என்பதை மறந்து, பகவானின் ஸேவைகளில் தான் காலத்தை செலவழிக்காது இருந்ததற்காக, தன்னை அதர்மத்தில் ஈடுபடுபவர்களின் வரிசையில் முன் நிற்பவன் என்றும், ஜீவராசிகளிடம் அன்பும், பரிவும் உள்ளாதவனாகத் தன்னை ஸ்ரீ வேதாந்த தேசிகன் என்ற பரம குரு விவரித்துக் கொண்டார். இந்த மாதிரி பகவானை ஸர்வ கல்யாண குணங்கள் நிறைந்த பரமனாகவும், தன்னை அதம குணங்கள் நிறைந்த நீசனாகவும் அறிந்து சொல்லும் பக்தனின் மனோநிலைக்கு ஆத்மகர்ஹணம் எனப் பெயர். "துடுகு கல" என்ற ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் கௌளை ராக கீர்த்தனை ஆத்மகர்ஹண/ நைச்யானு ஸந்தான ஸஞ்சாரி பாவத்தை தெளிவாக வெளிப்படுத்தி,

அவருடைய மன வ்யாகூலத்தை உருக்கமாக விளக்குகிறது.

<u>கௌளை ராக பஞ்சரத்ன கீர்த்தனத்தின் பல்லவி:-</u>

"दुडुकु गल नन्ने दोर कोडुकु ब्रोचुरा येंतो"

"துடுகு கல நன்னே தொர
கொதுகு ப்ரோசுரா யெந்தோ"

என்பது பல்லவி வாக்யங்களாகும், கௌளையின் கீழ் ரிஷபத்துடன், ("ரீ ரீ ம பா" என்ற ஸ்வரங்களுடன்) பல்லவி ஆரம்பமாகி, ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் கலங்கிய மன நிலையை குறிப்பிடுகிறது. எத்தனையோ துர்குணங்கள் நிறைந்து, "அபராத சக்ரவர்த்தியாக" விளங்கும் என்னை எந்த சக்ரவர்த்தி திருமகன் காப்பாற்றுவான் என்று தீனமாக ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் தன் பல்லவி மூலம் கேட்டார். ஹே ராமா! தசரத சக்ரவர்த்தியின் திருமகனாய், தாசரதியாய் விளங்கும் நீதான் காப்பாற்றவேண்டும். உன்னை விட்டால் கதியில்லை. அதி பாதக மஹா பாதகாதிகள் செய்து, ஸம்ஸாரக்கடலில் முழுதும் மூழ்கி, தலை எடுக்க முடியாது தவிக்கும் என்னை காப்பாற்றும் சக்தி வேறு எந்த தெய்வத்திற்கும் கிடையாது என ஜாடையாக தெரிவித்தார்.

"தொர கொடுகு" என்பது துரைமகன் ஆகிய ஸ்ரீராமசந்த்ரன் என்ற கருணைக் கடலான புருஷோத்தமனை உள் வைத்து கூறப்பட்ட நாமதேயம். ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் தீனமான கதறல், குலசேகரர் என்ற மற்ற ஒரு பரம பக்தரின் பின் வரும் பரிதாபம் கலந்த வேண்டுகோளை ஞாபகப்படுத்துகிறது:

"ஸத்வம் ப்ரஸீத பகவன் குருமய்யநாதே
விஷ்ணோ ! க்ருபாம் பரம காருணிக: கில த்வம் 1
ஸம்ஸாரஸாகர நிமக்னமனந்த ! தீனம்
உத்தர்த்துமர்ஹஸி ஹரே ! புருஷோத்தமோ ஸி 11
- முகுந்தமாலை ச்லோகம்"

ஹே, பகவான் ! விஷ்ணோ ! ஸத்வம் அநாதே மயி க்ருபாம் குரு, ப்ரஸீத ! ஹே, ஹரே; அனந்த த்வம் பரம காருணிக: கில ? ஸம்ஸார நிமக்னம் தீனம் உத்தர்த்தும் அர்ஹஸி. புருஷோத்தம: அஸி" என்று குலசேகர ஆழ்வார் ஷாட்குண்ய பரிபூர்ணனான பகவானிடம் ப்ரார்த்தித்துக்கொண்டார்.

நீயோ விஷ்ணு என்ற பெயர் அறிவிக்கும் ப்ரகாரம் எங்கும் வ்யாபித்துள்ள வேதபுருஷன். வேறு கதியும் இல்லாது, அனாதையாக நிற்கும் என்மீது குளிர்ந்த முகம் கொண்டு காத்தருள வேணும். ஸம்ஸாரக் கடலில் மூழ்கி, கரையேறும் வழி தெரியாது முழிக்கும் தீனனான என்னை பரம கருணாமூர்த்தியான நீ கை கொடுத்த, ரக்ஷிக்க வேணும். தேசம், காலம், வஸ்துநிர்ணயம் என்ற மூன்று விதமான பாகுபாடுகளுக்கும் அப்பாற்பட்டு, அதனால் ஹரி என்ற பெயர் கொண்ட நீ, புருஷோத்தமன். அடியார்கள் துயரை நீக்கும் நீ என் மீது அருள்புரியவேணும் என்று குலசேகர ஆழ்வார் மேற்காணும் பாசுரத்தில் ப்ரார்த்தித்துக் கொள்வது, ஆத்மகர்ஹண வகைப்பட்ட பிரார்த்தனை.

"நண்ணாதார் முறுவலிப்ப, நல்லுற்றார் கரைந் தேங்க, எண்ணாராத்துயர் விளக்கு மிவை யென்ன உலகியற்கை" என்று ஸம்ஸார தாபங்களை, ஒரு ஆழ்வார் விவரித்தார். ஸம்ஸார தாபங்கள் உண்டு பண்ணும் துர்குணங்களால் பீடிக்கப்பட்ட தன்னை எந்த துரை மகன் காப்பாற்றுவான் என்று ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம்

பல்லவியில் கேட்டு, ஹே, ராமா, நீதான் ரக்ஷிக்கவேணும் என்று ஜாடையாக (hinted) சொன்னார்:

<u>கௌளை பஞ்சரத்னத்தின் அனுபல்லவி வாக்யங்கள்:-</u>

"कट्ट दुर्विषयाकृष्टुडै-गड्िय गड्ियकु निण्डारु (दुडुकु गल) "

"கடு துர்விஷயாக்ருஷ்டை -
கடிய கடியகு நிண்டாரு (துடுகு கல)"

என்பவை அனுபல்லவி வாக்கியங்கள். அனுபல்லவியும், ரிரிரீ; என்ற ரிஷப ப்ரதான்ய எடுப்புடன் ஆரம்பமாகிறது.

அனுபல்லவியில், பல துர் விஷயங்களால் ஆகர்ஷிக்கப்பட்டு, அவைகளுக்கு அடிமையாய் நிற்கும் தன் அவல நிலையை விளக்கினார், இழிவான விஷயங்களில், ஒவ்வொரு நிமிஷமும் ஈடுபட்டு, கஷ்டப்படும் தன்னை எந்த துரை மகன் காப்பாற்றுவான். ஹே, ராமா! சக்ரவர்த்தி திருமகனாகவும், ஸர்வபௌமனாயுமுள்ள உன் ஒருவனால் தான் என்னைக் காப்பாற்ற முடியும் என மறைமுகமாக குறிப்பிட்டார். ஹே, ராமா! சக்ரவர்த்தி திருமகனாகவும், ஸர்வபௌமனாயுமுள்ள உன் ஒருவனால் தான் என்னைக் காப்பாற்ற முடியும் என மறைமுகமாக குறிப்பிட்டார். ஹே, ராமா! நீ என்னிடத்தில் இறங்கி, காப்பாற்றவேணும் என்று நினைத்தால், எத்தனையோ துர் விஷயங்களில் ஈடுபட்டிருந்தாலும்; நீ என்னைக் காப்பாற்றிவிடுவாய் என்று ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் சொல்வது, ஸ்ரீ ஆளவந்தாரின் ஸ்தோத்ர ச்லோகம் ஒன்றை ஞாபகப்படுத்துகிறது.

"ரகுவர யதபூஸ்த்வம் தாத்ருசோ வாயஸஸ்ய
ப்ரணத இதி தயாளுர் யச்ச சைத்யஸ்ய க்ருஷ்ண 1
ப்ரதிபவ மபராத்துர்முக்த ஸாயுஜ்யதோபூ:
வத கிம பத மாகஸ் தஸ்ய தே ஸ்தி க்ஷமாயா: 11"

ஹே, ரகுவர! த்வம் தாத்ருச: வாயஸ்ய ப்ரணத: இத் தயாளு: யத் அபூ: முக்த! க்ருஷ்ண, ப்ரதிபவம் அபராத்து: சைத்யஸ்ய ஸாயுஜ்யத: அபூச்சயத், தஸ்ய தே க்ஷமாயா: அபதம் ஆக: கிம் அஸ்தி வத" என ராமனிடமும், க்ருஷ்ணனிடமும் உரிமையுடன் கேட்டார்.

ரகு குலோத்பவனே! உன்னை நமஸ்கரித்துக் கொண்டது என்ற வ்யாஜத்தாலே, பிராட்டியிடம் மஹா அபராதம் செய்த காகாஸுரனுடைய விஷயத்திலே, மனதிரங்கி தயை புரிந்து நீ காப்பாற்றினாயே! நிர்தோஷ ஸ்வரூபியான க்ருஷ்ணா!, ஒவ்வொரு ஜன்மத்திலும், உன்னை நிந்தித்து வாழ்நாளை கடத்திய சிசுபாலனுக்கு, உன் கருணை மேலீட்டால், அபராதங்களை க்ஷமித்து ஸாயுஜ்யம் அளித்தாயே! அப்படியெல்லாம் அருள்புரிந்த உன்னுடைய பொறுமைக்கு உட்படாத அபராதம் என்ன இருக்கிறது? என்னுடைய மஹா அபராதங்களை மன்னித்து எனக்கு அருள் புரியக்கூடியவன் நீ ஒருவன் தான் என்று ஆளவந்தாரும் மேற்காணும் ச்லோகம் மூலம் சொன்னார்.

கௌளை பஞ்சரத்னத்தின் சரண வாக்யங்கள்:-

இந்த கீர்த்தனம், நாட்டை பஞ்சரத்னத்தைப்போல் 10 சரணங்கள் கொண்டுள்ளது. இந்த சரணங்களில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு விசேஷமான பரந்யாஸம் (self - surrender) அல்லது சரணாகதி என்ற தத்வத்தை கடைபிடித்து, ஸ்ரீராமனின் திருவடிகளில்

தன்னை காக்கும் பொறுப்பை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் விட்டு விடுகிறார். சரணாகதிக்கு ப்ரபத்தி அல்லது ஆத்ம நிக்ஷேபம் என்ற பெயர்களும் உண்டு. ப்ரபத்தி என்ற சொல்லிற்கு பொதுவான அர்த்தம், அடைதல் என்பது. அடைதல் என்பதால், ஒரு முடிவான தீர்மானத்தை அடைதல் என்பது அர்த்தம். பல துர் குணங்களுக்கு இருப்பிடமாக இருக்கும் நான் கடைத்தேற, உன்னைத்தவிர மற்ற ஒரு உபாயமும் இல்லாதவனாக இருப்பதை புரிந்து கொண்டேன். அதனால் நீயே உபாயம் என புரிந்து கொண்டு உன்னை அடைந்து, அடைதல் என்ற கார்யத்தை செய்து முடித்துவிட்டேன். எனக்கு நேர்ந்திருக்கும் துர்தசைகளிலிருந்து காப்பாற்றக்கூடிய பரமகாருணிகன் நீ ஒருவன் தான் என புரிந்து கொண்டு, உன்னிடம் சரணாகதி பண்ணியுள்ளேன். "தமேவ சரணம் கச்ச ஸர்வ பாவேன (भावेन) பாரத" என்ற உபதேசத்தை கடைபிடித்து, உன்னிடம் சரணாகதி அடைந்துள்ளேன். நான் செய்திருக்கும் பாபங்களும், அந்த பாபங்களால் விவரிக்கப்படும் என் சரித்ரமும் கர்ண கடோரமானது, ஹே, ராமய்ய, நீதான் என்னை காப்பாற்றக்கூடிய சக்தி உள்ளவன். நீதான் அந்த துரை மகன் என ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் சரணாகதி செய்தார்.

சரணாகதி என்ற சொல் சரணம், ஆகதி என்ற இரண்டு பதங்களாக பிரிகிறது என ஸ்ரீ நடாதூர் அம்மாள் என்ற வைஷ்ணவ குரு நமக்கு விளக்கியிருக்கிறார். சரணம் என்றால் உபாயம் என்பது அர்த்தம்; ஆகதி என்றால் வருகை என்பது அர்த்தம். சரணம், ஆகதி ஆகிய இரண்டு பதங்களையும் சேர்த்து சரணாகதி என்று கூறும்போது, பகவானே, நீயே என்னைக் காக்கும் உபாயம் என்ற முடிவுக்கு வருகையை விளக்குகிறது. ஜீவன், நீயே எனக்கு உபாயம், மற்ற

உபாயங்கள் பலன் அளிக்காது என்ற புத்தியடைதலை சரணாகதி என்ற தத்வம் குறிப்பிடுகிறது. தன்னை ரக்ஷிக்கும் பொறுப்பையும், தன்னை ரக்ஷிப்பதால் ஏற்படும் பலனையும், ஜீவன் சரணாகதி சாஸ்த்ர அனுஷ்டான மூலம் பரமாத்மாவிடமே விட்டு விட்டு, கவலை அழிந்தாகிறது. இதனால்தான் ஆத்ம நிக்ஷேபம் என்ற பெயரும் சரணாகதிக்கு ஏற்பட்டது.

ஆத்ம நிக்ஷேபம் அல்லது சரணாகதி என்ற செயலுக்கு ஐந்து அங்கங்கள் உண்டு. இவையாவன:-

(1) ஆனுகூல்ய ஸங்கல்பம்.

(2) ப்ராதிகூல்ய வர்ஜனம்.

(3) கார்ப்பண்யம்.

(4) மஹா விச்வாஸம்.

(5) கோப்த்ருவ வரணம்.

ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் செய்த சரணாகதியை புரிந்து கொள்ள, சரணாகதி அனுஷ்டானத்தின் ஐந்து அங்கங்களைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேணும். ஆநுகூல்ய ஸங்கல்பம் என்பது பகவானின் திருவுள்ளத்திற்கு பிடித்தமான விஷயங்களை மாத்திரம் செய்வேன் என்று ஸங்கல்பம் செய்து கொள்வதாகும். ப்ராதிகூல்ய வர்ஜனம் என்பது, பகவானின் திருவுள்ளத் திற்கு மாறான செயல்களைச் செய்வதில்லை என்ற உறுதி கொள்வதாகும். கார்ப்பண்யம் என்பது, தன்னிடம் வேறு உபாயம் ஏதும் செய்ய சக்தியில்லாமையை நினைந்து, கர்வங்கள் அழிந்து, பகவானே, உனது கருணைதான் உபாயம் எனக் கெஞ்சுதலாகும். மஹா விஸ்வாஸம் என்பது, முக்தி என்ற பலன் பெறுவதில் ஐய்யம் ஒழிந்து, சரணாகதி நிச்சயமாய் பலனைத்தரும் என்ற தளரா நம்பிக்கை பெறுவதாகும். கோப்த்ருவ வரணம் என்பது,

பகவானையே காக்கும் உபாயமாக வரித்து, தன்னை ரக்ஷிக்கவேண்டுமென ப்ரார்த்தித்தலாகும். இந்த ஐந்து அங்கங்கள் கொண்ட சரணாகதி மூலம், எல்லையில்லா சக்தியுடைய பரந்தாமனிடன் தன் ஆத்மரக்ஷணப் பொறுப்பை ஸமர்ப்பித்து கவலையற்று, ப்ரபன்னனாக ஜீவன் வாழ்நாளை கடத்தி ஜீவன் முக்தனாகி விடுகிறான். ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், தனது கௌளைராக பஞ்சரத்ன சரணங்களில், கார்ப்பண்யம், கோபத்ருவ வரணம் என்ற சரணாகதியின் இரண்டு அங்கங்களை மனதில் வைத்து ஸ்ரீ வேதாந்த தேசிகன் பின்வரும் ச்லோகத்தில் வெளிப்படுத்திய கருத்துக்களுக்கு சமமான கருத்துக்களை ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியிடம் விண்ணப்பித்துக்கொண்டார்:

कर्तव्यमित्यनुकलं कलयाम्यकृत्यं
स्वामिन्नकृत्यमिति कृत्यमपि त्यजामि।
अन्यद् व्यतिक्रमणजातमनन्तमर्थ-
स्थाने दया भवतु ते मयि सार्वभौमी॥

கர்த்தவ்யமித் யனுகலம் கலயாம்யக்ருத்யம்
ஸ்வாமின் அக்ருத்யமிதி க்ருத்யமபி த்யஜாமி ।
அன்யத் வ்யதிக்ரமண ஜாதமனந்தமர்த்த -
ஸ்த்தானே தயா பவது தே மயி ஸார்வ பௌமீ ॥

மேற்காணும் ச்லோக மூலம் ஸ்ரீ தேசிகன் பகவானிடம் செய்து கொள்ளும் வேண்டுகோள் பின்வருமாறு:

ஸ்வாமி! செய்யத்தகாத செயல்களை எல்லாம் செய்யவேண்டியது என்று நினைத்து, ஒவ்வொரு க்ஷணமும் அவைகளை ஸந்தோஷத்துடன் செய்து வருகிறேன். செய்யவேண்டிய கார்யங்களையெல்லாம், செய்யத்தகாதவை என்று அனுமானித்து, விட்டு விடுகிறேன். வேதங்களும், சாஸ்த்ரங்களும்,

அனுமதிக்காத கார்யங்களை அடிக்கடி செய்து, எல்லையற்ற பாபக்கூட்டங்களைச்சேர்த்துக்கொண்டு நிற்கிறேன். இந்த துர்தசையில் நான் மாட்டிக்கொண்டு, கடைத்தேறும் வழி தெரியாது கலங்கும் சமயத்தில் சக்ரவர்த்தியான உன் கருணை, என் விஷயத்தில் பலன் அளிக்கும் உயரிய உபாய ஸ்தானத்தில் இருக்கவேண்டும்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் காண்பித்துக் கொடுக்கும் சரணாகதி தர்மத்தை கடைப்பிடித்து, ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம், ஒரு முறை சரணாகதி செய்தவர்களை தவறாது காப்பேன். (सकृत्प्रणतरक्षणप्रथितसंविदः संविदः) என்று உலகறிய ஸேதுக்கரையில் ப்ரதிக்ஞை செய்த வீரராகவனிடம் ப்ரபத்தி செய்தார்.

ஒரு முறை சரணம் என்று அடைந்த சேதனக் கூட்டத்தை ரக்ஷிப்பதையே முக்ய வ்ரதமாகக் கொண்ட ராமா ! நான் "அதர்க்கித ஹித, அஹித க்ரம விசேஷம்" என்ற முறையில், நன்மை, தீமைகளின் விசேஷப் பலன்களை சிந்திக்காது பல கர்மாக்களை தொடங்கி, பாபமூட்டையை கட்டிக்கொண்டிருக்கிறேன். என்னை விபரீத கார்யங்கள் செய்வதிலிருந்து விடுபட்ட புத்தியுடையவனாக (शमितप्रतिकूलवृत्ति) செய். உன்னுடைய கைங்கர்யம் செய்வதினால் அடையப்பட்ட முக்கரணங்களின் (மனம், வாக்கு, உடல்) ஒற்றுமை (कैङ्कर्यलब्धकरण त्रयसामरस्यम्) உடையவனாகச் செய். உன்னையன்றி வேறு ஒருவனையும் பார்க்காதவனாக (त्वदन्यविमुखं) செய் என ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் பிரார்த்தித்துக் கொண்டார்.

ஹே ராமச்சந்த்ரா; நீயோ சரணமடைந்தவர் பால் அன்பு கொண்டவன். நீ நினைத்தால் செய்யக்கூடாதது ஏதும் இல்லை. எல்லையற்ற லக்ஷ, 'சதகோடிக்கணக்கான பாப கூட்டங்களை ஒரே க்ஷணத்தில் அழிக்கும் சக்தி

உடையவன். 'ब्रह्माण्डलक्षशतकोटि गणानन्तान् एकक्षणे विपरिवर्त्य विलज्जमानान्' என்றபடி எண்ணமுடியாத கோடிக்கணக் கான பாபங்களை தத்க்ஷணமே அழிக்கும் ராமச்சந்த்ர ப்ரபோ! என் பாபக்கூட்டத்தை அழிக்கும் துரைமகனாக நீ இருக்கவேணும் என்று கௌளை ராக கீர்த்தனத்தின் பத்து சரணங்கள் மூலம் ப்ரார்த்தித்துக் கொண்டார். இனி கௌளை பஞ்சரத்ன சரணங்களின் அர்த்த விசேஷங்களை, ஒன்று ஒன்றாக ஸேவித்துக்கொள்வோம்.

<u>முதல் சரண வாக்கியங்கள்:-</u>

"श्री वनिताहृत्कुमुदाब्जावाङ्मानसगोचर (दुडुकु गल नन्ने)

"ஸ்ரீ வனிதாஹ்ருத்குமுதாப் ஜாவாங்க்மானஸகோசர (துடுகுகல நன்னே)"

என்பவை முதல் சரணத்தின் வாக்யங்கள்.

ஸ்ரீ தேவியான மஹாலக்ஷ்மீ தேவியுடைய ஹ்ருதயமாகிற அல்லி மலரை மலர வைக்கும் சந்த்ரன் போன்றவனே! ஹே, ராமா! நீயோ வேதங்கள் கூறும் வகையில் வாக்கிற்கும், மனதிற்கும் எட்டாதவன். உன்னைத் தவிர என்னைக் காப்பாற்றும் வல்லமை உள்ளவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? நீதான் என்னை காப்பாற்றவேண்டும் என ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் இந்த சரண வாக்கியங்கள் மூலம் தெரிவித்தார்.

முதல் சரண வாக்யங்களில் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை த்யாகப்ரஹ்ம்மம் கொண்டாடுவதற்கு காரணம், ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயங்களை அவர் மிகவும் நன்றாக அறிந்திருந்ததே. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மி முகமாக, பகவானை ஆராதிப்பது என்பது தொன்று தொட்டு அனுஷ்டிக்கப்படும் பழக்கம். ப்ரபன்னர்கள், பகவானுடைய திருமேனியிலிருந்து என்றும் பிரியாது

இருக்கும் மஹாலக்ஷ்மி முகமாக, பகவானிடம் சரணாகதி செய்வதால், அவளுடைய வாத்ஸல்யம், வல்லப்யம். முதலிய ஸத்குணங்களுக்கு பாத்திரமாகிறார்கள். அபரா தங்கள் பல செய்து, பகவானை அணுக பயப்படும் ஜனங் கள், தங்கள் ப்ரபத்தியை லோகமாதாவான ஸ்ரீ மஹாலக்ஷ்மியிடம் செய்கிறார்கள். ஸ்ரீ மஹாலக்ஷ்மி யும், சேதனர்களிடம் தான் கொண்ட வாத்ஸல்யத்தால், அவர்களுக்காக, தன் கணவரிடம் பரிந்துபேசி, அவன் அருள் நிச்சயமாக கிடைக்கச் செய்கிறாள். அதனால், ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் சிபாரிசு, ப்ரபன்னர்களுக்கு அத்யாவஸ்யமானது. தாமரை மலரில் வாசம் செய்கிறவளும், ஸர்வலோகங்களையும் ஆள்கிறவளும் வேண்டுவதை எல்லாம் கொடுக்கும் பகவானின் பிராட்டியாக இருக்கிறவளும், நாதனை விட்டு பிரியாததால், ஸம்பந்தம், வ்யாப்தி, ஐஸ்வர்யம் ஆகிய ஆதாரத்ரயங்களை உடையவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மீ தன்னிடம் சரணாகதி செய்யும் ஜனங்களைத் தன் பர்த்தாவிடம் உள்ள செல்வாக்கால் காப்பாற்றி விடுகிறாள். அதனால், ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அருள், பகவானுடைய அனுக்ரஹம் கிட்ட மிகவும் முக்யமான முதல் உபாயமாகும்.

பராசர முனிவரும் தனது விஷ்ணு புராணத்தில், ஸ்ரீ மஹாலக்ஷ்மியை அங்கும் வியாபித்திருக்கும் பரப்ரஹ்ம ஸ்வரூபிணியாகவும், நாதனோடு சேர்ந்திருப்பதால் ஸம்பந்தம், வ்யாப்தி, ஐஸ்வர்யம் என்ற ஆதாரத்ரய ஸம்பன்னையாகவும் இருந்து, தன் வாத்ஸல்யம், வல்லப்யம், புருஷகாரம் ஆகிய குண ஸம்பத்துக்களால் சேதனங்களை காத்து, பகவானுடைய பரிபூர்ண அனுக்ரஹம் கிடைக்க வைப்பதை விவரித்தார். இந்த உண்மையை, ஸ்ரீ நடாதூர் அம்மாளும் தன்

ப்ரபன்ன பாரிஜாதம் என்று நூலில், பின்வருமாறு விளக்கினார்:-

अपराधैकसक्तानां अनर्हाणां चिर नृणाम्।
भर्तुराश्रयणे पूर्वं स्वयं पुरुषकारताम्॥
वाल्लभ्येनानुतिष्ठन्तीं वात्सल्याध्युपबृंहिणाम्।
उपायसमये भर्तुः ज्ञानशक्त्यादिवर्धिनाम्॥
मुक्तानां भोगवृद्ध्यर्थं सौन्दर्यादिविवर्धिनीम्।
आकारत्रयसम्पन्नां अरविन्दनिवासिनीम्॥
अशेषजगदीशित्रीं वन्दे वरदवल्लभाम्॥

அபராதைக ஸக்தானாம் அனர்ஹாணாம் சிரம் நருணாம் 1
பர்த்துராச்ரயணே பூர்வம் ஸ்வயம் புருஷகாரதாம் 11
வால்லப்யேன அனுதிஷ்டந்தீம் வாத்யல்யாத் யுபப்ருஹ்மிணம் 1
உபாயஸமயே பர்து: க்ஞான சக்த்யாதி வர்த்தினீம் 11
முக்தானாம் போகவ்ருத்யர்த்தம் ஸௌந்தர்யாதி விவர்த்தினீம் 1
ஆகாரத்ரய ஸம்பந்நாம் அரவிந்த நிவாஸினீம் 11
அசேஷ ஜகதீசித்ரீம் வந்தே வரத வல்லபாம் 11

சேதனன் சரணாகதி என்ற உபாயத்தை அனுஷ்டித்து, தன்னிடம் ப்ரபத்தி செய்யும்போது, தன் கணவனுடைய ஞானம், அனுக்ரஹம் ஆகிற சக்திகளை வளர்த்து, ஸ்ரீ மஹாலக்ஷ்மீ, சரணகதர்கள் முக்தி என்ற பலனை பகவானிடமிருந்து தவறாது அடையச் செய்து விடுகிறாள் என்று ஸ்ரீ நடாதூர் அம்மாள் நமக்கு தெரிவித்திருக்கிறார். சரணாகதி அனுஷ்டானத்தில், ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு உள்ள ப்ராதான்யத்தை நன்கு

அறிந்த ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், தனது கௌளை ராக பஞ்சரத்னத்தின் முதல் சரணத்தில், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரகாரம், "ஸ்ரீ வனிதா குமுதாப்ஜாவாங் மானஸகோசர" என்று நமஸ்கரித்துக்கொண்டு, ஸ்ரீதேவி முகமாக ஸ்ரீராமசந்த்ரனிடம் ப்ரபத்தி செய்தார்.

<u>கௌளைராக பஞ்சரத்னத்தின் இரண்டாவது சரணம்:-</u>

"सकल भूतमुल यन्दु नी वै युण्डग मदिलेक पोयिन (दुडुकु गल) "

ஸகல பூதமுலயந்து நீவையுண்டக மதிலேக
போயின (துடுகுகல)

என்பது மூன்றாவது சரணத்தின் வாக்யங்களாகும்.

ஸகல ஜீவராசிகள், பிரமன், இந்திரன் ஆகிய தெய்வங்கள், எல்லாவற்றினுள்ளும் நீயே அந்தர்யாமியாருப்பதை அறியாமலிருந்து, எத்தனையோ துர் விஷயங்களில் ஈடுபட்ட என்னை எந்த தொரைமகன் காப்பாற்றப்போகிறான்? அழியாத வேத வாக்குகள் எல்லாவற்றிற்கும் காரணமாயும், எல்லாச்சொற்களுக்கும் முடிவான எல்லையாயும் உள்ள ஹே ராமா! நீ ஒருவன்தான் என்னை என் பாபங்களிலிருந்து விடுவித்துக் காப்பாற்ற முடியும் என ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம் இந்த சரணம் மூலம் அறிவித்தார்.

ஸர்வ சராசர ஆத்மனாய், ஸகலமான ஜங்கமம், ஸ்தாவரம், இவற்றுள் அந்தர்யாமியாக உள்ள பகவானை, ஸ்ரீ வேதாந்த தேசிகன் நமஸ்கரித்துக் கொள்வது, ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் சரண வாக்யங் களுக்கு ஆதாரம் அளிக்கிறது. ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் வாக்யங்கள் பின்வருமாறு:-

ब्रह्मेति शङ्कर इतीन्द्र इति स्वराडिति
आत्मेति सर्वमिति सर्वचराचरात्मन्।

हस्तीश सर्ववचसामवसानसीमां
त्वां सर्वकारणमुशन्त्यनपायवाचः ॥

ப்ரஹ்மேதி சங்கர இதீந்த்ர இதி ஸ்வராடிதி
ஆத்மேதி ஸர்வமிதி ஸர்வ சரா சராத்மன் ॥
ஹஸ்தீச ஸர்வவசஸாமவஸானஸீமாம்
த்வாம் ஸர்வகாரணமு சந்த்யன பாய வாச: ॥

சேதனங்கள், அசேதனங்கள், தெய்வங்கள் எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாக திகழும் காஞ்சீபுரத்து எம்பெருமானை, ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் மேற்காணும் ஸ்லோக மூலம் ஜகத்காரண ஸ்வரூபனாகவும், ஸர்வ காரணாகாரனாகவும் நமஸ்கரித்துக் கொள்வது, ஸ்ரீ த்யாக ப்ரஹ்மத்தின் இரண்டாவது சரணமான "ஸகல பூதமுலயந்து நீவையுண்டக மதிலேக போயின" என்பதை ஞாபகப்படுத்துகிறது.

<u>கௌளைராக பஞ்சரத்னத்தின் மூன்றாவது சரணம்:-</u>

"चिरुतप्रायमुलनाडे भजनापृत रसविहीन कुतर्कुडैन (दुडुकु गल) "

"சிருத ப்ராயமுல நாடே பஜனாம்ருத
ரஸ விஹீன குதர்குடைன (துடுகுகல)"

என்பது மூன்றாவது சரண வாக்யங்களாகும்.

போன சரணத்தில், ஸ்ரீராமனை "ஸர்வகத: ப்ரதி வஸ்து பூர்ண:" என்றபடி எங்கும் பரந்து, எல்லா ஜீவராசிகளிடமும், வஸ்துக்கள் உள்ளும் அந்தர்யாமியாக நிற்கும் பரம்பொருளாக நமஸ்கரித்துக்கொண்டார்.

இந்த சரணத்தில், உன் ஸர்வாந்தர்யாமித்வத்தை தெரிந்து கொள்ளாது, என்னுடைய இளமை பருவத்தில் விதண்டா விவாதங்களில் ஈடுபட்டு, காலத்தை வ்ரயம்

செய்த என்னை எந்த தொரைமகன் காப்பாற்றப் போகிறான் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தன்னை நொந்து கொண்டார். நான் பால்யத்தில் உன்னுடைய நாம பஜனாம்ருதத்தை பருகாமல், வாத ப்ரதிவாதங்கள் செய்து, வாழ்நாளை வீணாக்கிவிட்டேன். நீயோ எல்லோருக்கும், எல்லாவற்றிற்க்கும் அந்தர்யாமியாய்,

"நீராய் நிலனாய்த் தீயாய் காலாய் நெடுவானாய்ச்
சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனாய்"

விளங்குகிறாய். நீயோ, தண்ணீர், பூமி, நெருப்பு, காற்று இவைகளுக்கு அந்தர்யாமியாய், பின்னர் பரந்த ஆகாயமாகவும் நிற்கிறாய்! இருளை விலக்குதல், புஷ்டி உண்டாக்குதல் முதலிய தொழில்கள் கொண்ட ஸூர்யன், சந்த்ரன் என்ற இரண்டு ஜோதிகளுமாகவும் நீ தோற்றமளிக்கிறாய்! அறிவிற்கும், அழிவிற்கும் காரணபூதனான ருத்ரன் உள்ளும் நீ அந்தர்யாமியாக இருக்கிறாய்! உலகத்தை படைக்கும் ப்ரஹ்மாவின் உள்ளும் நீ அந்தர்யாமியாகி, அவனுக்கு படைக்கும் சக்தி தருகிறாய். உன்னுடைய நிஜமர்மங்கள் புரிந்து கொள்ளாது, தவறான வாத ப்ரதிவாதங்களில் கலந்து கொண்டு, நான் மேதாவி என்ற அகந்தை கொண்டேன். "வினையேன் வினைதீர் மருந்தே" என்றபடி பாபியான எனது அகந்தை முதலான பாபரோகங்களை எல்லாம் கண்டிக்கும் என் ஔஷதமே, ராமா, "கூராராழி வெண் சங்கேந்திக் கொடியேன் பால் வாராய்", என் ரக்ஷணைத்திற்கு ஓடோடியும் வாராய். என்னைத் தவறாது காராய் என ஸ்ரீத்யாக ப்ரஹ்மம் வேண்டிக்கொண்டார்.

இளம் ப்ராயத்திலேயே, என் மனதை உன் நாம பஜனையில் நான் செலுத்த தவறிவிட்டேன். ஸ்ரீமந் நாராயணா, விஷ்ணு, ரகுந்தனா, ராமபத்ரா, ஜானகி ப்ராணநாதா, ஸர்வசைதன்ய ரூபா, என்று உன்னை

ஆனந்தத்துடன் கூப்பிட்டு, வீடு பெறுவதற்கு வழி செய்யாது, பெரிய பண்டிதன் போல் மற்றவர்களுக்கு குதர்க்கங்கள் பல சொல்லி, தகுந்த வழி காண்பிக்க துணிந்தேன். உன் நாமாம்ருத பஜனத்தை செய்யாதுவிட்டு, பல துராசரங்களில் இறங்கிய என்னை யாக சம்ரக்ஷண மூர்த்தியான நீதான் காத்தருளவேண்டும் என்று, ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் வேண்டிக்கொள்வது, மற்ற ஒரு மஹாபக்தரான குலசேகராழ்வாரின் பின்வரும் முகுந்தமாலை ஸ்லோகத்தை நினைவுறுத்துகிறது.

ஸ்ரீமந் நாம ப்ரோச்ய நாராயணாக் க்யம்
கே ந ப்ராபுர் வாஞ்ச்சிதம் பாபி நோபி 1
ஹா ந: பூர்வம் வாக் ப்ரவ்ருத்தா ந தஸ்மின்
தேன ப்ராப்தம் கர்ப்பவாஸாதி து:க்கம் 11

ஸ்ரீ குலசேகரர், இங்கு ஸ்ரீமந் நாராயணன் என்ற திருமாலின் திருநாமத்தை பஜனம் செய்து, எந்த பாபிகளானவர்களுந்தான் விரும்பிய பலன்களை அடையவில்லை என்று கேட்கிறார். நம்முடைய நாவானது முதலில், அந்த நாராயண நாமோச் சாரணத்தில் ஈடுபடாததால், கர்ப்பவாஸம், நரகானுபவம் முதலான துக்கங்களை அடைந்து சோர்ந்தது என குலசேகராழ்வார், ஈஸ்வரநாம பஜனையின் உயர்வை விளக்கியிருக்கிறார். இந்த கருத்துக்கள், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் மூன்றாவது சரண வாக்யங்களான "சிருத பராயமுல நாடே பஜனாம்ருத ரஸவிஹீன குதற்குடைன துடுகு கல நின்னே" என்பதற்கு ஆதாரமளிக்கிறது.

<u>கௌளை பஞ்சரத்னத்தின் நான்காவது சரண வாக்யங்கள்:</u>

"நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்று நம்மாழ்வார் தன்னை நொந்து கொண்டதற்கு சமமாக,

மேற்சொன்ன சரணங்களில் தன்னை கண்டித்துக் கொண்ட ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம், தனது நாலாவது சரணத்தில் பிறருடைய தனத்தில் ஆசைகொண்டு, மற்றவரை எல்லாம் மனம் கலங்குமாறு பேசி, வயிறு வளர்த்ததாக தன்னை விவரித்துக் கொள்கிறார். இவ்வளவு துஷ் கர்மாக்கள் செய்த என்னை உன்னைத்தவிர வேறு ஒரு அரச குமாரனும் காப்பாற்ற முடியாது. ஹே, ராமசந்த்ரா என்னைக் காப்பாற்று என பின்வரும் விதமாக வேண்டிக் கொண்டார்.

"परधनमुल कोरकु नोरुल मदिनि करगबलिकि कडुपु निम्प दिरिगिनद्दि (दुडुकु गल नन्ने)

"பர தனமுல கொறகு நொருல மதிநி கரக
பலிகி கடுபு நிம்ப திரிகி நட்டி,
(துடுகு கல நன்னே தொர கொடுகு
ப்ரோசுரா யெந்ததோ)"

பிறர் அளிக்கும் தனத்திற்கு ஆசைப்பட்டு, அவர்களை உயர்வாகப் பேசி தான் வயிறுவளர்த்து வீணாகப்போனதை "எடுலகா பாடுதுவோ" என்ற ஆஹிரிராக கீர்த்தனத்தில், ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் உருக்கமாக ஸ்ரீராமசந்த்ரனிடம் பின் வருமாறு விண்ணப்பித்திருக்கிறார்.

"அனு தினமுநு தார தனய
வர்க்காதுலு பாலனமு ஸேயுட
கொறகு தனமுல கலிகின
மனுஜுல பொகடி யார் ஜிஞ்ஜின
பைகமுல ஜூசி தனகு
ஸரிலேதனி பிகுவுன திரிகன நன்னே"

(எடுல காபாடு துவோ)

மனைவி மக்கள் முதலியோர்களின் ஸௌக்கியத்திற்காக, தினந்தோறும் தனவான்களை புகழ்ந்து பேசி,

ஸம்பாத்யம் செய்து, எனக்கு சரி சமானமான புத்திசாலிகள் வேறு எவர் என்று சொல்லிக்கொண்டு, மற்றவர்கள் மனதை நோகவைத்துக் கொண்டு திரிந்து வந்தேன். கடைசியில், புத்தி தெளிந்து "निम्ने चरणु जोच्चितिगानि; राम, एटलु गापाडुदुवो ? (நின்னே சரணு ஜொச்சிதி கானி, ராம, எடுல காபாடுதுவோ) எனக் கேட்டுக் கொண்டார். அதேமுறையில், கௌளை ராக கீர்த்தனத்தின் நான்காவது சரணத்தில், நான் பிறர் சொத்திற்கு ஆசைப்பட்டு, தன்னை தாழ்த்திக்கொண்டு, வாழ்க்கை நடத்தி காலத்தை ஈஸ்வர பஜனாம்ருத பானம் செய்யாது வ்யர்த்தமாக கழித்ததற்கு அபராத க்ஷாமணம் கேட்டு சரணாகதி செய்து கொண்டார்.

"தின தினமுதரமு கொரகை ராம தனிகுல காசிதி நீ வரகு, பாஹி கல்யாண ஸுந்தர ராம மாம்" என்றும் தனது புன்னாக வராளி உத்ஸவ ஸம்ப்ரதாய கீர்த்தனத்தில் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தன்னை நொந்து கொண்டு, கல்யாண ஸுந்தர ராமனிடம் சரணாகதி செய்ததும் உண்டு. நாள் தோறும் வயிற்று பிழைப்புக்காக தனிகர்களை நாடி, அவர்களைப் பாடிப்புகழ்ந்து வீண் போனதாக இங்கு ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் சொன்னது, கௌளை பஞ்சரத்னத்தின் நான்காவது சரணத்தின் எதிர் ஒலியாகும்.

"निधि चाल सुखमा ? रामुनि सन्निधि सेवसुखमा ? निजमुग बल्कु मनसा !"

(நிதி சால சுகமா ? ராமுனி ஸன்னிதி ஸேவ சுகமா ? நிஜமுக பல்கு மனஸா !) என்று கேட்டு, ராஜாவின் தனத்தை வெறுத்து ஒதுக்கிய பரம வைராக்கியசாலி நமது ஸத்குரு. தன தான்ய ஸம்பத்துகளை வாரி வழங்கும் ஸ்ரீராமனை "ஸ்ரீ கர" என்று தனது ரஞ்சனி கீர்த்தனத்தில் அன்புடன் அழைத்து, நீயே என்னுடைய

தனம், தான்யம் ஆகிய ஸர்வ ஸம்பத் (தனதான்ய தைவமு நீவையுண்டக) என்று கூறி தனது அர்த்த காம கர்ஷண சிந்தனையை விளக்கியவர் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம். "நாராயண ஹரி நாராயண" என்று ஆரம்பமாகும் தனது யமுனா கல்யாணி ராக கீர்த்தனையில், தன் ராம பக்தியையும் வைராக்யத்தையும் பின்வருமாறு அவர் விவரித்ததுண்டு.

"நச்வரமுலைன தனாச்வமுலனு நே
விசவஸிஞ்ச பூதேச்வர ஹரி ஹரி
கோடீ சுலகனி ஸாடி வேனி பல்கு
போடி நொஸகி மும்மாடிகி வேடனு"

(நாராயண ஹரி)

கருத்து:

நாராயண ஹரி! நான் ரசிக்கக்கூடிய செல்வம், வாஹனம் (குதிரை பரிவாரம்) முதலியவைகளை உதவாதவைகள் என்று விலக்கிவிட்டேன். என்னுடைய வாக்கை கோடீஸ்வரர்களின் ஸ்துதிக்கு உபயோகப்படுத்த மாட்டேன்.

இப்படி செல்வம், தன-தான்யாதி ஐஸ்வர்யங்களை, உதவாத சமாசாரங்கள் என்று உறுதியுடன் ஒதுக்கின ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், பணத்திற்கு பரவஸப்பட்டு, அல்ப மனிதர்களிடம் பல்லைக் காண்பிக்கும் ஜனங்களை மனதில் வைத்து, அவர்கள் இழிவை தமது இழிவாக நினைத்து,

"பரதனமுல கொறகு நொருல மதிநிகரசு
பலிகி கடுபு நிம்ப திரிகி நட்டி,
துடுகு கல நன்னே தொர கொடுகு
ப்ரோசுரரா எந்தோ"

எனத் தனது கௌளைராக பஞ்சரத்ன கீர்த்தன சரணத்தில் கூறினார். இந்த சரணம் "பப மம" என்று பஞ்சம ஸ்வராக்ஷரத்துடன் ஆரம்பமாகிறது.

ஐந்தாவது சரண வாக்கியங்கள்:

तनमदिनि भुविनि सौख्यपु जीवनमे यनुचु
सदा दिनमुलु गडिपे (दुडुकु गल नन्ने)

"தனமதினி புவினி ஸௌக்யபு ஜீவனமே யனுசு
ஸதா தினமுலு கடிபே (துடுகு கல நன்னே)"

என்பது ஐந்தாவது சரணத்தின் வாக்யங்களாகும்.

முதல் மூன்று சரணங்களை ரிஷப எடுப்புடன் ஆரம்பித்து, நான்காவது சரணத்தை பஞ்சம எடுப்பில் அமைத்த ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ஐந்தாவது சரணத்தில் கௌளை நிஷாதத்திற்கு ப்ரதான்யம் அளித்தார். "நிபம பநி" என்று ஆரம்பிக்கும் இந்த சரணத்தில்,

"ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம்
பாவியேனை ப்பல நீ காட்டி ப்படுப்பா யோ ?
தாவிவையங்கொண்ட தடந்தாமரை கட்கே
கூவிக் கொள்ளுங்காலம் இன்னம் குறுகாதோ ?"

என்ற வகையில் பிரார்த்தித்துக் கொண்டார்.

மேற்காணும் பாசுரத்தில், நம்மாழ்வார், பகவானிடம் இரண்டு கேள்விகளைக் கேட்டார். ஐயனே ! ஐந்து இந்த்ரியங்களால் ஏற்படும் சிற்றின்பங்களில் எனக்கு நப்பாசை ஏற்படுமாறு செய்து அந்த சிற்றின்பங்களை அனுபவிப்பதால் ஏற்படும் துக்கங்களில் என்னை மூழ்கச்செய்து, அந்த சிற்றின்பங்கள், பேரின்பங்கள்தானோ என்ற ப்ரமை

ஏற்படச் செய்துள்ளாய்! உயரியதான உனது நாம பஜனை, ஆராதனம், கைங்கர்யம் என்ற நிஜமான சுகானுபவங்களுக்கு ப்ராப்தனாக இருக்கவேண்டிய என்னை, சிற்றின்ப சுகமே பெரிதென மயங்கி நிற்கச்செய்திருக்கிறாய். சராசரங்கள் எல்லாம் உனதென்று அறிவிக்க எங்கும் பரவி விளங்கும் ப்ரபோ! உன்னுடைய பரம போக்யமான திருவடிகளை ஸேவித்துக்கொண்டு, சரணாகதி செய்து, உன் அருள் பெறும் காலம் நெருங்குமாறு அனுக்ரஹம் செய் என நம்மாழ்வார் பிரார்த்தித்துக் கொண்டார்.

இந்த ரீதியில், ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், தான் இந்த பூமியில், சிற்றின்பங்களை அனுபவித்துக்கொண்டு, சுகமாய் ஜீவனம் செய்வதையே சாச்வதமான சுகம் என நம்பி, தன் வாழ் நாட்களை கழித்து வீண்போனதாக இந்த சரணத்தில் அறிவித்தார். ஐம்புலங்களால் அடையப்படும் சிற்றின்பங்களை, பேரின்பங்களாக கருதி, "निम्ने विमोहजलधौ निपतामि भूयः" என்றபடி, மறுபடியும், மறுபடியும் ஆழமான அக்ஞான கடலுள் மூழ்கி இருக்கும் என்னை எந்த அரசகுமாரன் காப்பாற்றப்போகிறான் என ஸ்ரீ ஸத்குரு இங்கு கேட்டார்.

<u>கௌளை ராக கீர்த்தனத்தின் ஆறாவது சரண வாக்யங்கள்:</u>

तेलियनि नटविट क्षुद्रुलु वनितलु स्ववशमौटकुपदेशिंचि
सन्तसिल्लि स्वरलयंबु लेरुङ्गकनु शिलात्मुलै
सुभक्तुलकु समानमनु (दुडुकु गल नन्ने)

"தெலியனி நடவிட க்ஷுத்ருலு
வனிதலு ஸ்வவச மௌடகு பதேசிம்சி
ஸந்த ஸில்லி ஸ்வர லயம்பு லெறுங்ககனு
சிலாத் முலை ஸுபக்துலகு ஸமானமனு

(துடுகு கல)"

என்பது ஆறாவது சரண வாக்யங்களாகும்.

இந்த சரணத்தில், பின் வரும் மூன்று விஷயங்களை, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் விவரிக்கிறார்:

(1) தன் கடின சித்தம்.

(2) பிறரை வசப்படுத்த, போலி பாகவதர் வேஷம் கொண்டு, மற்றவர்களை வஞ்சித்து வாழ்தல்.

(3) ஸ்வரம், தாளம் முதலியவைகளை அறியாது வாழ்தல்.

தான் வணக்கமற்று, இரக்கமற்று, வாழ்க்கை நடத்தி வந்ததை ஸ்ரீராமனிடம் சொல்லி, இத்தகைய தவறுகள் புரிந்த தன்னிடம் கருணை கூர்ந்து காப்பாற்றவேண்டும் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் வேண்டிக்கொண்டார். நமது ஸத்குருவின் பிரார்த்தனை, ஆளவந்தார் என்ற பூர்வீககுரு தன்னை பின் வருமாறு நொந்து கொண்டதிற்கு சமானமாகும்.

"திகசுசி மவிநீதம் நிர்த்தயம் மாம லஜ்ஜம்
பரம புருஷ யோஹம் யோகி வர்யாக்ர கண்யை: 1
விதிசிவ ஸனகாத்யைர் த்யாது மத்யந்ததூரம்
தவ பரிஜன பாவம் காமயே காம வ்ருத்த: 11"

"அசுசிம், அவிநீதம், நிர்தயம் அலஜ்ஜம் மாம்திக்" என ஆளவந்தார் தன்னை இங்கு நிந்தித்துக்கொள்கிறார். அபரிசுத்தனும், வினயம் இல்லாதவனும், இரக்க மற்றவனும் வெட்கம் ஏதும் இல்லாதவனுமான என்னை எல்லோரும் நிந்திக்கவேண்டும் என ஆளவந்தார் கூறுகிறார். கல்நெஞ்சனான எனக்கு," ஸ்வரம், ராகம், தாளம் முதலியவைகளை நன்கு அறிவதால் ஏற்படும் நல்ல ஞானமும், ஒழுக்கமும் கிடையாது என

அடுத்தபடியாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், இந்த சரணத்தில் கூறினார். "बाग सेविंचि सकल भाग्यमोन्दुदामु रारे (பாக ஸேவிம்சி ஸகல பாக்யமோந்துதாமு ராரே)" என்று தனது ரீதி கௌளைராக கீர்த்தனத்தில் கேட்டவர் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம். அவர் ஸ்ரீஹரியை ஸம்ப்ரதாய சுத்தமாக ஸ்வர, லயத்துடன் பாடினால், எல்லா ஸௌபாக்யங்களையும் நாம் அடையலாம்; வாரீர், நாம் பரிசுத்தமான ஸங்கீதத்துடன் பகவானை ஆராதித்து, அவன் அருள் பெறுவோம் என விண்ணப்பித்துக் கொண்டவர், நமது ஸத்குரு.

"நாதஸ்வர மனுவரந வரத்னபு வேதிகபை ஸகல லீலா
விநோதுனி பரமாத் முனி ஸ்ரீராமுனி பாத முலனு த்யாகராஜ
ஹ்ருத் புஷ்னுனி, நாம குஸுமமுலசே பூஜிம்சே
நரஜன்மமே ஜன்மமு மனஸா"

என்று தனது ஸ்ரீராக கீர்த்தனத்தில், நாதோபாஸனையின் மஹிமையை விளக்கியவர் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் ப்ரணவ நாதத்திலிருந்து ஜனித்த ஸ்வரங்கள் கொண்டு அமைக்கப்பட்ட நவரத்ன பீடத்தில் ஸ்ரீராமனை அமர்த்தி, அவ்னை திவ்ய நாமாக்கள் என்ற புஷ்பங்களால் அர்ச்சிப்பதே, இந்த நரஜன்மம் எடுத்ததின் பலன் என இங்கு சொன்னார். தனது சாளக பைரவி ராக கீர்த்தனத்தில் "ஸங்கீத ஸாஸ்த்ர ஞானமு-ஸாரூப்ய ஸௌக்யதமே" என்று விளக்கினார். ஸங்கீத ஸாஸ்த்ர ஞானத்தால் ஏற்படும் நுண்ணறிவு, ஸாரூப்யம் என்ற விதமான முக்தியை அளிக்கவல்லது என மேற்காணும் கீர்த்தன வாக்ய மூலம் தெரிவித்தார். கடைசியாக, தனது சங்கராபரண கீர்த்தனத்தில் "ஸ்வரராக சுதாரஸயுத பக்தி ஸ்வர்க்காப வர்க்கமுரா"

என்று சொல்லி, ஸ்வரம், ராகத்துடன் கலந்த பக்தி ஸ்வர்க்கத்திற்கும், மோக்ஷத்திற்கும் சரிசமானமாகும் என்ற ஸங்கீத ஸாஸ்த்ர ரஹஸ்யத்தை வெளிப்படுத்தினார்.

ஸங்கீத ஸாஸ்த்ர அப்யாஸத்தின் பலன்களை நன்கு அறிந்த ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், கௌளைராக கீர்த்தன சரணத்தில், ஸ்வரம், தாளம் ஆகியவைகளின் அருமை அறியாது, கடின சித்தத்தோடு தான் துர்குண ஸம்பன்னனாகத்தான் இருந்ததாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் விவரித்துக்கொள்வது, ஸங்கீத ஸம்ப்ரதாயத்தின் அருமையையும் உயர்வையும் அறியாத நம்மை மனதில் வைத்துச்சொன்ன வாக்யங்களாகும். ஸம்ஸாரியாக இருந்தபோதிலும் பகவானின் நாமங்களை ராகம், தாளம் முதலியவைகளுடன் பாடியவனுக்கு முக்தி தவறாது ஏற்படும் என்று "ஸம்ஸாருலைதே நேமய்யா" என்ற ஸாவேரி ராக கிர்த்தனத்தில் ஸத்வ ஸங்கீதத்தின் உயர்வை பாடிப் போற்றிய ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தன்னை நொந்து கொண்டது நம்மை மனதில் வைத்து வழிகாட்டிய வகையே.

கடைசியாக, ஆறாவது சரணத்தில் குறிப்பிடப்படும் விஷயம் போலிபாகவதர்களைப் பற்றியது. நடன் (A dancer or an actor), விடன் (விதூஷகன்/A Buffoon, a Voluptiary sensualist), க்ஷுத்ரன் (அதமன்/Small, mean mean), ஸ்திரீகள் ஆகியவர்களை தன் உபதேசங்களால் ப்ரமிக்க வைத்து, தன் வசப்படுத்திக் கொண்டு, ஸத்கர்மாக்களை விட்டு, துஷ்கர்மாக்களை அனுஷ்டித்து வந்த, தன்னை எந்த ராஜகுமாரன் காப்பாற்றப் போகிறான் என அங்கலாய்த்து, ஹே, ராமா! நீ ஒருவன் தான் காப்பாற்ற முடியும் என மறைமுகமாக தெரிவித்தார். ஆறாவது சரணமும், முதல்

மூன்று சரணங்களைப்போல் ரிஷப ஸ்வரத்துடன் ஆரம்பமாகியது.

<u>கௌளை பஞ்சரத்னத்தின்</u>
<u>ஏழாவது சரண வாக்யங்களின் கருத்துகள்:</u>

இந்த சரணம் "ஸாரிஸ் - ஸாஸா" என்று ஷட்ஜம ப்ரதான்யத்துடன் ஆரம்பமாகிறது.

दुष्टिमि सारम्बगु ललना सदनार्भक सेनामित
धनादुलनु देवदेव! नेर नम्मितिनि गाकनु पदाब्ज
भजनम्बु मरचिन (दुडुकु गल नन्ने)

"த்ருஷ்டிகி ஸாரம்பகு லலனா ஸத நார்ப்பக
ஸேனாமித
தனா துலனு தே। தேவ! நெற நம்மினி காகனு
பதாப்ஜ பஜனம்பு மரசின (துடுகு கல நன்னே)"

என்பவை ஆறாவது சரண வாக்யங்களாகும்.

தேவாதி தேவா! ராமச்சந்த்ரா! அழகுள்ள ஸ்த்ரீகள், வீடு வாசல், நிலம் நீச்சு, சொத்துக்கள் எல்லாம் ஸததமானவை என நம்பி, உன் புனிதத் திருவடிகளை ஆராதிக்காது மோசம் போய் துர்குணங்கள் நிரம்பியவனாய் நிற்கும் என்னை எந்த சக்ரவர்த்தி திருமகன் ரக்ஷிக்கப்போகிறான் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கேட்டார்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் கதறல், மற்ற ஒரு பரம பக்தரான புரந்தர தாஸரின் பின்வரும் ப்யாக் ராக கீர்த்தனத்தில் காணப்படும் கதறலுக்கு ஸமானமாகும்:

"யாகே மூர்க்கனாத் யோமனுஜ, யாகே
மூர்க்கனாத் யோ

யாகே மூர்க்கனாத்யோ காகு புத்திய பிட்டு
லோக நாதன பாடோ ஹோ மனுஜ
மக்களு ஹெண்டரு நின்னல்லவரெந்து
ரொக்கவனு ராக்கவனு எணிஸிதந்து
ஸௌக்கனிந்த திருகு வியேனோ ஓ மனுஜ
ரக்கஸன தூதரு பந்து லெக்க வாயிது
ஹொரடு எனலு
நடுவரெல்ல பிடு ஸுவரேனே மனஸா"

மேற்காணும் கீர்த்தனத்தில், ஸ்ரீபுரந்தரதாஸர், அழியக்கூடிய விஷயங்களில் மனதை புகவிட்டு, அழியாத பரம்பொருளை ஆராதித்து வீடு சேறாத மனிதர்களுக்கு புத்தி சொன்னார். ஸ்ரீ த்யாகப்ரஹ்மமோ, அந்த மூர்க்கர்களின் இழிவு நிலையைத் தன்னுடைய நிலையாகவே விவரித்து, ஸ்ரீராமானுக்ரஹத்தை வேண்டிக் கொண்டார். ஸ்ரீஆதி சங்கரர் சொன்ன "ஏதன் மாம்ஸ வஸாதி விகாரம் மனஸிவிந்தய வாரம் வாரம்" என்ற தத்வ பிரகாரம், பெண்களின் அங்க ஸௌந்தர்யங்களில் மனதை நழுவவிட்டு, நிரந்தரமான ஸௌந்தர்யவான் ஆன ஸ்ரீராமச்சந்திரனிடம் பக்தி செய்யாது, தான் இருந்ததாக நம்மை மனதில் வைத்து, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கூறினார். அவர் சொல்வாது சொல்வதை, வெளிப்படையாக, ஸ்ரீ புரந்தரதாஸர், தனது பந்து வராளி கீர்த்தனத்தில் பின் வருமாறு தெரிவித்தார்.:

"நம்ப திரு ஈ தேஹ நித்ய வல்ல
அம்புஜக்ஷன பஜிஸி ஸுகியாகு மனுஜா
எலு ரக்தமாம் ஸகள மேலே சர்மத ஹொதிகே
வொளக மலமூத்ராதி க்ரிகளிரவு
ஹலவு வ்யாதியபீடு பஞ்சபூததநாடு
பலுஹு தேஹவநெச்சி கெடபேட மனுஜா"

"செல்வோம், செல்வோம்" என்று சொல்லிக் கொண்டு, துரிதமாக மறையும் அழகு, ஐஸ்வர்யம் என்ற செல்வங்களை நிரந்தரமானவை என்று நம்பி, உன் திருமேனியைப் பற்றிய த்யானத்தையோ (ஸாலம்பன யோகம்), அல்லது உனது திவ்யாத்ம ஸ்வரூப த்யானத்தையோ (நிராலம்பன யோகம்). செய்யாத என்னை எந்த சக்ரவர்த்தி திருமகன் கைகொடுத்துக் காப்பாற்றப் போகிறான் என இங்கு ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் புலம்பினார்.

## கௌளைராக கீர்த்தனத்தின் எட்டாவது சரண வாக்கியக் கருத்துகள்:

"தழுவல் பக்கம் நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்
தொழுவனேனையுனதாள் சேரும் வகையே சூழ் கண்டாய்"

என்ற திருவாய்மொழி பாசுரம் சொல்லும் தத்வ பிரகாரம், போன சரணத்தில் தன் துர்தசையை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் விளக்கினார். மேற்காணும் பாசுரத்தில், நம்மாழ்வார், என்னைத் தழுவியுள்ள கொடிய பாபம் காரணமாக, நான் வெட்கமுற்று, தலைகுனிந்து உன் முன் நிற்கிறேன் என்றார். நீயோ புருஷோத்தமன், நானோ பாபக்கூட்டங்களால் சூழப்பட்ட அதமாதமன். உனது திருவடிகளை அடையும் விரஹத்தாலே, மிக்க எளியனான என்னை நீ ஸ்வீகரிக்கவேண்டும் என நம்மாழ்வார் தீனமாக ப்ரார்த்தித்தார், அதேமாதிரியான ஆத்மகர்ஹண/நைச்யானுஸந்தான பாவத்தில், ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம், தனது எட்டாவது சரணமூலம், தன் மனநிலையை நொந்து பின் வருமாறு விளக்கினார்:

"चक्कनि मुख कमलम्बुनु सदा ना मदिलो स्मरण
लेकने दुर्मदान्ध जनुल गोरि परितापमुलचे दगिलि
नोगिलि दुर्विषय दुरासलनु रोयलेक सततमपराधिनै
चपल चित्तुडनैन (दुडुकु गल नन्ने)

"சக்கனி முக கமலம்புனு ஸதா நா மதிலோ ஸ்மரண
லேகனே துர்மதாந்த ஜனுல கோரி பரிதாபமுலசே
தகிலி
நொகிலி துர்விஷய துராஸலனு ரோயலேக
சததமபராதினை
சபல சித்துடனைன (துடுகு கல நன்னே)"

பஞ்சம எடுப்புடன் ஆரம்பமாகும், இந்த பெரிய சரணத்தில், "असृषचिन्तापदमाभिरूप्यम्" என்றபடி நெஞ்சினால் நினைப்பதற்கும் இடம் தராத, உன்னுடைய திருமேனி அழகையும், தாமரை புஷ்பம் போன்ற ரஞ்சிதமான உன் திருமுகத்தையும் என் மனதால் நினைக்காது விட்டு விட்டேன். "कोक्कशास्त्र विदुल नर" என்ற காமஸாஸ்த்ரத்தில் கரை கண்ட துர்ஜனங்களுடன் சேர்ந்து கொண்டு "भक्ति शास्त्र विदुल नर" என்ற பாகவதர்களின் ஸத்ஸங்கத்தை விட்டு விட்டேன். "காதல் செய்திளையவர் கலவி தரும் வேதனை வினையது வெருவதலாம்" என்பதை புரிந்து கொள்ளாது, உன்னை மறந்து, அந்த மறதியினால், "இறந்தேனெத்தனையும் அதனாலிடும்பைக்குழியில் பிறந்தேயெய்த்தொழிந்தேன்" என்று திருமங்கை மன்னன் சொன்ன துக்கங்களுக்கு சமமான துக்கம் அடைந்து, மடிந்து, மெலிந்து நிற்பதாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தெரிவித்தார்.

துர்விஷயங்களில் ஏற்படும் ஆசைகளை விலக்கமுடியாமல் ஸதா அபராதங்கள் செய்து, அபராத சக்ரவர்த்தியாய் விளங்கி, சஞ்சலமான மனது உடைய

என்னை எந்த ராஜகுமாரன் காப்பாற்றப்போகிறான் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், இங்கு கேட்டுக் கொண்டார். உலக சுகங்களில் ஆசை கொண்டு, அந்த நீர்ச் சுழல்களில் மூழ்க இருக்கும் தன்னை, ஸ்ரீ ராமன் ஒருவன் தான் காப்பாற்ற முடியும் என மறைமுகமாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தெரிவித்தார். தான், துர்புத்திகளுடைய ஜனங்களுடன் சேர்ந்து, அந்த துர்ஜனங்களிடம் யாசித்து, சின்னத்தனம் அடைந்து, சித்தம் குலைந்து நிற்பதை ஸ்ரீ ராமனிடம் "कर्ममयघर्मतप्तं सुखमृगतृष्णाभिः काभिरण्यनार्द्रम्" என்ற வகையில் தான் தவிப்பதாக தெரிவித்தார். துஷ்கர்மங்களாகிய கடுங்கோடையின் வெப்பத்தால் பீடிக்கப்பட்டு, எவ்வகையான சுகம் என்னும் குளிர் நதி தீர்த்தங்களாலும் குளிர்விக்கப்படாத என்னை எந்த ராஜகுமாரன் காப்பாற்றப்போகிறான் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் உரக்க கதறினார். "நிராகர்ம நித்ய உபதப்தம்" என்றபடி தன் கர்மங்களாகிய வெம்மைகளாலே எப்போதும் தவிக்கும் தன்னை ஸ்ரீ ராமபிரான் ஒருவன் தான் காப்பாற்ற முடியும் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் ஜாடையாக தெரிவித்தார்.

<u>கௌளை பஞ்சரத்ன கீர்த்தனத்தின் ஒன்பதாவது சரணம்</u>

मानवतनु दुर्लभ मनुचु नेंचि परमानन्द
मोन्दलेक मद मत्सर काम लोभ मोहमुलकु दासुडै
मोसबोति गाक मोदटि कुलजुडगुचु भुविनि क्षुद्रुल
पनलु सल्पुचुनु युंटिनिगाक, नराधमुलनु
गोरिसारहीनमतमुलनु साधिम्प दारुमारु (दुडुकु गल)

மானவதனு துர்லபமனுசு நெம்சி பரமானந்த மொந்த
வேக
மதமத்ஸர காம லோப மோஹமுலகு தாஸுடை மோஸ
போதிகாக
மொதடி குலஜுடகுசு புவினி க்ஷுத்ருலு பனுலு
ஸல்புசுனுயும்டி

நிகாக நராதமுலனு கோரிஸார ஹீனமதமுலனு
ஸாதிம்ப தாருமாரு (துடுகுகல)

என்பது ஒன்பதாவது சரணத்தின் வாக்யங்களாகும்.

இங்கு, பின்வரும் ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்ன ஸ்லோகம் கூறும் கருத்துகளை, ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் வெளியிட்டார்:

"ஜனித்வாஹம் வம்சே மஹதி ஜகதிக்யாத யசஸாம்
சுசீனாம் யுக்தாநாம் குணபுருஷ தத்வஸ்திதி விதாம்
நிஸர்க்கா தேவ த்வச் சரண கமலைகாந்த மனஸாம்
அதோத: பாபாத்மா சரணத நிமஜ்ஜாமி தமஸி"

சரணத! அஹம் ஜகதி க்யாத யசஸாம் சுசீனாம் யுக்தானாம் குணபுருஷ தத்வ ஸ்திதி விதாம் நிஸர்க்காத் ஏவ, த்வத் சரண கமல ஏகாந்தமனஸாம் மஹதி வம்ஸே ஜனித்வா, பாபாத்மா தமஸி அத: அத: நிமஜ்ஜாமி என ஆளவந்தார் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

நல்வழிகாட்டும் பெருமானே! நான் உலகங்கள் எல்லாம் பரவின புகழ் உடையவர்களும், பரிசுத்தர்களும், உன்னை விட்டு என்றும் பிரியாதவர்களும், அசேதன சேதன தத்வங்களுடைய ஸ்வரூப வித்யாஸங்கள், ஸ்வபாவங்களை நன்கு அறிந்தவர்களும், இயற்கையாகவே உனது பாதத்தாமரைகளிலேயே ஊன்றின மனது உடையர்களுமான மஹான்களுடைய சிறந்த குலத்திலே பிறந்த போதிலும், பாபாத்மாவாய் இருந்து கொண்டு, இருள்மயமான சூழ்நிலையிலே, கால் கீழ்படாத ஆழமான ஸம்ஸார சாகரத்தில் மூழ்கியவனாய் இருக்கிறேன் என்று ஆளவந்தார் தன் அவல நிலையையும், குடும்ப ஸம்பந்தத்தையும் விளக்கினார்.

ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் தன்னை 'மொதடி குலஜுடகுசு' என்று விவரித்து, உத்தம குலத்தில் ஜனித்தவனாக இந்த சரணத்தில் அறிமுகப்படுத்திக்

கொள்கிறார். அப்பேற்பட்ட நல்ல வம்ஸத்தில் உதித்தும், 'மதமத்ஸர காம லோப மோஹ᳚லகு தாஸ᳚டை மோஸ போதிகாக' என்றபடி காம, க்ரோத, மத, மாத்ஸர்ய, மோஹ, லோபம் முதலான குணங்களுக்கு அடிமையாய், தன் வாழ் நாள்களை, வீண் நாட்களாக கழித்து மோஸம் போனதாக ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் தெரிவித்தார். "மானவதனு துர்லபமனுஸ᳚ நெம்சி பரமானந்த மொந்தலேக" என்றபடி, மானிட ஜன்மம் கிடைப்பது மிகவும் அரிது என அறிந்து கொள்ளாது, அந்த அறிவால் ஏற்படும் பரமானந்தம் கிட்டாமல், உத்தம குலத்தில் பிறந்தும், அல்பர்களின் (க்ஷு᳚த்ரர்கள் = அதமர்கள்) ப்ரவ்ருத்திகளில் ஈடுபட்டு, கெட்டுப் போனேன் என ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் இங்கு சொன்னார். அது மாத்ரம் அல்லாது, நராதமர்களான தனவந்தர்களிடம் ஜீவனத்திற்காக யாசித்தும், ஸாரம் இல்லா மதங்களையும், அவை அறிவிக்கும் அனுஷ்ட்டானங்களையும் செய்து, பாபங்களை சேர்த்துக் கொண்ட என்னை எந்த தொரைமகன் காப்பாற்றப் போகிறான் என ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியிடம் பீதியுடன் கேட்டுக் கொண்டார்.

கங்கு கரையற்ற துன்பக் கடலில் மூழ்கி, கரை ஏறத் தெரியாது முழிக்கும் தன்னை ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் நொந்து கொள்வது, ஆளவந்தாரின் ஸ்லோகமொன்றின் நேர் எதிர் ஒலியாகும். அந்த ஸ்லோகம் பின் வருமாறு :

அமர்யாத : க்ஷு᳚த்ரச் சலமதி ரஸூ᳚யாப்ரஸவபூ :
க்ருதக்னோ துர்மானீ ஸ்மர பரவசோ வஞ்சனபர :
ந்ருசம்ஸ: பாபிஷ்ட்ட : கதமஹமிதோ து:க்கஜலதே
அபாராதுத்தீர்ணஸ் தவ பரி சரேயம் சரணயோ :

அமர்யாத : (வரம்பு மீறினவனும்)
க்ஷு᳚த்ர : (அல்ப விஷயங்களில் சபலம் கொண்டவனும்),
சலமதி : (ஒரு விஷயத்திலும் நிலைக்காத சஞ்சல சித்தனும்),

அஸூயா : ப்ரஸவபூ : (பொறாமைக்கு ஜன்ன பூமியாக விளங்குபவனும்),
க்ருதக்ன : (உதவி செய்தவர்களுக்கு கைமாறு செய்யாத நன்றி கெட்டவனும்)
துர்மானீ (பிறர்களிடம் கெட்ட எண்ணமாகிற துரஹங்காரம் கொண்டவனும்),
ஸ்மர பரவஸ : (காமவலையில் வீழ்ந்தவனும்)
வஞ்சனபர : (பிறரை வஞ்சிப்பதில் பாண்டித்யம் கொண்டவனும்)
ந்ருசம்ஸ: (பயங்கரமான ஹிம்ஸை முதலிய கொடுந்தொழில் புரிபவனும்),
பாபிஷ்ட்ட (மஹாபாபியுமான) அஹம் (நான்)
இத: அபாரத் து:க்கஜலதே: உத்தீர்ண: (இந்த எல்லைகள் காணாத துக்ககடலிலிருந்து எழுந்து) தவசரணயோ: கதம்பரிசரேயம் ? (கரை சேர்ந்து, உன் பாதத்தாமரைகளில் எப்படி கைங்கர்ய பாக்யம் பெறும் சக்தி உள்ளவனாக ஆவேன் ?) என்று ஆளவந்தார் பகவானிடம் தெரிவித்தார்.
"மதமத்ஸர காம லோப மோஹுலகு தாஸுடைமோஸ போதிகாக" என்று ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் தன்னை விவரித்துக் கொண்டார். க்ஷுத்ரர்கள், நராதமர்களுடன் சம்பந்தம் கொண்டு, பாபிஷ்ட்டனாகி, உதவாக்கரை மதானுஷ்ட்டானங்களில் ஈடுபட்டு, வழிதவறி தாறுமாறான விஷயங்களைச் செய்த தன்னை, ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள் க்ஷுத்ருலபனுலு ஸல்புசுனுயும்டினி காக நராத முலனு கோரி ஸாரஹீன மதமுலனுஸாதிம்ப தாருமாரு", என்ற துர்குணங்கள் சேர்ந்தவானாக விவரித்து , ஹே, ராமா, தாசரதே ! நீ தான் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற சரணாகதியைச் செய்தார்.

<u>கௌளைராக பஞ்சரத்னத்தின் கடைசி சரணம்:</u>

सतुलकै कोत्राललास्तिकै सतुलकै कोत्राललु
धनततुलकै दिरिगिति नय्य, त्यागराजाप्त, यिटुवंटि
(दुडुकु गल नत्रे)

ஸதுலகை கொன்னாள்ளாஸ்திகை ஸதுலகை
கொன்னாள்ளு
தனததுலகை திரிகிதி நய்ய, த்யாகரராஜாப்த, யிடுவண்டி
(துடுகு கல நன்னே)

என்பது பத்தாவது சரணத்தின் வாக்யங்களாகும். "பப பமமா கமரிஸ" என்ற ஸ்வரங்கள் சேர்ந்த பஞ்சம எடுப்புடன் இந்த சரணம் ஆரம்பமாகிறது.

இவ்வுலகில், பெண்களுக்காக சில நாட்களும், தனம் தேடுவதற்காக சில நாட்களும், பிள்ளைகளுக்காக சில நாட்களும் செலவழித்து, அங்கும், இங்கும் திரிந்து வாழ் நாட்களை வீணாக்கிய என்னை எந்த துரைமகன் காப்பாற்றப் போகிறான் என இங்கு கேட்டு, நீ ஒருவன் தான் காப்பாற்ற முடியும் என்று ஜாடையாக ஸ்ரீ ராமனிடம் தெரிவித்தார்.

"न मे भक्तः प्रणश्यति" என்று உன் மற்ற ஒரு அவதாரத்தில் சொன்ன "வரகுண ராஜாதிராஜ ராமா!" உன்னை "श्रितजनसंरक्षकन्" (சரணம் என்று அடைந்தோரை ரக்ஷிப்பவன்), "भीमे नित्यं भवजलनिधौ मज्जतां मानवानां पोतपात्री भवित्री" (பயங்கரமான ஸம்ஸார ஸாகரத்தில் எப்போதும் மூழ்கிக் கொண்டிருக்கின்ற மனிதர்களுக்கு நீ ஓடம் ஆக இருக்கிறாய்) என்று பெரியோர்கள் விவரித்திருக்கிறார்கள்.

உன்னை "शरणागतप्रणयभङ्गभीतो भवान्" என்றும் சரணாகதி செய்தவர்களுக்கு "विमुक्त्येकद्वारं विघटितकवाटं प्रणयिनाम्" என்றும் ஆசார்யர்கள் விவரித்திருக்கின்றனர்: அதாவது, நீ சரணாகதி செய்தவனுடைய ப்ரார்த்தனையை மறுப்பதற்கு அஞ்சுபவன் என்றும், சரணாகதர்களுக்கு, திறக்கப்பட்ட கதவை உடைய மோக்ஷமாகிற கோயிலுக்கு ஒரே வாயிலாக இருப்பவனாகவும் ஆசார்யர்கள் அறிவித்திருக்கிறார்கள். அபராத சக்ரவர்த்தியான நான் கருணா ஸார்வபௌமனான உன் முன் செய்த பாபங்களை

அறிந்து,

"ந தர்ம நிஷ்டோஸ்மி நசாத்ம வேதீ
ந பக்திமான் த்வச்சரணாரவிந்தே !
அகிஞ்ச நோந்யகதிச்சரண்ய !
த்வத்பாத முலம் சரணம் ப்ரபத்யே

என்ற விதத்தில் சரணாகதி செய்துள்ளேன்.

ஸர்வரக்ஷகனே ! நானோர் ஒரு ஸாதனமும் இல்லாதவன். ஒரு புகலும் இல்லாத அகிஞ்சனன். நான் கர்ம யோகத்தில் நிபுணன் இல்லை. ஆத்ம ஞானமும் இல்லாதவன். உனது திருவடித்தாமரைகளில் ஆழ்ந்த பக்தியும் இல்லாதவன். அப்பேற்ப்பட்ட ஸ்ரவகுணவிஹீனனான நான், இந்த துர்தசையில் உள்ள என்னைக் காப்பாற்றும் தொரை மகன் யார் என்று கேட்டுக் கொண்டு, உன் முன் நின்று சரணாகதி செய்தவனாக இருக்கிறேன். உன்னை, ஒரு முறை ப்ரபத்தி செய்தவர்க்கு அபயமளித்தலை, எப்போதும் வ்ரதமாகக் கொண்டவன் (सकृत्प्रपदनस्पृशामभयदान नित्यव्रती) எனப் பெரியோர்கள் போற்றியதை நம்பி, என் பாபக் கூட்டங்களை அழித்துக் காப்பாற்றி விடுவாய் என்று உள்ளேன். "எம்பெருமானடியல்லால் சரண் நினைப்பிலும் பிறிதில்லையெனக்கே" என்ற ஆழ்வாரின் வாக்யங்கள் பிரகாரம், எவ்வளவு ஆராய்ந்தாலும் திருமாலாகிய உனது திருவடி நிழலைத்தவிர வேறு ரக்ஷகம் இல்லை என்ற உண்மையை புரிந்து கொண்டேன். "போதலர் நெடுமுடிப் புண்ணியனே ", ராமா, உன்னை தர்சித்து, துதித்து உய்யும் வழியைக் காண்பி, வேறு எனக்கு ஏதும் வேண்டாம் என்று திருமங்கை ஆழ்வாரின் திருவிண்ணகரப்பனைப் பற்றிய பின் வரும் பாசுரக்கருத்துக்கள் கொண்ட வகையில், தன் துஷ்கர்மாக்களுக்காக தன்னை நொந்து கொண்டு சரணாகதி செய்தார்.

"சாதலும் பிறத்தலுமென்றிவற்றை காதல் செய்யாதுன்
கழல் அடைந்தேன்,
ஓதல் செய் நான் மறையாகியும்பராதல் செய்
மூவுருவானவனே,
ஆண்டாயுன்னைக் காண்பதோரருளெனக்கருளி
தியேல்,
வேண்டேன் மனை வாழ்க்கையை விண்ணகர்
மேயவனே"

ரகு வம்ஸத்தில் தசரத சக்ரவர்த்திக்கு திருக்குமாரனாய் அவதரித்து, தன் சௌந்தர்யத்தாலும், கல்யாண குணங்களாலும், உலகங்களை மகிழ்வித்த அபிராம குணாகர தாசரதியை சரணம் என்று ஸ்ரீ த்யாகப்பரஹ்ம்மம் கோப்த்ருவ வரண பத்ததி மூலம் அடைந்தார். அவர் உதார மனத்தினனாகவும், சரணாகதவத்ஸலனாகவும், வீணாகாத பாணங்கள் உடைய ஜகதேக வீரனாகவும், அடியார்களுக்கு காமதேனுபோலும் உள்ள உன்னை விட்டு வேறு ஒரு தெய்வத்தையும் என்னைக் காப்பாற்று என்று கேட்க மாட்டேன் என்று பின்வரும் ஸ்லோகம் சொல்லுமாறு, தன் கௌளை பஞ்ச ரத்னம் மூலம் கேட்டுக் கொண்டார்.

सुमुखं सुहृदं सुलभं सुखदं स्वनुजं च सुकायममोघशरम् ।
अपहाय रघूद्वहमन्यमहं न कथञ्चन कञ्चन जातु भजे ॥

ஸுமுகம் ஸுஹ்ருதம் ஸுலபம் ஸுகதம் ஸ்வநுஜஞ்ச
ஸுகாய மமோக சரம்
அபஹாய ரகூத்வஹமன்யமஹம் நகதஞ்சன கஞ்சன
ஜாது பஜே

இப்படியாக, மஹாபாபிகளான நம்மை மனதில் வைத்து, பரம பாவனரான ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம், ஆத்ம கர்ஹண மனோநிலையை உபயோகப்படுத்தி, கௌளை ராக பஞ்சரத்னக்ருதியை நமக்கருளினார். ஜீவன்முக்தரான அவர் திருவடிகளில் இக்கட்டுரையை ஸமர்பிக்கிறேன்.

உனதன்புள்ள தம்பி,
சடகோபன்

June 14, 1989.



க்ஷேமம் சுக்லஞ, ஆனி மீ 1உ
வியாழக்கிழமை, ஸர்வ ஏகாதசி,
June 15, 1989, ஸ்வாதி நக்ஷத்ரம்

மிகுந்த பேரன்புடைய சௌ. பத்மாவிற்கு, உனது தம்பி சடகோபனின் அநேக நமஸ்காரங்கள். க்ஷேமம். இந்த கடிதத்தில், ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மத்தின் மூன்றாவது பஞ்சரத்னமான 'ஸாதிஞ்சனே' என்பது பற்றி எழுதுகிறேன். இந்த பஞ்சரத்ன கீர்த்தனத்தை இருபத்தி ஒன்பதாவது மேளமாகிய தீர சங்கராபரணத்தின் ஜன்யராகமாகிய ஆரபியில் ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் அமைத்தார். இந்த பஞ்சரத்னம், அவர் முதலாவதாக செய்த பஞ்சரத்னம்.

ஆரபி ராகத்தின் விசேஷம்:

"ஸரிமபதஸ ஸநிதபமாகரீஸ" என்ற ஆரோஹண அவரோஹண க்ரமம் கொண்ட ஆரபி சாயாலக ராகங்களில் ஒன்று. ரிகுமதினு என்ற ஸ்வர குறிப்புகள் கொண்ட ஔடவ ஸம்பூர்ண ராகமான ஆரபி, ரிஷபத்தை ஜீவ ந்யாஸ ஸ்வரமாகக் கொண்டுள்ளது. முன்னர் "Arabhi balances the ascension and depression of Rishabham of Natta & Gau'a with median Ri (Natural)" என்று தெரிவித்திருக்கிறேன். நிஷாதமும், காந்தாரமும் இந்த ராகத்தின் சாயா ஸ்வரங்கள். அதனால், நிஷாதமும், காந்தாரமும் ந்யாஸ ஸ்வரங்களாக இல்லாது ஹ்ரஸ்வ ப்ரயோகமாக அனுபவத்தில் உபயோகப்படுத்தப்பட்டு, ஆரபியின் சௌந்தர்யத்திற்கு காரணமாகின்றது. அத்துடன், ரிஷபம், மத்யமம், தைவதம் ஆகிய மூன்று ஸ்வரங்களின் ஆஹத, ப்ரத்யாஹத ப்ரயோகங்களும், ஆரபி ராகத்தின் ஸஞ்சாரி பாவங்களின் அழகிற்கு இன்றியமையாதவை என்பதை ராக லக்ஷண கர்த்தாக்கள் நமக்கு விளக்கியிருக்கின்றனர்.

<u>ஆரபிமானமும் வேண்டா ஸ்ரீ த்யாகராஜர் ஆரபியில் தனி அபிமானம் கொண்டது:</u>

ஆரபி ராகம் ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்திற்கு மிகவும் பிடித்த ராகம். தனக்கு இந்த ராகத்தில் உள்ள அபிமானத்தை வெளியிட்டு, அத்புதம், காருண்யம், சாந்தம் என்ற மூன்று ரஸங்கள் கொண்ட 14 கீர்த்தனங்களை செய்து, நமக்கு ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் அருளியுள்ளார். அவைகளுள் ஒன்று, தான வர்ணரீதியில் அமைக்கப்பட்ட ஆரபி பஞ்சரத்னமான "ஸாதிஞ்சனே" என்ற கீர்த்தனம். கருணா ரஸ ப்ராதன்யம் கொண்ட மற்ற ஆரபி கீர்த்தனங்களுள் சில, பக்தர்கள், பகவானின் சோதனைக்காளாகி வருந்தும் சமயம் இருக்கும் மனோ நிலையை விவரிக்கின்றன.

மற்ற ஆரபி ராக கீர்த்தனங்கள், அத்புத ரஸத்தையும் (அடுகுவரமுல நிச்சேனு, நாத ஸுதாரஸம், ஸுந்தரி நின்னு வர்ணிம்ப ப்ரம்மாதி ஸுருலகைன தரமா ?), சாந்த ரஸத்தையும் (பதிகி மங்கள ஹார தீரே) ஸ்ருங்கார ரஸத்தையும் (ஜுதாமு ராரே ஸுததுலாரரங்கபதினி) கொண்டாடுகின்றன.

பகவானின் சோதனைக்கு ஸ்ரீ ஸத்குருஸ்வாமிகள் உட்பட்டிருந்த சமயம், இருந்த ஸ்தாயி பாவத்தில் பிறந்த ஆரபி கீர்த்தனங்கள் கருணா ரஸ ப்ரதானம் கொண்டவை. இந்த ஆரபி கீர்த்தனங்கள் பின் வருமாறு :

(1) ஸாதிஞ்சனே

(2) இபுடைன நன்னு தலசினாரா ஸ்வாமி – ப்ரஹ்லாத பக்த விஜயம்

(3) ஓ ராஜீவாக்ஷ ஓர ஜுபு லுஜுசே வேரா நே நீகு வேரா

(4) ஓராம ஓராம ஓம்கார தாம_ திவ்யநாமகீர்த்தனை

(5) சாலா கல்லலாடு கொன்ன ஸௌக்யமேமிரா

(6) நா மொரலனு வினி ஏமரவலே ?

(7) நின்னே நெர நம்மினானு நீரஜாக்ஷ நன்னுப்ரோவமு

(8) பலுக வேமி பதித பாவன கருண ஜில்கவேமி ஸுஜன ஜீவன

(9) அம்ப நினு நம்மிதி – திருவையாறு

தர்மஸம்வர்த்தினியைப் பற்றியது.

அவர், ஸ்ரீ ராமனைப் பற்றிய மேற்காணும் கருணாரஸப்ரதான கீர்த்தனங்களை ரோஸோக்தி என்ற மனோநிலையிலும் செய்ததாகவும் கூறலாம். இந்த கீர்த்தனங்களில், ஸ்ரீ ராமனை, ஸ்வாமி ! என்னைப்பலவிதமான சோதனைகளுக்கு உட்படுத்தி, மேலும் மேலும் வருந்துமாறு செய்து, வேடிக்கை பார்ப்பது சரிதானா என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், கோபத்துடனும், சோகத்துடனும் கேட்டார். நானோ, உன்னையே நம்பி, நீ உற்ற துணை, ரக்ஷிக்கும் ப்ரபு என்று இருக்கிறேன். நீயோ உன் முகத்தை காண்பிக்காமல், பிகு செய்து கொண்டு, ஸமயத்திற்கு தகுந்தவாறு பேசிக் கொண்டு ஒடி மறைகிறாய். ப்ரணவத்தில் ஆதாரமாய் நிற்கும் ராமசந்த்ரா ! உன்னையே எனக்கு ஆதாரமாக கருதி வரும் என்னை அல்லல் படுத்துவதில் உனக்கு என்ன ப்ரயோஜனம் ? என்னை ரக்ஷிக்கிறேன் என்று அடிக்கடி சொல்லிவிட்டு, இப்போது மறைந்து விட்டாயே ? நீ முதலில் சொன்ன வாக்யங்கள் பொய்யா ? நீ செய்வது ந்யாயமா ? தாய் தந்தையாக நான் இருக்கும் போது, உனக்கு பயம் ஏதும் இல்லை என்று என்னிடம் அடிக்கடி சொல்லி வந்தாயே ! உன் அருள் வேண்டி நான் நிற்கும் இந்த சமயத்தில், நீ மறைந்து விட்டாயே ? நல்லோரின்

உயிர் நிலையான நீ, என்னைக் கைவிடுதல் தகுமா? பலவிதமாக உன் அருளை நான் வேண்டினும், நீ மௌன வ்ரதம் ஏன் அனுஷ்டிக்கிறாய்? உன்னை எவ்வளவு ப்றார்த்தித்தும், உன்னிடம் எவ்வளவு அன்பு செலுத்தியும், நீயே கதி என்று உன் பாதங்களை கெட்டியாகப் ப்ற்றியும், உன்னை ஆடிப்பாடி பலவிதமாக தொழுதும், நீ வாய் திறவாததேன் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தன் ஆரபிராக கீர்த்தனங்களில் ஸ்ரீ ராமசந்த்ரனிடம் கேட்டார். ஈஸ்வர க்ருபை கிடைக்காத நிலையில், ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், தனக்கு முன் சென்ற மற்ற ஒரு ராம பக்தரான ஸ்ரீ பத்ராசலராமதாஸ் போல் கோபித்தும், கெஞ்சியும் பல விதமாக ஸ்ரீ ராமனிடம் பேசி, கடைசியாக கருணைக் கடலான நீ விரைந்து என் ரக்ஷணத்திற்கு வராவிடில், என்னால் இந்த வாழ்க்கையை ஸஹிக்க முடியாது. நீயே கதி என்று உன்னை மஹாவிஸ்வாஸத்துடன் நம்பி சரணாகதி செய்திருக்கும் என்னை தயவு செய்து காப்பாற்று என காருண்ய ரஸம் ததும்பும் ஸாஹித்ய வாக்யங்கள் கொண்ட ஆரபிராக கீர்த்தனங்கள் மூலம் ப்றார்த்தித்துக் கொண்டார். காருண்ய ரஸப்ரதானம் கொண்ட தீனாக்ரந்தன கீர்த்தனங் களுள், தலைமையானது "ஸாதிஞ்செனே" என்ற ஆரபி கீர்த்தனம்.

<u>ஆரபி பஞ்சரத்னத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனை ஸ்ரீ ராமசந்த்ரனாக ஸேவித்துக் கொள்வது:</u>

'यद्भूतं भवच्च भविष्यच्च' என்று ப்ருஹதாரண்யக உபநிஷத்தால், பகவான், முன் சென்றவை, தற்போது உள்ளவை, இனி மேல் ஏற்படக்கூடியவை ஆகியவைகளின் ஸ்வரூபமாக உள்ளான் என அறிகிறோம். முன் சென்றவை ஆகியவை பகவானின் அவதாரங்களான மத்ஸ்ய, கூர்ம, வராஹ, ந்ருஸிம்ஹ,

ராம, க்ருஷ்ணன் என்பவை. இந்த அவதாரங்களை எடுத்த ஹரியை, வேதமும், ராமாயணமும், புராணங்களும், மஹாபாரதமும் ஆதியிலும், நடுவிலும், முடிவிலும் கொண்டாடுகின்றன எனப் பின்வரும் ஸ்லோகம் சொல்கிறது :

वेदे रामायणे चैव पुराणे भारते तथा।
आदावन्ते च मध्ये च हरिः सर्वत्र गायते ॥

வேதே ராமயணே சைவ புராணே பாரதே ததா
ஆதாவந்தே ச மத்யேச ஹரி : ஸர்வத்ர காயதே

"வேத ஸாஸ்த்ரோபநிஷத் விதுடைன நிஜதாரினி பட்டி தாலஙுடைன நாதுபை" என்று மனோரஞ்சனி ராகத்தில் ஸ்ரீ ராமனிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட, ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், அவர் வாக்கு பிரகாரம் வேதம், சாஸ்த்ரங்கள், உபநிஷத்துக்கள், இவைகளை நன்கு கற்றுணர்ந்து, நிலைக்கும் மோக்ஷ ஸாதனத்தை குறிக்கோளாகக் கொண்டு பகவானின் தொண்டராக வாழ் நாளை கடத்தியவர். அவர் ஸ்ரீ ஹரியினுடைய அவதாரங்கள் எல்லாம் சுத்தஸத்வஸ்வரூபம் கொண்டு, அக்ஷயமாய், ப்ரக்ருதி ஸம்பந்தங்கள் ஏதும் இல்லாது, சச்சிதானந்த ஸ்வரூபமாய், நிர்தோஷமாய், நிஷ்களங்கமாய் உள்ளவை என்பதையும் நன்கு அறிந்தவர். இந்த தத்வங்களை விளக்கும் பின் வரும் ஸ்லோகத்தின் உண்மையையும் சந்தேஹம் இல்லாது புரிந்து கொண்டவர் அவர்:

"सर्वे नित्याः शाश्वताश्च देहास्तस्य परमात्मनः
हानोपादानरहिता नैव प्रकृतिजाः क्वचित्।
परमानन्दसन्दोहा ज्ञानमात्राश्च सर्वतः
सर्वे सर्वगुणैः पूर्णाः सर्वदोषवर्जिताः ॥

ஸர்வே நித்யா : ஸாஸ்வதாஸ்ச்ச தேஹாஸ்தஸ்ய
பரமாத்மன :
ஹானோபாதான ரஹிதா நைவ ப்ரக்ருதிஜா :
க்வசித்
பரமானந்த ஸந்தோஹா ஞான மாத்ராஸ்ச்ச ஸர்வத:
ஸர்வே ஸர்வகுணை : பூர்ணா :
ஸர்வதோஷவர்ஜிதா:"

ஸ்ரீ ஹரியின் அவதாரங்களில், பரிபூர்ண அவதாரங்கள் என்று கொண்டாடப்படும், ராம, க்ருஷ்ண அவதாரங்கள் அவரால் மிகவும் போற்றப்பட்டவை. ஸ்ரீமத்வால்மீகிராமாயணம், ஸ்ரீ பொட்டணா பாகவதம் இரண்டையும் நித்ய பாராயணக்ரந்தங்களாக உபயோகித்து வந்த ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ ராமனிடமும், ஸ்ரீ க்ருஷ்ணனிடமும் நிறைந்த பக்தி உண்டு. இஷ்ட தெய்வமாக ஸ்ரீ ராமசந்த்ரனை வரித்து ஸ்ரீ ராம நாம ஜபம் மூலம் ஸ்ரீ ஹரியை ஆராதித்த ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ராமனை, க்ருஷ்ணரூபம் எடுத்துக் கொண்டு தன் முன் நின்று ஸேவை அளிப்பவனாகவே கண்டு கொண்டார். க்ருஷ்ண ரூபத்திலும் ராமனையே காணும் ராம சைதன்யரான ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் அனுபவத்தை பின் வரும் ஸ்லோகம் விளக்குகிறது :

श्री वैकुण्ठसहस्रमस्तकलसद्भोगासने शायिनं ।
श्री भूमीसुतयायुतं श्रितनिधिं श्रीराममूर्तिं भजे ॥
प्रसूनबाणाङ्कितमिक्षुचापं चक्राब्जपाशांकुशवंशनालम् ।
करैर्दधानं घननीलवर्णं श्रीकृष्णरूपम् प्रणमामि रामम् ॥

"ஸ்ரீ வைகுண்ட ஸஹஸ்ரமஸ்த கலஸத் போகாஸனே
ஸாயினம் 1

ஸ்ரீ பூமிஸுதயாயுதம் ஸ்ரிதநிதிம் ஸ்ரீ ராம மூர்த்திம்
பஜே 11

ப்ரஸூன பாணாங்கித மிக்ஷுசாபம்
சக்ராப்ஜபாஸாங்குஸ வம்ஸநாளம் 1
கரைர்ததானம் கன நீலவர்ணம் ஸ்ரீ க்ருஷ்ணரூபம்
ப்ரணமாமி ராமம் 11"

ஸ்ரீ வைகுண்டத்தில் ஆயிரம் தலைகள் உடைய ஆதிசேஷன் என்ற சுகமான படுக்கையில் சயனித்து கொண்டு, பூமி தேவியின் புத்ரியான ஸீதையுடன் கூடியவனாய், தன்னை சரணமடைந்தவர்களுக்கு நிதி போன்றவனான ராமன், க்ருஷ்ணரூபம் எடுத்துக் கொண்டு, கையில் அம்பு, வில், சக்ரம், தாமரை, பாஸம், அங்குசம், வேணு இவைகளை தரித்துக் கொண்டு, கரு நீலவர்ணத்துடன் ஸேவை தருகிறான். அந்த க்ருஷ்ண ரூபம் கொண்ட ராமனை நான் வணங்குகிறேன் என்று மேற் காணும் ஸ்லோகம் கூறுகிறது.

ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் க்ருஷ்ணனைப் பற்றிய நௌகா சரித்ரம் என்ற கேய நாடகத்தை செய்யும் போதும், ஹே, ரகு ராமா! உன் மற்ற ஒரு அவதாரமான க்ருஷ்ணனைப் பற்றி நான் செய்திருக்கும் நாடகத்தை நீ கேள் என்று பின் வருமாறு சொன்னார் :

"காகர்லாம்புதி சந்த்ருடு ஸ்ரீ கருடகு த்யாக ராஜ
சித்த நிவேசா
நௌகா சரித மொனர் செத ஸ்ரீ காந்த சித்தகிம்பு
ஸ்ரீ ரகுராமா"

காகர்லவம்சமான கடலுக்கு சந்த்ரனைப் போல் இருக்கும் த்யாகராஜனுடைய உள்ளத்தை இருப்பிட மாகக் கொண்ட ஸ்ரீ ரகு ராமா! நௌகா சரித்ரத்தை

செய்ய ஆரம்பிக்கும் என் மீது அருள் புரி என மேற் காணும் சுந்த பத்யம் மூலம் வேண்டிக் கொண்டார்.

க்ருஷ்ணனை பற்றிச் செய்த நூலில் இஷ்டதெய்வமான ஸ்ரீ ராமனை த்யாகப்ரஹ்மம் வேண்டிக் கொள்வது, க்ருஷ்ண பக்தரான லீலா சுகர், ராமனிடம் வேண்டிக் கொண்டதற்கு சமமாகும்.

ஸ்ரீ லீலாசுகர் க்ருஷ்ணகர்ணாம்ருத ஸ்லோகம் ஒன்றில், ஸ்ரீ ராமசந்த்ரனை தர்ஸனம் பண்ணும் போது, ஐய்யா! உம்முடைய கோதண்டம் என்ற வில்லையும், பாணங்களையும் ஒரு முஹூர்த்தம் கீழே வைத்து, உமது கையில் அழகிய புல்லாங்குழலை எடுத்துக் கொள்ளும். உம்முடைய கேஸத்தில், மயில் பீலியை அணிந்து கொள்ளும். அதன் பின், க்ருஷ்ணரூபியாகி ஸேவை தரும் உம்மை நான் நமஸ்கரித்துக் கொள்கிறேன் என்று பின் வருமாறு பிடிவாதமாகச் சொன்னார்:

विहाय कोदण्डशरौ मुहूर्तं, गृहाण पाणौ मणिचारूवेणुम्।
मायुरबर्हं च निजोत्तमाङ्गे सीतापते त्वां प्रणमामि पश्चात्॥

விஹாய கோதண்டஸரௌ முஹூர்த்தம், க்ருஹாண
பாணௌ மணி சாரு வேணும்
மாயூரபர்ஹம் சநிஜோத்தமாங்கே ஸீதாபதே த்வாம்
ப்ரணமாமி பஸ்சாத்

ஸ்ரீ லீலாசுகர் போன்ற க்ருஷ்ண சைதன்யர்கள், எல்லா தெய்வங்களிலும் க்ருஷ்ணனையே கண்டார்கள்; ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் போன்ற ராம சைதன்யர்கள், க்ருஷ்ணனையும் ராமனாகவே ஸேவித்துக் கொண்டார்கள். இந்த ரீதியில்,

तमेकं गोविन्दं सच्चिदानन्दविग्रहम् (தமேகம் கோவிந்தம் ஸச்சிதானந்த விக்ரஹம்) என்று ஸ்ரீ கோபாலோபநிஷத் வணங்கும் க்ருஷ்ணனைப் பற்றி, ஒரு பஞ்சரத்னம் செய்ய ஆரம்பித்த ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம், ஆரபிராக க்ருதியில், பல்லவி, அனுபல்லவி, முதல் ஆறு சரணங்கள் வரை க்ருஷ்ண லீலைகளைப் பற்றி பாடினார். ஏழாவது சரணத்தை அடைந்த போது, இஷ்ட தெய்வ சிந்தனை மேலீட்டால், க்ருஷ்ண த்யானத்தை விட்டு ராம த்யானத்தில் மனதை திருப்பினார். எட்டாவது சரணத்தில், தீவ்ரமான ராம த்யானத்தில் ஈடுபட்டு, "ஹரே ராமசந்த்ர, ரகுகுலேஸ ம்ருது ஸுபாஷ சேஷ ஸயன" என்று ரகுகுலதிலகமாகிய ராமசந்த்ரனை நமஸ்கரித்துக் கொண்டார். மிகுந்த சரணங்களையும், ராம நாமார்ச்சனமாக அமைத்தார். க்ருஷ்ணனையும், ராமனையும் சேர்த்துக் கொண்டாடி, இங்கு ஸ்ரீ ஹரியின் இரண்டு ஸம்பூர்ண அவதாரங்களையும் ஒரே கீர்த்தனத்தில் நமஸ்கரித்துக் கொண்டார். ஸ்ரீ க்ருஷ்ணனை, "ஸாதிஞ்சனே" என்று பஞ்ச ரத்னத்தில் ஸ்ரீ ராமசந்த்ரனாகவே ஸ்ரீத்யாகப்ரஹ்மம் ஸேவித்து ஆனந்தித்தார்.

<u>ஆரபி பஞ்சரத்னத்தின் பல்லவி:</u>

"ஸாதிஞ்செனே, ஓ மனஸா" என்ற சுருக்கமான பல்லவியுடன் இந்த பஞ்சரத்னத்தை ஸ்ரீ ஸத்குரு ஆரம்பித்தார். இந்த பல்லவியின் எட்டு சங்கதிகளில், முதல் ஆறு சங்கதிகளையும் பஞ்சம எடுப்பில் அமைத்து, தான் படும் வேதனையையும், ஏமாற்றத்தையும் நமக்கு படிப்படியான வேகம் கொண்ட உணர்ச்சி அலைகள் மூலம் நமக்கு தெரிவித்தார். க்ருஷ்ண பகவான், என் அருகில் வராமலேயே இருந்து கொண்டு, தன் இஷ்ட

கார்யத்தை சாதித்துக் கொண்டானே என்று பல்லவியில் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், தன் ஏமாற்றத்தையும், மன அதிர்ச்சியையும் விளக்கினார். இந்த ஏமாற்றத்தின் படிப்படியான உத்வேகங்களை, பல்லவியின் எட்டு ஸங்கதிகளிலும் அத்புதமாக வெளிப்படுத்தினார்.

கண்ணா, நீயே எனக்கு அன்பை அளிப்பவன், நீயே எனது ஆசைகளை பூர்த்தி செய்பவன், நீயே எனக்கு நல்லறிவை கொடுப்பவன். நீயே எனது செல்வம், நீயே எனது உயிர், நீயே எனது ஆயுள், உன்னைத் தவிர வேறு ஒரு தெய்வத்தையும் தேடாது, உன்னையே ஸதா ஆராதித்து வரும் என் அருகில் வராமல், ஒதுங்கி நின்று கொண்டு உன் மனம் போல் நடந்து கொண்டு, உன் கார்யத்தை ஸாதித்துக் கொண்டு வருகிறாயே! இது ந்யாயமா என்று பல்லவியில் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் கேட்டுக் கொண்டார்.

வேதத்தின் உச்சியில் உறையும் பரம் பொருளான க்ருஷ்ணன், அழியாத வழி ஒன்றைக் காட்டும் இடையனாக இப்புவியில் தோன்றி, நயவஞ்சகப் பேச்சுகள் தன்னிடம் பேசி, ஏமாற்றி விட்டு, ஏமாற்றுபவர்களின் தலைவனாக ('धूर्तस्वामि') ஆக) நின்று கொண்டு, தன் அருகிலேயே மறுபடியும் வராது இஷ்ட கார்ய ஸித்தியை சாதித்துக் கொண்டானே? இது தகுமா என ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம் பல்லவியில் கேட்பது, நாயகி பாவம் அடைந்து, நாயகனான க்ருஷ்ணனைத் தேடிச் சோர்ந்த ஆழ்வார்களின் அனுபவத்திற்கு சமமாகும்.

பாற்கடலுக்கும், பசுக்கூட்டங்களுக்கும் நாயகனான க்ருஷ்ணன் தன்னை ஏமாற்றி விட்டு, மறைந்த அதிர்ச்சியில், அவன் இப்படியும் செய்வானா? எப்போது அவனை நான் காணப் போகிறேன் என்று ஆதுரத்துடன் ஸ்ரீ லீலாசுகர் பின்

வருமாறு கேட்டவாறு, ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மமும் கேட்டார்:

"हे देव हे दयित हे जगदेकबन्धो
हे कृष्ण हे चपल हे करुणैकसिन्धो।
हे नाथ हे रमण हे नयनाभिराम
हा हा कदा नु भवितासि पदं दृशोर्मे॥

ஹே தேவ ஹே தயித ஹே ஜகதேகபந்தோ
ஹே க்ருஷ்ண ஹே சபல ஹே கருணைக ஸிந்தோ
ஹே நாத ஹேரமண ஹே நயனாபிராம
ஹாஹா கதாநு பவிதாஸிபதம் த்ருசோர்மே"

தேவாதி தேவா! ப்ரேமஸ்வரூபா! ஸர்வ லோகங்களுக்கும் பந்துரத்னமாக விளங்குபவனே! க்ருஷ்ணா! பக்தவத்ஸல ப்ரபோ! காருண்யக்கடலே! எங்கள் யஜமானனே! கண்ணிற்கினிய திவ்ய மங்கள விக்ரஹ மூர்த்தே! உன்னைக் காணாமல் மனது ஓடிந்து நான் நிற்கிறேன். என் எதிரே எப்போது தோன்றி, என் கண்களுக்கு ஆனந்தத்தை அளிக்கப் போகிறாய்? பாசாங்குகள் பல செய்து, என்னை ஏமாற்றி கார்ய ஸித்தி அடைந்ததாக சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கிறாயே! பக்தனான என்னை இப்படி சோதிப்பது தகுமா என்று பல்லவியில் ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் தன் ஏமாற்றத்தை தெரிவித்தார்.

அனுபல்லவி வாக்யங்கள்:

"बोधिंचिन सन्मार्ग वचनमुल
बोंकु जेसि ता बट्टिनपट्टु (साधिंचने; ओ मनसा)

போதிஞ்சின ஸன்மார்க்க வசனமுல
பொங்கு சேஸிதா பட்டினபட்டு, (ஸாதிஞ்சனே,
ஓ மனஸா)

என்பது அனுபல்லவி வாக்யங்களாகும்.

"ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ" என்று கீதாச்சார்யனாக போதித்த நன்மொழிகளை பொய்யாக்கி,. நினைத்ததை அவன் ஸாதித்துக் கொண்டானே என்று தன் மனதிடம் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் சொன்னார்.

என் மனமே, அவன் பார்த்தன் தேர்த்தட்டில் அமர்ந்து சொன்னது:

"मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु।
मामेवैष्यसि सत्यं ते प्रतिजाने प्रियोऽसि मे॥

மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு
மாமே வைஷ்யஸி சத்யம் தே ப்ரதிஜானே ப்ரியோ
அஸிமே"

என்னைப்பற்றியே த்யானம் செய், என்னை விடாது ஆராதித்து வா, எனக்கே நமஸ்காரம் செய். அதனால், நீ என்னைத் தவறாது கண்டு, சேர்ந்து ஆனந்திப்பாய். சத்யமாக நான் சொல்வது ஏதென்றால், நீ எனக்கு மிகவும் ஆப்தன், உன்னை நிச்சயமாக கை விட மாட்டேன் என்று மேற் காணும் விதமாக சொல்லியதையெல்லாம் பொய்யாக்கி அருகில் வராது இருந்து கொண்டு, அபிநயம் செய்து வருகிறானே! மனதே! நான் எப்படி என்னை தேற்றிக் கொள்வேன் என்று அனுபல்லவியில் ஸ்ரீ ஸத்குரு கேட்டார்.

"सर्वगुह्यतमं भूयः श्रृणु मे परमं वचः
इष्टोऽसि मे दृढमिति ततो वक्ष्यामि ते हितम्"

ஸர்வகுஹ்யதமம் பூய: ஸ்ருணு மே பரமம் வச: ।
இஷ்டோ அஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே
ஹிதம் ॥"

என்று கீதாசார்யனாக எங்களுக்கு ஹிதோபதேஸம் செய்தானே? நான் விளக்கியிருப்பது பரம ரஹஸ்யமானதும், பவித்ரமானதும் என்றானே? நீ எனக்கு மிகவும் வேண்டியவன் ஆனதால், உனக்கு ஸர்வ மங்களங்களையும் அளிக்கும் என் திருவடிகளை அடையும் வழியைக் காண்பிக்கப் போகிறேன் என்றானே? என்னை நம்பு, என்னை ஆராதனம் செய்! என்னை மறவாது நீ இருந்தால், நான் உன்னை மறவாது, உன் அருகிலேயே எப்போதும் இருப்பேன் என்றெல்லாம் சொல்லி விட்டு, அந்த வார்த்தைகளை பொய்யாக்கி, என் அருகில் வராமலேயே, தன் கார்யத்தை ஸாதித்துக் கொண்டானே? என் மனதே! நான் என்ன செய்வேன் என்று தன் மனதிடம் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் சொன்னார். அனுபல்லவியில் தான் நினைத்ததை செய்து, என்னை தொங்க விட்டு, தன் கார்யத்தை க்ருஷ்ணன் ஸாதித்துக் கொண்டானே என்று மிகுந்த ஏக்கத்துடன் தன் மனதுடன் அவர் ஸம்பாஷித்தார்.

முதல் சரணம்:

**समयानिकि तगु माट लाडेने**

(ஸமயானிகி தகு மாட லாடெனெ) என்பது முதல் சரணம் ஆகும். இந்த சரண வாக்யத்தின் எதிரொலியை (Echo / Refrain) மற்ற ஒன்பது சரணங்களின் முடிவிலும் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் சேர்த்தார்.

ஸ்ரீ பாலக்ருஷ்ணனின் திருவிளையாடல்களை மனதில் வைத்து, ஸமய ஸந்தர்பத்திற்கு தகுந்தவாறு

அவன் பேசினான் அன்றோ என ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம் இங்கு கேட்டார்.

"அட்ல பலுகுது விட்ட பலுகுது வந்து கேமி
ஸேதுராம நீ
தொட்ல நர்பகுல நூதுவு மரிமரி தோசி
நட்லுகில்லுதுவு ஸ்ரீராம நீ"

என்று தனது அடாணா கீர்த்தனத்தில் வெளிப்படுத்திய கருத்துகளை "ஸமயானிகி தகு மாட லாடெனெ" என்ற சரண வாக்யமூலம் ஆமோதித்தார். அடாணா கீர்த்தன வாக்யங்களில், ஐய்யனே, நீ சமயத்திற்கு தகுந்தவாறு, அப்படியும் பேசுவாய், இப்படியும் பேசுவாய்! நான் அதற்கு என்ன செய்ய முடியும்? குழந்தையை தொட்டிலில் சேர்த்து நீ ஆட்டுவாய்! பின், நினைத்த சமயத்தில், நீ அதைக் கிள்ளுவாய்!

சமயத்திற்கு தகுந்தாற் போல் பேசிவிட்டு, என்னிடம் அணுகாது ஸ்ரீ க்ருஷ்ணன் தப்பிக் கொண்டான் அன்றோ என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தன் மனதிடம் சொன்னார். எனக்கு, அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று சொல்லி, என் உள்ளக் கனவை எழுப்பி விட்டு, ஓடி ஒளிந்த அந்த கபட நாடகக் கண்ணனை எப்போது நான் காணப்போகிறேன் என்று லீலாசுகர் பின்வரும் ஸ்லோகத்தில் கேட்ட விதமாக, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தன் மனதிடம் கேட்டுக் கொண்டார்:

"उदारमृदुलस्मित व्यतिकराभिरामाननं
मुदा मुहुरुदीर्णया मुनिमनोम्बुजाम्रेडितम्।
मदालस विलोचन व्रजवधूमुखास्वादितं
कदा नु कमलेक्षणं कमपि बाल मालोकये॥

உதார ம்ருதுலஸ்மித வ்யதிகராபிராமானனம்
முதா முஹுருதீர்ணயா முனிமனோம்புஜாம்ரேடிதம்

மதாலஸ விலோசன வ்ரஜவதூமுகாஸ்வாதிதம்
சுதாதுகமலேக்ஷணம் கமபி பால மாலோகயே"

இங்கு லீலாசுகர், கம்பீரம் மிகுந்த புன் சிரிப்பால் சௌந்தர்யம் நிலவும் திருமுகமுடையவனும், மிக மிக வளரும் ஆனந்தத்துடன் சாதுக்களின் மனமாகிற தாமரைகளில் அடிக்கடி துதிக்கப்படுபவனும், இளமையின் வளத்தால், மயக்கும் கண்களை உடைய் கோபிகைகளின் முகங்களால் பருகப்பெற்றவனும், தாமரைக் கண்ணனுமான இந்த விசித்ர பால கோபாலனை எப்போது நான் பார்க்கப் போகிறேன் எனக் கேட்டார்.

சமயத்திற்கு தகுந்தவாறு பேசும் க்ருஷ்ணனை தனது நௌக சரித்ரம் என்ற கேய நாடகத்தில் அதியத்புதமான ச்ருங்கார மூர்த்தியாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் விவரமாக வர்ணித்திருக்கிறார். ஆரபி பஞ்சரத்னத்தில், கோபிகைகளிடம் வஞ்சித்துப் பேசி, ஆடைகளை அபஹரித்து, யமுனா ப்ரவாஹத்தில் ஓடம் ஏறி கோபிகைகளை ஏமாற்றி கர்வபங்கம் செய்தது, கோகுலத்தில் வெண்ணையைத் திருடி, மாட்டிக் கொண்ட போது, சமயத்திற்கு தகுந்தவாறு பேசி தப்பியது ஆகிய எல்லாவற்றையும் ஞாபகப்படுத்தும் வகையில், "ஸமயானிகி தகு மாடலாடெனெ" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கேட்டார்.

<u>இரண்டாவது சரணம்:</u>

"देवकि वसुदेवुल नेगिंचिनटु (समयानिकि)

தேவகி வஸுதேவுல நேகிஞ்சி நடு (ஸமயானிகி)"

என்பது இரண்டாவது சரணத்தின் வாக்யங்களாகும்.

இங்கு தேவகி, வஸுதேவன் என்ற பெற்றோர்களுடைய தவப் புதல்வனாய் அவதாரம் செய்து, அவர்களை பல சோதனைகளுக்கு க்ருஷ்ணன் உட்படுத்தி, சமயத்திற்கு தகுந்தவாறு பேசினான் அன்றோ என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் தனது மனதிடம் கூறினார். அப்பேற்ப்பட்டவன், என் அருகில் வராமல் இருந்து, தான் நினைத்தவாறு செய்து, தன் இஷ்ட கார்யத்தை ஸாதித்துக் கொண்டானே என்று சொல்லி வருந்தினார். பெற்றோர்களுக்கு பல உபத்ரவங்கள் ஏற்படுத்திய அந்த சுந்தரப்பிள்ளை, என் போன்று அவனை நம்பி இருப்பவர்களை இது மாதிரி நடத்துவதில் ஆச்சர்யம் ஏதும் இல்லை என்று அபிப்பிறாயப்பட்டார்.

தன் பெற்றோர்களான தேவகி வஸுதேவருக்கு, ஸ்ரீ க்ருஷ்ணன் கொடுத்த ச்ரமங்களை, ஸ்ரீ நாராயணபட்டதிரி, ஸ்ரீமத்நாராயணீயத்தின் 38 வது தசகத்தில் அத்புதமாக வர்ணித்திருக்கிறார். கம்ஸனின் காராக்ருஹத்தில் அவதரித்த பகவான், வஸுதேவரை, மழைக்காலத்து இருட்டு சேர்ந்த நள்ளிரவில் யமுனை வெள்ளத்தைக் கடந்து, நந்த கோபர் மனையில், தன்னை கொண்டு விடச் சொன்னார். வஸுதேவர் என்ற அரசன், நடுநிசியில், கொட்டும் மழையில், ஆதிசேஷன் பிடித்த தன் படங்களான குடையின் அடியில் பகவானைச் சுமந்து கொண்டு, யமுனை ப்ரவாஹத்தைக் கடந்து கோகுலம் சென்று, யசோதையின் வீட்டிலே க்ருஷ்ணனை விட்டு, மிகுந்த மன வருத்தத்துடன் தேவகி இருந்த சிறைக்கு திரும்பினார். இப்படியாக பிறந்த போது கூட தன் பெற்றோர்களுக்கு, தனது நிஜ ஸ்வரூபத்தைக் காண்பித்து மறைத்தும், பின்னர் நடு நிசியாத்ரையாகிற உபத்ரவமும் கொடுத்து, "ஒருத்தி மகனாய் பிறந்து ஒருத்தி மகனாய் வளர்ந்த"

க்ருஷ்ண பரமாத்மா, நீ ஸமயத்திற்கு தகுந்தவாறு பேசுபவன் அல்லவா என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் இந்த சரணத்தில் கேட்டார்.

<u>மூன்றாவது சரணம்:</u>

"रङ्गेशुडु सद्गङ्गाजनकुडु" संगीतसाम्प्रदायकुडु (समयानिकि)

ரங்கேஸுடு சத்கங்காஜனகுடு, ஸங்கீத ஸாம்ப்ரதாயகுடு" என்பது மூன்றாவது சரணத்தின் வாக்யங்கள்.

இந்த சரண வாக்யங்களில் ஸ்ரீ க்ருஷ்ணபகவானை, "வண்டு களித்திரைக்கும் பொழில் சூழ் வருபுனல் காவிரித்தென்னரங்கன்" என்று அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்ரீ ரங்கநாதனாகக் கண்டு, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமஸ்கரித்துக் கொண்டார். ஸ்ரீ ரங்கநாதனின் ஸௌந்தர்யம் கண்டு, பரவஸம் அடைந்து ஸ்ரீ ரங்கபஞ்சரத்னம் என்ற ஆரபிராகம் சேர்ந்த ஐந்து கீர்த்தனங்களையும் ஸ்ரீ ஸ்த்குரு நமக்கு அருளியிருக்கிறார். ஆரபி ஸ்ரீ ரங்க பஞ்சரத்னத்தில், ஸ்ரீ ரங்கநாதன் ஸௌந்தர்யத்தை பின் வருமாறு அவர் விவரித்ததுமுண்டு:

"मुख निर्जित चन्द्रुडट मुद्दुमाट लाडुनट
सुख मोसङ्गि ब्रोचुनट सुन्दराङ्गुडट रङ्गनि (चुतामु रारे)

முக நிர்ஜித சந்த்ருடட முத்துமாட லாடுநட
சுக மோஸங்கி ப்ரோசுநட சுந்தராங்கடுட ரங்கனி
(ஜூதாமுராரே)

சந்த்ரனை திருமுக மண்டல அழகில் தோற்கடிப்பவன் ஸ்ரீ ரங்கநாதன்; அவன் மிகவும் மாதுர்யமாக ஸம்பாஷிப்பவன்; அவன் ஜனங்களுக்கு

இன்பமளித்து, அவர்களை ரக்ஷிப்பவன். ஸர்வாங்க சுந்தரனான அவனை தர்ஸிப்போம் வாருங்கள் எனத்தனது ஆரபி ஸ்ரீ ரங்க பஞ்சரத்னத்தில் ஸேவித்துக் கொண்ட அரங்கவாணனை, "ரங்கேஸுடு" என்று இங்கு நமஸ்கரித்துக் கெர்ண்டார்.

ஸ்ரீ ரங்கநாதனை க்ருஷ்ணனாகவும் இந்த சரணத்தில் விவரித்தார். அவர் ஸ்ரீ ரங்கராஜனை, க்ருஷ்ணனாக கண்டு ஸேவித்து கொள்வது ஆழ்வார் கள் காண்பித்துக் கொடுத்த ஸம்ப்ரதாயத்தைப் பின் பற்றியது. உதாரணமாக ஸ்ரீ ரங்கேஸனை, நம்மாழ்வார் "குன்றேந்திக் கோநிரை காத்த" கிரிதர கோபாலனாக கண்டு கொண்டார். திருமழிசை ஆழ்வார், "அரங்கவாணனே கடல் கிடந்த கண்ணனே, பொன்னி சூழரங்கமேய பூவை வண்ணனே" என்று ஸேவித்துக் கொண்டு, க்ருஷ்ண னாகவே அனுபவித்தார். திருமங்கை ஆழ்வார் ஸ்ரீ ரங்கக்ஷேத்ரத்தில் க்ருஷ்ணாவதார ரூபியாய் ஸேவை தரும் ஸ்ரீ ரங்கநாதனை,

"கஞ்சன் நெஞ்சம் கடு மல்லரும் சகடமும் காலினால்
துஞ்சவென்ற சுடராழியான் வாழுமிடம்"

என்று சொல்லி, ஸ்ரீ ரங்கத்தை கோகுலமாகவே அனுபவித்தார்.

திருப்பாணாழ்வார், கோகுலத்தில் நவனீதத்தை திருடி உண்டு, வெண்ணெய் மணம் கமழும் வாயுடைய க்ருஷ்ணனாக, ஸ்ரீ ரங்கநாதனை பின் வருமாறு ஸேவித்துக் கொண்டார்:

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ
யுண்டவாயன், என்னுள்ளம் கவர்ந்தானை

அண்டர் கோனணியரங்கன் என்னமுதினைக்
கண்ட கண்கள் மற்றென்றினைக் காணாவே"

"ஆமருவி நிரை மேய்த்தவணிய ரங்கத்தம்மானை", ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் மற்ற ஒரு பஞ்சரத்னத்தில் "ஓ ரங்க ஸாயி! பிலசிதே ஓ யனுசு ராராதா?" என்று கேட்டதும் உண்டு. "அன்பொடு தென் திசை நோக்கிப் பள்ளி கொள்ளும் அணியரங்கா", நான் என்னிடம் நீ வர வேண்டுமென்று கெஞ்சிக் கெஞ்சி கேட்ட போதிலும், ஏன் வர மாட்டேன் என்கிறாய் என விஜாரித்ததுமுண்டு.

"ஸாதிஞ்சனே" என்ற ஆரபி பஞ்சரத்னத்தின் மூன்றாவது சரணத்தில் "ரங்கேஸுடு ஸாதிஞ்சனே, ஸமயானிகி தகு மாட லாடெனெ ஸாதிஞ்சனே" என்று வருத்தத்துடன் சொன்னார். "தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார், பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே" என்று பெரியாழ்வார் சொன்ன பிரகாரம், ஸ்ரீ ரங்க நாதன் அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று சொல்லி, தன்னை மறந்து மறைந்ததை ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம், "ரங்கேஸுடு ஸமயானிகி தகு மாடலாடெனெ, ஸாதிஞ்சனே" என்று சொல்லி அவன் தர்ஸனத்திற்கு ஏங்கினார்.

ஸ்ரீ ரங்கநாதனை அடுத்தபடியாக "ஸத்கங்கா ஜனகுடு" என்று அழைத்து, இப்படி தகிடுதத்தம் பண்ணவாமா, நினைத்ததை ஸாதித்துக் கொண்டு, தன்னைக் கை விடலாமா எனக் கேட்டார். ஸ்ரீ ரங்கநாதனின் திருவடிகளிலிருந்து ஜனித்த கங்கையையும், அந்த கங்கையே, ஸ்ரீ ரங்கத்தில் காவேரியாக ப்ரவஹித்து, அவனைக் கண்டு

மகிழ்வதை "கோடி நதுலு தனுஷ்கோடிலோ நுண்ட, ஏடிகி திரிகேவே, ஓமனஸா" என்ற தோடி ராக கீர்த்தனத்தில், ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் விவரித்து, "ஸத்கங்கா ஜனகுடு, ரங்கேஸடு" என்ற வாக்யத்திற்கு ஆதாரம் அளித்திருக்கிறார்.

"கங்க நூபுரம்புனனு ஜனிஞ்செனு, ரங்கனி காவேரி கனி ராஜில்லெனு, பொங்குசு ஸ்ரீ ரகுநாதநுனி ப்ரேமதோ பொகடே த்யாகராஜு மனவி வினவே த்ரிவிக்ரம அவதார சமயம், ப்ரஹ்ம்மாவின் கமண்டலுஜலம், பகவானின் பாதங்களை அலம்ப உபயோகப்பட்டதும், புனித கங்கையாக மாறி ப்ரவஹித்தது என புராணங்கள் சொல்கின்றன. அப்பேற்பட்ட கங்கையை உண்டு பண்ணிய ரங்கேஸா, உன்னை நான் எப்படி மறந்திருப்பது, உன் பையன் என்று என் மேல் கருணை கூர்ந்து, அருகில் வந்து, அனுக்ரஹிக்க மாட்டாயா? ஏன் இந்த ஸாஹஸம் செய்கிறாய் என்று தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் பின் வரும் கருத்துக்கள் கொண்ட இரு பாசுரங்கள் கேட்கும் வகையில் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், க்ருஷ்ணஸ்வரூபியான ரங்கநாதனிடம் கேட்டார்.

"கங்கையிற் புனித மாய காவிரி நடுவு பாட்டு
பொங்கு நீர் பரந்து பாயும்
பூம்பொழிலரங்கந்தன்னுள்
எங்கள் மாவிறைவனீசன் கிடந்ததோர் கிடக்கை
கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேனே ழையனேழையேனே
தெளிவிலாக்கலங்கல் நீர் சூழ்
திருவரங்கத்துள்ளோங்கும்
ஒளியுளார் தாமேயன்றே தந்தையும் தாயுமாவர்,
எளிய தோரருளுமன்றே யென்திறத்தெம்பிரானார்

அளியன் நம் பையல் என்னார் அம்மவோ

கொடியவாறே"

நம் பைய்யன் தீனன், அவனை அனுக்ரஹிப்போம் என்ற எண்ணம் கொள்ளாது, மறைந்து நின்று கொடுமைகள் செய்கின்றானே! அம்மம்மா! அவனை மறந்து, ஏழையிலும் ஏழையாக நான் எப்படி இந்த புவியில் வாழ்வேன் என்று தொண்டரடிப் பொடி ஆழ்வார் தன் சோகத்தை விவரிப்பது, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் பகவானின் சோதனைக்கு உட்பட்டு, "ரங்கேஸுடு, ஸத்கங்காஜனகுடு, ஸாதிஞ்சனே" என்பதற்கு நிகராகும்.

மூன்றாவது சரணத்தின் கடைசி வாக்யத்தில் ஸ்ரீ க்ருஷ்ண ஸ்வரூபியான ஸ்ரீ ரங்கேஸனை "ஸங்கீத ஸாம்ப்ரதாயகுடு" என்று நமது ஸத்குரு விவரித்தார். ஸங்கீத ஸாம்ப்ரதாயத்தை நன்கு அறிந்தவனுமான ஸ்ரீ க்ருஷ்ண பகவான், இப்படியும் ஸாஹஸம் செய்து, தான் நினைத்ததை செய்து, முன் சொன்ன வார்த்தைகளை மறந்தானே என்று கூறி வருத்தப்பட்டார்.

பகவானின் ஸ்வரூபங்களை "अरूपं सुरूपं समस्तस्वरूपम्, परमात्मरूपम् परानन्दरूपं परन्धामरूपम्" இப்படியாக பலவிதமாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் அறிந்து தன் கீர்த்தனங்களில் கொண்டாடியிருக்கிறார். இத்தனை ஸ்வரூபங்களிலும், அவருக்கு உயரியதாகத் தோன்றியது பகவானின் நாத ப்ரஹ்மானந்த ரூபம். தலசிநந்தனே என்ற முகாரி கீர்த்தனத்தில்,

"नादब्रह्मानन्दरूप! वेदसारमौ नामधेयमुनु
तलचि नन्तने नातनुवेमो झल्लनेरा

நாத ப்ரஹ்ம்மானந்தரூப ! வேத ஸார
மௌபாமதேயமுனு
துலசி நந்தனே நாதனுவேமோ ஜல்லனேரா"

என்று சொல்லி வேதங்களின் ஸாரமான நாமமுடைய பகவானை நாதப்ரஹ்ம்மானந்த ரூபனாக ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் வணங்கிக் கொண்டார். ஸங்கீத ஸம்ப்ரதாயத்தின் சிகரமாய் விளங்கும் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை அவர் நாதப்ரஹ்ம்மமாக நமஸ்கரிக்கும் போது "கான மூர்த்தே ஸ்ரீ க்ருஷ்ண வேணுகான லோல த்ரிபுவன பால பாஹி" என்ற கானமூர்த்தி ராகக்ருதி மூலமும் ஸேவித்துக் கொண்டார். "ஸம்வித்ரூப - நாதப்ரதீபா" என்று தன் தகப்பனாரின் நண்பரான காஞ்சிபுரம் உபநிஷத் ப்ரஹ்ம்மம் பாடிப் போற்றிய வழியில், ஸ்ரீ க்ருஷ்ணதத்வத்தை புரிந்து கொண்டு, ஸ்ரீ த்யாகராஜர் "கீதார்த்தமு ஸங்கீதானந்தமு நீதாவுனஜூடரா ஓ மனஸா" என்று தன் மனதிடம் சொன்னார். வேதாந்த ஸாரமான (ஸம்வித்ரூபமான) கீதார்த்தமும், நாத ப்ரஹ்ம்மானந்த ரூபமான ஸங்கீதமும், பகவானிடத்தில் சேர்ந்து ஒன்றாகவே மிளிர்கிறது என ஸ்ரீ ஸத்குரு சொன்னார். பகவத் ஸ்வரூபத்தை இங்கு நாத ரூபமாக அறிந்து அவர் விவரித்தார். நாத யோகத்தில் திளைத்து ஸித்தியடைந்த ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், க்ருஷ்ணனை, "வேத ஸிரோமாத்ருஜ ஸப்தஸ்வர நாதாசல தீப, ஸ்வீக்ருத யாதவகுலமுரளி" வாத விநோத ! மோஹனகர !" எனவும் நமஸ்கரித்து கொண்டிருக்கிறார். வேதங்களுக்கு சிரஸ்ஸாக விளங்கும் உபநிஷத்துக்களுக்கு மாதாவான ப்ரணவ நாதத்திலிருந்து ஜனித்த ஸப்த ஸ்வரமாகிற மலையின் உச்சியில் ப்ரகாசிக்கும் தீபம் போன்றவனாக ஸ்ரீ க்ருஷ்ண பகவானைத் தனது ஹிந்தோள கீர்த்தனத்தில் ஸேவித்துக் கொண்டார்.

இப்பேற்ப்பட்ட நாத ப்ரஹ்மானந்த ரூபியாக ஸ்ரீ க்ருஷ்ணனை அனுபவித்த ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள், ஆரபி பஞ்சரத்னத்தில் "ஸங்கீத ஸம்ப்ரதாயகுடு, ஸமயானிகி தகு மாடலாடெனே" என்று ஸ்ரீ க்ருஷ்ணனை மங்களாஸாஸனம் செய்து, கண்ணா! நீ என்னிடம் தில்லு முல்லு செய்வது சரியா? முன் சொன்ன ஆதரவான வாக்யங்களை பொய்யாக்கி, நீ நினைத்ததை ஸாதித்துக் கொண்டாயே என்று வருத்தத்துடன் கூறினார்.

<u>நான்காவது சரணம்:</u>

"गोपीजन मनोरथ मोसङ्ग लेकने गेलियु जेसुडु वाडु

(கோபீஜன மனோரத மொஸங்க லேகனே கேலியு ஜேஸுடு வாடு,

ஸமயானிகி தகு மாட லாடெனே" என்பது ஆரபி பஞ்சரத்னத்தின் நான்காவது சரண வாக்யங்கள். முதல் மூன்று சரணங்களை பஞ்சம எடுப்புடன் ஆரம்பித்த ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள், நான்காவது சரணத்தை தாதா—பதபபாதபம என்ற தைவத ப்ரதமான ஸ்வராக்ஷரங்களுடன் தொடங்கினார்.

கோபிகளுடைய இஷ்டத்தை பூர்த்தி செய்து வைககாது, அவர்களை பரிஹாஸம் செய்து, திருவிளையாடல்கள் புரிந்த க்ருஷ்ணன் என்னையும் ஏமாற்றி விட்டு, சொன்னதை மறந்தானே என்று இந்த சரணத்தில் சொன்னார். அழகின் எல்லையான க்ருஷ்ணன், ஆயர் குலத்தில் உதித்த பூர்ணசந்த்ரன் போல் விளங்கி, தன் வேணு கானத்தால், கோபியர்களை மயக்கி, அவர்களின் ஆடைகளை அபஹரித்து, புன்னை மரத்தில் ஏறிக் கொண்டு, கோபியர்களை பரிஹாஸம் செய்து கொண்டு, அவர்களை கெஞ்ச வைத்து, கடைசியாக அவர்களுக்கு அனுக்ரஹம் செய்தான்.

கோபிகைகளுடன் விளையாடி, அவர்களுடைய ஆசையைப் பெருக்கி அவர்கள் தன்னை அடைய விரும்பிய போது, அவர்களை பரிஹாஸம் செய்த க்ருஷ்ணனை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், நாயகி பாவமடைந்து விவரிப்பது, பல ஆழ்வார்களின் அனுபவ ஸம்ப்ரதாயத்தில் வந்தது. உதாரணமாக, பெரியாழ்வார்,

"குடங்களெடுத்தேற விட்டுக் கூத்தாட வல்ல
வெங்கோவே,
மடங்கொள் மதிமுகத்தாரை மால் செய்யவல்லவென்
மைந்தா"

என்று யசோதா முகமாக ஸேவித்துக் கொண்டார்.

கோபிகைகள் நடுவில் வந்து குழல் ஊதி, அவர்கள் உள்ளத்தைக் கிளற விட்டு, அவர்களை தவிக்க விட்டு, அவர்களை பரிஹாஸம் செய்து, அவர்களுடைய ஆசைகளை பூர்த்தி செய்யாது மறையும் க்ருஷ்ணனை "கோபீ ஜன மனோரதமொஸங்க லேகனே கேலியு ஜேஸே வாடு" என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கூறுவதின் எதிரொலியை ஸ்ரீ பெரியாழ்வாரின் பின் வரும் பாசுரத்திலும் நாம் கேட்கிறோம்:

"குன்றெடுத்தாநிரை காத்தபிரான் கோவலனாய்க்
குழலூதியூதி,
கன்றுகள் மேய்த்துத் தன் தோழரோடு கலந்துடன்
வருவானைத்
தெருவில் கண்டு, என்றுமிவனையொப்பாரை
நங்காய் கண்ட
றியேன் ஏடி வந்து காணாய், ஒன்றும் நில்லாவளை
கழன்று
துகில் ஏந்தின முலையுமென் வசமல்லவே"

ஆய்க்கன்னிகள் கண்ணனிடம் காமுற்று, தங்கள் இச்சை நிறைவேறாது இருந்த சமயம், அவர்களை பரிஹாஸம் செய்து, கண்ணன் ஏமாற்றி, விலகிச் சென்றதை ஞாபகப்படுத்திக் கொண்டு, தன்னையும் ஒரு கோபியாக நினைத்துக் கொண்டு, அவர்கள் பட்ட வேதனையைத் தானும் அனுபவித்து "தீராத விளையாட்டுப் பிள்ளையான கண்ணன்" பெண்களுக்கு அளித்த தொல்லைகளை ஸ்ரீ ஸத்குரு குறிப்பிட்டார். ஆய்ச்சிறுமிகளை தன்னிடம் காமுறச் செய்து, அவர்களுடைய ஆசைக் கனலை வளர்த்து, அவர்களை ஏமாற்றித் தடுமாறச் செய்த கண்ணனை பாரதியாரும் பின் வருமாறு அழகாக விவரித்திருக்கிறார்:

"அழகுள்ள மலர் கொண்டு வந்தே — என்னை
அழ அழச் செய்து பின், "கண்ணை மூடிக் கொள்
குழலிலே சூட்டுவேன்" என்பான் — என்னை
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான் (தீராத
விளையாட்டுப் பிள்ளை)
கோளுக்கு மிகவுஞ் சமர்த்தன் — பொய்மை
குத்திரம் பழிசொலக் கூசாசழக்கன்;
ஆளுக்கிசைந்தபடி பேசித் — தெருவில்
அத்தனை பெண்களையும் ஆகாதடிப்பான் (தீராத
விளையாட்டுப் பிள்ளை)

"ஸமயானிகி தகு மாடலாடென" என்று ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் விவரித்த ஸாதகனை விவரித்த ஸ்ரீ பாரதியார் "ஆளுக்கிசைந்த படி பேசும் சழக்கனாக" விவரித்தார். மற்ற ஒரு இடத்தில் பாரதியார் ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் நான்காவது சரண வாக்யங்களை அழகாக விவரித்து சித்தரித்திருக்கிறார். இங்கு கண்ணனிடம் காதல் கொண்ட கோபி, அவன்

ஏமாற்றி மறைந்ததை நினைந்து பின் வருமாறு கூறி வருந்துகிறாள் :

"வெண்கல வாணிகரின் வீதிமுனையில்
வேலிப் புறத்திலெனைக் காணடியென்றான் ;
கண்கள் உறங்கவெனுங்காரிய முண்டோ,
கண்ணனைக் கையிரண்டுங்கட்டலின்றியே ?"

அவளைக்காக்க வைத்து, அழவைத்த கண்ணன் கடைசியாக அவள் முன் தோன்றி, அவளைக் கேலி செய்து, அவளைக் கதற வைப்பதை மேலும் பாரதியார் "திக்கு தெரியாத காட்டில்" என்ற பாட்டில் பின் வருமாறு விவரித்தார்:

"பெண்ணே உன தழகைக் கண்டு – மனம்
பித்தங்கொள்ளுதென்று நகைத்தான் – அடி
கண்ணே, எனதிருகண்மணியே – உனைக்
கட்டித்தழுவ மனங் கொண்டேன்.

இப்படி பரிஹாஸம் பண்ணி, மறைந்த கண்ணனின் பிரிவாற்றாமையால் தவிக்கும் கோபியின் மன நிலையை பாரதியார்,

"கண்ணன் முக மறந்து போனால் –இந்தக்
கண்களிருந்து பயனுண்டோ ?
வண்ணப்படமுமில்லை கண்டாய் – இனி
வாழும் வழியென்னடி தோழி ?"

ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் சரண வாக்யங்கள் சுருக்கமாக சொன்ன கண்ணனின் திருவிளையாடல் களை, அவர் பின் வந்த க்ருஷ்ண பக்தரான பாரதியார் மேற்கண்டவாறு விவரமாகச் சொல்லி, கோபிகளுள் ஒருவராகத் தானுமானார்.

ஆயர் பாடியில், கோபியர்களின் மனதைக் கவர்ந்த "நந்தகோபன் மகன் என்னும் கொடிய கடிய திருமாலால்" தான் வதைக்கப்பட்டதால் ஆண்டாள் பெண்ணின் வருத்தமறியாத பெருமான், கண்ணன் என்னும் கருந்தெய்வம் என நாச்சியார் திருமொழியில் அவள் விவரித்தாள். ஆண்டாளைப் போலும், கோபிகைகள் போலும் "கருங்கண் தோகை மயிற் பீலியணிந்து, கட்டி நன்குடுத்த பீதக ஆடையுடன்" சேவை தரும் கண்ணனிடம் மனதை இழந்த ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், தன்னை பரிஹாஸம் செய்து, தட்டிக் கழிக்கும் எம்பெருமானை "கோபீஜன மனோரத மொஸங்க லேகநே கேலியு ஜேஸேவாடு" வாக ஸேவித்துக் கொண்டார்.

ஐந்தாவது சரணம்:

"ஸ்நிதப மகரிரி" என்று ஷட்ஜம எடுப்புடன் ஆரம்பமாகும் இந்த சரணத்தில், ஸ்ரீ க்ருஷ்ண பகவானை, வேத மூர்த்தியாகவும், ஸனக ஸனந்தர் ஆகிய மஹர்ஷிகளால் துதிக்கப்பட்ட ஜகதாதர புருஷனாக அறிவித்து, "ஸாரா ஸாருடு ஸனக ஸனந்தன ஸன்முனிசேயுடு ஸகலாதாருடு, ஸமயானிகி தகு மாடலாடெனெ" எனப் பாடிப் போற்றினார்.

போன சரணத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனை, கோபிகைகள் உள்ளம் கவர்ந்த ஸ்ருங்கார புருஷனாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் ஸேவித்துக் கொண்டார். இங்கு முனிகணங்களால் வணங்கப்படும் வேத ஸார புருஷனாக ஸ்ரீ ஸத்குரு நமஸ்கரித்துக் கொண்டார். கோபீ மனோஹரன், வேத மந்த்ரங்களின் உட்கருத்தாக விளங்கி, அந்த வேத மந்த்ரங்களாலும், ஸனகர், ஸனந்தர் முதலிய முனிவர்களாலும்

வணங்கப்பட்டு வருவதை ஸ்ரீ லீலாசுகரின் க்ருஷ்ண கர்ணாம்ருத ஸ்லோகம் பின் வருமாறு சரியாக விவரிக்கிறது:

मुनिश्रेणीवन्द्यं मदभरलसद्वल्लववधू
स्तनश्रोणी बिम्बस्तिमित नयनाम्भोजसुभगम्।
पुनः श्लाघाभूमिं पुलकितगिरां नैगमगिरां
घनश्यामं वन्दे किमपि कमनीयाकृति महः ॥

*முனி ஸ்ரேணி வந்த்யம் மதபரலஸத் வல்லவவதூா*
*ஸ்தேன ச்ரோணீ பிம்ப ஸ்திமித நயனாம்–*
*போஜஸுபகம்*
*புன: ஸ்லாகா பூமிம் புலகித கிராம் நைகமகிராம்*
*கனஸ்யாமம் வந்தே கிமபி கமனீயாக்ருதிமஹ:*

நீலமேக வண்ணத்துடன், மனோஹரமான வடிவு உடைய கண்ணன் என்ற ஒளிப்பிழம்பை நான் வணங்குகிறேன் என்று ஸ்லோகத்தின் கடைசிப் பாதத்தில் லீலாசுகர் சொன்னார். மற்ற பாதங்களில், அந்த பரஞ்ஜோதியான எம்பெருமானை ஸனக ஸனந்தனர் நமஸ்கரித்துக் கொள்வதை "முனிஸ்ரேணி வந்த்யம்" என மங்களாஸாஸனம் செய்தார். ஆய்க்குல கன்னியரின் அழகை ரஸித்து, அவர்களைத்தன் அழகில் மதி மயங்கச் செய்த நீலமேக வண்ணனை "மதபர லஸத் வல்லவ வதூா ஸ்தன ஸ்ரோணி பிம்ப ஸ்திமித நயன அம்போஜஸுபகம்" என நமக்கு விவரித்தார். யௌவன தசையின் அழகு மேலீட்டால், பூரித்த அங்கங்களுடைய கோபிகைகளின் ஸௌந்தர்யத்தை வைத்த விழி மாற்றாது அனுபவிக்கும் தாமரைக் கண்ணனாக பகவானை லீலாசுகர் கண்டு சொன்னார். அந்த கோபிகா ரமணனை, முனிபுங்கவர்கள் மெய்சிலிர்க்கும் ஸ்துதிகளால்

போற்றுவதையும், வேதமந்த்ரங்கள் ஸேவை செய்வதையும், "நைகமகிராம் ச்லாகாபூமிம், புலகிதகிராம் கனஸ்யாமம்" என விளக்கினார்.

ஸ்ரீ க்ருஷ்ண பகவானை "ஸாரா ஸாருடு, ஸகலாதாருடு" என்ற இரண்டு பரம அர்த்த புஷ்டியுள்ள நாமதேயங்களால், வேதாத்யயனம் பண்ணிய ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் இந்த சரணத்தில் நமஸ்கரித்துக் கொண்டார். ப்ரணவ ஸ்வரூபமான பகவான் வேதத்தின் ஸாரம். ஓம் என்ற ஆதார பீஜாக்ஷர ஸ்வரூபமாய் நின்றுள்ள பகவான், யஜுர்வேத சம்ஹிதையின் முடிவில் தான் ஸாரமாக எங்குமுள்ளான் என்பதை தெரிவித்து, நாம் கடைத்தேறும் வழி காட்டியுள்ளான். இந்த யஜுர்வேதப்பகுதி பின் வருமாறு :

वायुरनिलममृतमथेदं भस्मान्तं शरीरम्।
ओउम् क्रतो स्मर। क्लिबे स्मर। कृतं स्मर॥

"வாயுரனில மம்ருதமதேதம் பஸ்மாந்தகும் ஸரீரம்
ஓம் க்ரதோ ஸ்மர க்லிபேஸ்மர க்ருதகும் ஸ்மர"

இந்த யஜுர்வேதருக்கில், வேதபுருஷனான பகவான் ஸாரமான விஷயம் ப்ரணவநாதமாகிய ஓங்காரத்தால் அறியப்படும் தான் ஒருவன் தான் என விளக்கினார். இந்த தத்வத்தையே, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், தனது நாட்டை பஞ்சரத்ன சரண வாக்யங்களில் "ஓம்கார பஞ்ஜரகீராய நம:" என்று நமஸ்கரித்துக் கொண்டார். ப்ரணவமாகிற கூண்டினுள் கிளியைப் போல் வசிக்கும் பகவானை "ஸாரா ஸாருடு" என்று இங்கு ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் கொண்டாடினார்.

இந்த ஸாராஸாரமான உண்மையையே, வேத புருஷன் மேற் காணும் ஸம்ஹிதைப் பகுதியில் பின் வருமாறு விளக்கினார் :

ஜீவனே! ப்ராணப்ரயாண சமயத்தில், ஓம் என்ற ஸாராஸாரமான ப்ரணவ நாத உச்சரணம் மூலம் என்னை அணுகு! அழியக்கூடிய உனது சரீரம், நெருப்பில் சாம்பலாகி மறைந்த போதும், நீ அழிவதில்லை. என்னை ஆதாரமாகவும், அந்தர்யாமியாகவும் கொண்ட நீ அழிவில்லாத அவிநாஸி. வேதங்களுக்கெல்லாம் ஸாரம் உபநிஷத்துக்கள். அந்த உபநிஷத்துக்களுக்கெல்லாம் ஸாரம் நான் பார்த்தனுக்கருளின கீதை. அந்த கீதையில் ஸாராஸாரமாக நான் சொன்னது.

न जायते म्रियते वा कदाचिन्नायं भूत्वा भविता वा न भूयः।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे॥

(Meaning) Your are never born; nor do you die. It is not that not having been, you again come into being. Your are unborn, eternal, changeless, ever-itself. Your are not killed when the body is killed. You are ever lasting. நீ பிறப்பு, இறப்பு இல்லாத நித்ய ஸ்வரூபன். சரீரம் அழிந்த போதிலும், என் அம்ஸமான நீ என்றும் உள்ளாய் என்பது தான் ஸாரஸாரமான விஷயம் என்று "ஸாரா ஸாருடு, ஸகலாதாருடு" என்று பரமாத்மாவை ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் தனது சரண வாக்யங்களில் ஸேவித்துக் கொண்டார்.

ஸ்ரீ க்ருஷ்ண பாகவானை "ஸகலாதாருடு" என்றும் ஸ்ரீ ஸத்குரு இந்த சரணத்தில் கொண்டாடினார். எங்கும் பரந்து, எல்லாவற்றிலும் உள் நின்று, விஸ்வாந்தர்யாமியாக உள்ள ஸ்ரீ க்ருஷ்ணஸின்

விஸ்வரூப தர்ஸனம் கொண்ட அர்ஜுனனின் பின் வரும் ஸ்துதியை மனதில் வைத்து அவனை "ஸகலாதாருடு" என ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் கூப்பிட்டார்.

"अनन्तवीर्यामितविक्रमस्त्वं सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः

அனந்தவீர்யாமிதவிக்ரமஸ்த்வம் ஸர்வம்
ஸமாப்னோஷி ததோஅஸி ஸர்வ:"

எல்லையில்லா பராக்ரமம் கொண்டு, நீ எல்லாவற்றிலும் ஊடுருவி உள்ளாய், நீயே அதனால் ஸம்பூர்ண, அகிலாண்டகோடி ப்ரஹ்ம்மாண்ட ஸ்வரூபமான "ஸகலாதாருடு" என்று அர்ஜுனன் போற்றினான். அந்த கருத்தையே, ஸாராஸாரமாக ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் நமக்கு விளக்கினார்.

"தன்னாலே தன்னுருவம் பயந்ததானாய்த்
தயங்கொளி சேர்மூவுலகும் தானாய் வானாய்
தன்னாலே தன்னுருவில் மூர்த்தி மூன்றாய்த்
தானாயனாயினான்"

என்று திருமங்கை மன்னன் நமஸ்கரித்துக் கொண்ட "புரஹர ஸரோஜபவ கேஸவாதி ரூபன்" வானாய், மண்ணாய், நீராய், விசும்பாய், ஸகலாதாரானாய் பொலிந்து நிற்பதாக ஸ்ரீ ஸத்குரு சொன்னார். அப்பேற்பட்ட "ஸாராஸாருடு, ஸகலாதாருடு," ஸமயானிகு தகு மாடலாடெனே, சமயத்திற்கு தக்கபடி பேசி மறைந்தானே என்று சொல்லி, ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் தன் வருத்தத்தை தெரிவித்தார்.

ஆறாவது சரணம்:

"वनितल सदा सोक्क जेयुचुनु म्रोक्क जेसे; परमात्मुडदियुगाक यशोद तनयुडंचु मुदम्बुननु मुद्दु बेट्ट नव्वुचुण्डु हरि (समयानिकि)

வனிதல ஸதா ஸொக்க ஜேயசுனு ம்ரொக்க ஜேஸே,
பரமாத்முடதியுகாக
யஸோத தனயுடம் முதம்புனனு முத்து பெட்ட
நௌவுசுண்டு ஹரி (ஸமயானிகி)

என்பவை ஆறாவது சரண வாக்யங்களாகும்.

யசோதா பாக்யமாய், கோகுலத்தில் திருவிளையாடல்கள் புரிந்து, கோபிகைகளின் மனதை மயக்கி, தன் தாயாரான யசோதையையும் தன் பிள்ளை மானிடப்பிள்ளை தான் பரமாத்மா அல்ல என்று நம்ப வைத்த ஸ்ரீ க்ருஷ்ணனின் புகழை இங்கு ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் பாடினார்,

"ஏரார்ந்த கண்ணியசோதை இளஞ்சிங்கம், கார்மேனிச்செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்" என்ற யசோதையின் குமாரன், ஸாக்ஷாத் நாராயணனே! இந்த பரமாத்மா, எளிமையான ஆய்க்குலத்தில் கோபிகைகளுடன் விளையாடி கோபிகாரமணன் என்ற பெயர் பெற்றான். கோபஸ்த்ரீகளின் நடுவில், முத்துஹாரத்தின் நடுவில் உள்ள மரகதம் போல் ஜ்வலிக்கும் கோபாலனை, "நந்தப்ருந்தாவனே வாஸிதா மத்யக :" என்று லீலாசுகர் விவரித்தார். அந்த நீலமேக வர்ணக் கண்ணன், கோப ஸ்த்ரீகளை எப்போதும் மோஹிக்கச் செய்து, அவர்களைத் தன் அடிமைகளாக ஆக்கிக் கொண்டதை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம்.

"வனிதல ஸதா ஸொக்க ஜேயசுனு, ம்ரொக்க-ஜேஸே" என்று விவரித்தார். யமுனை மணல் திட்டில்,

பூர்ண சந்த்ர ஒளியில், கோபிகளால் சூழ்ப்பட்ட க்ருஷ்ணன், அவர்களை மயக்கி, ராஸக்ரீடை செய்தான். அந்த சமயம், கோபிகைகளுள், இரண்டிரண்டு பேர்க்கு நடுவில் புகுந்து, அந்த இருவரும், தன் காதலனான கண்ணன் தன் பக்கத்திலேயே இருப்பதாக நினைக்குமாறு, அவர்கள் கழுத்துக்களை அணைத்துக் கட்டிக் கொண்டிருந்தான். அவர்களும் ஆடியும், பாடியும், தங்களுடன் விளையாடியும் நிற்கும் க்ருஷ்ணனிடம் தணியாத மையயல் கொண்டார்கள். கோபீமண்டல மண்டிதனாய், கோபஸ்த்ரீகளின் கூட்டத்தின் நடுவே உள்ள க்ருஷ்ணன், அவர்களை மயக்கி, அவர்கள் ஒவ்வொருவருடன் செய்த ராஸக்ரீடையை ஸ்ரீ லீலா சுகர் அழகாக பின் வருமாறு விவரித்தார் :

"அங்கனாமங்கனா மந்தரே மாதவோ
மாதவம் மாதவஞ்ச சாந்தரேணாங்கனா
இத்தமாகல்பிதே மண்டலே மத்யக:
ஸஞ்ஜகௌ வேணுனா தேவகீ நந்தன :"

ஒரு பெண்ணுக்கும், மற்ற ஒரு பெண்ணுக்கும் நடுவில் ஒரு க்ருஷ்ணனும், ஒருக்ருஷ்ணனுக்கும், மற்ற ஒரு க்ருஷ்ணனுக்கும் நடுவில் ஒரு கோபிகையாகவும், இவ்வாறு அமைக்கப்பட்ட வட்டத்தின் நடுவில் தன்னை அமைத்துக் கொண்டு, "சிறு விரல்கள் தடவிப் பரிமாறச் செங்கண் கோடச் செய்ய வாய் கொப்பளிப்ப குறுவெயர்ப்புருவம் கூடலிப்பக் கோவிந்தன் குழல்" ஊதினான். அந்த குழலோசையில் மதி மயங்கி, கோபஸ்த்ரீகள் மெய் மறந்து, கூந்தல் அவிழ்ந்து வஸ்த்ரங்கள் நழுவுவது கூடத் தெரியாது நின்றதை பெரியாழ்வார் பின் வருமாறு அனுபவித்துச் சொன்னார்.

"இடவணரை இடத்தோ ளொடு சாய்த்து இருகை
கூடப்புருவம்

நெரிந்தேற, குடவயிறு படவாய்க்கடை கூடக்
கோவிந்தன்
குழல் கொடுதின போது, மடமயில்களொடு மான்
பிணைபோலே
மங்கை மார்கள் மலர்க்கூந்தலவிழ, உடை
நெகிழுவோர் கையால்
துகில் பற்றி ஒல்கியோடரிக்கணோட நின்றனரே"

கோபிகைகளை தன் வசமாக்கிக் கொண்டு, கோவிந்தன் ராஸக்ரீடை செய்யும் சமயத்தில் செய்த வேணுகானத்தைக் கேட்ட ஆனந்தானுபவத்தை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், கோபிகைகளுள் ஒருவராகி, "வனிதல ஸதா ஸொக்க ஜேயுசனும்ரொக்கஜேஸே" எனக் கூறினார்.

கோபிகைகளின் உள்ளங்களையும், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் உள்ளத்தையும் கொள்ளை கண்ட கண்ணன், ராஸக்ரீடை முடிவில், ஆடிப்பாடி, விளையாடிய பின் மறைந்தான். எளிமையுடன் விளையாடிக் கலந்திருந்த வேணுகோபாலன், தான் பரமாத்மா என்று நினைத்து, அவர்களை விட்டுப் பிரிந்து, அவர்களுடன் சேராது ஒதுங்கி நின்றான். கோபிகைகளை மயக்கி, அடிமைகளாக்கி, பரமாத்மா என்ற பெருமிதத்தினால், அவர்களையும், என்னையும் ஏமாற்றி விட்டு எங்களுடன் சேராமல் அவன் நின்றானே என்று ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் ஆறாவது சரணம் மூலம் பின் வருமாறு சொன்னார்.

"வனிதல ஸதா ஸொக்க ஜேயுசனு ம்ரொக்கஜேஸே,
பரமாத்முடதியுகாக, ஸமயானிகி தகு மாடலாடெனே"

இப்படியாக, கோபிகைகளிடமும், தன்னிடமும் தகிடு தத்தம் செய்த கண்ணன், தன் தாயாரை எப்படி ஏமாற்றினான் என அடுத்த சரண வாக்யப்பகுதிகளில்

பின் வருமாறு விவரித்தார்:

"யஸோத தனயுடன்சுழுதம்பு நனு முத்து பெட்ட நெளவ்வுசுண்டு ஹரி". நாராயண ஹரியான க்ருஷ்ணன், யசோதையிடம் காயாம்பூவண்ணச் சிறு குழந்தை ரூபமெடுத்து, அவள் . பாலன் போல் நடித்து, மந்தஹாஸத்துடன் அவளுடைய ஆலிங்கனத்தை ஏற்றுக் கொண்டதை இங்கு விவரித்தார். யசோதை, மாயையால் தன்னை மறைத்துக் கொண்டிருந்த க்ருஷ்ணனை, சாதாரண மானிடக்குழந்தையாகவே நினைத்துக் கொண்டு, அவனைத் தாலாட்டி, பாலூட்டி, அம்புலி காட்டி, பூச்சூட்டி, நீராட்டி, அவன் தவழ்ந்து வரும் அழகு கண்டு ஆனந்தித்து, பின்னர் அவன் தளர் நடைப்பருவம் கண்டு பூரித்து, "ஆயர்கள் போரேறே அச்சோ அச்சோ" என்று த்ருஷ்ட்டி சுத்தினாள். பின் பாலக்ரீடைகள் செய்யும் சமயம், அயலகத்தார், "தாயே, யசோதே, உந்தன் ஆயர்குலத்துதித்த மாயன் செய்யும் ஜாலங்களைக் கேளடி, பாலனவ்வடி உன் மகன் ஜாலமாகச் செய்வதெல்லாம், நாலு பேர் அறியச் சொன்னால், நாணமாகுதடி" என்று புகார் செய்வதையும் கேட்டாள். தாயாருக்கே உரித்தான வாத்ஸல்யத்துடன், என் குழந்தையை பிறர் தூர்த்துவதை நான் கேட்டு ஸஹிக்க மாட்டேன் என்று சொல்லி, கண்ணனை இங்கே வா என்று கூவி அழைத்து, ஆலிங்கனம் செய்து, உச்சி முகர்ந்து ஆனந்தப்பட்டாள். இந்த அனுபவத்தை, பெரியாழ்வார் விளக்கிய பாசுரங்களில் ஒன்று பின் வருமானது :

"வருக வருக வருக இங்கே வாமன நம்பீ வருக இங்கே
கரிய குழல் செய்யவாய் முகத்துக் காகுத்த நம்பீ வருக இங்கே
அரியனிவனெனக்கின்று நங்காய் அஞ்சன வண்ணா அசலகத்தார்

பரிபவம் பேசத்தரிக்ககில்லேன் பாவியேனுக்கிங்கே
போதராயே"

மற்றொரு சமயம், வெண்ணை உண்ட மாயன் வாயில், உலகங்களை எல்லாம் கண்டு மெய் சிலிர்த்த யசோதையை அவஸர அவஸரமாகத்தன் மாயையால் மாற்றி, பரமாத்மா தன் குழந்தையாக அவதரித்துள்ளான் என்ற உண்மையை மறைத்து, மனிதக் குழந்தை என்ற எண்ணம் வரும் படி செய்து, தான் தாயை ஸ்தன்ய பானம் பண்ணிவை என்று கேட்டு, அவள் மடியில் க்ருஷ்ணன் ஏறி உட்கார்ந்தான். யசோதையும் ப்ரீதியுடன், ஸ்தன்யபானம் பண்ணி வைத்து, விளையாடிக்களைத்த கபடக்குழந்தையை தூங்கப் பண்ணினாள். இந்த அத்புத ஸம்பவங்களை ஸ்ரீ நாராயண பட்டதிரி ஸ்ரீமத் நாராயணீயத்தின் 46 வது தசகத்தில் அழகாக விவரித்திருக்கிறார். குழந்தை மண்ணை உண்டு விட்டானோ என்ற சந்தேஹத்தால், கண்ணனை வாயை திறந்து காட்டச் சொன்னாள் தாயாரான யசோதை. தாயை த்ருப்தி செய்விக்க விரும்பிய குழந்தை, வாயைத் திறந்து காட்டி, அங்கு புவனங்கள் எல்லாம் காண்பித்ததை ஸ்ரீ நாராயண பட்டதிரி பின் வருமாறு விவரித்தார்:

"पृथिवीं निखिलां न केवलं भुवनान्यप्यखिलान्यदीदृशः

ப்ருதிவீம் நிகிலாம் ந கேவலம்
புவனான்யப்யகிலான்யதீத்ருஸ:"

அந்த விஸ்வருப தர்ஸனம் கண்ட யசோதை, தன் பிள்ளை சாதாரண குழந்தை அல்ல, பகவானே குழந்தையாக அவதரித்துள்ளார் என்பதை உடனே புரிந்து கொண்டாள். அந்த நிலையை அடைந்த யசோதையை அன்பினால், மானிடக் குழந்தை என்று எண்ணம் ஏற்படுமாறு க்ருஷ்ண பகவான் செய்தார்.

உடனே, குழந்தை ஸ்தானத்தில், தன் தாயான யசோதையிடம் ஸ்தன்யபானம் பண்ணி வைக்க கேட்டு, அவளை மாயையால் மயங்க வைத்ததை, ஸ்ரீ பட்டதிரி பின் வருமாறு விளக்கினார்:

"धृततत्वधियं तदा क्षणं जननीं तां प्रणयेन मोहयन्।
स्तनमंब दिशेत्युपासजन् भगवन्नद्भुतबाल पाहिमाम्॥

த்ருத தத்வதியம் ததாக்ஷணம் ஜனனீம் தாம் ப்ரணயேன மோஹயன்
ஸ்தனம்ப திஸேத்யுபாஸஜன் பகவன்னத்புதபால பாஹி மாம்"

இப்படி யஸோதையை ஏமாற்றி, அவளுடைய சாதாரண பிள்ளை போல் நடித்த சம்பவங்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், "யஸோத தனயுடன்சு முதம்பு நனுமுத்து பெட்ட நௌவ்வுகண்டு ஹரி" என நமஸ்கரித்துக் கொண்டார். தாயான யஸோதையை ஏமாற்றி விளையாடினாற் போலவே, தன்னிடமும் கபடமாக பேசி வருந்த வைத்ததை "ஸமயானிகி தகு மாடலாடெனே" என்று தெரிவித்தார்.

ஏழாவது சரணம்:

"परम भक्तवत्सलुडु सुगुणपारावरुंडाजन्म मनघुडी कलि
बाधल दीर्चुवाडनुचु ने हदम्बुजमुन जूचु चुण्डग (समयानिकि)

பரம பக்தவத்ஸலுடு சுகுணபாராவருண்டாஜன்ம மனகுடீகலி
பாதல தீர்ச்சுவாடனுசு நே ஹ்ருதம்புஜமுன ஜூசு சுண்டக (சமயானிகி)

என்பது ஏழாவது சரண வாக்யங்களாகும்.

இங்கு க்ருஷ்ணத்யானம் கலைய ஆரம்பித்து, இஷ்டதெய்வமான ராமனின் த்யானம் தோன்றுவதற்கு முந்திய நடு நிலையில் உள்ளதாக இந்த சரண வாக்யங்களை எடுத்துக் கொள்ளலாம். க்ருஷ்ணாவதாரம் அல்லது ராமாவதாரம் பற்றிய ஸ்பஷ்ட்டமான (Explicit references) குறிப்புகளை இந்த சரண வாக்யங்களில் நாம் காணவில்லை. பொதுவாக, அவதாரங்களுக்கு ஆதாரமான ஸ்ரீமந் நாரயணத்யானமாகவே, இந்த சரணத்தை அமைத்தார்.

பகவானின் கல்யாண குணங்களை ஐந்து விதமாக பின் வருமாறு ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் இந்த சரண வாக்யங்களில் பிரித்தார் (classified & catalogued) :

(1) அவன் பக்தர்களிடத்தில் வாத்ஸல்யம் கொண்டவன்

(2) அவன் ஸத்குணக்களஞ்சியம்

(3) அவன் தோஷமேதும் இல்லாதவன்

(4) அவன் கலியுகத்தின் கொடுமையை ஒழிப்பவன்

(5) அவன் தன் ஹ்ருதய கமலத்தில் வீற்றிருப்பவன்.

"सहस्रनेत्राननपादबाहुमनन्तवीर्यं रविकोटितुल्यम् ।
स्रक्चन्दनालङ्कृतदिव्यदेहं भजाम्यहं ते हृतिविश्वरूपम् ॥

ஸஹஸ்ர நேத்ரானன பாத பாஹு மனந்தவீர்யம்
ரவிகோடி துல்யம் I
ஸ்ரக் சந்தனாலங்க்ருத திவ்யதேஹம் பஜாம்யஹம்
தேஹ்ருதி விஸ்வரூபம் II

என்றபடி தன் ஹ்ருதயகமலத்தில், கோடி சூர்ய ப்ரகாஸனாகவும், ஆயிரக்கணக்கான அங்கங்களில் குளிர்ந்த சந்தனம் பூசிக் கொண்டிருக்கும் அழகிய

சரீரமுடைய விஸ்வரூப மூர்த்தியாக அமர்ந்திருப்பவனாகத் தான் த்யானம் செய்து வரும் சமயத்தில், சமயத்திற்கு தகுந்த வாறு மழுப்பி விட்டு, ஹரி மறைந்துவிட்டானே என்று இங்கு வருத்தத்துடன் தெரிவித்தார்.

த்ருவன், ப்ரஹ்லாதன், அம்பரீஷன் ஆகிய பக்தர்களிடம் அன்பு கொண்டு, அவர்களுக்கு வைராக்யம், ஞானம் ஆகிற அனுக்ரஹங்களை செய்து, உன் கைங்கர்ய ஸாம்ராஜ்யமாகிற ஸ்ரீ வைகுண்டத்தில் சேர்த்து வைத்தாயே! உனது அந்தரங்க பக்தனான என்னிடம் ஏன் பசப்பி பேசி, சோதனை செய்கிறாய் என இந்த சரணத்தில், "பக்தவத்ஸலுடு ஸமயானிகி தகு மாடலாடெனெ" எனக் கேட்டார். பக்தவத்ஸலனான எம்பெருமானை திருமங்கை ஆழ்வார் "நச்சுவாருச்சி மேல் நிற்கும் நம்பி" என மங்களாஸாஸனம் செய்தார். அதாவது, தன்னிடம் பக்தி செலுத்துபவர்களான ஸஹஸ்ரார கமலத்தில் உறைந்திருக்கும் பெருமானாக, அவன் காட்சி தருகிறான் என ஆழ்வார் கூறினார். அதே மாதிரி, ஸ்ரீ த்யாகப்ரஹ்மமும், பக்த வத்ஸலனான உன் கல்யாண குணங்களை ஸதா நினைத்து, ஹ்ருதயத்தில் த்யானித்து வரும் என்னை பகவான் கைவிட்டானே என்று இங்கு சொன்னார்.

ஸமஸ்த கல்யாணகுணாத்மகனான ஹரியை விஷ்ணுபுராணம் பின் வருமாறு சொல்லும் வகையில் ஸர்வதோஷவர்ஜித பரிபூர்ணனாகவும், "மங்களானாம்ச மங்களம்" என்ற பரமமங்கள மூர்த்தியாகவும் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் இங்கு ஸேவித்துக் கொண்டார்.

दोषावध्युपधा-संख्या-विरुद्धैः मङ्गलैर्गुणैः ।
परिपूर्णं परं ब्रह्म शास्त्रैः जोघुष्यतेतराम् ॥

தோஷாபத்யுபதா-ஸங்க்யா-விருத்தை :
மங்களைர்குணை: I
பரிபூர்ணம் பரம் ப்ரஹ்மம ஸாஸ்த்ரை :
ஜோகுஷ்யதேதராம் II

(Meaning) The Supreme is perfect without any blemish and is full of benevolent Qualities, which are the opposite of foibles, deficiencies, conditions and Numbers. So the sastras proclaim aloud.

எண்ணற்ற நிர்தோஷ கல்யாண குணங்களுடைய பகவான் பரிபூர்ணன் என சாஸ்த்ரங்கள் உரக்க கூறுகின்றன என பராசரர் மேற் காணும் விஷ்ணு புராணஸ்லோக மூலம் சொன்னார்.

அப்பேற்ப்பட்ட ஸுகுண ஸாந்த்ரனான உன்னை கலியின் கொடுமைகளிலிருந்து விடுபட, என் ஹ்ருதயகமலத்தில் நிறுத்தி த்யானம் செய்தேன் என ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள் சொன்னார். உன்னுடைய நாமமாகிற புஷ்பங்களால் அர்ச்சித்தேன். "ஜாஜிமல்லே மந்தார ஸரோஜமுலனு மனஸார ராஜ பதமுசே த்யாகராஜனுதுனி பூஜிஞ்சக, தப்பி ப்ரதிகிபோவ தரமா, ராம! கலிலோ" என்று கேட்டேன். மல்லிகை, ஜாதி முல்லை, இருவாட்சி, தாமரை ஆகிய புஷ்பங்களை எடுத்து, உன்னை ராஜபாட்டையான அர்ச்சனை செய்து பூஜித்தால், கலியுகத்தின் கொடுமைகளிலிருந்து தப்ப முடியுமா எனக் கேட்டேன். நீயும், கலியுகத்தில் நாமஸங்கீர்த்தனம் ஒன்றாலே சுலபமாக உன்னை அடைய முடியும் என்றாய்! குருவாயூரில், க்ருஷ்ணனாக, நாலு யுகங்கிளில் எப்படி உன்னை அடையக்கூடும் என்பதை ஸ்ரீ நாரயணபட்டதிரி வாக்கு மூலமாக வெளிப்படுத்தினாய். கிருதயுகத்தில், வெள்ளை நிறம் கொண்டு, ப்ரஹ்மசாரியாக விளங்கும் உன்னை

தபஸ்ஸால் அடைய முடியும் என்றாய் ! த்ரேதாயுகத்தில், சிவப்பு நிறம் கொண்ட உன்னை, யாகயக்ஞங்களால் அடைய முடியும் என்றாய் ! துவாபரயுகத்தில் ச்யாமளவர்ணம் கொண்டு விளங்கும் உன்னை தந்த்ர ஸாஸ்த்ர பிரகாரம் ஆராதித்து அடைய முடியும் என்றாய் ! தர்மம் க்ஷீணித்து, அதர்மம் ஓங்கி உள்ள கலியுகத்தில், நீலவர்ணனாய் நிற்கும் உன்னை நாம ஸங்கீர்த்தனம் என்ற சுலபமான அப்யாஸத்தால் சிரமமின்றி அடையலாம் என்று உறுதியாகச் சொன்னாய் ! நானும் அந்த வார்த்தைகளை நம்பி, இரவும் பகலும், நாம ஸங்கீர்த்தனம் செய்து வருகிறேன். விஷய சுகங்களாகிய காடுகளில் திரிந்து சிற்றின்பங்களாகிய விஷரஸங்களை பானம் செய்து அழிந்து போகாது, உனது நாம ஸங்கீர்த்தன பலத்தின் மூலம் கலியின் உபாதைகளை ஒழிக்க (கலி பாதலதீர்சுவாடனுசுனே) ஹ்ருதயகமலத்தில் உன்னை நிர்தோஷ, நிஷ்களங்க கல்யாண குணாத்மனாக ஆராதித்து வருகிறேன். தீவ்ர பக்தியுடனும், மஹா விஸ்வாஸத்துடனும் உன்னை நம்பி வாழும் என்னிடம் சமயத்திற்கு தகுந்தவாறு பேசி நடிப்பது சரிதானா என்று ஏழாவது சரணத்தில் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் துக்கம் நிறைந்த மனோ நிலையில் விண்ணப்பித்துக் கொண்டார்.

உன்னை நம்பி நான் மோஸம் போகலாமா "நம்மக நே மோஸ போது நடரா ? நடராஜ வினுத" என்றபடியெல்லாம் சொல்லும் க்ருதிகளின் அர்த்தங்களுக்கு சமமாக, கலியுகத்தில், உன் தாள்களை சரணம் என்று அடைந்த என்னை கைவிட்டுக் கதற விடுவது ந்யாயமா ? அடாபிடியாக நடந்து நினைத்ததை ஸாதித்துக் கொண்டு, அருகில் வராமலே ஒதுங்கி நிற்கிறாயே, இது தர்மமா என இங்கு கேட்டுக் கொண்டார்.

எட்டாவது சரணம் : இஷ்ட தேவதா ப்றார்த்தனையின் ஆரம்பம்

**हरे रामचन्द्र! रघुकुलेश! मृदुसुभाष! शेषशयन! परनारीसोदराज विराजतुरगराजराजनुत! निरामयापघन! सरसीरुहदलाक्ष यनुचु वेडुकोन्न नन्नु ता ब्रोवकनु**

**(समयानिकि)**

"ஹரே ராம சந்த்ர ! ரகுகுலேஸ ! ம்ருது சுபாஷ ! ஸேஷ ஸயன !

பரநாரீ ஸோதராஜ விராஜ துரக்ராஜராஜநுத ! நிராம யாபகன !

ஸரஸீருஹதளாக்ஷயனு சுவேடு கொன்ன நன்னு தாப்ரோவகனு ! !

என்பது எட்டாவது சரணத்தின் நாமாஞ்ஜலிகள் நிறைந்த வாக்யங்கள்

ஹரே ராமசந்த்ர ! என்று கூப்பிட்டதும், தன் ராமனின் நாம உச்சாரணத்தால் ஏற்பட்ட ஆனந்தம் பொங்க, நாட்டை பஞ்சரத்னத்தில் காணப்படுவதற்கு சமமான நாமார்ச்சனையில் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் ஈடுபட்டு திளைத்தார். ஹே ராமசந்த்ரா ! ரகுவம்ஸத்தின் திலகமே ! நீ ம்ருது சுபாஷன் ! இனிய மொழிகள் பகர்ந்து, எல்லோரையும் ஆனந்திப்பவன் என நமஸ்கரித்துக் கொண்டார்.

ஸ்ரீ ராமனுடன் தன் ஸ்வப்னங்களில் சம்பாஷித்த ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளுக்கு, அவனுடைய இன் சொற்பொழியும் மாதுர்ய பூர்ணதரமான பேச்சின் ருசி நன்றாகத் தெரியும். அவனுடைய வாக்கினிமையை நவரஸ கன்னடா கீர்த்தனமான "பலுகு கண்டசக்கெரனு கருனே பணதுலார,

ஜூடரே" என்பதில், அவன் பேச்சு கல்கண்டைக் காட்டிலும் இனிமை கொண்டதாக இருக்கிறது எனச் சொன்னார். "ஏமனி மாடாடிதவோ? ராம! எவரி மனஸூ ஏவிதமோ தெலிஸி" என்ற தோடி ராக கீர்த்தனத்தில், உற்றார், உறவினர், பெற்றோர், ஸேவகர்கள், பெண்கள் இவர்கள் எல்லோரையும் ஆனந்தமடையச் செய்து, அரசர்கள், முனிவர்கள், அஷ்டதிக்பாலகர்கள், சந்த்ரன், சூர்யன் ஆகியோர் உன்னிடம் அன்புடன் ஸேவகம் செய்யுமாறு செய்து நீ எத்தனை அழகாக, ஒவ்வொருவருடைய இங்கிதமும் தெரிந்து கொண்டு, அத்தனை பேர்களுடனும் அதிராது, அழகுடன் பேசினாய் என்று கொண்டாடினார். இனிய மொழிகளுடன் ஸம்பாஷிப்பதில் பண்டிதனான நீ என்னிடம் மாத்திரம் சமயத்திற்கு தகுந்தவாறு பேசி வருகிறாயே என இந்த சரணத்தில் கேட்டார்.

"ம்ருது ஸூபாஷ" என்ற அர்த்த புஷ்டியுடன் நமஸ்கரித்துக் கொண்ட பின், மேலும் ராம நாமார்ச்சனங்களில் ஈடுபட்டு, தன்னை அனுக்ரஹிக்கத் தயங்கும் பகவானை பின் வரும் திருநாமங்களால் அழகாக கூப்பிட்டார்:

*ஸேஷ ஸயன! பரநாரீ ஸோதர! அஜவிராஜதுரகராஜ ராஜநுத! நிராமயாபகன! ஸரஸீருஹதளாக்ஷ!*

"இருளரியச் சுடர்மணிகளிமைக்கும் நெற்றி
யினத்துத் தியணிபணமாயிரங்களார்ந்த
அரவரசப் பெருஞ்சோதியனந்தனென்னும்
அணிவிளங்குமுயர் வெள்ளையணையை மேவி
......பள்ளிகொள்ளும்" பகவானை

"ஸேஷஸயனா!" என்று கூப்பிட்டு ஆனந்தப்பட்டார்.

அடுத்தபடியாக ஸ்ரீ ராமனை, தனது மனைவியான ஸீதாபிராட்டியைத் தவிர உள்ள மற்ற பெண்களை ஸஹோதரிகளாக பாவித்து நடத்தும் "பரநாரீ ஸோதரனாக" நமஸ்கரித்துக் கொண்டார். பிறகு, ஸாகேத நகரீஸனான ஸீதாபதியை "அஜ விராஜ துரகராஜராஜநுத!" என ஸேவித்துக் கொண்டார். "சதுர்முக ப்ரஹ்ம்மனாலும், கருடனாலும், கஜேந்த்ர னாலும் துதிக்கப்பட்ட ராமா! நீயோ தோஷங்கள் ஏதும் இல்லாத "நிராமயாபகன" நித்யஸ்வரூபன். ப்ரஹ்ம்மா, உன்னை,

"नमोस्त्वनन्ताय सहस्रमूर्तये
सहस्रपादाक्षिशिरोरुबाहवे ।
सहस्रनाम्ने पुरुषाय शाश्वते
सहस्रकोटियुग धारिणे नम:"

என்று போற்றி, உன்னை விஸ்வரூபம் கொண்ட ஸாஸ்வத நித்ய ஸ்வரூபனாக ஸ்துதித்தார். "வைகுண்ட வஸவர்த்தினே" என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகனால் விவரிக்கப்பட்ட கருட பகவான், ஸ்ரீமந் நாராயணனுக்கடிமைப்பட்டவர். "வைகுண்ட பீடீக்ருத ஸ்கந்தம்" என்றபடி, எம்பெருமானை தன் தோளில் ஏற்றிக் கொண்டு அவருக்கு வாஹனமாக நின்று உடலாலும் ஸேவை செய்பவர். கருட பகவானுக்கு "ஸப்த ஸ்வரகதி" (सप्तस्वरगति) என்ற பெயரும் உண்டு. அதற்கு காரணம், அவர் ஏழுஸ்வரங்களுடைய ஸாமவேதத்திற்கு உறைவிடமாய் இருந்து, ஸாமவேத ரிக்குகளால் பகவானை துதிப்பதால் தான்! கஜேந்த்ரனோ பகவானை நிர்குணப்ரஹ்ம்மாக துதித்து, அந்த ஸ்தோத்ரத்தைக் கேட்டு சந்தோஷப்பட்ட. கருடாருடாரான பகவானால் ஆபத்திலிருந்து

காப்பாற்றப்பட்டவர். கஜேந்த்ரனின் ஸ்தோத்ரத்தை, ஸ்ரீ நாராயண பட்டதிரி "ஸ்தோத்ர ஸ்ரேஷ்ட்டம்" என ஸ்ரீமத் நாராயணீயத்தில் குறிப்பிட்டுக்கிறார். பகவானை நிர்குண ப்ரஹ்ம்மமாக துதிக்கும் அந்த ஸ்தோத்ரம் பின்வருமாறு:

स वै न देवासुर मर्त्यतिर्यङ् न स्त्री न षण्डो न पुमान्न जन्तुः।
नायं गुणः कर्म न सन्न चासन् निषेधशेषो जयदात्शेषः॥

ஸ வை ந தேவாஸுர மர்த்யதிர்யங்க் ந ஸ்த்ரீ
ந ஷண்டோ ந புமான் நஜந்து: I
நாயம் கண: கர்ம ந ஸன்ன சாஸன் நிஷேத சேஷோ
ஜயதாத்ஸேஷ: II

மேற்காணும் பாகவத ஸ்லோகம், கஜேந்த்ரன் பரம் பொருள் எத்தகையது என்று விவரித்ததைக் கூறுகிறது. அந்த பரம் பொருள் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல; தேவனும் அல்ல, அஸுரனும் அல்ல; மிருகம், பக்ஷி, புழு, பூச்சி வகைகள் ஆனதும் அல்ல; அந்த பரமாத்மா குணமும் அல்ல; கர்மாவும் அல்ல, ஸத்துமல்ல அஸத்துமல்ல; இத்தனையும் இல்லாது, மிகுந்த எது உள்ளதோ, அந்த பரம் பொருள் எனது ரக்ஷணத்திற்கு வர வேண்டும் என கஜேந்த்ரன் துதித்தான். இந்த ஸ்துதியை கேட்ட தெய்வங்களுள் விஸ்வதாகுதவாஹனான ஸ்ரீமந்நாராயணன் ஒருவரே கஜேந்த்ரனின் விவரணத்திற்கு சமானமான தெய்வமானதால், தன் பக்தனின் ரக்ஷணத்திற்கு கருடாருடராய் ஓடோடியும் வந்தார்.

"அஜவிராஜ துரகராஜராஜநுத" என்று ஸ்ரீ ராமசந்த்ரனை ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் கூப்பிடுவதற்கு காரணம், காஞ்சீபுரத்தில் ப்ரஹ்ம்மாவின் யாகத்தைக் காக்க விரைந்து வந்த மாதிரியும், கஜேந்த்ரனை ரக்ஷிக்க கருடன் மேல் வேகமாக வந்து ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொடுத்த மாதிரியும், அவன் தன்

ரக்ஷணத்திற்கு தாமதம் இல்லாமல், விரைந்து வர வேணும் என்ற ஆவலினால் தான் !

தாமரைத் தடாகம் ஓடிவந்து, முதலை வாயிலிருந்து, கஜேந்த்ரனைக் காப்பாற்றிய கஜேந்த்ர வரதனை அடுத்தபடியாக "ஸர்ஸீருஹதளாக்ஷ" என நமஸ்கரித்துக் கொண்டார். தாமரைக் கண்ணா, உன்னை ரகு குலேஸ, ம்ருது ஸுபாஷ, ஸேஷ ஸயனா ! பரநாரீ ஸோதர ! அஜவிராஜ துரகராஜ ராஜநுத ! நிராமயாபகன ! ஸரஸீருஹதளாக்ஷ என்றெல்லாம் ஸ்துதித்து வரும் என்னைக் காப்பாற்றாமல், ஸமயத்துக்கு தகுந்த படி பேசி ஏமாற்றி வருகிறாயே (.....ஸரஸீருஹதளாக்ஷயனுசு வேடு கொன்ன நன்னுதாப்ரோவகனு, ஸமயானிகி தகு மாடலாடெனே) என்று கேட்டார்.

<u>ஒன்பதாவது சரணம்</u>:

"श्री वेङ्कटेश ! स्वप्रकाश ! सर्वोन्नत ! सज्जनमानसनिकेतन ! कनकाम्बरधर ! लसन्मकुटकुण्डलविराजित ! हरेयनुच ने पोगडगा त्यागराजगेयुडु मानवेन्द्रुडैन रामचन्द्रुडु (समयानिकि दगु माट लाडेने)

ஸ்ரீ வெங்கடேஸ ! ஸ்வப்ரகாஸ ! ஸர்வோந்நத ! ஸஜ்ஜனமானஸ நிகேதன ! கனகாம்பரதர ! லஸன்மகுட குண்டலவிராஜித ! ஹரேயனுசு நே பொகடகா த்யாகராஜகேயுடு மானவேந்த்ருடைன ராமசந்த்ருடு (ஸமயானிகி தகு மாட லாடெனே)" என்பது ஒன்பதாவது சரண வாக்யங்கள்.

இங்கு ஸ்ரீ ராமசந்த்ரனை பாபங்களை அழிக்கும் ஸ்ரீ வேங்கடாத்ரி சிகர விபுவாகவும், தன்னிகர் இல்லாது, எல்லா ஜோதிகளுக்கும் ஒளி அளிக்கும் ஸ்வப்ரகாஸனாகவும், எல்லா தெய்வங்களையும் விட உன்னதமான ஆதி தெய்வமாகவும், ஜ்வலிக்கும் க்ரீடம், குண்டலங்கள், பீதாம்பரம் என்ற பட்டாடை

முதலியவைகள் அணிந்த மங்கள மூர்த்தியாகவும், ஸாதுக்களின் மனதில் கோயில் கொண்டிருக்கும் யஜமானனாகவும் துதித்தார். ஹரி! இப்படியெல்லாம் உன்னைப் போற்றி வாழ்நாளை கழித்து வரும் என்னிடம் புருஷோத்தமனான நீ கருணை கூர்ந்து இரங்காது, ஸமயத்துக்கு தகுந்தவாறு பேசிக் கொண்டு, ஒதுங்கி நின்று கொண்டு விளையாடுகிறாயே? நீ ஸாதித்துக் கொள்வது சரிதானா என் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், தன் இஷ்ட தெய்வமான ராமசந்த்ரனிடம் உருக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

பத்தாவது சரணம்:

பரம காருணீகனான ஸ்ரீ ராமசந்த்ரன் என்னருகில் வராமலேயே தன் இஷ்டத்தை ஸாதித்துக் கொண்டானே என்று மறுபடியும் சொல்லி, அவன் மோக்ஷ ஸாதனத்திற்கு காட்டிக் கொடுத்த வழிகளை செவ்வனே தான் கடைபிடித்ததாக ஸ்ரீ ராமசந்த்ரனுக்கு ஞாபகப்படுத்தினார்.

"सद्भक्तुल नडत लिट्ल नेने यमरिकगा ना पूज गोनेने,
यलुग वदृनेने, विमुखलतो जेर बोकु मनेने, वेत
गलिगिते ताळुकोम्मनेने, दमशमादि सुखदायकुडगु
श्री त्यागराजनुतुड्डु चेंत राकने (समयानितिकि दगु माड लाडेने)

ஸத்பக்துல நடத லிட்லனெனெ அமரிகா
நாபூஜகொனெனெ,
யலுக வத்தனெனெ, விமுகலதோ ஜேர
போகுமனெனெ,
வேத கலிகிதே தாளுகோம்மனெனெ, தமஸமாதி
சுகதாயகுடகு
ஸ்ரீத்யாகராஜனுதுடு செந்தராகனே (ஸமயானிகி தகு
மாடலாடெனெ)

என்பது ஆரபி பஞ்சரத்னத்தின் கடைசி சரண வாக்யங்களாகும்.

"யோகினாம் ஞானசந்த்ர: ஸ்ரீ ராமசந்த்ர:" என்று ஸேவித்துக் கொள்ளப்பட்ட ரகுநாதன், "भक्तानामभयप्रदं भयहरं पापौघविध्वंसिनं" என்றபடி பக்தர்களுக்கு அபயப்ரதானம் அளிப்பதையே வ்ரதமாகக் கொண்டவன், பாபங்களை அழித்து பக்தர்களின் பீதியை விலக்குபவன். அப்பேற்ப்பட்ட ரகுராமன், ஸத்பக்தர் களுடைய ப்ரவ்ருத்தி, குணம், அனுஷ்ட்டானம் எல்லாவற்றையும் அழகாக எடுத்துச் சொல்லி, எனக்கு வழி காட்டி மறைந்தானே என்ற கருத்தை "ஸத்பக்துல நடதலிட்லனெனெ" என்ற சரண வாக்யப் பகுதி மூலம் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கூறினார். "सर्वस्य प्रभुमीशानं सर्वस्य शरणं सुहृत्" என்ற ராம சந்த்ர ப்ரபு, என்னுடைய பூஜையை பரிபூர்ணமாக ஏற்றுக் கொண்டானே! பூஜையை ஏற்றுக் கொண்ட போதிலும், தன் அனுக்ரஹ விசேஷத்தை அளிக்காது, ஒதுங்கியே நிற்கிறானே? ஸ்ரீ ராம ராம ராம! ஸீதாபதே! உன் திருவடிகளில் அகலா பக்தி கொண்ட என்னிடம் வந்து, என் கண்ணீரை துடைத்து, என்னை அணைத்து ஆறுதலான வார்த்தைகள் சொல்லாது, சமயத்திற்கு தகுந்தவாறு பிடிபடாது பேசி வருகிறாயே? நீ இப்படி சோதனை செய்து வந்தால் என்னைக் காப்பவர் யார்? நீ என்னை விட்டு அகன்றதை என்னால் ஸஹிக்க முடியவில்லையே? பக்தி மார்க்கத்தில் எந்தவித சோதனை ஏற்பட்டாலும் பொறுத்துக் கொள் என்று சொன்னாயே? இது வரை எனக்கு அதிருப்தி அடையாதே, பயப்படாதே, துஷ்டர்களுடைய ஸஹவாஸத்தில் ஈடுபடாது, ஸன்மார்க்கத்தைக் கடைபிடி என்று சொன்னாயே? இது வரை என்னைக் கொஞ்சிக் குலாவி ரக்ஷித்த தெய்வமான நீ என்னை இப்போது நிர்தயையுடன் பரதேசியாக்கி விட்டாயே? என் மனது மகிழ எப்போதும் என்னுடன்

பேச ஏன் தயங்குகிறாய் நான் படும் வேதனை உனக்கு தெரியாதா? நீ என்னை எந்த சோதனைக்கு உட்படுத்தினாலும் உன் திருவடிகளே கதி என்று நான் உள்ளேன். "பாலமுஞ்சின நீட முஞ்சின நீ பதமுலே கதி" என்று நான் சொன்னபடி, பிறர் முன்னிலையில், நீ என்னை பாலில் அமிழ்த்தினாலும், நீரில் அமிழ்த்தி னாலும், உனது பாதாரவிந்தங்களே கதி என்று நான் என் வாழ் நாளை கடத்தி வருகிறேன்: உன் சோதனைகளை நிறுத்திக் கொண்டு, என்னை மறக்காது நீ காப்பாற்ற வேணும் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் இங்கு ஏகாந்த ராமய்யனிடம் ப்ரார்த்தித்துக் கொண்டார். ஐய்யனே! நீயோ "தம ஸமாதி ஸுகதாயகுடு" என்றபடி பொறுமை, சாந்தம் முதலிய ஸுகங்களைக் கொடுப்பவன். என்னால் துதிக்கப்பட்டவன். என்னருகிலேயே வராது ஸாதித்துக் கொண்டிருக் கிறாயே! உன்னை நம்பி நிற்கும் என்னை மறந்திருப்பது ந்யாயமா எனக் கேட்டார்.

உன்னை "பூஸம ஸாந்தம் பூஜாகாந்தம் வாரமகிலதம் த்யாகராஜ ஹ்ருத்பாந்தம்" என்று நான் துதித்து செய்த பூஜையை நீ பரிபூர்ணமாக ஏற்றுக் கொண்டாயே? பூமி தேவியைப் போலப் பொறுமையுடையவனாகவும், பூமி தேவியின் புத்ரியான ஸீதா தேவியின் நாயகனாகவும், மீண்டும், மீண்டும் வேண்டுவதெல்லாம் கொடுக்கும் வரதராஜனாகவும், என் ஹ்ருதயாகாஸத்தில் ப்ரகா ஸிக்கும் ஸ்வப்ரகாஸனாகவும் நான் உண்மையுடன் துதித்து செய்த பூஜையை நிராகரிக்காது ஏற்றுக் கொண்டு சந்தோஷப்பட்டு ஸத் உபதேஸங்கள் செய்தாயே! என் அருகில் வராமலே ஓடி ஒளிந்தாயே! சிறு வயது முதல், உன் ஆராதனம், நாம ஸங்கீர்த்தனம், தாஸ்யம் என்ற கார்யங்களில் முழுமனதுடன் ஈடுபட்டு, நீயே எல்லாமாக அறிந்து நிற்கும் என்னை மறந்திருப்பது ந்யாயம் தானா எனக் கேட்டார். "நிருபம நிர்குண ஸரஸிஜலோசன ஸ்ரீ ராம" என்னைக் கை விட்டு விடாதே.

"வரம்ருது பாஷ ஸுஸ்வரமய பூஷ வரத்யாகராஜவாக் சேவாவ்ருத", என்னிடம் தயை புரிந்து, என்னைத் தர்ஸனமாகிற ஆனந்தாம்ருதத்தை அநுபவிக்கும் பாக்யம் உள்ளவனாகச் செய் என்று வேண்டிக் கொண்டார். அம்ருதம் போன்ற மதுர மொழியை உடைய ஸ்ரீ ராம ப்ரபோ! "நாத ஸுகானலோலா, ராகவா, ராமசந்த்ரா, ராஜீவநேத்ரா, கருணாரஸ பரிபூர்ணா, கமனீயானனா! ஸுகுணநிதி, உரக ஸயனா, மதன ஜனகா" என்னிடம் வராது இருந்து கார்யத்தை ஸாதித்துக் கொள்ளாதே! என் மனதை வருத்துவதைத் தவிர, வேறு ப்ரயோஜனமும் அதனால் கிடையாது. தீனனாய், உன்னை நம்பி வாழும் என்னிடம் உடனே வந்து, என் துயரை நீ விலக்க வேணும் என பத்தாவது சரணத்தின் மூலம் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் வேண்டிக் கொண்டார்.

"एको वशी सर्वगः कृष्ण ईड्यं एकोपि सन् वहुधा यो विभाति।
तं पीठस्थं येनुभजन्ति धीरास्तेषां सुखं शास्वतं नेतरेषाम्॥

ஏகோவஸீ ஸர்வக: க்ருஷ்ண ஈட்யம் ஏகோஅபி ஸன்
பஹுதா யோ விபாதி
தம்பீடஸ்தம் யேஅனுபஜந்தி தீராஸ்தேஷாம் சுகம்
ஸாஸ்வதம் நேதரேஷாம்

உலகத்திற்கெல்லாம் ஓரே சக்ரவர்த்தியான ஸ்ரீ க்ருஷ்ணன், பல அவதாரங்களாக தோன்றி பக்தர்களுடைய மனதை சந்தோஷப்படுத்தினான். அவனை ஹ்ருதய பீடத்தில் அமர்த்தி த்யானிப்பவர்கள் நிரந்தரமான சுகத்தை அனுபவிக்கிறார்கள். மற்றவர் களுக்கு இந்த செல்வம் கிடைக்காது என்று ஸ்லோகம் கூறுகிறது. இந்த கருத்துக்களுக்கு அனுஸரணையாக ஸ்ரீ க்ருஷ்ண பகவானின் பால க்ரீடைகளைப் பற்றி பாட விரும்பிய ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், ஆரபி பஞ்சரத்ன கீர்த்தனையைச் செய்து, தனது இஷ்ட தெய்வமான

ஸ்ரீராமனின் திருவடிகளில் சமர்பித்தார். ஸ்ரீ ராம க்ருஷ்ணாவதாரங்களைக் கொண்டாடும், இந்த பஞ்சரத்னத்தை பக்தியுடன் பாடுபவர்களுக்கு ஸ்ரீ ஸத் குருவின் அனுக்ரஹமும், ஸ்ரீ ராமசந்த்ர ப்ரபுவின் அனுக்ரஹமும் கிடைப்பதில் சந்தேஹம் ஏதும் இல்லை.

உனதன்புள்ள தம்பி
சடகோபன்

சுக்லஞு ஆனி மீ26, ரோஹிணி நக்ஷத்ரம், July 1, 89.



ஸ்ரீ:

க்ஷேமம். சுக்லஞ, ஆனி மாதம் 4உ

சதுர்த்தசி திதி, கேட்டை நக்ஷத்ரம் பௌர்ணமி தினம்,

June 18, 1989.

அன்பு நிறைந்த சௌ. பத்மாவிற்கு உனது தம்பி சடகோபனின் அநேக நமஸ்காரங்கள். க்ஷேமம். இந்த கடிதத்தில், ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் நான்காவது பஞ்சரத்னமான "கன கன ருசிரா கனகவஸன நின்னு" என்பது பற்றி எழுதுகிறேன். இந்த உயரிய கீர்த்தனத்தை, நமது ஸத்குரு ஜாலவராளி என்ற ரிஷி சக்ர மேளத்தில் அமைத்தார். கடபயாதி எண்ணிக்கைக்காக, "ஜால" என்ற முன் பெயரை தன்னுடன் சேர்த்துக் கொண்ட வராளி ராகம், 39வது மேளகர்த்தா ராகம். கருணாரஸம் நிறைந்த வராளி ராகமூலம், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், ஸ்ரீ ராமனை

"कस्तूरीतिलकोज्ज्वलं स्मितमुखं चिन्मुद्रयालङ्कृतं।
सीतालक्ष्मणवायुपुत्रसहितं सिंहासनस्थं भजे ।।

கஸ்தூரீ திலகோஜ்ஜ்வலம் ஸ்மிதமுகம்

சின்முத்ரயாலங்க்ருதம் 1

ஸீதாலக்ஷ்மண வாயுபுத்ரஸஹிதம் ஸிம்ஹாஸனஸ்தம்

பஜே" 11

என்றபடி துதித்து, தான் கண்ட ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியின் சௌந்தர்யத்தை அழகான கீர்த்தன வாக்யங்கள் மூலம் பக்திபரவஸராய் விவரித்தார். தன்முன் தோன்றிய மாரகோடி லாவண்யமுடைய ஸ்ரீ ரகுராமனின் அழகை,

பின்வரும் ராமாகர்ணாம்ருத ஸ்லோகம் விவரிக்கும் விதமாக, அங்க அங்கமாக அனுபவித்து, அந்த ஆனந்தானுபவத்தை நமக்கு விளக்கினார்:

सुस्निग्धं नीलकेशं स्फुटमधुरमुखं सुन्दरभ्रूललाटं ।
दीर्घाक्षं चारुनासापुटममलमणिश्रेणिकादन्तपंक्तिम् ॥
बिम्बोष्टं कठिनतरमहोरस्कमाजानुबाहुं ।
मुष्टिग्राह्यावलग्नं पृथुजघनमुदारोरुजङ्घाङ्घ्रिमीळे ॥

ஸுஸ்நிக்தம் நீலகேஸம் ஸ்புடமதுரமுகம் ஸுந்தர
ப்ரூலலாடம் I

தீர்க்காக்ஷம் சாரு நாஸாபுடமமலமணி
ஸ்ரேணிகாதந்தபங்க்திம் II

பிம்போஷ்ட்டம் கடினதரமஹோரஸ்கமாஜானு பாஹும்

முஷ்டிக்ராஹ்யாவலக்னம்
ப்ருதுகனமுதாரோருஜங்காங்க்ரிமீளே

மேற்காணும் ஸ்லோகம் கொண்டாடும் முறையில், ஸ்ரீ ராமசந்த்ரனின் கருநீல சுழற்கற்றைகள் கொண்ட கேஸத்திலிருந்து, பரம பாவனமான பாதத் தாமரைகள் வரை காணப்படும் ஸர்வாங்க சௌந்தர்யத்தை ஸ்ரீ ஸத்குரு "கனகன ருசிரா" என்ற நான்காவது பஞ்சரத்னத்தில், தனது ஆசை தீர வராளி ராக மூலம் விவரித்துப் பாடிப் போற்றினார்.

வராளி ராக விசேஷமும், வராளியில் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் செய்திருக்கும் கீர்த்தனங்களும்:

கனபஞ்சக ராகங்களில் ப்ரதானமானது, மேள ராகமான வராளி. காந்தாரம், மத்யமம் இரண்டையும் சாயா ஸ்வரங்களாகக் கொண்ட ஸர்வ ஸ்வர கமக வரிக ராகம் வராளி. இந்த ராகத்தை நாதோபாஸனைக்காக

எக்காலத்திலும் பாடலாம் என்று சொல்வார்கள். சுத்தரிஷபம், சுத்த காந்தாரம், ப்ரதி மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம் ஆகிய ஸ்வரங்களால் அலங்கரிக்கப்படும் ராகம் வராளி. அதனால் "ரகமிதநு" என்ற ஸ்வர குறிப்புக் கொண்டஃது. "ஸகரிகமபதநிஸ–ஸநிதபமகா–ரிஸ" என்ற ஆரோஹண அவரோஹண குறிப்புகள் கொண்ட வராளியின் ரூப விசேஷத்தை பாடிக் கேட்டு புரிந்து கொள்ள வேணும். படித்து தெரிந்து கொள்ள முடியாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக, சுத்த ரிஷபம் இந்த ராகத்தின் ஸ்வரமாக இருந்த போதிலும், அனுபவத்தில் "கரிக" என்ற ப்ரயோகத்தில் சதுஸ்ருதி ரிஷபம் ஸ்புரிப்பது இயற்கை என ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது, அதனால் தான் முன்னர் "The Rishabam of Varali lies in the shadow of the powerful Gandharam; It is a point lightly touched upon in the fall from the flat Gandharam" என்று குறிப்பிடப்பட்டது.

ஆரபி ராகத்தைப் போல் வராளி ராகத்தையும், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், அநேக க்ருதிகள் செய்ய உபயோகப்படுத்தியுள்ளார். இந்த கீர்த்தனங்களில், ஸ்ரீ ரகுராமனின் ஸௌந்தர்யம், குணங்கள் இவைகளைக் கொண்டாடி, மானிட ஜன்மம் எடுத்ததின் பயன் ராம நாம ஜபமே, அவனைக் கண்ணாரக் கண்டு ஆனந்தம் கொள்ளாத நாட்கள் எல்லாம் வீணான நாட்களே, அவனை ஆராதிப்பவன் இப்புவியிலேயே ஜீவன் முக்தனாகி விடுகிறான், மரகத மணி வர்ண ராம, உன்னையே நான் சரண் அடைந்துள்ளேன் என்ற விதமான கருத்துக்கள் கொண்ட ஸாஹித்ய வாக்யங்களை

ஸ்ரீ ஸத்குரு அமைத்திருக்கிறார். நௌகா சரித்ர கீர்த்தனம் ஒன்றையும், வராளி ராகத்தில் ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம் அமைத்துள்ளார். அவர் நமக்கு அனுக்ரஹித்திருக்கும் வராளி ராக கீர்த்தனங்கள் பின் வருமாறு:

(1) இந்து கேமி ஸேது மம்ம க்ருஷ்ணுடெந்தோ மாடலாடெனம்ம – நௌகா சரித்ரம்

(2) ஈமேனு கலிகி நந்தகு ஸீதா ராம நாமமே பல்க வலெனு

(3) ஏடி ஜன்மமிதி ஹா ஓராம, ஏடி ஜன்மமிதி யெந்தகு கலிகெனு

(4) கருண ஏலாகண்டே ஈவிதமே கல்யாண ஸுந்தர ராம

(5) தரனு நீ ஸரிதைவமு கானர ரகுவர – திவ்யநாமம்

(6) நே பொகட குண்டே நீ கேமி கொதவோ நீ மனஸு தெலிஸெ கதரா ஓ ராம

(7) நோரேமி ஸ்ரீ ராம நின்னாட

(8) பாஹி பரமாத்ம ஸததம் மாம்

(9) பாஹி ரமாரமணமாம் பாஹி ஸத்குண கணஹரே ராம

(10) பவ ஸன்னுத நா தக மெந்த கனீ பவமோ

(11) மரகதமணி வர்ண ராம நன்னு மரவகு நாயன்ன நவ

(12) ராம ஸ்ரீ ராம ஜிதராம கத காம

(13) வத்தனுண்டே தே பஹு மேலு வாரிஜாக்ஷ

(14) ஸ்ரீ ராம ஜயராம ஸ்ரித ஜனரிபுபீம ஸ்ருங்கார குணதாம ஓ ராம

(15) கனகன ருசிரா கனகவஸன நின்னு

வராளி பஞ்சரத்னத்தில், மரகத மணி நிறம் கொண்ட ராமனை, ரத்னங்கள் எல்லாவற்றிலும் சிறந்த

ரத்னமாக பின் வருமாறு ராம கர்ணாம்ருத ஸ்லோகம் கொண்டாடும் விதத்தில் கொண்டாடி ஸ்ரீ த்யாக ப்ரஹ்ம்மம் அங்க ஸௌந்தர்ய த்யானத்தில் ஈடுபட்டார்:

सकलभुवनरत्नं सर्वशास्त्रार्थरत्नं
समरविजयरत्नं सच्चिदानन्दरत्नं।
दशमुखहररत्नं दानवारातिरत्नं
रघुकुलनृपरत्नं पातु मां रामरत्नं॥

ஸகலபுவனரத்னம் ஸர்வஸாஸ்த்ரார்த்தரத்னம்
ஸமரவிஜயரத்னம் ஸச்சிதானந்தரத்னம் 1
தஸமுக ஹரரத்னம் தானவாராதி ரத்னம்
ரகுகுலந்ருபரத்னம் பாது மாம்ராமரத்னம் 11

எப்படி நோக்கினும் என் முன் நிற்பது தாசரதியின் உருவம் (எந்து ஜுசினகானி தஸரத நந்தனுகா பாவிஞ்சின நாபை) என்று "எந்துகோ நீ மனஸுகரகது" என்று கல்யாணி ராக கீர்த்தன மூலம் அறிவித்த உண்மையை விளக்கி, "நளினதள நயன" கருணாரஸ பூர்ண ராமனை வராளி பஞ்சரத்னம் மூலம் ஸேவித்துக் கொண்டார்.

வராளி பஞ்சரத்னம் ஸ்ரீ ராமனின் ரூபமஹிமையைக் கொண்டாட செய்யப்பட்டது.

"ஆதித்ய இவ தேஜஸ்வீ லோககாந்த: ஸஸீயதா

..............................................................................

ரூபவான் ஸுபக: ஸ்ரீமான் கந்தர்ப இவ மூர்த்திமான்"

என்று ஆதிகவியான வால்மீகி முனிவர் நமஸ்கரித்துக் கொண்ட ஸ்ரீ ராமபிரானின் திவ்ய சௌந்தர்யத்தில் ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் எல்லையில்லாது ஈடுபட்டு, அந்த

ஆனந்த அனுபவத்தை தனது பல க்ருதிகள் மூலம் வெளிப்படுத்தி உள்ளார். அந்த வகையான கீர்த்தனங்களுள் தலை சிறந்தது, அவருடைய வராளி பஞ்சரத்ன கீர்த்தனம்.

ஸ்ரீராமன் சூர்யனைப் போல் தேஜஸ் உடையவன்; சந்த்ரனைப் போல் உலகங்க்ளை எல்லாம் தயையால் குளிரச் செய்பவன்; அழகில், உடலுடன் கூடிய அனங்கியான மன்மதன் போன்றவன் என்று மேற்காணும் ஸ்லோக மூலம் ஸ்ரீ வால்மீகி முனி சொன்னார். ஸ்ரீ வால்மீகியின் கலியுக அவதாரமான ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், மன்மதன்ன உண்டு பண்ணிய ராமனை சூர்யனையும், சந்த்ரனையும், மன்மதனையும் தேஜஸ்ஸிலும், குளிர்ச்சியிலும், ஸௌந்தர்யத்திலும் சந்தேஹமில்லாது வென்றவன் எனத் தனது கீர்த்தனங்களில் அத்புதமாக நமக்கு விளக்கியிருக்கிறார். ரகு குலத்தின் அழகிய விளக்காக அவனைத் தன் ஸௌராஷ்ட்ர ராக க்ருதியில் "ராகவான்வய ஸுப்ரதீப" என அன்புடன் அழைத்து, அந்த ராஜ ஸிகாமணியின் அப்ரமேய தேஜேஸ்வரூபம், கோடி சூர்யர்களின் தேஜஸ்ஸிற்கு மேற்பட்டது என 'ஓ ஜகந்நாதயனி நேபிலசிதே' என்ற கேதார கௌளை கீர்த்தனத்தில் பின் வருமாறு விளக்கினார்:

ராஜீவ நயன ! ராகேந்துவதன ! ராஜில்லு ஸீதாரமணி
ஹ்ருத் ஸதன ! <u>ரவி கோடிதேஜ</u> !

சந்த்ரனை நினைவுறுத்தும் திருமுகம் உடைய ராமா என்று "ராகேந்து வதன!" எனப்பட்ட ஸம்போதனத்தால் ஸேவித்துக் கொள்ளப்பட்ட ராமன், சந்த்ரனை நினைவுக்கு கொண்டு வருவது மாத்திரம் அல்லாது, அந்த

சந்த்ரனின் குளிர்ந்த அழகை கலபமாக ஜயித்தவன் எனத் தனது மோஹன ராக க்ருதியில் பின் வருமாறு சொன்னார்:

"மோஹன ராம முகஜித ஸோம முத்துக பல்குமா"

ஜகத்தையெல்லாம் உன் அழகினாலும், குணத்தாலும் மயக்கும் ராம சந்த்ர ப்ரபோ ! உன் திருமுக மண்டலத்தின் அழகு, சந்த்ரனின் அழகை வென்றதாயிற்றே என ஸ்ரீ ஸத்குரு இங்கு சொன்னார்.

சந்த்ரனின் காந்தியை ஜயித்த ராமனின் காந்தியும், அழகும் மன்மதனின் காந்தியை விட கோடி மடங்கு அதிகமானது எனத் தனது "ஸுந்தர தரதேஹம் வந்தேஹம் ராமம்" என்ற பந்துவராளி கீர்த்தனத்தில் பின்வருமாறு நமக்குச் சொன்னார்:

"குந்தரதனமாப்த குமுத ஸஸாங்கம்
கந்தர்ப ஸதகோடி காந்திமதி நிஷ்களங்கம்"

அன்பர்களுக்கு, நீலோத்பல புஷ்பத்தை மலர்விக்கும் சந்த்ரன் போல் விளங்கும் ராமன், மல்லிகை மொட்டுகள் போன்ற அழகிய வெண்ணிற பல் வரிசையுடன் ஸேவை தருகிறான்; அந்த சமயத்தில், அவன் ஸோபை நூறு கோடி மன்மதர்களின் காந்தியை விட அதிகப்பட்டதாக உள்ளது என ஸத்குரு சொன்னார்.

ஸ்ரீ ராமசந்த்ரனின் ஸுகுணோபாஸனையில் தலை சிறந்த ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், மோஹன ராமனை கோடி மன்மதர்களின் அழகு ஒன்று சேர்ந்து, திரண்டு விளங்கும் சுந்தராங்கனாக "நாபாலி ஸ்ரீ ராம பூபாலக ஸ்தோம" என்ற நவரோஸ் ராக கீர்த்தனத்தில்

பின்வருமாறு நமஸ்கரித்துக் கொண்டிருக்கிறார்:

"கோடி மன்மதுலைன ஸாடிகா நீ ஸொகஸு
நாடியுன்னதி மதினி மேடி ஸ்ரீ ராம"

உன்னுடைய ஸொகஸு (கவர்ச்சி) கோடி மன்மதர்களின் அழகை சேர்த்து பிடித்தாயிற்றே! அந்த அழகால் வசீகரிக்கப்பட்ட என் மனது உன் ஸௌந்தர்ய ரூபத்தையே காண நாடுகிறது என மேற்காணும் நவரோஸ் ராக க்ருதியின் சரணத்தில் கூறினார். அந்த சுந்தர ராமனின் அழகு மிகும் திருமுகம், தன்னை மயக்கியது போல், ஸித்தாஸ்ரமத்தில் தவம் புரிந்த முனிவர்களின் மனதையும் எப்படி மயக்கி, அவர்களை ஸ்ரீ ராமனுடைய ஸௌந்தர்யத்தில் மோஹம் கொள்ளச் செய்தது என்பதைத் தனது ஸூர்யகாந்த ராக கீர்த்தனத்தில் பின் வருமாறு அறிவித்தார்:

"முத்து மோமு ஏலாகு செலங்கேனோ
முனு வெட்லுகனி மோஹிஞ்சரோ ?"

அந்த அதிலாவண்யரூபனின் அழகு ததும்பும் திருமுகம் எப்படி விளங்கியதோ? முனிகள் அந்த மங்களதர்ஸனம் கண்டு, எவ்விதம் அவனிடம் மோஹம் கொண்டனரோ எனக் கேட்டு, முனிகணங்களில் ஒருவராகத்தானும் ஆனார்.

அவனுடைய அழகும், ஸொகஸும் தனி வகையானது. அதற்கு சமமானது எங்கும் காணமுடியாதது என்பதை, ருத்ரப்ரியா ராக கீர்த்தனமாகிய "லாவண்ய ராமா! கன்னுலாரஜூடவே, அதி லாவண்யராம" என்பதின் சரணத்தில் பின் வருமாறு

நமஸ்கரித்துக் கொண்டார்:

"நீ மனஸு நீ ஸொகஸு நீ தினுஸு வேரே;
தாமஸமத தைவமுல த்யாகராஜநுத திவ்ய
(லாவண்யராம)"

அத்புதமான சௌந்தர்ய ரூபம் உடைய ராமா! மன்மதனை அழகில் தோற்கடித்தவனே! உனது வனப்பு, மனப்போக்கு, நீ அனுக்ரஹிக்கும் முறை எல்லாம் தனி விசேஷம் கொண்டவை ஆகிற்றே! அப்படியிருக்கும் போது, தமோ குணங்கள் கொண்ட மற்ற தெய்வங்களை நாடுவானேன் என இங்கு கேட்டுக் கொண்டார்.

தனது 'ஸொகஸு ஜூடுதரமா? நீ" என்ற கன்னட கௌளை கீர்த்தனத்தில், உன்னுடைய அத்யாச்சர்யமான சௌந்தர்யம் காணக்கிடைக்கும் விஷயமா எனக் கேட்டு, ஸ்ரீ ராமனின் முன் உச்சி அழகு, திருக் கண்களின் ஒளி, மகிழம்பூமாலை அலங்கரிக்கும் மார்பு, கோவை பழத்தின் சிகப்பை ஞாபகப்படுத்தும் உதடுகள், இவற்றின் தனி அழகை பின் வருமாறு போற்றிப் பாடி ஆனந்தித்தார்:

"வரபிம்ப ஸமாதரமு வகுள ஸமம்புலயுரமு
கரத்ருத ஸரகோதண்ட மரகதாங்க வரமைன
(ஸொகஸு ஜூடுதரமா? நீ)"

ப்ரஹ்மன், இந்த்ரன், ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷன் ஆறுமுகங்கள் கொண்ட ஷண்முகன், இவர்களாலேயே உன் திருமேனி அழகை வர்ணிக்க முடியாதே! நான் எப்படி அதை வர்ணிக்க முயற்சிப்பேன் என பல கீர்த்தனங்களில் அங்கலாய்த்திருக்கிறார். உதாரணமாக பிந்து மாலினி ராக கீர்த்தனத்தில்

"எந்தமுத்தோ எந்த ஸொகஸோ, எவரி வல்ல வர்ணிம்ப தகுனோ ? எந்த வாரலைன கானி காந்த சிந்தாக்ராந்துலைனாரு" எனத் தன்னுடைய அஸக்தியை தெரிவித்தார். ராமா ! உன்னுடைய நிகரற்ற அழகையும், ஸொகஸையும் தகுந்தபடி எவரால் வர்ணிக்க முடியும் ? ஸர்வ லோகங்களையும் படைத்து ஆட்டும், உன் ஸௌந்தர்யத்தையும், ஸொகஸையும் யாராவது அறிந்து சொல்லக் கூடும் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார். "வாசாமகோசரமே, மனஸா, வர்ணிம்பதரமா" எனவும் தனது கைகவஸி ராக கீர்த்தனத்தில் ராமனின் ரூபமஹிமையைக் கொண்டாடினார். உனது அழகு வாக்கிற்கும், மனதிற்கும் அப்பாற்பட்டதாயிற்றே என இங்கு அறிவித்தார்.

மற்ற ஒரு சமயம், "இந்தனுசு வர்ணிம்பதரமா, ப்ரஹ்ம்மேந்த்ராதுலகைன, நீ ஸொகஸு", என்ற குண்டக்ரியா ராக கீர்த்தனத்தில், உனது திருமேனி அழகை இப்படிப்பட்டது என ப்ரஹ்ம்மா, இந்த்ரன் முதலியவர்களாலும் கூட வர்ணிக்க முடியுமா எனக் கேட்டார். "கந்துனி கன்ன மா சக்கனி கல்யாண ராமசந்த்ர, நீ ஸொகஸு இந்தனுத்ஸுவர்ணிம் பதரமா ? சல்லனி சூபுல கன்னுல மரி ஜாபில்வி களல சேரிணயானனமு மெல்லனி மாடலு அபயகாமுலிவி யெல்ல ஸஹஜமைன நீ குண இந்தனுத்ஸு வர்ணிம்ப தரமா ?" எனவும் இந்த கீர்த்தன சரணத்தில் அடுத்தபடியாகக் கேட்டார். "ஹே காமகோடி ரூப ராம சந்த்ரா, ஞான ஸ்வரூப ராம சந்த்ரா" என்று தனது

அடாணா ராக கீர்த்தனத்தில் அன்புடன் கூப்பிட்டு, இக, பரம் இரண்டிலும் நான் வேண்டுவது வேறு ஒன்றுமில்லை, உனது அழகிய திருமுகத்தைப் பார்க்கத் தான் ஏங்குவேன்; உன்னைத்தவிர வேறு எனக்கு யாரும் இல்லை என்று ஷண்முகப்ரியா கீர்த்தனம் ஒன்றில் பின்வருமாறு தெரிவித்தார்:

"வத்தனே வாரு லேரு, அத்தம்பு மோமுனு
ஜூடநேனைய மங்கலார்ச்சிதேஜூசி"

"ஸீதாமனோஹர, ஸ்ருங்கார ஸேகர" எனத் தான் ஆராதித்து வரும் அழகு தெய்வத்தை ரமா மனோஹரி ராகக் க்ருதி மூலம் இனிமையாக அழைத்து, ஐய்யனே! உன்னை நினைக்கும் போதும், உன் ஸௌந்தர்யத்தைக் காணும் போதும் என் உடல் சிலிர்க்கிறதே என ஒரு மோஹன ராக கீர்த்தன மூலம் தன் பரம பக்தியை பின் வருமாறு சொல்லி சந்தோஷித்தார்:

"தயரானி தயரானி தாஸரதே ராம
தலசிதே மெனெல்ல புலகரிஞ்சேனி ராம"

உன் ஸூந்தரத் திரு உருவை நினைக்க ஆரம்பிக்கும் போது என் மெய் சிலிர்க்கிறதே, அப்பா உன் அழகு அப்பேற்பட்டதல்லவா எனக் கூறினார்.

"ஹேமகுண்டல மண்டிதாமல கண்டதேஸமரிந்தமம்
ஸாதகும்ப மயூர நேத்ர விபூஷணேன விபூஷிதம்
சாருநூபுர ஹார கௌஸ்துப கர்ணபூஷண பூஷிதம்
பாநுவம்ஸ விவர்தனம் ப்ரணமாமி ராகவகுஞ்ஜரம்"

என்று ஸ்ரீ ராகவாஷ்டகம் கொண்டாடும் மத்த கஜம்

போன்ற ராமனின் திரு மேனி சௌந்தர்யத்தை கண்ணிமைகள் மூடாமல் கண்டானந்தித்த ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், தனது தன்யாஸி க்ருதியில் "ஸ்யாம சுந்தராங்க ! ஸகல சக்தியு நீவேரா" என்று வினயமாகத் தாள் பணிந்தார். கார்மேக வண்ணா ! ஸர்வாங்க சுந்தரா ! நீயே என் ஸர்வ சக்தி, நீயே என் இஷ்ட தெய்வம் என்று அறிவித்தார்.

"மனமோஹனானந்த மத சகோர நயன குந்தரதன சந்த்ர வதன சுந்தராங்க, த்யாகராஜவினுத ராமா" எனத் தனது கல்யாண வஸந்தா கீர்த்தனமான "கனுலா தகனி" என்பதில் கூப்பிட்டு, என் மனம், உனது திருவடிகளையும், கண்கள் உனது திரு உருவத்தையும், காதுகள் உன் திருநாமஸங்கீர்த்தனத்தையே நாடுகின்றன; எனது வாயில், உனது தாரக நாமத்தை ஜபிக்கவே ஜலம் ஊறுகிறது என "ராமா நீபை" என்ற கேதார ராக கீர்த்தனத்தில் பின் வருமாறு தன் பக்தாநுபவ பரவஸ நிலையை விளக்கினார்:

"மனஸூ நீ பதமுலனே ஜேகனுலு நீருபமுனே
கோர வீனுலு நீ பேருலகே நோருர தனவை இவி நீ
கருணரா"

மற்ற ஒரு காமங்களும் கலக்காத நிஷ்களங்க மனத்துடன், தான் ராமனின் ரூபத்யான சுகத்தால் அடைந்த இன்பத்தை "ஸ்மரணே ஸூகமு" என்ற ஜனரஞ்ஜனி கீர்த்தன சாஹித்ய வாக்யங்கள் மூலம் பின் வருமாறு விவரித்தார்:

"ராம நாம ஸ்ரவணமுவல்ல, நாம ரூபமே
ஹ்ருதயமுனிண்டி

ப்ரேம புட்ட சேயக லேதா நிஷ்காமத்யாகராஜு ஸேயு நாம"

ஜனங்களே ! ராம ரூபத்யானமே இன்பம் பயக்கும் அனுபவம், ராம நாமமானது செவிஸை எட்டிய தத்க்ஷணமே, ராமபிரானின் திரு உருவம் நெஞ்சை நிறைத்து ஆனந்தவாரிதியில் அமிழ்த்தும் என்று மேற்காணும் க்ருதியில் சொன்னார்.

ஜனங்களே ! முத்து மாலை அலங்கரிக்கும் வக்ஷஸ்தலத்தையும், ராமனின் பால் வடியும் திருமுகத்தையும் காணாத பிறவியினால் என்ன ப்ரயோஜனம் என ஒரு வராளி ராக கீர்த்தன வாக்யங்கள் மூலம் பின்வருமாறு கேட்டார்:

"ஏடி ஜன்மமிதி ஹா, ஓ ராம
ஸாரெகு முத்யால ஹாரயுரமு பாலு
காரு மோமுனு கன்னுலார ஜூடனிதர"

அந்த ராமனின் சுந்தரானனத்தையும், அந்த திருமுகத்தில் சேர்ந்து சோபிக்கும் கர்ண குண்டலங்களையும், அந்த திரு மேனி முன் தண்டனிட்டு மெய்மறந்து மயங்கி உள்ள முனிவர்களையும் தனது கத்ய பகுதி ஒன்றில்,

"உபய பார்ஸ்வோஜ்வலித கர்ணகுண்டல நிந்தித சந்த்ர மண்டல:, ஸேவிதமுனி மண்டல: ஸ்ரீமந்நாரயண:" என விவரித்து, வைகுண்ட வாஸியான ஸ்ரீமந் நாரயணனே மனித வேஷம் எடுத்து உலகை உய்விப்பதற்காக பூமியில் அவதரித்தான் என ஒரு சங்கராபரண திவ்ய நாம க்ருதிப் பகுதியில் பின்வருமாறு நமஸ்கரித்துக் கொண்டார்:

"வர பூஷ வம்ஸபூஷ நத போஷண
ம்ருதுபாஷணரிபுபீஷண
நர வேஷ நக பேஷண வர ஸேஷ பூஷ தோஷித அனக"

உன்னதம் மிகுந்த சூர்யகுலத்தின் மதிப்பற்ற மாணிக்கமே! பக்தரக்ஷகனே! இன்புறச் சம்பாஷிப்பவனே, உன் எதிரிகளை யுத்தத்தில் நடுங்கி ஓடச் செய்பவனே, மானிட வேஷம் பூண்டு உலகங்களை எல்லாம் உய்விக்கத் தோன்றியவனே! தேக்கு மரங்கள் ஏழையும் ஓரே அம்பினால் தகர்த்து பொடியாக்கியவனே! ஸர்பங்களை ஆபரணமாக அணியும் சங்கரனால் துதிக்கப்படுபவனே! தோஷம் ஏதும் அற்ற அனகனே! ராமா! உன் ரூபமஹிமையை என்னவென்று சொல்வேன் என்றார்.

த்யாகராஜப்ரேமாவதாரனே! கமலம் போன்ற உன் திருமுகமண்டலத்தை ஸேவித்துக் கொள்வதே என் ஜீவனம், என் வாழ்வின் லக்ஷ்யம் என்ற என் அந்தரங்க ரஹஸ்யம் அறிந்து என்முன் வந்தாயோ என ஒரு சமயம், "நனுபாலிம்ப" என்ற மோஹன க்ருதி மூலம் பின்வருமாறு கேட்டுக் கொண்டார்:

"வனஜ நயன மோமுனு ஜூசுட ஜீவனமனி நெனருன
மனஸு மர்மமு தெலிஸி, நனு பாலிம்ப நடசிவச்சி
திவோ,
நா ப்ராண நாத"

இந்த்ரனுடைய நீலமணியைப் போல் காந்தி கொண்ட திருமேனி குலுங்க, மார்பில் அழகிய முத்து மாலைகள் அசைய, பளபளவென ஜ்வலிக்கும் அம்புகள்,

கோதண்டம் இவற்றைக் கையில் வைத்துக் கொண்டு, அன்னை ஜானகி தேவியுடன், என் ஜீவனத்தின் உட்கருத்து தெரிந்து கொண்டு, என்னை உய்விக்க என்னிடம் நடந்து வந்தாயோ என மேலும் பின் வருமாறு கேட்டுக் கொண்டார்:

"ஸூரபதி நீலமணி நிபதனுவு தோனுரமுன முத்யபு
ஸருல
சயமுதோ, கரமுன ஸரகோதண்ட காந்திதோ, தரணி
தனயதோ த்யாகராஜார்ச்சித, நனுபாலிம்ப
நடசிவச்சிதிவோ,
நா ப்ராண நாத "

திருப்புட்குழி என்ற திவ்ய தேசத்தில் கோயில் கொண்டுள்ள விஜயராகவன் என்ற அர்ச்சாமூர்த்தியை ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் பின் வருமாறு துதித்து வேண்டிக் கொண்டார்:

भुवनाश्रय भूषणास्त्रवर्गं मनसि त्वन्मयतां ममातनोतु ।
वपुराहवपुङ्गव त्वदीयं महिषीणामनिमेषदर्शनीयम् ।।"

"புவனாஸ்ரய பூஷணாஸ்த்ரவர்க்கம் மனஸித்வன்மயதாம்
மமாதநோது
வபுராஹவபுங்கவத்வதீயம் மஹிஷீணாமநிமேஷ
தர்ஸனீயம்

இங்கு, ஸ்ரீ ஸ்வாமி தேசிகன், திருப்புட்குழி விஜயராகவனின் திருமேனி அழகை, ஸ்ரீ தேவி, பூதேவியாகிற உபய நாச்சிமார்களும் கண்கள் இமை

கொட்டாது அனுபவிக்கும் வகையான அழகாக விவரித்தார். கோதண்டம் முதலிய ஆயுதங்கள் அணிந்து, துஷ்டநிக்ரஹம் செய்ய ஆயத்தம் கொண்ட விஜயராகவனின் அப்பேற்ப்பட்ட ஸௌந்தர்யம் தன் மனதில் விடாது, என்றும் ஸ்திரமாக நிலைத்திருக்க வேண்டும் என்று ஸ்வாமி தேசிகன் பரமார்த்த ஸ்துதி ஸ்லோகம் ஒன்றில் ப்ரார்த்தித்துக் கொண்டார்.

தன் காலத்துக்கு 500 வருஷம் முன்பட்டவரான ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் பிரார்த்தனையின் எதிரொலியாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், என்னழகனை, என் ராமனை, ஆயுள் முழுதும் மறவாது, என் உள்ளத்தில் அமர்த்தி ஆராதித்து ஆனந்தமடைவேன்; நவமன்மத ரூபனான அவனுடைய ஸௌந்தர்யத்தை என் ஆயுளின் ஒவ்வொரு வினாடியிலும் கொண்டாடி மகிழ்வேன் என ஒரு தேவகாந்தாரி கீர்த்தன முகமாக பின்வருமாறு தெரிவித்தார்:

"மரவகரா நவமன்மத ரூபினி, ஆஜன்ம
ஹ்ருத்ராஜீவமுதோ,
பூஜிம்சுரா, த்யாகராஜனுதுனி மனஸா"

ஹே, ராம ப்ரபோ ! நான் உன்னிடம் பரம ப்ரேமை கொண்டுள்ளேன். கனவிலும் உன் திவ்யாங்க சௌந்தர்யத்தை மறவாது, உன்னை த்யானித்து, ஆராதித்து புளகாங்கிதம் அடைகிறேன் என "நீமுத்து மோமு ஜூபவே" என்ற கமலா மனோஹரி ராக கீர்த்தனத்தில் பின் வருமாறு அறிவித்தார்:

"(நளின தள நயன !) மருது கொன்னானுமதன ஜனக
தர சுதாரமண, ஸ்ரீ த்யாகராஜனிகி

(நீ முத்துமோமுஜூபவே)

(த்யாகராஜப்ரேமாவதார !) புலகரிஞ்சனி

பூஜஸேதுகானி

கலனைன மறவ சுக்கலராயனி போலு"

சந்த்ரனைப் போன்ற உன் அழகிய முகத்தை எனக்கு காட்டு ! அந்த அருளை நீ எனக்கு அனுக்ரஹிக்காவிடில், நான் எம்மாத்திரம் என "நீ தயராவலெகாக" என்ற தோடி ராக கீர்த்தன மூலம் கேட்டு, முப்பத்திரெண்டு ஸாமுத்ரிகா லக்ஷணங்களுடன் தன் முன் நிற்கும் ராமனின் ரூபலாவண்யத்தை பின்வருமாறு போற்றிக் கொண்டாடினார்:

"ஸார ஸார காந்தாரசரமத விதார ஸூந்தராகார ஸூகுண

ஸூகுமார மாரரமண நீரஜாப்தகுல பாராவார

ஸூதாரஸபூர்ண"

கோடி மன்மதர்களின் காந்தியும் ஒருங்கே சேர்ந்து விளங்கும், "மார கோடி நிப தேஹ ஸூகுமார, ராஜமோஹன ரகுநந்தன" என ஸ்ரீ ராமனின் திவ்ய சௌந்தர்யத்தை தான் அனுபவித்து, ஆனந்தப்பட்டதும் அல்லாது, நம்மையும் அந்த ஸ்ருங்கார ராமனின் முப்பத்து இரண்டு லக்ஷணங்கள் பொருந்திய திருமேனியை ப்ரதக்ஷிணம் செய்ய சுத்த ஸாவேரி ராக கீர்த்தன மூலம் பின் வருமாறு அழைத்தார்:

"லக்ஷணமுலு கலராமுனிகிப்ரதக்ஷிண மொனரிந்தாமு

ராரே "

இப்படியாக, என் உள்ளம் பூரித்து, என் மெய்

சிலிர்க்கும் அழகு உடைய உன்னையல்லால், வேறு இன்பமேதும் இப்புவியில் நான் கண்டிலேன் (மனஸுகெந்தோ ஆனந்தமை மெயிபுலகரிஞ்சக, நினுவினா ஸுகமுகான, நீரஜநயனா) என்று தோடி ராக க்ருதி மூலம் சொன்ன ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், தான் நூறு நூறாக க்ருதிகளைச் செய்து, (கீர்த்தன ஸதகமொனர்ச்சே) ஸ்ரீ ராமனின் அப்ரமேய தேஜோமய ரூபலாவண்யத்தை ஸேவித்து அருள் பெற்றதாக அறிவித்தார். "நீலோத்பல ஸ்யாமள கோமள" ரூபம் கொண்டு, கருணா ஸமேத நயனங்களால் தன்னை அனுக்ரஹித்த அழகனைத் தான் கண்டு, அனுபவித்த ஆனந்தத்தை "கனகன ருசிரா கனக வஸன நின்னு" என்ற அத்யாச்சர்யமான வராளி பஞ்சரத்ன க்ருதி மூலம் விவரித்து நமக்கு ஸ்ரீத்யாகப்ரஹ்மம் விளக்கினார். அந்த பரம மங்களகரமான ஸ்ரீ ராமசந்த்ரனின் ரூபமஹிமையைக் கொண்டாடும் வராளி பஞ்சரத்னத்தின் அர்த்த கௌரவங்களைப் பற்றி இனி எழுதுகிறேன்.

<u>வராளி பஞ்சரத்னத்தின் பல்லவி</u>:

"कन कन रुचिरा; कनक वसन! निन्नु

கனகன ருசிரா; கனக வஸன! நின்னு" என்பது பல்லவி வாக்யங்களாகும். "பமா-பமா-காகா-ரீ" என்ற பஞ்சம எடுப்புடன் வராளி பஞ்சரத்னம் ஆரம்பமாகிறது.

"ஸுந்தர தசரத நந்தன (ராம) வந்தனமொனரிஞ்சேரா" என்று தனது காபி ராக க்ருதி மூலம் வணங்கிய ராமனை பீதாம்பரதாரியாகக் கண்டு, ஐய்யனே! ஸுந்தர புருஷனே! உன்னைப் பார்க்கப் பார்க்க என் ஆனந்தம், பௌர்ணமி சந்த்ரனைக் காணும்

கடலைப் போல் பொங்கி எழுகிறதே என்று பல்லவியில் சொன்னார்.

"ராஜம் நத ஸுர ராஜம், ஸ்துத கஜராஜம், ஸ்ருதிவினுதாஜம், ஸுதரதிராஜம், துரக விராஜம் ஸுஜன ஸமாஜம், த்யாகராஜராஜம், ராமம் பஜேஹம் ஸதா" என்று தனது சாவேரி கீர்த்தனத்தில், தன் ஜீவனோபாயத்தை விளக்கிய ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், ஸுர்யோதய சமயத்திலிருந்து, அர்த்த ஜாமம் வரை, ஸ்ரீ ராம சந்த்ரனின் ஆராதன கைங்கர்யங்களிலும், நாம ஸங்கீர்த்தனத்திலும் இடைவிடாது ஈடுபட்டிருந்தவர்.

ஒரு நாள் தான் ஆராதித்து வந்த ஸ்ரீ ராம விக்ரஹத்திற்கு திருமஞ்சனம் செய்து, வஸ்த்ரத்தால் ஈரத்தை துடைத்து விட்டு, பீதாம்பரம் உடுத்தி வைத்து, நெற்றியில் திலகமிட்டு, மங்களாரத்தி செய்யும் சமயத்தில், பட்டாடை அணிந்த அழகுடன் ஸேவை தரும் ராமனைக் கண்டு மெய்மறந்து, "கனகன ருசிரா கனக வஸன நின்னு" என்ற வராளி பஞ்சரத்ன க்ருதியை செய்தார்.

அப்ராக்ருத தேஜோமயனாய், புத்தம் புது பீதாம்பரம் அணிந்து "அத்யந்த ஸுந்தர ஸ்துத்ய ஸுசரித்ர நித்யோத்ஸவ ரூபனாய்" தன் முன் நிற்கும் கோதண்டபாணியை தனக்கு அனுக்ரஹம் புரிய வந்த தேவாதி தேவனாகவும், ஸ்ரீமந்நாராயணனாகவும், ஸீதாராகவனாகவும் ஸேவித்துக் கொண்டார்.

கோடி சந்த்ரனின் காந்தியை உடைய ராகவா! "ஹிமகர கோடி நிபாங்க!", மனதை இன்புறச் செய்யும் ஸாமுத்ரிகா லக்ஷணங்கள் ஸம்பூர்ணமாக சேர்ந்திருக்கும் பேரழகனே! மாயாமானுஷ உருக் கொண்டு தர்மத்தை

நிலை நாட்டிய ப்ரபோ! அழகிய பீதாம்பரத்தை இடையில் அணிந்த "பீதாம்பராலங்க்ருதமத்யகனே" உன்னைக் காண காண என் மனது விம்மி, துடித்து பரமானந்தக் கடலில் மூழ்குகிறதே என்று பல்லவி வாக்யங்கள் மூலம் தன் மனநிலையை விளக்கினார்.

அனுபல்லவி வாக்யங்கள்:

"दिन दिनमुन मनसुन चनुवुन नित्रु (कन कन) "

"தின தினமுன மனஸுன சனுவுன நின்னு (கன கன....)" என்பவை அனுபல்லவி வாக்யங்கள். நிஸ்நி-தபம-கா, மபா..... என்று ஆரம்பமாகும் அனுபல்லவியில், இணையற்ற ஆனந்தத்தை அளிக்கும் என் மனமாகிற படுக்கையில் சயனித்துக் கொண்டுள்ள உன்னை அனுதினமும் கண்டு, பேரின்ப வாரிதியில் மூழ்குகிறேன் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் சொன்னார்.

"தன லோனே த்யானிஞ்சு தன்மயமே கா வலெரா" என்று தன் தேவகாந்தாரி க்ருதியில் தான் விரும்புவதை அவர் விவரித்தது பின் வருமாறு:

என் அந்தராத்மாவிலேயே உன்னை த்யானித்து, உன் ரூப லக்ஷணம், நாம மஹிமைகளை ருசித்து, அதனால் உண்டாகும் தன்மய அனுபவ நிலையே நான் வேண்டி விரும்புவது.

"தினதினமுனுமனஸுன சனுவுன நின்னு, கன கன ருசிரா, கனக வஸன" என்ற அனுபல்லவி வாக்யமூலம், தன் ஹ்ருதயாலயத்தை அலங்கரிக்கும் திவ்ய பீதாம்பரதரனைக் கண்டு, தன்மயமான நிலையை அடைந்து, "ஸ்ரீ ராம!

நேதன்யுடைதினி ஆனந்த நீரதிலோன நீதனைதினி ராம" என்றும் தன் அனுபவத்தை விவரித்தார். ஸ்ரீ ராமா! நான் தன்யனானேன்! உன் பீதாம்பராலங்க்ருத திவ்ய ரூப தர்ஸனத்தை என் உள்ளக் குகையில் அனு தினமும் கண்டு, ஆனந்த ஸாகரத்தில் நீந்துவதற்கு சமமான அனுபவம் ஸித்திக்கும் பாக்யமுடையவனானேன். நீயோ "ஜுட ஜுடமனஸு கரகே, ஸுமுகுடய்யா", பார்க்கப் பார்க்க மனம் கரையும் இன்முகத்தவன்; உன்னைக் காணக் காண பரவஸமடைகிறேன் என்றார்.

"திவ்ய பீதாம்பர வன மாலாஹாருனி, ஆதிமத்யாந்தரஹிதுனி, அகில ஜகத் பூஜ்யுனி, ஆத்மா ராமுண்டகு ஸ்ரீமந்நாராயண மூர்த்தினி .....ஷோடசோபசார முலசே பூஜிம்சுசு, ப்ரஹ்மானந்த பரவசுடை" என்ற வகையில் நான் உள்ளே அத்யாச்சர்யமான பொன்னாடை, வன மாலை அணிந்து, ஆரம்ப-நடு-முடிவு எது என்று அறிய முடியாது இருந்து, ஸர்வ லோகங்களால் ஆராதிக்கப்பட்டு, ஆத்மா ராமனாகி, ஸ்ரீ மந்நாராயணனாக உள்ளக் கோயிலில் அமர்ந்து உள்ள உன்னை பதினாறு வகை கொண்ட உபசாரங்கள் கொண்ட பூஜையால் ஆராதித்து, ப்ரஹ்மானந்த நிலை எய்தி பரவஸமடைந்தேன் என்று ப்ரஹ்லாதன் வாய் முகமாக அறிவித்த மஹான் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம்.

பக்தயோகத்தை கடைபிடித்து, பகவானைத் தன் ஹ்ருதயாலயத்தில் அமர்த்திக் கொண்ட ஸ்ரீ ஸத்குரு, "பாலஸாகரமந்து பவ்வளிஞ்சுடகன்ன பக்துனி ஹ்ருதயம்பு பாகயுண்டு" என்ற பகவானின் வாக்யத்திற்கு நிருபணமாக விளங்கியவர். பாற்கடலில் பள்ளி

கொண்டிருப்பதை விட, பக்தனின் ஹ்ருதயத்தை பள்ளியறையாக ஏற்றுக் கொள்வதே எனக்கு சிறந்தது என ஸ்ரீமன் நாராயணன் ப்ரஹ்லாதாழ்வாருக்குச் சொன்னார். பத்தி லக்ஷணங்கள் முழுதும் நிறைந்த ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், அனுதினமும் தன் மனதில் குடிகொண்ட சுந்தர ராமனை த்யானமுகமாக ஸேவித்துக் கொண்டு,

"ஸ்ரீதர, ராமசந்த்ர, முனிசிந்திதபா்த, ஸரோஜஸ்ரீஹரீ, மாதவ, மார கோடி நிப, மங்களதாயக, மஞ்ஜுபாஷணா, யோதனவீரவீர, வர யோகி ஹ்ருதாலய, நன்னுப்ரோவவே" எனக் கொண்டாடினார்.

வராளி பஞ்சரத்னத்தின் முதல் சரணம்:

"पालुगारु मोमुन श्रीयपार माहिम दनरु नित्रु (कन कन)

"பாலுகாரு மோமுன ஸ்ரீயபார மஹிம தனரு நின்னு
(கனகன)"

என்பது முதல் சரண வாக்யங்களாகும்.

பஞ்சம ஸ்வரத்துடன் ஆரம்பமாகும் இந்த சரணத்தில், பால் வடியும் அழகு கொண்ட முகத்தை உடைய நீ ஸகல ஸம்பத்துக்களும் நிறைந்தவன். எல்லையற்ற மஹிமைகள் கொண்ட பீதாம்பரதாரியே! உன்னைக் காணக் காண என் மனது ஆனந்தமடைந்து மேன் மேலும் பொங்குகிறதே என்று சொன்னார்.

"ராம கோதண்ட ராம பாஹி, ராம பட்டாபிராம பாஹி"என்ற கரஹரப்ரியா கீர்த்தனத்தில், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் ராமனிடம் "பாலுகாரு மோமுஜுப நீகு பாலுமாலி கேல ஸ்ரீ" எனக் கேட்டார். கோதண்ட

ராமா! பட்டாபி ராம! பால் வடியும் உன் திருமுகத்தை எனக்குக் காட்டி, என்னிடம் ஒரு வார்த்தை பேசமாட்டாயா எனக் கேட்டார். பக்தவத்ஸலனான ராமனும், நவயௌவன ஸம்பூர்ணம் கொண்ட தன் பால்வடியும் முகத்தை ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்திற்கு காண்பித்து, அவருடன் அழகாக ஸம்பாஷித்தார். அந்த ஆனந்தானுபவ மேலீட்டால், ஸ்ரீ ஸத்குரு "பாலுகாரு மோமுன.... நின்னு கனகன ருசிரா" எனக்கூறி, உன் பால்வடியும் முகத்தைக் காணக் காண என் உள்ளம் பொங்கி எழுகிறதே என்றார். ஸர்வாங்க ஸௌந்தர்ய சம்பத் நிறைந்தவன். எல்லோர் மனதையும் கவரும் ஸ்ரீ ராமனின் ஸர்வ அங்கங்களுள், தன்னைக் கருணையுடன் கடாக்ஷிக்கும், பால் வடியும் திருமுகத்தை இங்கு விசேஷமாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் வணங்கிக் கொண்டார்.

அந்த தேஜோமய விக்ரஹத்தை தர்ஸித்த பாக்யத்தால், தனது உள்ளம் ஆனந்தம் கொண்டு நடனமாடுவதை தெரிவித்து, அதன் பொருட்டு, ஸகல ஐஸ்வர்யங்கள் நிறைந்து, அபார மஹிமைகள் கொண்ட ராமனுக்கு இந்த சரணத்தில் நன்றி தெரிவித்தார். சாதாரணமாக ஜனங்கள், துர்தசை விலகவும், நற்தசை பிறக்கவும் நவக்ரஹங்களை ஆராதிப்பது உண்டு. ஸர்வமங்களஸ்வரூபனான என் ராமனை த்யானிப்பவர்களுக்கு அவன் ஸர்வ ஐஸ்வர்யங்களையும் வாரி வழங்கி, எல்லா அனிஷ்டங்களையும் விலக்குவான் என்ற கருத்தை தனது ரேவகுப்திராக கீர்த்தனத்தில் பின் வருமாறு சொல்வது. "ஸ்ரீ அபாரமஹிமதனரு" என்ற இந்த வராளி பஞ்சரத்ன சரண வாக்யப்பகுதியின் விளக்கம்:

"ग्रह बलमेमि तेजोमय विग्रहमुनु ध्यानिञ्चुवारिकि (नव)

(நவ)க்ரஹ பல மேமி தேஜோமய

விக்ரஹமுனுத்யானிஞ்சுவாரிகி"

"கல்யாணானாம் அவிகலநிதி:" என்ற ஸ்ரீய:பதியின் பால் வடியும் திருமுக மண்டல தர்ஸன ஜனித ஆனந்தானுபவத்தின் பெருக்கே, இந்த சரண வாக்யங்கள்.

<u>வராளி பஞ்சரத்னத்தின் இரண்டாவது சரணம்:</u>

"कलकलमनु मुखकल गलिगिन सीत
कुलुकुचु नार कन्नुलनु चूचु निन्नु (कन कन)

கலகலமனுமுககள கலிகின ஸீத

குலுகுசு நோர கன்னுலனு ஜூசு நின்னு (கன கன)"

என்பது இரண்டாவது சரண வாக்யங்கள். சில ஸம்ப்ரதாயத்தில், இந்த சரணத்தை ஏழாவது சரணமாகவும் பாடுவதுண்டு.

"நகுமோமு கலவானி நா மனோஹருனி

ஜகமேலு ஸூருனி ஜானகி வருனி

தேவாதி தேவுனி திவ்ய ஸுந்தருனி

ஸ்ரீ வாஸுதேவுனி <u>ஸீதாராகவுனி</u>"

என்று மத்யமாவதி ராக கீர்த்தனமூலம் ஸேவித்துக் கொள்ளப்பட்ட ஸ்ருங்கார மூர்த்தியான ஸீதாராமனை "கலகலமனுமுக களகலிகின ஸீத குலுகுசு ஒர கன்னுல ஜூசே நின்னு, கனகன ருசிரா" என்று இரண்டாவது சரணத்தில் போற்றிப் பாடினார்.

மத்யமாவதி கீர்த்தனத்தில், சுந்தரானனை, என் உள்ளம் கவர்ந்தானை லோக ஸம்ரக்ஷகனை, ஸீதாபதியை, தேவாதி தேவனை, தெய்வீக ஸௌந்தர்யம் கொண்ட ராமனை, தெளிவான மனதுடன், எப்போதும் வணங்குவேன் என்று சொன்னார். ஸீதாபதி, ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் அந்த ப்ரார்த்தனையை ஏற்றுக் கொண்டு, ஸீதையுடன் தர்பாரில் அமர்ந்திருக்கும் கோலத்தில் அவருக்கு தர்ஸனமளித்தார்.

அதன் பின், ஸீதா தேவியின் ஹ்ருதயமாகிற கடலைப் பொங்கி எழச்செய்யும் சந்த்ரன் (ஸீதாஹ்ருஜ்ஜலதி ஸோமன்) போன்ற ஜானகீரமணனை, "பாமாமருவம்பு மொலக பக்தியனு பஞ்ஜரபுசிலுக", அதாவது, மருக் கொழுந்தைப் போல் துளிர்விட்டு எழில் நிறைந்த ஸீதா தேவியின் பக்தியாகிற கூட்டில் வளரும் பைங்கிளியாக, ஸ்ரீ ஸத்குரு ஸேவித்துக் கொண்டார். ஸீதா ராமா! ரோஹிணியும், சந்த்ரனும் சேர்ந்து காக்ஷியளிப்பது போல் தர்ஸனம் கொடுக்கும் கோதண்டபாணி! உன் பிராட்டி ஆயிரம் மாத்து தங்கக் கட்டியை விட அதிகமான காந்தியுடன் ஜ்வலித்து, உன்னுடன் கொலு வீற்றிருக்கிறாள் என்று பின் வருமாறு சொன்னார்:

"கனக ஸலாகனு கேரு மோமு ஸீதா காந்த தோனு
த்யாகராஜநுதுடு கொலுவையுந்நாடே

கோதண்டபாணி"

மஹாலக்ஷ்மியான ஸீதா தேவியின் தூய மனதை அலங்கரிக்கும் ஸ்வரூபம் கொண்ட "ஸ்ரீரம்ய சித்தாலங்கார ஸ்வரூப!" நீயே என் குலதனம், நீயே என் ஜீவனம் எனப்பின் வருமாறு சொன்னார்.

"ராகவ ஸர்வோன்னத ஸுப்ரகாஸ,
தரணி ஸுஸாங்க லோசன ஜானகீஸ
நீவேரா குலதனமு, நீவேரா ஜீவனமு"

ஐய்யனே ! என் வாழ்க்கைக்கு பயனளித்து, தர்பாரில் ஸீதாதேவியுடன் திருமணக் கோலத்தில் ஸேவை அளித்து வரும் போது, நான் ஸேவித்துக் கொண்ட ஒரு விஷயம் என் மனதை ஆனந்தத்தால் பொங்க வைக்கிறது. கண்ணாடி போல், பள பளவென்று ஜ்வலிக்கும் உன் முக ஒளியைக் கண்டு மோஹம் அடைந்த ஸீதை, சிவ தனுஸ்ஸை வளைத்து, ஒடித்து தன்னைத் திருமணம் செய்துகொண்ட காளை இவன் தானோ என்று ஐயுற்று, கை வளைகளை சரி செய்யும் பாசாங்கு மூலம், உன்னைக் கடைக் கண்ணால் பார்த்ததை நான் கண்டேன். மற்ற ஒரு வால்மீகி அவதாரமான கம்பநாட்டாழ்வார் பின் வருமாறு ஸீதா பிராட்டி லஜ்ஜையுடன் தன் ப்ராண நாயகனான ஸ்ரீ ராம சந்த்ர மூர்த்தியை கடைக் கண்ணால் பார்த்து, ஆனந்தித்து, பின்வருமாறு சொன்ன வார்த்தைகளுக்கு எதிரொலியாக, ஸ்ரீ ஸத்குருவின் சரணவாக்யங்கள் ஒலிக்கின்றன:

"எய்வளை வில் ஏற்றதும் இறுத்ததும் உரைத்தும
மெய்விளைவு இடத்து முதல் ஐயம் விடலுற்றாள்
ஐயனே அகத்து வடிவே அலபுறத்தும்
கை வளை திருத்துபு கடைக் கண்ணின் உணர்ந்தாள்."

தக, தகவென்று ப்ரகாஸிக்கும் உன் திருமுக காந்தி கண்டு, உன்னிடம் அடைந்த மையலை மறைக்கும் லஜ்ஜையுடன், என் அன்னை, உன்னை கடைக் கண்ணால் பார்த்து பூரித்தாள். "ஸீத குலுகுசு ஓர கன்னலுனு ஜூசே

நின்னு, கனகனருசிரா, கனக வஸனா, நின்னு" என்று தான் ராமனின் தர்பாரில் கண்ட காக்ஷியை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் விவரித்து, ஜகன்மாதாவான ஸீதாபிராட்டியின் கடைக் கண் நோக்கிற்கு இலக்காகிய பீதாம்பரதாரியான உன்னைப் பார்க்கப் பார்க்க என் மகிழ்ச்சி அதிகரிக்கிறது என்று சொன்னார்.

<u>வராளி பஞ்சரத்ன க்ருதியின் மூன்றாவது சரணம்:</u>

"बालार्काभ सुचेल; मणिमय मालालंकृत कन्धर! सरसिजाक्ष! वरकपोल! सुरुचिर किरीटधर! सन्ततम्बु मनसारग
(कन कन रुचिरा; कनक वसन, नित्रु)

பாலார்காப ஸுசேல! மணிமய மாலாலங்க்ருத கந்தர! ஸரஸிஜாக்ஷ! வரகபோல! சுருசிர கிரீடதர! ஸந்ததம்பு மனஸாரக (கன கனருசிரா....) என்பது மூன்றாவது சரணத்தின் வாக்யங்களாகும்.

அருணோதய சமயத்தில் ப்ரகாஸிக்கும் பால சூர்யனின் ஒளிக்கு சமமான ஒளியுடைய ஆடையை அணிந்த சோபன ராமா! திருமார்பில் மின்னும் நவரத்ன மணிகள் கொண்ட மாலையை அணிந்த ஸுந்தர ராமா! பரம ஸ்ரேஷ்ட்ட மங்கள ராமா! கண்ணாடி போல் சோபிக்கும் கன்னங்களை உடைய காகுஸ்த்த ராமா! மணிமய மகுடம் தரித்த மரகத ராமா! தர்பாரில் ஸீதையுடன் "நீலாக்ருதி கல நீ லாவண்யமு நீலாகதி கனி பிம்பவே, பாலார்காப ஸுசேலாவ்ருத" என்றபடி, பாலசூர்யனின் காந்தியை உடைய பீதாம்பரத்தை அணிந்துள்ள உன் ஸேவை கண்டு அகமகிழ்கிறேன் என்று இங்கு ஸ்ரீ ஸத்குரு சொன்னார்.

"சுருசிர கிரீடதர" ஸுந்தர ராகவனை, "மணிமய மகுட விராஜமான மன்மத கோடி ஸமான" ஸுப்ரகாஸ ஸுந்தர மூர்த்தியாகவும் இங்கு நமஸ்கரித்துக் கொண்டார்.

தன்னுடைய பூஜாக்ரஹத்தில் கொலு வீற்றிருக்கும் ஸீதாராமனைப் பாடி வரும் போது, ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மத்தின் அகக் கண்ணில், ஸாகேத ராமனின் அயோத்தி நகர தர்பார் காக்ஷி தோன்றும். அங்கு காணப்படும் சக்ரவர்த்தியான ராமனின் அத்புத அழகு, ஆடையலங்காரம், மதுர சம்பாஷணை எல்லாவற்றை யும் உள்ளம் உருகி அனுபவித்து, வராளி பஞ்சரத்னத்தின் மூன்றாவது சரணத்தில் காணப்படும் கருத்துக்களுக்கு எதிரொலியாக மற்றும் பல கீர்த்தனங்களில் அந்த ஆனந்தானுபவத்தை நமக்கு விளக்கியிருக்கிறார். உதாரணமாக, தனது பைரவி ராக கீர்த்தனமான "உபசாரமுலனு செகொனவய்ய" என்பதில், திவ்ய ஒளியுடன் ஜ்வலிக்கும் பீதாம்ப்ரத்தை தன் இடையில் அணிந்து கொண்டிருக்கும் ராமனை "சபலகோடி நிபாம்பரதர ஸ்ரீ ஜானகிபதி" என்று நமஸ்கரித்துக் கொண்டார். கோடி மின்னல்களின் காந்தியை உடைய வஸ்த்ரங்களை (பீதாம்பரங்களை) அணிந்து கொண்ட ஜானகி ரமணனாக அறிவித்தார். "கனக வஸன" ராமனை "கொலுவையுந்நாடே கோதண்டபாணி" என்ற தேவ காந்தாரி ராக கீர்த்தனத்தில், நம்மை எல்லோரையும் கோதண்டபாணி தர்பாரில் அமர்ந்து, ஸேவை தரும் அழகை ஸேவிக்க பின் வருமாறு அழைத்தார்:

"कनक पटमु सोंमुलनु धरिंचि वेदोक्तमैन
सनक वचनमुलचे तोषिंचियाश्रितुलु बोषिंचि (कोलुवै)

கனக படமு ஸொம்முலனு தரிஞ்சி வேதோக்தமைன
ஸனக வசனமுலசே தோஷிம்சியாஸ்ரிதுலு போஷிம்சி
(கொலுவை)

கோதண்டராமனின் கொலுவை வந்து காணுங்கள்! அத்புதமான ப்ரகாஸம் கொண்ட பீதாம்பரங்களை அணிந்து கொண்டு, வேத புருஷனான ராமன் ஸனக முனிவரின் வேத பாராயணத்தைக் கேட்டுக் கொண்டு, தன்னிடம் சரணாகதி அடைந்தவர்களுக்கு அனுக்ரஹம் செய்து, ரக்ஷித்துக் கொண்டு தேஜோமயமாக விளங்குகிறான் என்று தான் கண்ட ஸேவையை நமக்கு விளக்கினார். நம்மையும் அந்த கிடைப்பதற்கு அரியதான ஸேவையைக் கண்டானந்திக்க அழைத்தார். ஸௌராஷ்ட்ர ராக கீர்த்தனம் ஒன்றில் இந்திரா ரமணனான ஸ்ரீ ராம சந்த்ர மூர்த்தி தர்பாருக்கு வரும் அழகை பின்வருமாறு கண்டு அனுபவித்து, அந்த மனோஹரமான காக்ஷியை விவரித்தார்:

"மெருக பங்கரு சேலமிகுவொந்த மரிய, நூபுரமுலு
கல்லனக
பக்துலகனி கருணாம்ருதமு சல்லக, யோகுலதஹரமுல
ஜல்லனக
வேஞ்சேஸின (எந்தனுக வர்ணிந்துனே ஈஇந்திரா
ரமணுநி நே)"

ஒளி வீசும் பீதாம்பரம் அழகுடன் அசைய, கால்களில் உள்ள மணிச் சிலம்புகள் கல்லென்று ஒலிக்க, பக்தர்கள் மீது கருணை என்ற 'அமுதத்தை பொழிந்து

கொண்டு, யோகிகளின் தஹராகாஸங்களை ஜில் என்று குளிரச் செய்து கொண்டு, தர்பாருக்கு வரும் ராஜாதி ராஜனை, ஸீதாபதியை என்னவென்று வர்ணிப்பேன் என்று ஸௌராஷ்ட்ர கீர்த்தனப் பகுதியில் சொன்னார். "மணிமய மகுட விராஜமுரனோ" என்ற ஜங்காரத்வனி கீர்த்தனப் பகுதியிலும், "சபல கோடி நிபாம்பரதர ஸ்ரீ ஜானகிபதி" என்ற பைரவி கீர்த்தனப் பகுதியிலும், "கனக படமு ஸொம்முலனு தரிஞ்சி" என்ற தேவ காந்தாரி கீர்த்தனைப் பகுதியிலும், "மெருக பங்கரு சேலமிரு வொந்தமரிய" என்று ஸௌராஷ்டிர ராக கீர்த்தனைப் பகுதியிலும் கொண்டாடப்பட்ட ஸ்ரீ ராம சந்த்ரனின் ஆடையாபரணங்களைப் பற்றிய விவரணங்கள், "பாலார்கபி ஸுசேலாமணிமய மாலாலங்க்ருதாகந்தரா, ஸரஸிஜாக்ஷ வர கபோல ஸுருசிர கிரீடதர" என்ற வராளி பஞ்சரத்னத்தின் மூன்றாவது சரண வாக்யங்களின் எதிரொலிகளே.

<u>"கனகனருசிரா" க்ருதியின் நான்காவது சரண வாக்யங்கள்</u>

"सापत्नि मातयौ सुरुचिचे कर्णशूलमैन माट वीनुल
जुरुक्कन ताळक श्रीहरिनि ध्यानिञ्चि सुखिपग लेदा? यदु

"ஸாபத்னி மாதயௌ ஸுருசிசே கர்ண
ஸுலமைனமாட
வீனுல ஜுருக்கன த்ராளக ஸ்ரீ ஹரினி த்யானிஞ்சி
சுகிம்பக லேதா ? யடு"

என்பது வராளி பஞ்சரத்னத்தின் நான்காவது சரண வாக்யங்கள் ஆகியவை.

இங்கு த்ருவன் என்ற பாலன், மாற்றாந் தாயான ஸுருசி என்பவளுடைய கர்ணகடோரமான வார்த்தைகளைக் கேட்டு, மனம் புண்பட்டு, ஸ்ரீ ஹரியான உன்னை த்யானித்து, மோக்ஷ சுகத்தை அடைந்தானே! அப்பேற்பட்ட "आर्तिच्छिदम् तव मूर्ति" என்ற பக்தர்களின் ஸகல துக்கங்களையும் போக்கவல்ல "कांचित् काञ्चनकाञ्चिलाञ्छितलसत् पीतांबरालम्बिनी" ரூபத்தை த்யானம் செய்து ஐந்து வயது பாலகனான த்ருவன், உன்னுடைய தர்ஸன அனுக்ரஹம் பெற்று, த்ருவமண்டலம் என்ற விசேஷ லோகத்தை அடைந்தானே! உனது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யமான லாவண்ய ரூபத்தை தர்ஸித்துக் கொண்டு பரம சுகத்தை அடைந்தானே! அப்பேற்ப்பட்ட உன்னுடைய அப்ராக்ருத திவ்யரூப லாவண்யத்தைக் காணக் காண என் மனம் ஆனந்த அலைகள் மோதும் ஸமுத்ரம் போல் பொங்கி களிக்கிறதே என்று ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் இந்த சரணத்தில் சொன்னார்.

இங்கு ஸ்ரீ ஸத்குரு, உத்தானபாதன் என்ற ராஜாவின் குமாரனாகவும், ஸ்வாயம்புவமனுவின் பேரனாகவும் பிறந்த த்ருவன் என்ற பரம பக்தனின் மங்கள சரித்ரத்தைக் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீமத் பாகவதத்தின் நாலாவது ஸ்கந்தத்தில் த்ருவோபாக்யானம் விவரிக்கப்பட்டிருக்கிறது. துருவனின் மாற்றாந்தாயான ஸுருசி, தன் தகப்பனாரின் மடியில் உட்கார விரும்பிய குழந்தையான த்ருவனை, நீ ஹரியைக் குறித்து தவம் செய்து, அருள் பெற்று, என் வயிற்றில் பிறந்தாலொழிய, என் பிள்ளையான உத்தமன் போல், உன் தகப்பனார் மடியில் உட்கார முடியாது என்று கர்ணகடோரமாகச் சொன்னாள். த்ருவ ஸ்வாமியும், தன்

தாயாரான ஸுநீதியை நமஸ்கரித்துக் கொண்டு, ஆறு மாதம் கடும் தவம் செய்து, பகவானின் தர்ஸனபாக்யம் பெற்றார். "யத்ரைலோக்ய மஹீய ஸோஅபி மஹிதம், ஸம்மோஹனம் மோஹனாத், காந்தம் காந்தி நிதானதோஅபி மதுரம், மாதுர்யதுர்யாதபி, ஸௌந்தர்யோத்தரதோபி ஸுந்தரதரம் த்வத் ரூபம்" என்ற உன்னுடைய திவ்ய ஸ்வரூப தர்ஸன பாக்யம் அடையப் பெற்று, த்ருவ ஸ்வாமியும் பரம பாக்யமடைந்தார். மூவுலகிலும் பூஜிக்கத்தகுந்த வஸ்துவை விட பூஜிக்க உயர்ந்ததாயும், மனதை கவரச் செய்யக்கூடிய வஸ்துக்கள் எல்லாவற்றையும் விட மனதை மயக்கக் கூடிய காந்தி உடையதாயும், இனிமையை அளிக்கக்கூடிய பொருள்கள் எல்லாவற்றையும் விட இனிமை கொண்டதாயும், அழகுமிக்க பொருள்கள் எல்லாவற்றையும் அழகில் சிறந்ததுமான உனது திவ்ய ரூபத்தை த்ருவ ஸ்வாமி தன் உள்ளத்திலே கண்டார். அந்த ஆனந்தானுபவத்தில் மூழ்கி இருந்ததால், கருடாரூடனாய், நேரில் வந்து நிற்கும் உன்னைத் தன் புறக்கண்களால் காணத் தவறினார். அந்த சமயம், உன் பாஞ்சஜன்யம் இருகன்னங்களிலும் ஸ்பர்சிக்க ப்பட்டதால் த்யானத்திலிருந்து விழித்தெழுந்து, உள்ளக் கோயிலில் கண்ட சுந்தராங்கனான உன்னை நேரிலேயே ஸேவிக்கும் பாக்யம் பெற்றார். அப்பேற்ப் பட்ட ரூபலாவண்யத்துடன் பக்தனான த்ருவனுக்கு அனுக்ரஹம் புரிய ஓடோடியும் வந்த உன் ஸுந்தரத் திருமேனியைக் காணக் காண, என் மனம் கட்டவிழ்த்த குதிரைப் போல் குதித்து ஓடுகிறது என்று ஸத்குரு இந்த சரணத்தில் தன் மனநிலையை விவரித்தார்.

ஸ்ரீ ராமசந்த்ரனின் ரூபமஹிமை பற்றிச் சொல்லும்

வராளி பஞ்சரத்னத்தில் த்ருவோபாக்யனத்தைப் பற்றி ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் சொல்வதற்கு ஒரு விசேஷ காரணம் உண்டு. ஐந்து வயதுக் குழந்தையான த்ருவன், ஆறே மாத காலத்தளவிலேயே, கடும் தவம் மூலம் ஸ்ரீ ஹரியின் மனதைக் கவர்ந்து, தர்ஸன பாக்ய அனுக்ரஹம் பெற்றார். இந்த மங்கள தர்ஸனம், பல ஜன்மங்களில் செய்த தவப் பலத்தினாலேயே, மஹாமுனிவர்களுக்கு கிடைத்திருக்கிறது. த்ருவனுக்கு அதி சீக்ரமே அனுக்ரஹம் செய்து, விசேஷ வரங்களை அளித்த ஸ்ரீமந் நாராயண ரூபியான ராமன், தனக்கும் துரிதமாகவே ஸர்வ மங்களங்களையும் அனுக்ரஹிக்க வேண்டும் என்பதை மனதில் வைத்து த்ருவ சரித்ர சம்பந்தமான சரணத்தை வராளி பஞ்சரத்னத்தில் சேர்த்தார்.

<u>"கனகனருசிரா" க்ருதியின் ஐந்தாவது சரணம்</u>

"मृगमद ललाम शुभ निटिल वर जटायु मोक्ष फलद!
पवमान सुतुडु नीदु महिम देल्प सीत देलिसि वलचि
सोक्कलेदायारीति, निन्नु (कन कन रुचिरा कनक वसन)

ம்ருகமத லலாம ஸுப நிடில வர ஜடாயு மோக்ஷ பலத!
பவமான சுதுடு நீது மஹிம தெல்ப ஸீத தெலிஸி வலசி
ஸொக்கலேதாயாரீதி, நின்னு (கனகனருசிரா, கனக
வஸன)"

என்பது ஐந்தாவது சரணத்தின் வாக்யங்களாகும்.

த்ருவன் என்ற பாலனுக்கு அனுக்ரஹம் புரிந்த கருணா மூர்த்தியான நீ பக்தர்களிடம் காட்டும் தாக்ஷிண்யத்தால் (சலுகையால்), ஜடாயு என்ற கழுகுக்கும், மோக்ஷத்தைக் கொடுத்தாயே! உனது தகப்பனாரான

தசரத சக்ரவர்த்திக்கும் கிடைக்காத அந்திமக்ரியைகளை, உன் பக்தனான ஜடாயுவிற்கு செய்து, அதனால் மோக்ஷம் கிடைக்குமாறு செய்தாயே! "விக்ரம யஸோலாப விக்ரீத ஜீவித க்ருத்ர ராஜ தேஹ தித‌க்ஷா லக்ஷித பக்த ஜன தாக்ஷிண்ய" (विक्रम यशो· लाभ विक्रीत जीवित गृघ्रराज देह दिधक्षा लक्षित भक्तजन दाक्षिण्य என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ரகுவீரகத்யத்தில் சொன்ன விதமாக உனது பக்தவாத்ஸல்யத்தை காண்பித்தாயே! அப்பேற்ப்பட்ட மஹிமை கொண்ட ஸ்ரீ ஜானகீ ரமணா! ஸ்ரீ ராமா! கஸ்தூரி திலகம் திகழும் நெற்றியுடன் காக்ஷயளிக்கும் ஸ்ருங்கார மூர்த்தே! அனுபம மோஹனாங்கனே! இணையற்ற வடிவழகனே! உன்னைக் காணக்காண, என் உள்ளம் மேன் மேலும் பூரிக்கிறதே என்று ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் இந்த சரணத்தில் சொன்னார்.

த்ருவனுக்கும், ஜடாயுவிற்கும், ஸித்தாஸ்ரம முனிவர்களுக்கும் தண்டகாரண்யத்தில் வசித்து வந்த தபோதனர்களுக்கும் அனுக்ரஹங்கள் புரிந்த பெருமை உடைய உன் ஸுசரித்ரத்தை, அசோகவனத்தில், ஹனுமான் சொல்லக் கேட்டு, உன் பிராட்டி ப்ரேமையால் பூரித்து மூர்ச்சை அடைந்தாள் அன்றோ! "பவமான ஸுதுடு நீது மஹிம தெல்ப ஸீத தெலிஸி வலசி ஸொக்க லேதா" என்றபடி நீ "रूपौदार्य गुणैः पुंसां दृष्टि चित्तापहारिणम्" ஆக இருப்பதால், உனது தேவியான ஸீதாபிராட்டியையும், உன் திவ்ய கல்யாண குணங்கள், ரூபலாவண்யம் பற்றிய ஆஞ்சேனயரின் ஸங்கீர்த்தனத்தால் பரவஸமடையச் செய்தாயே! இத்தனை ரூப ஸம்பத்தும், குண ஸம்பத்தும் கொண்ட உன்னைக் காணக் காண என் மனது ஆனந்தத்தால் பொங்கிக் குதிக்கிறது என்று இந்த

சரணத்தில் சொன்னார்.

வராளி பஞ்சரத்னத்தின் ஆறாவது சரணம்

"सुखास्पद! विमुखाम्बुधरपवन! विदेह मानस विहाराप्त
सुरभूज! मानित गुणांक! चिदानन्द! खगतुरङ्ग
धृतरथाङ्ग! परमदयाकर! करुणारस वरुणालय!
भयापहार! श्री रघुपते: (कन कन रुचिरा कनक वसन)

ஸுகாஸ்பத! விமுகாம்புதர பவன! விதேஹ மானஸ
விஹாராப்த!

ஸுரபூஜ! மானித குணாங்க! சிதாநந்த!
ககதுரங்கத்ருத

ரதாங்க! பரமதயாகர! கருணாரஸ வருணாலய!
பயாபஹார!

ஸ்ரீ ரகுபதே! (கனகனருசிரா, கனகவஸன, நின்னு)"

என்பது இந்த சரணத்தின் வாக்யங்களாகும், நாட்டை பஞ்சரத்னம் போல், இங்கு பல திவ்ய நாமங்கள் மூலம் ஸ்ரீ ராமபிரானை அர்ச்சித்து, ஐய்யனே! நான் "ஸ்மரண தர்ஸனானந்த ஜலதினீதுசு" என்ற கருத்தை வெளியிட்டார். "ஸ்ரீகர கோடி விபாகர பாஸ ஸுதாகர வதன கருணா கர ராம!", உன்னுடைய த்யானம், தர்ஸனம் ஆகியவைகளால் ஏற்படும் பரமானந்தமாகிற கடலில் நீந்தும் பாக்யம் பெற்றுள்ளேன். ஸர்வ சுகங்களுக்கும் ஆதாரமான பரம் பொருளை, ஸ்ரீ ஸத்குரு "ஸுகாஸ்பத", ஸுகங்கள் எல்லாவற்றிற்கும் இருப்பிடமானவனே என அன்புடன் அழைத்தார். பின்னர், மதம், மோஹம், க்ரோதம் ஆதிய பல வகை சத்ருகளாகிய மேகங்களை சிதற அடிக்கும் சூறாவளி போன்றவனே என்று

"விமுகாம்புதர பவன" என்ற வாக்யங்களால் நமஸ்கரித்துக் கொண்டார். ஸீதா தேவியின் மனதில் கோயில் கொண்ட ராமனை, "விதேஹ மானஸ விஸார ஆப்த" என அடுத்தபடியாக ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் ஸேவித்துக் கொண்டார். பிறகு ஸ்ரீ ராமனின் கல்யாண குணங்களை மனதில் வைத்து, அவனை கல்பக வ்ருக்ஷம் போன்றவனே! அபார மஹிமை கொண்டவனே! கருட வாஹனனே! பக்தர்கள் பயங்களை எல்லாம் போக்குபவனே, ரகுபதே என" ஸுரபூஜமானித குணாங்க சிதானந்த, ககதுரங்க, த்ருதரதாங்க, பரமதயாகர, கருணாரஸவருணாலய, பயாபஹார, ஸ்ரீ ரகுபதே " என்ற சரணவாக்ய பகுதியால் தண்டனிட்டுக் கொண்டார். இப்பேற்ப்பட்ட கல்யாண குணங்கள், அத்யத்புத ஸௌந்தர்யம் கொண்ட உன்னை,

"रुचिरमणिकिरीटं सुन्दरभ्रूललाटं
कनकरुचिरचेलं काशसद्गोगरवेलम्।
विमलजलदनीलं कुण्डलोद्भासिकर्णं
रघुकुलजनरत्नं सन्ततं चिन्तयामि"

என்று த்யானித்து, தர்ஸித்து, ஆனந்த ஸாகரத்தில் நீந்தி வருகிறேன் என ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் இந்த சரணத்தில் கூறினார்.

<u>வராளி பஞ்சரத்னத்தின் ஏழாவது சரணம்</u>

"कामिञ्चिप्रेममीर करमुल नीदु पाद कमलमुल बट्टकोनु
वाडु साक्षि, रामनाम रसिकुडु कैलास सदनुडु साक्षि
मरियु नारद पराशर शुक शौनक पुरन्दरनगजा धरज
मुख्यलु साक्षि गाद? सुन्दरेश! सुख कलशाम्बुधि
वास श्रितुलकै

காமிஞ்சி ப்ரேமமீர கரமுல நீது பாதகமலமுல
பட்டு கொனுவாடு ஸாக்ஷி, ராமநாம ரஸிகுடு கைலாஸ
ஸதனுடு
ஸாக்ஷிமறியு நாரத பராஸர ஶுக ஶௌனக
புரந்தரநகஜா தரஜ
முக்யலு ஸாக்ஷி காத? ஸுந்தரேஸ! ஸுக கலஸாம்புதி
வர்ஸாஸ்ரிதுலகே (கனகனருசிரா, கனகவஸன, நின்னு)"

என்பது ஏழாவது சரணத்தின் வாக்யங்களாகும்.

பா, பாம- மாபதாப - என்று பஞ்சம எடுப்புடன் இந்த சரணம் ஆரம்பமாகிறது. இந்த சரணத்தில், ஸுந்தரேஸனான ராமன், பக்தர்களை ரக்ஷிப்பதை வ்ரதமாகக் கொண்டவன் என்பதற்கு ஸாக்ஷி சொல்லத் தயாராக இருக்கும் ஆஞ்சநேயன், கைலாஸ நாதன், முனி கணங்கள், பார்வதி, ஸீதாபிராட்டி ஆகியோர்களைக் குறிப்பிட்டு, அப்பேற்ப்பட்ட ஆஸ்ரித ரக்ஷகனான உன்னைக் காணக் காண என் மனது ஆனந்தம் நிறைந்து பொங்குகிறது எனச் சொன்னார்.

பரம ராம பக்தனான ஆஞ்சநேய ஸ்வாமியை முதலாவதாக, "காமிஞ்சி ப்ரேம மீரகரமுலநீது பாத கமலமுல பட்டு கொனு வாடு ஸாக்ஷி " என்று ஸேவித்துக் கொண்டார். "ராம ராம கோவிந்த ரக்ஷிஞ்சுமுகுந்த, கலீயுக மனுஜுலு நீகு மாஹாத்யம்யமு கலது லேதனே காலமாயெகா" என்று ஒரு ஸௌராஷ்ட்ர ராக கீர்த்தனத்தில் கூறிய ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்திற்கு ஸ்ரீ ராமசந்த்ரனின் பக்தரக்ஷண லக்ஷணத்தை எடுத்து சொல்வதில் மிகுந்த ஆனந்தம் உண்டு. ராமா! இந்த

கலியுகத்தில் ஜனங்கள் உனக்குத் தங்களைக் காப்பாற்றக் கூடிய சக்தி உண்டா, இல்லையா என்றும் வாதம் செய்யும் நிலைக்கு வந்துள்ளார்களே ? இந்த மாதிரி வம்பு பேசும் ஜனங்களில் நான் ஒருவன் அல்ல ! உன்னைச் சுற்றி நின்று, உனக்கு ஸேவை செய்து, உன்னை த்யானித்து ரக்ஷிக்கப்பட்டோர், உன் மஹாத்ம்யத்திற்கும், பக்தரக்ஷண ஸௌர்யத்திற்கும் ஸாக்ஷியாக இருப்பதைப் பார்த்து, நான் மஹாவிஸ்வாஸத்துடன் என் வாழ்நாளை உன் ஸேவையில் கழித்து வருகிறேன் என்று ஸ்ரீ ஸத்குரு சொன்னார்.

"ராம கோதண்டராம, ராம கல்யாண ராம, பட்டாபிராம", இழியோர்களின் ஜீவனம் உயரியதாகக் காணப்படும் இந்த கலியுகத்தில், உனது "பொற்றாமரை அடியே போற்றும் பொருள்கேளாய்." உனது மலர்த்தாளடி பணிந்து உன்னையே த்யானித்து, பூஜித்து வரும் காரணம் உன் பக்தரக்ஷண பராக்ரமத்திற்கு ஆஞ்சநேயன், பரமசிவன் ஆகியோர் ஸாக்ஷியாக நின்று உறுதி கூறுவதால் தான் !

"எந்தெந்து ஜூசின நெந்தெந்து பலிகின
நெந்தெந்து ஸேவிஞ்சின நெந்தெந்து பூஜிஞ்சின
அந்தந்து நீவனி தோசேடந்துகு"

என்று தனது அபூர்வமான ஆனந்தபைரவிக்ருதியில், ராமா, எங்கெங்கு பார்த்தாலும், எந்த இடங்களில் பேசினாலும், எங்கெங்கே உன்னை ஆராதித்தாலும், அங்கங்கே உன்னையே காண்கிறேன். "நீ பாதாரவிந்த முனு த்யானிஞ்சின தெந்துகனி", உனது மலர்த்தாளடி

பணிந்து, உன்னையே த்யானித்திருப்பது எதற்கு எனக் கேட்டாயேயானால், நான் சொல்லக்கூடிய பதில் இது ஒன்று தான். ஆஞ்சநேயன், மஹேஸ்வரன், நாரதர், பராசரர், ஸுகர், ஸௌனகர், கௌதமர், புரந்தரர், ஆகிய மஹாநுபாவர்கள் உனது பக்த ரக்ஷண லக்ஷணத்திற்கு ஸாக்ஷியாக இருப்பதால் தான், உன்னைத் தளராத மனதுடனும், மஹாவிஸ்வாஸத்துடனும் நான் த்யானித்து, ஆராதித்து வருகிறேன். நீ என்னை ரக்ஷிக்கப் போகிறாய் என்பதில் ஐயமற்று, உனது ஸுந்தர வதனத்தைக் கண்டு, ஆனந்தபூரிதனாக இருக்கிறேன் என்று இந்த சரணத்தில் தெரிவித்தார்.

"ஸீதா நாயக ஸ்ரிதஜன போஷக ஸ்ரீ ரகுகுலதிலக ராம", பரமசிவன் துதிக்கும் "பால ஸஸாங்க கலாலங்க்ருத நுத"ராம, "ஸாரெகு ஸங்கீத யோக நைகம பராங்குதுடைன பரம பாவன நாரத வந்தித ராம", "பவனஜ ஸ்துதி பாத்ர பாவன சரித்ர" பட்டாபிராம, "யோகிஜன ஹ்ருதயாப்ஜமித்ர" மைதிலீ ராமா, உன்னைக் காணக்காண என் உள்ளம் மெய் மறந்து நிற்கிறதே என்று இங்கு சொன்னார்.

இந்த சரணத்தின் முதல் பகுதியில், சிறிய திருவடியான ஆஞ்சநேயரை, ஸ்ரீ ராமனின் அண்டியவர்களைக் காக்கும் குண ஸம்பத்திற்கு ஸாக்ஷியாக ஸ்ரீ ஸத்குரு கூறினார். ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளுக்கு, ஆஞ்சநேயரிடம் தீவ்ரபக்தி உண்டு. ஸ்ரீ ராமனின் பாத ஸேவையில் என்றும் ஈடுபட்டிருக்கும் ஆஞ்சநேயரை ஒரு பூர்ணலலித ராக கீர்த்தனத்தில், "கலுகுனா பத நீரஜ ஸேவ கந்த வாஹ தனய" என அவர்

கேட்டதுமுண்டு. வாயு புத்ரரே ! ஸ்ரீ ராமனின் திருவடித் தாமரைகளின் தரிசனம் எனக்கும் கிடைக்குமா என ராம பக்தர்களுள் ஒருவரான ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம், மற்ற ஒரு ராம பக்தரான ஆஞ்சநேயரிடம் கேட்டுக் கொண்டார். "பலுமாரு ஜூத்ஸு ப்ரஹ்ம்மானந்துடை பரகே பக்தாக்ரேஸர தனகு, கலுகுனா பத நீரஜ ஸேவ" என மேலும் ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் ஆஞ்சநேயரிடம் கேட்டார். ராம பக்தர்களின் வரிசையில் முதலாவதாக நிற்கும் ஆஞ்சநேயா ! மேன் மேலும் தாங்கள் தரிஸித்து, பரமானந்தம் கொள்ளும் அப்பாததாமரைகளின் தர்ஸனம் எனக்கும் கிடைக்குமா என ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் கேட்டுக் கொண்டார். ஸ்ரீ ஆஞ்சநேயரும், ஸ்ரீ த்யாக ப்ரஹ்ம்மத்தை கைபிடித்து அழைத்துக் கொண்டு, ஸ்ரீ ராமனின் பாதஸேவை பண்ணி வைத்தார். தான் அன்புடன் ஸ்ரீ ராம சந்த்ரனின் பாதத் தாமரைகளை பிடித்து விடாய் ஆற்றும் தர்ஸனம் கிட்டுமாறும் செய்தார். அந்த ஆனந்தானுபவத்தால், ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம்,

"காமிஞ்சி ப்ரேம மீரகரமுல நீது பாத கமல முல
பட்டு கொனு வாடு ஸாக்ஷி,கன கன ருசிரா, கனகவஸன
நின்னு"

என்று ஸ்ரீ ஸாகேதராமனின் திருவடிகளைப்பாடிப் போற்றினார். அண்டினவர்களை காப்பாற்றுபவனே ! உன்னைப் பார்க்கப் பார்க்க ஆனந்தம் பொங்குகிறது எனச் சொன்னார்.

அடுத்த படியாக ஸரணாகதி செய்தவர்களை காப்பாற்றுபவன் ராமன் என ஸாக்ஷி சொல்ல நிற்கும் கைலாஸ வாசியான, பரமேஸ்வரனை, "ராம நாமரஸிகுடு,

கைலாஸ ஸதனுடு ஸாக்ஷி" என விவரித்தார்.

"ராமாபி ராமா ரமணீய நாமா" என்று மனதை இன்புறச் செய்யும் தாரக நாமத்தின் ருசியை அறிந்த கைலாஸ நாதனை, "ராம நாம ரஸிகுடு" என அன்புடன் விவரித்து. ஸ்ரீ பக்தர்களை ரக்ஷிப்பவன் என்பதற்கு அவர் ஸாக்ஷி சொல்லத் தயாராக இருப்பவர் எனச் சொன்னார். "ஸ்ரீகர ரூப ஸுதாகர வதன, ஸோக நிவாரண ஸுந்தரரதன" ராமனின் பக்த தாக்ஷிண்யத்திற்கு "வேத ஜனித் வ்ரவீணா வாதன தத்வக்ஞ, கேததர த்ரிதாப ரஹித கேசர்விநுத, நாத ஸரஸீருஹ ப்ருங்க ஸுபாங்கரரான" நாரத்முனியை அதற்கடுத்த ஸாக்ஷியாக ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் அறிவித்தார்.

"ஸனகாதி ஸுமுனி கீத ஸஜ்ஜனகண பாரி ஜாத" என்று அஸாவேரி கீர்த்தன வாக்ய மூலம் தான் கொண்டாடிய ராமன் அண்டினோரைத் தவறாது காப்பவன் என ஸாக்ஷி சொல்ல காத்திருக்கும் பராஸரர், ஸுகப்ரஹ்ம்மம், ஸௌனகர், புரந்தரர், கௌதமர் முதலிய முனிவர் கணங்களை முக்ய ஸாக்ஷிகளாக தெரிவித்தார்.

கடைசியாக, வெள்ளியங்கிரியனின் தர்ம பத்னியான பார்வதி தேவி, உன்னுடைய தர்ம பத்னியான ஸீதாபிராட்டி இருவரும் நீ ஸரணாகதரக்ஷண வ்ரதம் கொண்ட தர்மாத்மா என்பதற்கு ஸாக்ஷி சொல்லத் தயாராக நிற்கிறார்களே! அப்பேற்ப்பட்ட பக்தவத்ஸல ப்ரபோ, சுகமான பாற் கடலில் பள்ளி கொண்டிருக்கும் க்ஷீராப்தி நாத! பரம சௌந்தர்ய மூர்த்தே! "ஸ்வரலயாதி மூர்சநோல்லஸித நாரத விநுத! ஸ்ரீ பாஸ்கரகுலாத்ரி தீப!

பவனஜத்ருத பாதகமல தாஸரதே! முக்கண்டி நோட செலகே நாம மஹாத்ம்யா !" உன்னைக் காணக்காண என் மனம் தாயைக் கண்ட இளங்கன்று போல் ஆனந்த மிகுதியால் தாவித்தாவி குதிக்கிறதே என்று இச்சரணத்தில் சொன்னார்.

<u>வராளி பஞ்சரத்னத்தின் கடைசி சரணம்</u>

மற்ற நான்கு பஞ்சரத்னங்களையும், பத்து சரணங்களுடன் அமைத்த ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் ஏழாவது சரணம் பாடும் சமயம், ரகுவம்ஸ ராஜ ராஜ சுந்தர மூர்த்தியின் அழகில் மயங்கி, இனி மேல் பாடாது, அவனுடைய திவ்ய ஸௌந்தர்யத்தைக் கண் நிறையப் பார்த்துக் கொண்டு இருப்போம் என நினைத்து, எட்டாவது சரணத்துடன் வராளி பஞ்சரத்னக்ருதியை முடித்து விட்டார். எட்டாவது சரணத்தில் தன் நாமாங்கிதத்தையும் சேர்த்து, ஸ்ரீ ராமனின் திருவடிகளில் க்ருதியை ஸமர்பித்து மௌனமாக, அவன் நிர்மல ரூபத்தை ரஸித்து நின்றார்.

"பபமபபம காகா காமபதப" என்று ஆரம்பமாகும் எட்டாவது சரணம் "ஸததமு ப்ரேம பூரிதுடகு த்யாகராஜநுத முகஜித குமுத! ஹிதவரதா! நின்னு, கனகனருசிரா, கனக வஸன நின்னு

(रु (सततमु प्रेम पूरितडगु त्यागराजनुत ! मुखजित कुमुद ! हित हित
वर वरद ! निनु, कन कन रूचिरा कनक वसन, निन्नु"

என்ற வாக்யங்களைக் கொண்டு சுருக்கமாக உள்ளது.

"யோகிஜன ஹ்ருதயாப்ஜமித்ர ராம! கருணாரஸ பூர்ண நேத்ர ராம! ஸ்ரீ காந்த ராமா! நிர்வாண பலத

ராமா !" என்று ஒரு பூர்ண சந்த்ரிகா க்ருதியில் தான் குறிப்பிட்ட கருத்துக்களின் எதிரொலியாக இந்த எட்டாவது சரணத்தில், ஸ்ரீ ராம மூர்த்தியை எப்போதும் அன்பு கனிந்த கருணாரஸபூர்ண 'நேத்ரங்கள் கொண்ட திருமுகத்தவனாகவும், தன்னை அண்டியோருக்கு மங்கள கரமான வரங்களை எல்லாம் பரம ஒளதார்யத்துடன் அளிக்கும் வரத ராஜனாகவும், தாமரையை ஜயித்த ஸௌந்தர்யமுள்ள வதனம் கொண்டவனாகவும் நமஸ்கரித்துக் கொண்டார்.

"த்யாகராஜ நுத முகஜித குமுத நத வரதா" என்ற பாடமும், இந்த சரணத்திற்கு உண்டு. "ஹித வரதா" என்பதிற்கு பதிலாக "நத வரதா" என்ற பாடத்தை நினைக்கும் போது சங்கராபரண ராகத்தில் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் செய்த திவ்ய நாம க்ருதியாகிய "கத மோஹாஸ்ரிதபாலாத்புத ஸீதா ரமண" என்பதின் கடைசி சரண வாக்யங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. அந்த சரணத்தில் "ஹித", "நத" என்ற இரண்டு பதங்களையும் அழகாக சேர்ந்து உபயோகித்து, அவைகளுக்குள்ள ஒற்றுமையை குறிப்பிட்டார். இந்த சங்கராபரண க்ருதியின் சரண வாக்யம் பின் வருமாறு :

"நத மானஸ ஹித கர பாலித த்யாகராஜ"

தன்னை வணங்கி நிற்கும் மனிதர்களுக்கு மங்களங்கள் புரியும் த்யாகராஜ ரக்ஷகன், ஸ்ரீ ராமன் என இங்கு சொல்லினார். அதனால் "நத வரத", "ஹித வரத" என்ற பாட பேதங்களில் வித்யாஸம் ஏதும் இல்லாதிருப்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்.

அடியாரை காக்கும் வள்ளலான ராமனை "வரதா" என மிகுந்த ப்ரேமையுடன் ஸ்ரீ ஸத்குரு வராளி பஞ்சரத்ன முடிவில் கூப்பிட்டு, பீதாம்பரதாரியே உன்னுடைய திவ்ய ஸௌந்தர்யத்தை காண திகட்ட மாட்டேன் என்கிறதே! என் மனது, உன்னுடைய் போக்யமான வடிவழகைக் கண்டு ஆனந்தம் மிகுந்து பொங்குகிறதே என்றார்.

காவேரிக் கரையில் உள்ள திருவையாற்றில், ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் பீதாம்பரதாரியாகவும், பால்வடியும் முகத்துடனும், நவரத்ன மயமான மாலைகளை அணிந்து கொண்டும், கருணாரஸ பூர்ண நேத்ரங்களுடனும், பரம தயாகரனாகவும் ஸ்ரீ ராமனைக் கண்டு, அவனுடைய அழகு எவ்வளவு அனுபவித்தாலும் த்ருப்தி ஏற்படுத்தாத ஆராவமுதாக இருப்பதாகச் சொன்னார். அப்பேற்ப்பட்ட அதிலாவண்ய ஸௌந்தர்யத்தை ஸேவித்துக் கொள்ளும் பாக்யம் கிடைத்த தன் மனது ஆனந்த வாரிதியில் மூழ்கி, கட்டுக் குலைந்து நிற்பதை சொல்வது நம்மாழ்வார் என்ற மற்ற ஒரு பரம பக்தரின் அனுபவ நிலையை ஞாபகப்படுத்துகிறது. அதே காவேரிக் கரையில், திருவையாறுக்கு சில காதங்கள் தெற்கே உள்ள திருக்குடந்தை என்ற திவ்ய தேசத்தில் பள்ளி கொண்டிருக்கும் ராமனை, நம்மாழ்வார் கண்டானந்தித்து, தான் அனுபவித்த பரமானந்தத்தை பின் வருமாறு விவரித்தார். :

"ஆராவமுதே! அடியேனுடலம் நின் பாலன்பாயே
நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே!
சீரார் செந்நெற் கவரி வீசும் செழுநீர்த்திருக்குடந்தை
ஏரார் கோலந்திகழக் கிடந்தாய் கண்டேனெம்மானே!"

எவ்வளவு அனுபவித்தாலும் அபர்யாப்த அம்ருத

மாய், ஆரா அமுதாய் உனது வடிவழகு இருக்கிறது, அத்யத்புத லாவண்யம், குண விசேஷங்கள் கொண்ட உன்னிடம் கொண்ட பரம ப்ரேமையால், ஸாதாரணமாக மத, மோஹங்களுக்கு உட்பட்டு, திண்மையுடன் நிற்கும் என் மனது கட்டுக் குலைந்து, நீர்பண்டமாகி, உருகி நிற்கிறது. என் மனதை நின்ற விடத்தில் நிற்காதபடி, நீருக்கும் மேலாகக் கரையும் படி செய்து, அலைந்து கரைய உருக்குகின்ற ஆராவமுதே! உன்னுடைய "ஏர் ஆர்கோலம் திகழக் கிடக்கும்", ரூப விசேஷம், இயற்கை அழகு நிறைந்ததாயும், உனது மேனியில் காணப்படும் ஆபரணங்களால் அதிகப்படுத்தப்பட்டதாகவும் ஸேவை ஆகிறது. அப்பேற்பட்ட உன் திவ்ய சௌந்தர்யத்தைக் காணக் காண என் மனது ஆனந்த மிகுதியால் அனுபவிக்கும் விசேஷங்களை சொல்லமுடியவில்லை என்பது, ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் பல நூற்றாண்டு களுக்கு பின் அனுபவித்து, இயற்றிய வராளி பஞ்சரத்ன க்ருதியில் விவரித்த கருத்துகளுடன் ஒற்றுமை கொண்டது. ஸ்ரீ த்யாகப்ரஹ்மமும், நம்மாழ்வாரும் போற்றிப் பாடிய ஆராவமுதாகிய ஸ்ரீ ராமனை பின் வருமாறு த்யானித்துக் கொண்டு, வராளி ராக பஞ்சரத்ன கீர்த்தனை பற்றி கட்டுரையை ஸ்ரீ ராமார்ப்பணமாக ஸமர்பிக்கிறேன்:

रामेति वर्णद्वयमादरेण सदा स्मरन् मुक्तिमुपेति जन्तुः ।
कलौ युगे कल्मषमानुषाणामन्यत्र धर्मे खलु नाधिकारः ॥

உனதன்புள்ள தம்பி,
சடகோபன்

சுக்லஞு, ஆனி மீ 25உ, ஞாயிறு, சஷ்டி, உத்தராடம் அம்ருத யோகம், விவாஹ சுபமுஹூர்த்ததினம்.



க்ஷேமம். சுக்லஞ, ஆனி மீ 15உ வியாழக்கிழமை
ஸர்வ ஏகாதசி தினம், பரணி நக்ஷத்ரம்,

June 29, 1989.

அன்பு நிறைந்த சௌ. பத்மாவிற்கு, உனது தம்பி சடகோபன் அநேக நமஸ்காரம், க்ஷேமம். இன்று, ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின் ஐந்தாவது பஞ்சரத்னமான "எந்தரோ மஹானுபாவுலந்தரிகி வந்தனமு" என்ற ஸ்ரீராக க்ருதி பற்றி எழுதுகிறேன்.

பரம பாகவதர்களின் தர்ஸன மஹிமை, பாகவத கோஷ்டியில் சேர்ந்து இருப்பதின் உயர்வு, இவைகளை இந்த பஞ்சரத்னத்தில் ஸ்ரீஸத்குரு நமக்கு விளக்கியுள்ளார். ஸ்ரீமத் பாகவத புராணத்தை தினமும் பாராயணத்தில் உபயோகப்படுத்திய ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், பின்வரும் ஸ்ரீமத்பாகவத ஸ்லோகத்தின் சாரத்தை, தனது ஸ்ரீ ராக பஞ்சரத்ன மூலம் நமக்கு தெளிவாக விளக்கியுள்ளார்.

नैषां मतिस्तावदुरुक्रमांघ्रिं स्पृशत्यनर्थोपगमो यदर्थः ।
महीयसां पादरजोऽभिषेकं निष्किंचनानां च वृणीत यावत् ॥

நைஷாம் மதிஸ்தாவதுருக்ரமாங்க்ரிம்
ஸ்ப்ருஸத்யனர்த்தோபகமோ யதர்த்த: 1
மஹீயஸாம் பாதரஜோபிஷேகம் நிஷ்கிஞ்சனானாம் ச
வ்ருணீத யாவத் 11

(கருத்து) வாழ்க்கையில் மனிதர்களால் செய்யப்படும் பாபங்களை அழிப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இப்புவியில், ஏழ்மையையும் எளிமையையும் சந்தோஷத்துடன் ஏற்று கொண்டு வாழும் மகான்களின் பாதத்தூளியை சிரஸ்ஸில் அணிந்துகொண்டால் தவிர,

ஜனங்களுக்கு, த்ரிவிக்ரமனாக அவதரித்த பகவானின் மாட்சிமை தெரியவராது; அப்பேர்ப்பட்ட பரமபாகவதர்களின் பாதரேணுவை அணிந்து கொண்டால் ஒழிய, பகவானின் அனுக்ரஹமும் ஸித்திக்காது.

இப்படியாக பாகவத ஸேவை செய்து, தனது ஆசாரியனுக்கும் தகுந்த மரியாதைகள் செய்து, பாகவதர்கள் ஆசாரியன் போன்ற மஹானுபாவர்களை நடமாடும் தெய்வமாக மதித்து வருவோர்களுக்குத்தான், பகவத் அனுக்ரஹம் ஏற்படும் என்று பின் வரும் ஸ்லோகமும் அறிவித்து, பாகவதர்களின் உயரிய நிலையை கொண்டாடுகிறது :

सत् सेवा गुरुसेवा च देवभावेन चेद् भवेत् ।
तदैषा भगवद्भक्तिर्लभ्यते नान्यथा क्वचित् ॥

ஸத்ஸேவா குருஸேவா ச தேவபாவேன சேத் பவேத்
ததைஷா பகவத் பக்திர்லப்யதே நான்யதா க்வசித்

<u>ஹரிதாஸர்களாகிய மஹானுபாவர்களின் உயர்வு</u>

பகவதனுக்ரஹம் ஏற்பட ஹரிதாஸர்களாகிய பாகவதர்களின் சேர்க்கை எவ்வளவு இன்றியமையாதது என்பதை வேதமும், புராணங்களும், ஆகமங்களும், உபநிஷத்துக்களும், ஆழ்வார்களும், ஆச்சார்யர்களும் நமக்கு விளக்கியிருக்கிறார்கள். இந்த ஸம்ப்ரதாயத்தில், ஸ்த்குருவான ஸ்ரீத்யாகப்ரஹ்மமும், தனக்கு முன் சென்ற மஹான்கள் காண்பித்துக் கொடுத்த வழியில் சென்று, நமக்கு பாகவத லக்ஷணங்களை விவரமாகச்சொல்லி, அவர்களுடைய கோஷ்டிகளில் சேர்ந்து இருப்பதால் ஏற்படும் ஸ்ரேயஸ்ஸுகள் பற்றி பல கீர்த்தனங்களில்

கொண்டாடியிருக்கிறார். மஹானுபாவர்களாகிய பாகவதர்களுக்கு வந்தனம் தெரிவிக்கும் ஸ்ரீத்யாராஜ ஸ்வாமிக்ருதிகளில் தலை சிறந்தது, "எந்தரோ மஹானுபாவு" என்ற ஸ்ரீராக கீர்த்தனம். ஸ்ரீத்யாக ப்ரஹ்மமத்திற்கு முன் சென்று, பாகவத ஸத்ஸங்கத்தின் அத்யாவஸ்யத்தை நமக்கு விளக்கிய மஹான்களின் அருள் வாக்குகளை முதலாக கவனிப்போம்.

ஸாமவேதத்தின் உத்தரார்ச்சிக ஸாமரிக்குகள் கொண்டாடும் பாகவத மஹிமை

கானத்தைக் கொண்டு, ஞானத்தை வளர்க்கும் ஸாம கானரிக்குகளில் பல, பகவானுக்கு பாகவதர்களிடம் உள்ள விசேஷ அபிமானத்தை நமக்கு விளக்குகின்றன. பகவத்கைங்கர்யங்களில் அனவரதமும் ஈடுபட்டு நிற்கும் பாகவதோத்தமர்கள், தங்களுடைய ஞானபலத்தாலும், தபோதனத்தாலும் எல்லா இடையூறுகளையும் வென்று, எப்படி மனித ஸமூஹத்திற்கு சக்ரவர்த்திகளாக விளங்குகிறார்கள் என்பதை பின்வரும் ஸாமரிக் விவரிக்கிறது:

उत स्वराजो अदितिरब्धस्य व्रतस्य ये । महो राजान ईशते ।

உத ஸ்வராஜோ அதிதிரப்தஸ்ய வ்ரதஸ்ய யே மஹோ
ராஜான ஈஸதே

"Those persons of spotless character , who shine through their soul force by observing inviolate law, become fit to rule over others through their supermacy."

கடுமையான நிஷ்டையை அனுஷ்டித்து, வழுவிலா ஒழுக்கம் கொண்டு, தாஸ மார்க்கத்தை கடை பிடித்து,

சூர்யனின் கிரணங்கள் போல், உலகெலாம் தங்கள் மேதாவிலாஸத்தையும், தவப்பொலிவையும் பரப்பும் பாகவதோத்தமர்களின் பெருமையை மற்றும் ஒரு ஸாம வேத ரிக் பின் வருமாறு போற்றிப் பணிகிறது:

**कण्वा इव भृगव: सूर्या इव विश्वमिद्धीतमाशत ।**
**इन्द्रं स्तोमेभिर्महयन्त आयव: प्रियमेधासो अस्वरन् ॥**

- Sama Rik 1363

"கண்வா இவ ப்ருகவ : ஸூர்யா இவ
விஸ்வமித்தீதமாஸத
இந்த்ரகும் ஸ்தோமேபிர்மஹயந்த ஆயவ : ப்ரிய
மேதாஸோ அஸ்வரன்"
*உத்தரார்ச்சிக ஸாமன் 1363*

(Meaning) "The austere learned persons, like the rays of the Sun enjoy the whole world through their force of knowledge and meditation. Persons, who are lovers of refined intellect, recite Vedic verses, worshipping God with songs of praise".

"நாத்தழும்பெழ நாரணாவென்றழைத்து மெய் தழும்பத் தொழுதேத்தி, இன்புறும் தொண்டர் சேவடியேத்தி வாழ்த்துமென்னெஞ்சமே" என்ற ஆழ்வார் ஒருவரின் பாசுரப்பகுதியின் கருத்துகள், மேற்காணும் ஸாமவேத ரிக் குறிப்பிடும் தத்வார்த்தங்களுக்கு அனுஸரணையாக உள்ளது. நாக்கு தடிக்குமளவுக்கு, நாராயணா, நாராயாணா என்று கூப்பிட்டு, துதித்து ஆனந்தமடையும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருவடிகளை என் மனமானது நாடி, பல்லாண்டு பாடுகிறது என ஆழ்வார் தெரிவித்தார். பகவதாராதனமும், பாகவ தாராதனமும் எவ்வளவு நெருங்கிய உறவு கொண்டுள்ளார்

என்பதை பின்வரும் இரு சாமரிக்குகள் மேலும் விளக்குகின்றன:

**एष पवित्रे अक्षरत् सोमो देवेभ्यः सुतः । विश्वा धामान्याविशन् ॥**

ஏஷ பவித்ரே அக்ஷரத் ஸோமோ தேவேப்ய: ஸுத: 1
விஸ்வா தாமான்யாவிஸன் 11

**सुषमिद्धो न आ वह देवाँ अग्ने हविष्मते । होतः पावकः यक्षि च ॥**

சுஷமித்தோ ந ஆ வஹ தேவாகும் அக்னே ஹவிஷ்மதே1
ஹோத: பாவக: யக்ஷி ச 11 ஸாமரிக் 1347

முதலாவது ஸாமரிக், பகவான் தன் மெய்யடியார்ளுக்கு ப்ரஸன்னமாகிறான்; பல சமயங்களில், பாகவதர்களின் மூலம் உலகெல்லாம் பரவி உள்ளான் எனச்சொல்கிறது. (This God manifests himself to the Wise, learned persons and is realised in various beautiful forms. He pervades all places).

இரண்டாவது ஸாமரிக் (verse 1347), பகவானிடம் பின்வரும் ப்ரார்த்தனை செய்து கொள்கிறது "பரஞ்ஜோதியாய் விளங்கும் பரமனே! நீ பாகவதர் களிடம் மெய்யன்பு கொண்டவன். கேட்கும் வரங்களை எல்லாம் அருளும் பேரருளாளனே. எங்கள் உள்ளங்களில் பாகவத பக்தியான கனலை எழுப்பி, அவர்களுடைய ஸத்ஸங்கம் என்ற அனுக்ரஹம் நிலைக்குமாறு செய்." ஆணவ மலம், கார்மிக (கர்மாவால் ஏற்படும், மலம், மாயா மலம் ஆகிய மும்மலங்களையும் கழித்து, ஞானம் கனிந்த நலத்துடன் திகழும் பாகவதோத்தமர்களின் கோஷ்டி களில் எங்களைச் சேர்த்து விடு என்று ஸாமரிக் பகவானிடம் வேண்டிக் கொள்கிறது. ஸ்வாபாவிக

வினயம் கொண்டு, காம -க்ரோத - லோப - மோஹ - மத - மாத்ஸர்யம் ஆகிய ஷட்ரிபுக்களை (ஆறு எதிரிகளை) வென்று நிற்கும் மஹாநுபாவர்களை பெரியோர்களின் பெருமையை மற்றும் ஒரு உத்தரார்ச்சிக ஸாமரிக் பின் வருமாறு நமக்கு விளக்குகிறது.

स पुनान् उप सूरे दधान ओभे अप्रा रोदसी वीषः आवः।
प्रिया चिध्यस्य प्रियसास ऊती सतो धनं कारिणे न प्र यहुँसत् ॥

- Sama Vedam Rik 1358

*ஸபுனான் உப ஸூரே ததான ஓபே அப்ரா ரோதஸீ வீஷ: ஆவ : 1*
*ப்ரியா சித்யஸ்ய ப்ரியஸாஸ ஊதீ ஸதோ தனம் காரிணே ந ப்ரயகும்ஸத் 11*

(Meaning) "The learned person purifying himself, and concentrating on God through profound religious meditation fills both the literate and illiterate with the glow of learning and discloses various sorts of Knowledge. The pure and noble desires of learned persons are meant to guard us against fears and obstacles. May he grant us the excellent wealth of spiritual knowledge, as to a servant" (Learned person)".

"சிறு தெய்வம் சேரேன்" என்ற படி, சில்லுண்டி ஸ்வாமிகள், க்ஷுத்ர தேவதைகளை உபாஸிக்காது, தனிப்பெரும் தெய்வமான ஸ்ரீராமனையே கெட்டியாக பிடித்துக் கொண்டிருக்கும் மஹாத்மாக்களைப் பற்றி மேற் காணும் ஸாமரிக் சொல்கிறது. வழி தடுமாறியவன், வழுக்கி விழுந்தவன், ஆகியோர் நடுவில் வாழ்ந்து வரும்

இப்பேற்பட்ட தீவர தபஸ் கொண்ட மஹாத்மாக்கள், தங்களுடைய ஒழுக்கத்தின் உயர்வால் பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் கலங்கரை விளக்குப் போல் ப்ரகாஸித்து, பகவானை அடைவதற்கான சரியான வழியை காண்பித்து உதவுகிறார்கள். பலனில் ஆசை வைத்து, கர்மாக்களை பண்ணுவதில் ஈடுபடும் கர்ம சங்கிகள் கூட, அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம் (திருடாமை), ப்ரம்மசர்யம், அபரிக்ருஹம் (பிறர் பொருளுக்கு ஆசைப் படாமை), சௌசம் (தேஹசுத்தம்), இந்த்ரிய நிக்ரஹம் ஆகிய உயரிய அனுஷ்டானங்களை கடை பிடித்து வரும் மார்க்க தர்ஸிகளான பெரியோர்களை அண்டி, உய்யும் வழியை அறிந்து கொள்கிறார்கள்.

பகவானே ! உனது ஸேவகர்களான பாகவதர்களுக்கு அருளிய ப்ரகாரம் எங்களுக்கும் அனுக்ரஹம் செய் என மேற்காணும் ஸாமரிக் ப்றார்த்தித்துக் கொள்கிறது. "ஏந்திய கொள்கையார் சீறின் இடை முரிந்து வேந்தனும் வேந்து கெடும்" என்ற திருவள்ளுவரின் வாக்கு, மேற் கூறிய ஸாமரிக்கின் கருத்திற்கு அனுஸரணையானது. பெரியோர்களை ஆஸ்ரயித்து, அவர்கள் மனம் குளிர நடந்து கொண்டால், பகவானுடைய அருள் சந்தேஹமில்லாது கிட்டும் என திருக்குறள் பா ஒன்று மூலம் திருவள்ளுவர் சொல்வது ஸாமவேதஸாரம்.

மஹாநுபாவர்களாகிய . ஆழ்வார்கள், பாகவதர்களின் சிறப்பைக் கொண்டாடியது

பகவானிடம் மெய்யன்பு பூண்டவர்கள் (ப்ராவண்யம் கொண்டவர் பாகவதர்கள் விஷயத்திலே ப்ரவணராகாமல் (மெய்யன்பு இல்லாமல்) இருக்க முடியாது என்ற

தத்வத்தை நம்மாழ்வர், திருமங்கை ஆழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் என்ற ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள் ஸ்பஷ்டமாக விளக்கியுள்ளார்கள். பாக 'ப்ராவண்யம் ஓங்கினால் ஒழிய பகவத்விஷய ப்ராவண்யம் நிலைக்கா என்ற அடிப்படை தத்வத்தை அவர்கள் பல பாசுரங்கள் மூலம் நமக்கு போதித்துள்ளார்கள். அப்பேற்ப்பட்ட பாகவத ஸத்ஸங் கத்தை, தாங்க விரும்பித்தேடி அடைந்து உய்ந்ததாக மிகவும் வினயத்துடன் நமக்கு அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

உதாரணமாக, திருமங்கையாழ்வார், திருச்சேறையில் கோயில் கொண்டுள்ள ஸாரநாதப் பெருமானைப் பற்றிய பாசுரங்களில், பாகவதர்களின் உயரிய ஸ்தானத்தை பின் வருமாறு போற்றிப் பாடியிருக்கிறார்.

"எம் பெருமான் தாள் தொழுவார் எப்பொழுதுமென்
மனத்தேயிருக்கின்றாரே ----------------------
தண்சேறை எம்பெருமான் தாளையேந்தி, போதோடு
புனல்
தூவும் புண்ணியரே விண்ணவரில் பொலிகின்றாரே ----
பேராளன் பேரோதும் பெரியாரை யொருகாலும்
பிரிகிலேனே"

பகவானின் நாம ஸஹஸ்ரங்களை ஓதும் மஹானுபாவர்களை விட்டு, ஒரு நாளும், நான் பிரிந்திருக்க மாட்டேன்... அவன் திருவடிகளை ஆராதிப்பவர் எல்லாக் காலங்களிலும் என் மனதில் நிறைந்திருக்கின்றனர் .... திருச்சேறை எம் பெருமானின் திருவடி பணிந்து, மலர் தூவி பூஜிக்கும் புண்யசாலிகள், விண்ணோரை விட அதிக

தேஜஸ்ஸுடன் பொலிந்து நிற்கிறார்கள்......என்றெல்லாம் சொல்லி, திருமங்கை ஆழ்வார் பகவத்கைங்கர்யத்தில் ஒரு முகமாக ஈடுபடும் பாகவதர்களின் மஹிமைகளை நமக்கு விளக்கினார்.

அப்பேற்பட்ட மஹாநுபாவர்களின் பகவத் கைங்கர்ய, பகவத் அனுபவ விஷயங்களுடைய உயர்வின் முன், நமது பரிபூர்ண பக்குவம் இல்லாத பூசனைகள் எப்படி தலை எடுத்து நிற்கும் என்று பரம வினயத்துடன் நம்மாழ்வார் பின்வரும் பாசுரம் மூலம் கேட்டு, பாகவதோத்தமர்களின் சிறப்பை நமக்கு விளக்கினார்:

"கலக்கமில்லா நல்தவமுனிவர் கரை கண்டோர்
துலக்கமில்லா வானவர் எல்லாம் தொழுவார்கள்
மலக்கமெய்த மாகடல் தன்னைக் கடைந்தானை
உலக்க நாம் புகழ்கிற்பது என் செய்வது உரையீரே"

(கருத்து) ஒருவித குழப்பமும் இல்லாது, உயரிய ஞானத்துடன் பக்தியோகத்தை கடைபிடித்து, பகவானின் திருவடிகளிலேயே ஊன்றிய மனதுடன், பகவத் குணக்கடலானது உருவெடுத்து சயனித்து இருக்கும் திருப்பாற்கடலின் இக்கரையான ப்ரக்ருதி லோகத்தில் நடமாடும் ஜீவன் முக்தர்கள், பகவத் கைங்கர்யத்தைத் தவிர வேறு எதிலும் ஈடுபடாத சித்தத்துடன் தங்கள் வாழ் நாட்களை கடத்துகிறார்கள். திருப்பாற்கடலைக் கடைந்து, அம்ருதத்தை வெளிப்படுத்திய பகவானை நாமும், மேற்சொன்ன ஜீவன் முக்தர்களுக்கு சமமாக் போற்றிப்பாடி, ஆராதிப்பது என்பது, நினைத்து நடத்தக்கூடிய காரியமா? நான் செய்யக்கூடியது

எவ்வளவு தான் என்பதை எனக்கு எடுத்து சொல்லுங்கள் என நம்மாழ்வார் பணிவுடன் நம்மை கேட்கிறார். அப்பேற்ப்பட்ட "கலக்கமில்லா நல் தவமுனிவர்களை", உயரிய விண்ணோர்கள் (தேவர்கள் நித்ய சூரிகள்) தண்டனிட்டு நிற்பதை "துலக்கமில்லா வானவர் எல்லாம் தொழுவார்கள்" என்று சொல்லி, நம்மாழ்வார் பாகவதர்களின் மஹாத்ம்யத்தை நமக்கு தெரியப்படுத்தினார்.

பாகவதர்கள் கோஷ்டி பகவானுடைய ஸாமீப்யம் இவைகளை பிரிக்க முடியாது, இரண்டிற்கும் சேர்த்தே பல்லாண்டு கூறிய பெரியாழ்வார், பாகவத ப்ராவண்யம் ஸித்தித்தால் ஒழிய

"அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு"

அவர் பரமபாவனமான பாகவத கோஷ்டியில், தானும் சேர்ந்து கொண்டு, நம்மையும் அந்த கோஷ்டியில் சேர்வதால் ஏற்படும் உயர்வாலே பிழைத்துப்போய், பகவானுக்கு பல்லாண்டு கூறி அவன் அனுக்ரஹம் பெறுமாறு, பின் வருமாறு அழைத்தார்:

"ஏடு நிலத்திலிடுவதன் முன்னம் வந்தெங்கள் குழாம்
புகுந்து,
கூடு மனமுடையீர்கள் வரம் பொழிவந்தொல்லைக்
கூடுமினோ,
நாடு நகரமும் நன்கறிய நமோ நாராயணாய வென்று
பாடு மனமுடைப்பத்தருள்ளீர் வந்து பல்லாண்டு
கூறுமினே."

பகவானுக்கும், பாகவதர்களுக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தத்தையும் பாகவத கோஷ்டியின் உயர்வையும், பெரியாழ்வார் மேற் சொன்ன விதமாக புகழ்ந்து சொன்னார்.

பாகவதர்களின் உயர்வை, தொண்டரடிப்பொடி (பக்தாங்க்ரிரேணு) என்ற ஆழ்வார், திருமாலை என்ற தன்னுடைய ப்ரபந்தத்தில் இரண்டு இடங்களில் தெளிவாக விவரித்துள்ளார். முதலாவதாக, பாகவதர் களை தனக்கு ஸமானமாக ஆராதியுங்கள் என்று ஸ்ரீரங்கநாதன் சொல்லியதை பின் வருமாறு ஞாபகப்படுத்தினார் :

"பழுதிலா வொழுகலாற்றுப் பல சதுப் பேதிமார்கள்,
இழி குலத்த வர்களேலு மெம்மடியார்களாகில்
தொழுமினீர் கொடுமின் கொள்மினென்று
நின்னோடு மொக்க,
வழி பட வருளினாய் போல் மதிள்
திருவரங்கத்தானே."

(கருத்து) அழகிய மதில்கள் சூழ்ந்த ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் சயனித்துக் கொண்டிருக்கும் பெருமானே! நீ உபதேசம் செய்தது, நான்கு வேதங்களையும் ஓதி, குற்றமற்ற வாழ்க்கை நடத்தி வரும் வேதபரம்பரையில் உள்ளவர்களுக்கு! தாழ்ந்த வகுப்பில் பிறந்தவர்களா யிருந்தாலும், என் அடியார்களை, நீங்கள் தொழுங்கள்! வேதாத்யயனம் மூலம், நீங்கள் அறிந்த உண்மைகளை அவர்களுக்கு உபதேஸம் செய்யுங்கள்! அவர்கள் என்னைப்பற்றி அறிந்த தத்துவங்களின் விசேஷார்த்தங் களை அவர்களிடமிருந்து உபதேஸமாக பெறுங்கள்.

எனக்கு ஸமமாக என்னடியார்களை ஆராதித்து, என் அனுக்ரஹத்தைப் பெறுங்கள் என்று நீ படித்த பெரியவர்களுக்கு பாகவதர்களின் உன்னத ஸ்தானத்தை விளக்கினாய் என்று தொண்டரடிப் பொடி ஸ்ரீரங்கநாதனிடம் சொன்னார். வரட்டுப்படிப்பும், வினயம் இல்லாத பக்தியும், பகவதனுக்ரஹம் அடைந்த பக்த சிரோமணிகளின் முன் நிற்க முடியாது என்ற உண்மையை தொண்டரடிப்பொடி ஸ்ரீரங்கநாதனுடன் செய்த சம்பாஷணை முகமாக நமக்கு அறிவித்தார். காவேரி சூழ்ந்த கோயிலில் கண் வளரும் ஸ்ரீரங்கநாதனுக்கு லோக சுகங்களை ஒதுக்கி, விஷயாந்தரங்களில் மனதை போக விடாது, தன் கைங்கர்யத்திலேயே காலமெல்லாம் செலவிடும் பாகவதர்களிடம் உள்ள பரம ப்ரேமையை மற்றும் ஒரு திருமாலைப் பாசுரம் மூலம், தொண்டரடிப்பொடி ஆழ்வார் பின்வருமாறு விவரித்தார்:

மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை
மிகவுணர்ந்து,
ஆம்பரிசறிந்து கொண்டு ஐம்புலனகத்தடக்கி,
காம்பறத்தலை சிரைத்து உன் கடைத்தலையிருந்து
வாழும்
சோம்பரையுகத்தி போலும் சூழ்புனலரங்கத்தானே

(கருத்து) சாதாரண ஜனங்கள் விரும்பும் லௌகீக சுகங்களை அடியோடு விலக்கி, உனது ஸ்வரூப லக்ஷணங்களை செவ்வனே புரிந்து கொண்டு, புலன்களை உன்னையற்ற வேறு விஷயங்களில் போகாது தடுத்து, தங்களை ரக்ஷிக்கும் பாரத்தை உன்னிடம் ஸமர்பித்து விட்டு உனது கோயில் திருவாசலிலேயே வசித்து வருபவர்களை விசேஷமாக உகப்பவன் அல்லவா, நீ,

என்று தொண்டரடிப் பொடி ஸ்ரீரங்கநாதனிடம் கேட்டார்.

பாகவதர்களின் உயர்வை ஸ்ரீகுலசேகராழ்வார் பல பாசுரங்கள் மூலம் நமக்கு விளக்கியிருக்கிறார். ஒரு பாசுரப்பகுதியில் ஸ்ரீரங்கநாதனிடம் கொண்ட பக்தி மேலீட்டால், "ரங்கா, ரங்கா" என்று ஸங்கீர்த்தனம் செய்து உள்ளம் கரைந்து ஆடியும், பாடியும் வரும் பாகவதர்களின் திருவடித்துகள்களை சிரஸ்ஸில் அணிந்து கொள்பவர் களுக்கு, கங்கா ஸ்னானம் வேறு வேண்டியதில்லை என்று பின் வருமாறு தெரிவித்தார்.

"ஆடிப்பாடியரங்கவோவென்றழைக்கும்
தொண்டரடிப்பொடி
யாட நாம் பெறில், கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை
என்னாவதே"

தென்னரங்கத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீரங்கநாதன் என்ற அர்ச்சா மூர்த்தியை, கையில் கோதண்டம் என்ற வில்லை அணிந்திருக்கும் நீலமேக வண்ணனாகக் கண்டு, மயிர் கூச்செறியும் பரம பாகவதர்களை என் மனது நினைத்து மயிர் கூச்செறியப் பெற்றது என குலசேகராழ்வார் பின்வரும் பாசுரப் பகுதி மூலம் கூறி, பாகவதர்களிடம் தனக்கு உள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தினார் :

" .......திண்ண மாமதிள் தென்னரங்கனாம்
மெய்சிலைக்கருமேக மொன்று தம் நெஞ்சில் நின்று
திகழப்போய்
மெய் சிலிர்ப்பவர் தம்மையே நினைந்து என் மனம் மெய்
சிலிர்க்குமே ".

ஸ்ரீரங்கநாதன் விஷயத்திலேயே பித்து பிடித்து திரிகின்ற தொண்டர்களின் வாழ்க்கையில் என் நெஞ்சை பறி கொடுத்தேன் என்று பின்வரும் பாசுரத்தில் ஸ்ரீகுலசேகராழ்வார் சொல்லி, பாகவதர்களிடம் தனக்கு உள்ள விசேஷ அபிமானத்தை விளக்கினார்.

"மாலையுற்ற கடல் கிடந்தவன் வண்டு கிண்டு
நறுந்துழாய்
மாலையுற்ற வரைப் பெருந்திருமார்வனை
மலர்க்கண்ணனை
மாலையுற்றெழுந்தாடிப்பாடி திரிந்த
ரங்கனெம்மானுக்கே
மாலையுற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு மாலையுற்ற
தென்னெஞ்சமே "

மேற் காணும் பாசுரத்தின் முதல் பாதியில், ஆழ்வார், ஸ்ரீரங்கநாதனின் ரூப ஸௌந்தர்யத்தையும், திருப்பாற் கடலில் கண் வளரும் அழகையும், தாமரைக் கண்களின் விசேஷ லக்ஷணத்தையும் கொண்டாடினார். அப்பேற்ப்பட்ட "மலர்கண்ணனை மாலையுற்ற எழுந்தாடிப் பாடித்திரிந்த ரங்கத்தம்மானுக்கே மாலையுற்றிடும் தொண்டர் வாழ்வில் தன் நெஞ்சம் மயங்கியதை "தொண்டற் வாழ்வுக்கு மாலையுற்ற தென்னெஞ்சமே" என குலசேகரர் இங்கு விவரித்தார். செந்தாமரை மலர்கள் போன்ற திருக்கண்களை உடைய ஸ்ரீரங்கநாதனிடம் மைய்யல் கொண்டு, எழுந்து, ஆனந்த பரவஸராய் கூத்தாடி, வாயாரப் பாடித்திரிகின்ற பரமபாகவதர்களின் வாழ்க்கை விபரங்களில் மனதை இழந்து, தனக்கும் அந்த மாதிரியான ஆனந்தானுபவம் ஸித்திக்க

வேண்டுமென இங்கு அவர் வேண்டிக் கொண்டார்.

பாகவதர்களின் தனி விசேஷம், அவர்கள் கோஷ்டியின் தனிச்சிறப்பு, பகவானுக்கு அவர்களிடம் உள்ள விசேஷ அபிமானம் ஆகிய விஷயங்களைப் பற்றி ஸ்ரீஸ்வாமி தேசிகன் என்ற வைஷ்ணவ ஆசார்யாரும் பல சந்தர்பங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஒரு சமயம், ஸ்ரீரங்கநாதனிடம் இனிமேல் இவ்வுலகில் எனக்கு வேண்டியது ஒன்றே ஒன்று தான் என தெரிவித்து, அது என்ன என்பதை பின் வருமாறு விளக்கினார் :

निरस्तरिपुसंभवे क्वचन रङ्गमुख्ये विभो ।
परस्परहितैषिणां परिसरेषु मां वर्तय ॥

*நிரஸ்தரிபுஸம்பவே க்வசன ரங்கமுக்யே விபோ I*
*பரஸ்பரஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய. II*

ஹேரங்கநாதா! "परं इह क्षमं प्रार्थये" "இனிமேல் இப்புவியில் எனக்கு நீ அளிக்கக்கூடிய வரம் ஒன்றே ஒன்று தான்! அது தான் எனக்கு மிகவும் வேண்டியதாக இருக்கிறது. என்னுடைய மிகுந்த நாட்களை, "परस्परहितैषिणां परिसरेषु मां वर्तय"। பரஸ்பரம் ஒருவர் மற்றவருடைய க்ஷேமத்தையே விரும்பும், பாகவதர்கள் நிறைந்த ஸ்ரீரங்கம் போன்ற புண்ய க்ஷேத்ரங்களில் நான் வாழுமாறு அருள் புரி. உனது பக்தி யோகத்தில் திளைத்து உன் கைங்கர்ய ஸாம்ராஜ்யம் பெற்ற பாகவதர்களின் அருகில் அடியேனை வாழச்செய்தருள் என ஸ்ரீஸ்வாமி தேசிகன் ப்ரார்த்தித்துக் கொண்டார். இறைவன் அடியார் நிறைந்த திவ்ய தேசத்தில், நான் வாழ்வதற்கான அனுக்ரஹம் புரி என ஸ்ரீஸ்வாமி தேசிகன்

கேட்டுக் கொண்ட விதமாக, ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மமும், தனது சுத்த பங்காள ராகக்ருதியான "தொலி நெ ஜேஸின பூஜாபலமு" என்பதில் "ஹரிதாஸரஹித புரமுன வேஸித்ரிஜுபகுண்டக த்யாகராஜார்ச்சித" என்று சொன்னார். பக்தனின் பண்பாட்டிற்கு, நல்லோர் இணக்கம் எவ்வளவு முக்யமானது என்பதை சொல்லும் சமயத்தில், "இறைவனடியார் இல்லாத ஊரில் என்னைத் தள்ளி, முன்னேறும் வகைக்கு உதவ மாட்டேன் என்கிறார் ராமா" என்று சுத்த பங்காளா கீர்த்தனத்தில் புகார் செய்து, "ஹரி தாஸரஹித புரங்களின்" தாழ்வைக் குறிப்பிட்டார். "கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்" என்று ஔவைப்பாட்டி வாக்யத்திற்கு விவரணமாக, "ஹரிதாஸர்கள் , இல்லாத ஊரில் குடி புக வேண்டாம் என ஸ்ரீஸ்வாமி தேசிகனும், ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மமும் சொல்லி, பாகவதர்களின் உயர்வை நமக்கு விளக்கினார்கள்.

உன் திருவடிகளை சரண் என அடைந்தவர்களின் மஹிமையில், மற்றவர்கள் கோடியில் ஒரு பங்கு கூட அடையவே முடியாது என மற்ற ஒரு இடத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் சொல்லி, சரணாகதி செய்து, பகவான் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தில் ஈடுபடும் மஹாநுபாவர்களின் உயர்வை பின் வருமாறு கொண்டாடினார்:

नाथ त्वदीय चरणौ शरणं गतानां ।
नैवायुतायुतकलाऽप्य परैरवाप्या ॥

"நாத த்வதீய சரணௌ ஸரணம் கதானாம் 1
நைவ அயுத அயுத கலாஅபி அபரை: அவாப்யா: 11"

ஸ்வாமி சரணாகதர்களின் மஹிமை சொல்லப் போனால், ஒரு விஷயம் தெளிவாக தெரிகிறது. தான் சரணாகதி செய்யாதும், சரணாகதர்களுடன் சேராதும் உள்ள ஜனங்களின் பெருமை, சரணாகதி செய்த பாகவதர்களின் மஹிமையில், கோடியில் ஒரு பங்கு கூட அடையாது என்று மேற்காணும் ஸ்லோகப்பகுதியில் ஸ்ரீவேதாந்த தேசிகன் கூறினார்.

தன்னடியார்களிடத்தில், பகவான் கட்டுப் பட்டிருப்பதால், ஹரிதாஸர்களுக்கு அவனிடம் தனிச்சலுகை உண்டு. அந்த விசேஷ உறவால், பாகவதர்களை அண்டியவர்களுக்கும், பகவானுடைய சலுகை கிட்டி விடுகிறது என்ற கருத்தை ஸ்ரீஸ்வாமி தேசிகன் மற்ற ஒரு இடத்தில் பின்வருமாறு விவரித்தார்:

भक्तेषु ते वरगुणार्णव पारतन्त्र्यात् ।
दास्यं भजन्ति विपणिव्यवहारयोग्यम् ॥

பக்தேஷு தே வரகுணார்ணவ பாரதந்தர்யாத் 1
தாஸ்யம் பஜந்தி விபணிவ்யவஹாரயோக்யம் 11

பாகவதர்களின் ச்ரேஷ்ட்டமான குணங்களை அறிந்து, அவர்களிடம் ஈடுபடுவதால், ஜனங்கள் உய்யும் வழி சேர்ந்து, அவர்கள் மூலம் குணக்கடலான பகவானின் பூர்ண அனுக்ரஹம் அடைகிறார்கள். அடியார்களிடத்தில் பகவான் கட்டுப்பட்டு, பாரதந்த்ர்யனாக இருப்பது போல், உயர்ந்த ஞானம் இல்லாத நாம் பாகவதர்களிடம் பாரதந்த்ர்யர்களாக இருந்தோமேயானால், நமக்கு ஸர்வமங்களங்களும் ஏற்படும் என ஸ்ரீஸ்வாமி தேசிகன் சொல்கிறார். "வர குணார்ணவ, பக்தேஷு தே பார தந்த்ர்யாத்,

விபணிவ்யவஹார யோக்யம் தாஸ்யம் பஜந்தி" என்பது அன்வயக்ரமம். நீ உனது அடியார்களிடம் கட்டுப்பட்டு இருப்பதால், மோக்ஷமார்க்கம் தேடும் ஜனங்கள், தங்களை, உன் அடியார்களுடன் பிணைத்துக் கொண்டு, உன் பாகவதர்களுக்கு தாஸர்களாக இருந்து பிழைத்து விடுகிறார்கள் என்றார். கடைகளில் தங்கள் நகை நட்டுகளை, வ்யாபாரிக்கு விற்பது போல், ஜனங்கள் தங்களை பாகவதர்களுக்கு விற்குமளவுக்கு உள்ள நிலையை அடைந்து, பக்குவ தசை எய்துகிறார்கள் என ஸ்ரீஸ்வாமி தேசிகன் சொல்கிறார்.

பக்த பாரதந்த்ர்யத்தால், பாகவதர்களுக்கும், அவர்களிடம் சரணாகதி செய்தோருக்கும், பகவான் எல்லா மங்களங்களையும் அருளி, உரிய காலத்தில் அவர்களை ஸம்ஸாரமாகிற கடலை கடக்கச் செய்வதை, மற்ற ஒரு இடத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் பின் வருமாறு விவரித்தார்:

"धी संस्कृतान् विदधतामिह कर्मभेदान्
शुद्धं जिते मनसि चिन्तयतां स्वमेकम् ।
त्वत्कर्मसक्तमनसामपि चापरेषां
सूते फलान्यभिमतानि भवान् प्रसन्नः" ॥

தீ ஸம்ஸ்க்ருதான் விதததாமிஹ கர்மபேதான்
சுத்தம் ஜிதே மனஸி சிந்தயதாம் ஸ்வமேகம் 1
த்வத் கர்மஸக்தமனஸாமபி சாபரேஷாம்
ஸூதே பலான்யபிமதானி பவான் ப்ரஸன்ந: 11"

இங்கு உயரியஞானத்தால் பக்குவம் அடைந்த மனதுடன், இந்திரியங்கத்தை ஜயித்து, கர்மயோகிகளாக இருந்து, உன்னுடைய கைங்கர்ய பாகயத்திலே திளைத்து உன்னையே எப்போதும் த்யானித்து வரும்

பாகவதர்களுக்கும் அவர்களுடன் சேர்ந்து வழிபடும் மற்றவர்கட்கும், நீ அவர்கள் விரும்பும் பலன்களை எல்லாம் மிக்க மகிழ்ச்சியுடன் நீ ஸித்திக்கச் செய்கிறாய் என்று பகவானிடம் சொல்லி, பகவான், பாகவதர்கள் இருவருக்கும் உள்ள தனி உறவை ஸ்ரீஸ்வாமி தேசிகன் விளக்குகிறார். பாகவதர்களோடு சேர்ந்து, அந்த ஸம்பந்தத்தால் புனித நிலை எய்திய பாமரர்களுக்கும், பகவானின் விசேஷ அனுக்ரஹம் கிடைப்பதை "த்வத் கர்ம ஸக்தமனஸாம் அபி அபரேஷாம் ச அபிமதானி பலானி பவாந் ப்ரஸன்ன : ஸூதே" என்று அருள் மொழி மூலம் ஸ்ரீஸ்வாமி தேசிகன் தெரிவிக்கிறார். இந்த ஸ்லோகத்தில் மறைமுகமாக ஸ்ரீவேதாந்த தேசிகன் குறிப்பிடுவது பாகவதநிஷ்டை என்ற ஒரு வகையான சரணாகதி. ஸ்ரீத்யாகப்ரஹ்மம் "எந்தரோமஹானுபாவுலந்தரிகி வந்தனமு" என்ற ஸ்ரீராக பஞ்சரத்னத்தில் விளக்குவதும் பாகவத நிஷ்டை என்ற தத்துவமே. இந்த சரணாகதி மார்க்கத்தைப் பற்றி அடுத்த படியாக எழுதுகிறேன்.

<u>நாலு வகை சரணாகதிகளில் ஒன்றான பாகவத நிஷ்டை</u>

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பகவானின் அனுக்ரஹம் பெற சரணாகதி தர்மம் அத்யாவஸ்யமாக கடைபிடிக்கவேண்டியது.

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वां सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஸரணம் வ்ரஜ I
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா
ஸூச:" II

என்று சரணாகதி ஸாஸ்த்ரத்தை ஸ்ரீக்ருஷ்ணபகவான், பாரதப் போர் நடுவில் அர்ஜுனனுக்கு காட்டிக் கொடுத்தான். விசேஷ ஞானம் கொண்ட அர்ஜுனனும் பகவானிடம் நேரிடையாக சரணாகதி செய்தான். என் பெருமானிடம் அர்ஜுனனைப் போலும், த்ருவன், ப்ரஹ்லாதன் போன்ற விசேஷ ஞானம் கொண்ட பக்தர்கள் நேர்முகமாகவே சரணாகதி செய்வதற்கு ஸ்வநிஷ்டை எனப்பெயர். ஸ்வநிஷ்டை என்பது நாலு வகையான சரணாகதிகளில் ஒன்று. மற்ற மூன்று சரணாகதி மார்க்கங்களுக்கும் உக்தி நிஷ்டை, ஆசார்ய நிஷ்டை, பாகவத நிஷ்டை என்ற பெயர்கள் உண்டு.

உக்தி நிஷ்டையில், தனது ஆசார்யன் சொல்லும் ப்ரபத்தி வாக்யத்தை தானும் உச்சரித்து, ப்ரபன்னன் பகவானிடம் சரணாகதி செய்கிறான். ஆசார்ய நிஷ்டையில், ஆசார்யன் தனது சிஷ்யர்களை எல்லோருக்காகவும் செய்த ப்ரபத்தியில், ப்ரபன்னன் அடங்கியிருந்து சரணாகதி பலனை அடைகிறான். பாகவத நிஷ்டையில், ஆசார்யன் அல்லாத பாகவதன் செய்த சரணாகதியில் (ப்ரபத்தியில்), பக்தன் அடங்கியிருக்கிறான். பகவானிடம் பாகவதர்கள் கொண்ட விசேஷ சலுகையால், பாகவதர்களை அண்டி சரணாகதி செய்த பாமரனும் சரணாகதி பலனை பகவானிடமிருந்து அடைந்துவிடுகிறான். ஸம்ஸாரிகளுக்கு விசேஷ ஞானம் ஏற்படுவது சிரமமானதால், ஸ்வநிஷ்டை என்ற சரணாகதி மார்க்கம் உதவியாக இருக்க முடியாது. தகுந்த ஆசார்யன் கிடைத்து, கால விசேஷத்தால், அவர் சொல்லும் சரணாகதிவாக்யங்களை திருப்பிச் சொல்லி, உக்தி நிஷ்டை செய்வதும் சீக்கிரமாக நிறைவேறாது. ஆசார்யனிடம் அபசாரப் படாது, அவர் கருணையுடன்

சிஷ்யவர்க்கங்களுக்காக செய்யும் சரணாகதியில் அடங்கியிருத்தலும், நிச்சயமாக நடக்கும் என்று சொல்வதிற்கில்லை. சுலபமாக செய்யக்கூடியது, பாகவத நிஷ்டை தான். ஹரிதாஸர்களைத்தேடி, அவர்கள் திருவடிகளில் விழுந்து, அவர்களுடைய பரி பூர்ண ஆஸீர்வாதம் பெற்று, அந்த பாகவதர்களுடைய கோஷ்டிகளில் சேர்ந்து பாகவத நிஷ்டை மூலம், பகவானுடைய அனுக்ரஹம் பெறுவது சுலபமானது. இந்த நான்கு வகையான ப்ரபத்திகளுள் ஒன்றையாவது செய்யும் ஸம்ஸாரிகளை, பகவான் காப்பாற்றி, ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தை கடக்க உதவுவதை ஸ்ரீஸ்வாமி தேசிகன் பின்வரும் ஸ்லோகம் மூலம் விளக்குகிறார்.

"भक्तिः प्रपत्तिरथ वा भगवंस्तदुक्तिः
तन्निष्ठसंश्रय इतीव विकल्पयमानम् ।
यं कंचिदेकमुपपादयतः त्वयैव
त्रातास्तरन्त्यवसरे भविनो भवाब्धिम्" ॥

பக்தி : ப்ரபத்தி ரதவா பகவன் ததுக்தி :
தந்நிஷ்ட ஸம்ச்ரய இதீவ விகல்ப்யமானம் 1
யம் கஞ்சிதேக முபபாதயதா த்வயைவ
த்ராதாஸ் தரந்த்யவஸரே பவிநோ பவாப்திம்" 11

காஞ்சிபுரம் ஸமீபம் உள்ள தீபப்ரகாஸன் என்ற பெருமாளிடம் ஸ்ரீஸ்வாமி தேசிகன் சொன்னது மேற்காணும் ஸ்லோகம். அவர் சொன்னதின் சாரம் பின் வருமாறு: விளக்கொளிப்பெருமானே! மோக்ஷ ஸாதனமாக இருப்பவை பக்தி யோகம், ப்ரபத்தி (சரணாகதி) யோகம் என்ற இரண்டு மார்க்கங்கள். பக்தி யோகமோ ச்ரம சாத்யமானது. ப்ரபத்தி யோகமோ, க்ஷணகர்த்தவ்யம் என்ற படி ஒரே வினாடியில்

செய்யக்கூடிய சுலபமான கார்யம். ப்ரபத்தியே ஸ்வநிஷ்டை, உக்தி நிஷ்டை, ஆசார்யநிஷ்டை, பாகவத நிஷ்டை, என்ற நான்கு விதமாக பிரிகிறது. இந்த நான்கு விதமான ப்ரபத்திகளுள் ஏதாவது ஒன்றைச் செய்தால் தான் முக்தி கிடைக்கும் என்பது ஸாஸ்த்ரங்கள் நியமிக்கும் விதியாகும். ஐய்யனே ! ஸம்ஸாரமாகிற ஸாகரத்தில் மூழ்கி, கரை ஏறத்தெரியாது தவிக்கும் ஸம்ஸாரிகளிடம் கருணைகொண்டு, அவர்களை நான்கு வகையான சரணாகதிகளுள் ஒன்றை அவர்கள் செய்யும் படி நீ செய்கிறாய் ! அதன் பின், அவர்கள் விரும்பும் காலத்தில், ஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்றி, மோக்ஷம் அளித்து, உன் அருகில் சேர்த்துக் கொள்கிறாய். அவர்கள் செய்த சரணாகதியை ஒரு வ்யாஜமாக வைத்து, நீ அவர்களை ரக்ஷித்துவிடுகிறாய் என ஸ்ரீஸ்வாமி தேசிகன் மேற்காணும் ஸ்லோக மூலம் சொன்னார். நாலு விதமான நிஷ்டைகளுள், ஸ்ரீத்யாகப்ரஹ்மம் தனது விசேஷ ஞானத்தால், ஸ்வநிஷ்டையை கடைபிடித்து, "மா கேலரா விசாரமு மருகன்ன ஸ்ரீராமசந்த்ரா, நீ சித்தமு நா பாக்யமய்ய, நிருபாதிக ! நீ வாட நய்ய, ரகுநாயக ! நீபாதயுகராஜீவமுல நே விட ஜால," என்ற ரவிசந்த்ரிகா, விஜயவஸந்தா, ஹம்ஸத்வனி ராக கீர்த்தனங்கள் மூலம் ஸ்ரீராம சந்த்ரனிடம் நேரிடையாக சரணாகதி (பரந்யாஸம், ஆத்ம நிவேதனம்) செய்திருக்கிறார்.

நமது ஸத்குரு, ஸ்ரீ நாரத முனிவரை விசேஷ குருவாக வரித்து "ஸ்ரீ நாரத முனி குருராய ! கண்டி மேனாடி தபமோ, குருராய", ஸ்ரீ நாரத ! நாத ஸரஸீருஹபங்கஸுபாங்க, நாரத குருஸாமி யிகனைந ந்னனாதரிம்பவேமி, ஈகரவேமி, வரநாரத ! நாராயண

ஸ்மரணானந்தானுபவமுகல" என்ற பைரவி, கானடா, தர்பார், விஜய ஸ்ரீராக கீர்த்தனைகளில், உக்தி நிஷ்டை, ஆசார்ய நிஷ்டை என்ற சரணாகதி பத்ததியை அனுஷ்டித்தார்.

"எந்தரோமஹானுபாவுலு, ஹரிதாஸுலு வெடலே முச்சடகனி ஆனந்த மாயெதயாளோ, பக்துனி சாரித்ரமு வினவே மனஸா, அதடே தன்யுடுரா மனஸா, கருணா ஜலதி தாஸரதி கமனீயானன ஸுகுணநிதி, பஜனபருல கேல கோதண்டபாணி, எந்துகு பெத்தலவலெபுத்தீயவு எந்து போதுனய்ய ராமய்ய, புத்திராது புத்திராது பெத்தல ஸுத்துலு வினக, இதே பாக்யமுகாகேமியுன்னதிரா ராம, லீலகானு ஜூசேகுல சீலுல நா பால கல்க ஜேஸிபாலிம்புமய்ய, கருணா ஏலாகண்டே ஈவிதமே கல்யாண ஸுந்தர ராம" என்ற க்ருதிகளை ஸ்ரீராகம், யமுனாகல்யாணி, பேகடா, காபி, நாதநாமக்ரியா, சுருட்டி, சங்கராபரணம், கன்னட, துந்துபி, வராளி முதலிய ராகங்களில் செய்து, ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகள் பாகவதரக்ஷணம், பாகவத ஸத்ஸங்கத்தின் உயர்வு, பாகவத நிஷ்டை ஆகிய விஷயங்களை நமக்கு விளக்கியிருக்கிறார். பாகவத நிஷ்டை பற்றிய கீர்த்தனங்களில் தலை சிறந்தது ஸ்ரீராக கீர்த்தனமான "எந்தரோ மஹானுபாவுலு" என்பது. இந்த கீர்த்தனத்தின் அர்த்த விசேஷங்களைப் பற்றி எழுதுவதற்கு முன், ஸ்ரீராகத்தின் லக்ஷணங்கள், சிறப்புகள் பற்றி முதலில் எழுதுகிறேன்.

ஐந்தாவது பஞ்சரத்ன கீர்த்தனத்திற்காக ஸத்குருவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீராகம்

"ஸ்ரீ" என்ற சப்தம் மஹாமங்களகரமானது.

மஹாலக்ஷ்மியை குறிப்பிடும் அக்ஷரம் "ஸ்ரீ" என்பது. ஸ்ரீவைஷ்ணவ சரணாகதி, ஸ்ரீ தேவியை முன்னிட்டுச் செய்யப்படுவது. "ஸகலபுவன ப்ரார்த்தனா காமதேனு:" என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகனால் துதிக்கப்பட்ட மஹாலக்ஷ்மீ எல்லா உலகங்களுக்கும் விரும்பியதைத் தருகின்ற காமதேனுவாய் விளங்குபவள். அவளை துதித்து, சரணாகதி செய்ய, அவள் பெயருடைய ஸ்ரீ ராகத்தை ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம் தேர்ந்தெடுத்து,

"प्रत्यक्षानुश्रविकमहिमप्रार्थिनीनां प्रजानां
श्रेयोमूर्तिं श्रियमशरणस्त्वां शरण्यां प्रपद्ये"

என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் சரணாகதி செய்த வகையில் சரணாகதி செய்தார்.

"ப்ரத்யக்ஷானுச்ரவிக மஹிம ப்ரார்த்திநீனாம் ப்ரஜானாம் ச்ரேயோ மூர்த்திம் ச்ரியமஸரணஸ் த்வாம் ஸரண்யாம் ப்ரபத்யே" என்று ஸ்ரீஸ்வாமி தேசிகன் துதிக்கும் போது, மஹாலக்ஷ்மீ, இம்மையிலும், மறுமையிலும் அநேக செல்வங்களை விரும்பும் ஸம்ஸாரிகளுடைய நன்மையை மனதில் வைத்தவளாய் இருப்பதை ஞாபகப்படுத்துகிறார்; மேலும் சரணமடைந்தோரை ரக்ஷிப்பது என்ற வ்ரதம் கொண்டு, "ஸ்ரீ" என்ற மங்களத் திருநாமத்துடன் இருக்கும் அவள் வேறு கதியற்று, சரணம் அடைந்த தன்னை காப்பாற்றுபவளாக நமக்கு அறிமுகப்படுத்துகிறார். தன் குழந்தைகளிடம் உள்ள வாத்ஸல்யத்தால், சரணாகதி செய்த குழந்தைகளை கருணையுடன் காக்கும் லோகமாதாவின் கனிந்த அன்பையும், மஹிமையையும் ஞாபகப்படுத்தும் மங்களராகம், ஸ்ரீராகம் என்பது.

இந்த ராகம் இருபத்தி இரண்டாவது மேளமான கரஹர ப்ரியாவின் ஜன்யராகம். ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகள், தன் காலத்திற்கு முன் அதிகமாக உபயோகப்படுத்தப்படாத கரஹரப்ரியா ராகத்தை பல கீர்த்தனங்களில் உபயோகப்படுத்தி, அந்த விசேஷ மேளத்தின் பல ஜன்ய ராகங்களில் அநேகக்ருதிகளை நமக்கு குலதனமாக அளித்திருக்கிறார். கரஹரப்ரியா ராகம் ஸாம கானத்துடன் நெருங்கிய சம்பந்தம் கொண்டது. அதனால் அதை ஹரிஹரப்ரியா என்றும் சொல்வதுண்டு. அப்பேற்பட்ட கரஹரப்ரியாவின் ஒரு ஜன்யராகமாகிய ஸ்ரீராகம், "ரிகிம நிநி என்ற ஸ்வர குறிப்பு கொண்டு சதுச்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சதுச்ருதிதைவதம், கைசிகிநிஷாதம், சுத்த மத்யமம் ஆகிய ஸ்வரங்கள் உடையது. உபாங்கராகமான ஸ்ரீராகத்தில், "ரிஷபமும், நிஷாதமும் சாயாஸ்வரங்கள் "ஸரிமபநிஸ் - ஸ்நி(பதநி) பம ரிகரிஸ" என்ற ஆரோஹண அவரோஹண க்ரமம் கொண்ட ஸ்ரீராகம், பழக்கத்தில் முற்பகல் ராகமாக பாடப்பட்டு வந்திருக்கிறது. ஸ்ரீராகத்தின் ரிஷப ஸ்வர விசேஷத்தை முந்தைய கடிதம் ஒன்றில் பின் வருமாறு தெரிவித்திருக்கிறேன்.

"Sri Ragam raises rishabham again from the shadow of the powerful Ghandharam, where it rested in the case of varali. The rishabham of Sri ragam ascends to its natural position and is present in its simplest, purest form, an unvaried tone freed from the curves and the implied directionality, which it carries in Nattai, Gowlai, Arabhi and Varali..This total purity is the melodic correlate of the silence of Nirvikalpa Samadhi and the Anandam that is

associated with it". இந்த ரிஷபம் "யஸ்யாம் யஸ்யாம் திஸிவிஹரதே" என்றபடி, எந்த எந்த திசையில் ஒலித்தாலும், அந்த, அந்த திசையில் மங்களங்களை வாரி அளிக்கும் மஹாலக்ஷ்மியின் கண் பார்வை போல், ஸர்வமங்களங்களையும் ஸித்திக்க செய்யும் ரிஷப ஸ்வரம்.

மங்கள கரமான ஸ்ரீராகத்தில் ஸ்ரீத்யாகப்ரஹ்மம் "நாம குஸுமமுலசே பூஜிம்சே, யுக்தமுகாது நன்னு ரக்ஷிம்த்ஸயுண்டேதி ஸ்ரீராம, எந்தரோ மஹானுபாவுலு," ஆகிய மூன்று க்ருதிகள் செய்திருப்பதாக அறிகிறோம். அவருடைய மற்ற ஸ்ரீராக கீர்த்தனங்கள் நமக்கு கிடைக்கவில்லை. இந்த மூன்று ஸ்ரீராக கீர்த்தனங்களுள், "எந்தரோ மஹானுபாவுலு" விற்கு பஞ்சரத்ன கீர்த்தனைகளுள் ஒன்றாக அமைந்த விசேஷப் பெருமை உண்டு. "மாதுவும் தாதுவும் தனி முயற்சி அன்றி க்லிஷ்ட கற்பனை சிறிதுமின்றி அருள் வாக்காக கீர்த்தனைகள் அமைந்தவிதமே, ஸ்ரீத்யாகராஜரின் பெருமை" என்று யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் குறிப்பிட்டிருக்கிறார். அவர் கருத்துக்களுக்கு உயரிய உதாரணமாய் நிற்பது, "எந்தரோமஹானுபாவுலு" என்ற ஸ்ரீராக பஞ்சரத்ன கீர்த்தனை. இனி, இந்த பஞ்சரத்னத்தின் அர்த்த கௌரவங்களைப்பற்றி எழுத முயற்சிக்கிறேன்.

<u>ஸ்ரீராக பஞ்சரத்னத்தின் பல்லவி வாக்யங்கள்.</u>

## एन्दरो महानुभावु-लन्दरिकि वन्दनमु

எந்தரோ மஹானுபாவுலந்தரிகி வந்தனமு" என்பது பல்லவி எத்தனை, எத்தனையோ மஹான்கள் இந்த உலகில் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வால், இந்த

உலகம் புனிதமடைகிறது. அவர்கள் எல்லோருக்கும், எனது மனமார்ந்த வந்தனம் என ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மம் சொல்கிறார்.

"ப்ரஹ்லாத நாரத பராசர புண்டரீக வ்யாஸாம்பரீஷ சுக சௌநக பீஷ்மதால்ப்யான் ருக்மாங்கத அர்ஜுன வஸிஷ்ட்ட விபீஷணாதீந் புண்யான் இமான் பரம பாகவதான் ஸ்மராமி" என்ற வகையில், சிரஞ்ஜீவிகளாக இன்று வரை வாழும் அத்தனை பரமபாகவதர்களான புண்ய புருஷர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனம் என்று மிகுந்த வினயத்துடன் ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகள் கூறினார். அவர்கள் பரம்பரையில் உதித்த ஸத்வகுணமுள்ள பாகவதர்கள் எல்லோரும் நிஷ்காமகைங்கர்யமுகமாக ஸ்ரீராமனை ஆராதித்து, முக்தி பெற்ற விஷயத்தை அறிந்து, அதுவே சரியான வழி என்ற தீர்மானத்திற்கு வந்து, அவர்கள காண்பித்த வழியில் தானும் ப்ரயாணம் செய்து வருவதை "ராம நினுவினா நனு ரக்ஷிம்ப நோருவகான " என்ற சங்கராபரண க்ருதியின் சரணமொன்றில், ஸ்ரீத்யாக ப்ரஹ்ம்மம் பின் வருமாறு தெரிவித்தார்.

सत्व गुणम्बुननु युपासन मोनरिञ्चिरि पेद्दलु
तत्वमु देलिसेनु निक भव तरणोपायमु नीवनि (राम निनु)

ஸத்வ குணம் புனனுயுபாஸன மோனரிஞ்சரி
பெத்தலு
தத்வமு தெலிஸெனு நிக பவதரணோபாயமு நீவனி
(ராமநினு)

பரமபாகவதர்கள், ஸாத்வீகமான வழியில் உன்னை

உபாசித்து, அந்த வழி மூலம் ஸம்ஸார ஸாகரத்தை கடக்கும் அனுக்ரஹத்தை உன்னிடமிருந்து பெற முடியும் எனக் காண்பித்துக் கொடுத்தார்கள். அந்த மார்க்கதர்ஸிகளான பாகவதோத்தமர்களுக்கு, நல்வழி காட்டிக் கொடுத்ததற்காக எனது மனமார்ந்த வந்தனங்களை தெரிவிக்கிறேன் என்று ஸ்ரீராக பஞ்சரத்ன பல்லவியில், ஸ்ரீத்யாகப்ரஹ்மம் அறிவித்தார். பக்தர் குழாம், பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்து கொண்டு, வீதி வலம் வந்து, பின் பகவானின் திருக்கோயிலைடந்து, அவனை நறுமண புது மலர் கொண்டு அர்ச்சிப்பதையும், மற்றபடி ஞானம், கானம், த்யானம், ஆகிய ஸாத்வீகமான வழிகளில் இறைவனை ஆராதித்து அவன் அருள் பெறுவதை "ஹரிதாஸுலு வெடலேமுச்சட கனி ஆனந்தமாயெ தயாளோ" என்ற யமுனா கல்யாணிராக கீர்த்தனத்தில் ஸ்ரீத்யாக ப்ரஹ்மம் பின் வருமாறு கொண்டாடி ஆனந்தப்பட்டிருக்கிறார். "ஞானமுதோ ராமத்யான முதோ மஞ்சி கானமுதோ மேனுதான மொஸங்குசு" ஸ்ரீராமசந்திரனின் பரிபூர்ண அனுக்ரஹம் பெற ஸாத்வீக மார்க்கத்தைக் காட்டிக் கொடுத்த ஹரிதாஸர்களான மஹானுபாவர்களுக்கு, தனது வந்தனத்தை, ஸ்ரீராக பஞ்சரத்ன பல்லவியில் தெரிவித்தார். பாகவதர்களின் நிஷ்காம, நிரஹங்கார, நிர்மல ஸாத்வீக மார்க்கத்தை கடைப்பிடித்து, தானும் பாகவதனாக மாறியவர்களே தன்யர்கள் என்பதை தன் மனதிடம் "அதடே தன்யுடுரா ஓமனஸா" என்று சொல்லியவர் ஸ்ரீத்யாகராஜஸ்வாமிகள். இந்த ப்ரஹ்மாண்டமான காபிராக கீர்த்தனத்தில், ராஜஸ குணமுள்ளவர்களுடன் சேராது ஸ்ரீராமனைப் பற்றிய இடைவிடாத நாம

ஸங்கீர்த்தனத்தில் ஈடுபட்டிருக்கும் பரம பாகவதர்களின் லக்ஷணங்கள் பற்றி ஸ்ரீத்யாகப்ரஹ்மம் கூறுகிறார். அந்த ஸாதுக்கள் ஆஞ்சநேயனைப் போல் ஸதா ராமத்யானத்தில் ஆழ்ந்து புளகாங்கிதம் அடைந்திருப்பார்கள்; கையில் தம்புராவை எடுத்துக் கொண்டு, தும்புருவைப் போல அத்புதமாக தயாநிதியான ஸ்ரீராமனின் சந்நிதியில் பாடிக் காலத்தை கழிப்பார்கள்; மற்ற பாகவதர்களுடைய ஸத்ஸங்கத்தில் சேர்ந்து, வாழ்வில் ஸததமானது பகவான் ஒருவன் தான் என்ற தத்வத்தை புரிந்து கொண்டு, தாமரை இலைத் தண்ணீர் போல், லோக சுகங்களால் பாதிக்கப்படாது இருப்பார்கள்; ஸ்ரீராமபிரானிடம் பரம விஸ்வாஸத்துடன் இருந்து, ஸம்ஸார துக்கங்கள், தங்களை அணுகாத வகையில் வாழ் நாளை கடத்துவார்கள்; அவர்களுடைய மற்ற லக்ஷணங்களை,

कर्मनिष्ठुडैन धर्मशीलुडैन, शर्मरामनाममर्ममु देलिसिन (अतडे)
कासुवीसमुबकोसमु यासतो, वेसमु धरियिंचि मोसमु जेन्दनि(अतडे)
अन्दमुगा नाममन्दरुजेसिन, सुन्दर रामुनियन्दु लक्ष्यमु बेट्ट (अतडे)
इन्नि पाटुलकु सर्वोन्नत सुखमु, मुन्न यनुभविंचुकोन्न वाडेवडो(अतडे)

கர்ம நிஷ்டுடைன தர்மஸீலுடைன, ஸர்ம
ராமநாமமர்மமு தெலிஸின (அதடே தன்யுடுரா)
காசு வீஸமுலகோஸமு யாஸதோ, வேஸமுதரியிஞ்சி
மோஸமுஜெந்தனி (அதடே)
அந்தமுகா நாமமந்தருஜேஸின, சுந்தரராமுனியந்து
லக்ஷ்யமு பெட்டு (அதடே)
இன்னி பாடுலகு ஸர்வோந்நத சுகமு
முன்னயனுபவிம்சு கொன்ன வாடேவடோ (அதடே)

என்று ஸ்ரீத்யாகப்ரஹ்மம் விளக்கினார். ஸாஸ்த்ரங்கள்

வகுத்திருக்கும் வழிகளிலிருந்து விலகாது, தர்மானுஷ்டானங்களை கடை பிடித்து, ஸ்ரீராம நாமத்தின் நிஜதத்வத்தை சரியாக புரிந்து கொண்டு, போலிபாகவதர்களின் கோஷ்டியை விஷம் போல் ஒதுக்கி, பணத்தாசை பட்டு மோஸம் போகாது, நிஜ பாகவதர்களின் பஜனை கோஷ்டியில் சேர்ந்து கொண்டு ஸ்ரீராமனின் ரூப ஸௌந்தர்யத்தை தங்கள் ஹ்ருதய கமலங்களில் கண்டு, அவர்கள் ஒவ்வொரு வினாடியிலும் ப்ரஹ்மானந்தத்தை அனுபவிக்கிறார்கள்; இந்த லோக வாழ்க்கை முடிந்ததும் ஸ்ரீராமனால் அனுக்ரஹிக்கப்பட்ட மோக்ஷசாம்ராஜ்யத்தை அடைகிறார்கள், என ஸ்ரீத்யாக ப்ரஹ்மம் இந்த கீர்த்தனப்பகுதியில் விளக்கினார். இம்மாதிரியான ஸாத்வீக மார்கத்தை கடை பிடித்து, மற்றவர்களுக்கு உய்யும் மார்க்கத்தை காண்பித்து கொடுத்தற்காக, அத்தனை மஹானுபாவர்களுக்கும், எனது மனமார்ந்த வந்தனங்கள் என ஸ்ரீராக பஞ்சரத்ன பல்லவியில் நமது ஸத்குரு தெரிவித்தார்.

<u>ஸ்ரீராகக்ருதியின் அனுபல்லவி</u>

चंद्र वदनुनि यंदचन्दमुनु हृदयारविन्दमुन जूचि ब्रह्मानन्दमनुभविंचु वा - (एन्दरो महानुभाव)

சந்த்ர வதனுனியந்த சந்தமுனு
ஹ்ருதயாரவிந்தமுனஜூசி
ப்ரஹ்மானந்தமனுபவிம்சுவா (எந்தரோமஹானு பாவு)"

என்பது அனுபல்லவி வாக்யங்களாகும்.

சந்தரனுக்கு ஸமமான முக ஸௌந்தர்யம் கொண்ட ஸ்ரீராமசந்த்ரனுடைய ரூப லாவண்யத்தை, தங்கள் ஹ்ருதயத்தாமரைகளில் கண்டு, ஆனந்தாம்ருதத்தில் மூழ்கி

இருக்கும் மஹானுபாவர்கள் பலர் இந்த புவியில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றி கலந்த வணக்கங்கள் என ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மம் இங்கு கூறுகிறார்.

கடலை ஒத்த கருணை வள்ளலே, ராமா, உன் மயமான புவியை நான் என்னவென்று விவரிப்பது? உன் மெய்யடியார்கள் இந்த புவியில் எங்கும் உன் அழகிய திருமுகத்தையே காண்கிறார்கள். த்யான ஸமாதியில் இருக்கும் போது, தங்கள் ஹ்ருதயத் தாமரைகளிலும் உன் சந்த்ரனுக்கு ஸமமான முகத்தையே காண்கிறார்கள். அப்பேற்ப்பட்ட உனது மெய்யடியார்கள் காண்பதொன்று! இம்மாதிரியான அனுக்ரஹஸித்தி அடையாதவர்கள் காண்பது மற்றொன்று எனத் தனது நாத நாமக்ரியா க்ருதி ஒன்றில் பின் வருமாறு ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மம் கூறி, தான் ஏன் பாகவதர்களுக்கு வந்தனம் தெரிவித்தார் என்பதை விளக்கினார் :

"கருணாஜலதி தாஸரதி கமனீயானன ஸுகுணநிதி
நீமயமேகா நிலனு ஏமனி நேதூருதுனு
நிறாதாஸுல யனுபவ மொகடி நினுதெலியனி

ஜனமதமொகடி"

ஸ்ரீராமனை ஆராதித்து, பாடிப் பரவஸமடைவதே உய்யும் மார்க்கம் என்றிருப்பவர்களுக்கும், கோதண்டபாணியான ஸ்ரீராமசந்த்ரனின் திருமுகத்தை தங்கள் ஹ்ருதய கமலங்களில் கண்டு, அந்த ரூப ஸௌந்தர்யத்தைப் போற்றி, அவனே புவியிலுள்ள கோடிக் கணக்கான ஜீவராசிகள் எல்லாவற்றிலும் அந்தர்கதமாக இருப்பதை உணர்ந்து, காதலாகி, கண்ணீர்

மல்கிய கண்களுடன் இருக்கும் பாகவதர்களுக்கும், யமனிடம் கூட பயம் கிடையாது என "பஜன பருலகேல தண்ட பாணி பயமு மனஸாராம" என்ற சுருட்டி கீர்த்தனத்தில் பின் வருமாறு சொன்னார்.

"அண்ட கோட்லு நிண்டின கோதண்டபாணி
முகமுனஹ்ருத்
புண்டரீகமுனுஜூசி பூஜஸல்புத்ஸு நிண்டுப்ரேமதா
கரங்கு நிஷ்காமுலகு வர வேதண்டபாலு
தாஸுடைன"

அப்பேற்ப்பட்ட, நிஷ்காமகர்மிகளான மஹானுபாவர்களுக்கு என்னுடைய தாழ்மையான ப்ரணாமங்கள் என ஸ்ரீத்யாக ப்ரஹ்மம் ஸ்ரீராக பஞ்சரத்னக்ருதியின் அனு பல்லவியில் தெரிவித்தார்.

ஸ்ரீராக பஞ்சரத்னத்தின் முதல் சரணம்

## सामगानलोल मनसिजलावण्य धन्यमूर्धन्यु (एन्दरो महानुभावु)

ஸாம கான லோல மனஸிஜலாவண்ய தன்ய மூர்த்தன்யு (எந்தரோ மஹானுபாவு) என்பது முதல் சரணத்தின் வாக்யங்களாகும்.

"காந்தர்வேஸபுவிஸ்ரேஷ்ட்ட:" என ஸ்ரீவால்மீகி முனிவரால் விவரிக்கப்பட்ட ஸ்ரீராமசந்த்ரன், நாத வித்தையில் உயறிய பாண்டித்யம் கொண்டவன். ஸாம கானத்தில் மிகவும் ப்ரியமுள்ளவன். ஸௌந்தர்யத்தில் மன்மதனை ஜயித்தவன் ராமன். ஸத்கர்மாக்களை எப்போதும் செய்து வரும் மஹானுபாவர்கள், ஸாமகான லோலனான ராமனை, கோடி மன்மதருபனாகக் கண்டு,

ஸ்ரீமத் ஆனந்த ராமாயணம் சொல்லும் வகையில் பின் வருமாறு த்யானிக்கிறார்கள்.

"ஆஜானுபாஹுமரவிந்ததளாயதாக்ஷமாஜன்ம
ஸுத்த ரஸஹாஸ முகப்ரஸாதம்!
ஸ்யாமம் க்ருஹீத ஸர சாபமுதார ரூபம் ராமம்
ஸராமமபிராமமனு ஸ்மராமி.

வேதங்களுள் உயர்ந்ததான ஸாம வேதமாய், நிகம ஸிரஸிரத்னமாய் அந்த ஸாம வேதத்தின் உச்சியில் உள்ள ரத்னமாய் விளங்கும் ராமன், ஜானகியின் உள்ளம் கவர்ந்த, ஜானகீரூபரத்னம், மைதிலி ப்ராணரத்னமாய் விளங்கும் ராமனை, பாகவதர்கள் பின் வரும் வகையில் துதித்து, அவன் அருளைப் பெறுகிறார்கள்.

"நிகமஸிரஸிரத்னம் நித்யமாஸக்தரத்னம்
நிகில ஸுக்ருதிரத்னம் ஜானகீரூபரத்னம்
புவனவலயரத்னம் பூப்ருதா மேகரத்னம்
ப்ரக்ருதி ஸுலபரத்னம் மைதிலீப்ராணரத்னம்"

மேலே விவரிக்கப்பட்ட ஸர்வாங்க ஸௌந்தர்யனான ராமனின் அழகில் திளைத்திருக்கும் பாக்யம் பெற்ற பாகவதர்களுக்கு தனது வந்தனங்களை ஸ்ரீத்யாக ப்ரஹ்மம் இங்கு தெரிவித்தார்.

ஸாமகானத்தை ரஸித்துக் கொண்டு, நாதமாகிற தாமரையின் மகரந்தத் தூள்களை பானம் செய்து, உயரிய ஆனந்த நிலையில் இருக்கும் ரஸிக ஸிரோமணியான ராமனை பாகவதர்கள் பின் வரும் வகையில் துதித்து சந்தோஷப்படுகிறார்கள்:

नादं नादविनीलचित्तपवनं नादान्ततत्त्वप्रियं ।
नामाकारविवर्जितं नवघनश्यामाङ्गनादप्रियम् ॥
नादाम्भोजमरन्दमत्तविलसद्भृङ्गं मदन्तस्थितं ।
नादान्तध्रुवमण्डलाब्जरुचिरं रामं भजे तारकं ॥

நாதம் நாதவிநீல சித்தபவனம் நாதாந்ததத்வப்ரியம்
நாமாகார விவர்ஜிதம் நவகனஸ்யாமாங்கநாதப்ரியம் 1
நாதாம்போஜமரந்தமத்தவிலஸத்பங்கம்
மதந்தஸ்திதம்
நாதாந்த த்ருவமண்டலாப்ஜருசிரம் ராமம்
பஜேதாரகம் 11

அப்பேற்ப்பட்ட நாதஸுதாரஸத்தை பருகி ஆனந்த நிலையில் உள்ள ராமனை தங்கள் மனத்தகத்தில் ஸேவித்துக் கொள்ளும் தவவலிமை கொண்ட மஹானுபாவர்களுக்கு இந்த சரணத்தில் ஸ்ரீத்யாகப்ரஹ்மம் தனது நன்றி கலந்த வந்தனங்களை ஸமர்பித்தார்.

<u>ஸ்ரீ ராக பஞ்சரத்னத்தின் இரண்டாவது சரணம்</u>

मानस वनचरवर संचारमु सलिपि
मूर्तिबागुग बोडगने वा (एन्दरो महानुभावु)

மானஸ வன சரவர ஸஞ்சாரமு ஸலிபி
மூர்த்தி பாகுக பொடகனே வா (யெந்தரோ
மஹானுபாவு லு)

என்பது இரண்டாவது சரணத்தின் வாக்யங்கள்.

वेद श्रृङ्गसमानशेषशयतं वेदान्तवेध्यात्मकं ।
वेदाराधितपादपङ्कजमहं रामं भजे तारकं ॥

வேதஸ்ருங்கசமான ஸேஷஸயனம் வேதாந்த
வேத்யாத்மகம் !

வேதாராதித பாதபங்கஜமஹம் ராமம் பஜே தாரகம்"

என்று ஒரு ராம பக்தர் போற்றிய வழியில், ஸாமகான லோலனான ஸ்ரீராமசந்த்ரனை போன சரணத்தில் ஸ்ரீத்யாக ப்ரஹ்மம் துதித்தார். வேதங்கள், தங்கள் பாராயணத்தால் போற்றும் திருவடித்தாமரைகளை உடைய ஸ்ரீராமமூர்த்தி, இரண்டாவது சரணத்தில், யோகிகள் தங்கள் த்யான பலத்தால், தங்கள் ஹ்ருதய குஹைகளில் காண்பதை விவரித்தார்.

விசேஷ ரிஷப ஸ்வர ஆரம்பத்துடன், ரீகரி - ரிகரிரி என்ற வகையில், பரம பாவன ராமனை ஸ்ரீ ஸத்குரு கொண்டாடினார். அசோக வனம் என்னும் காட்டில், மாதா ஸீதாதேவியை, ஆஞ்சநேயர் தேடிக் கண்டு பிடித்து ஆனந்தமடைந்தது போல், மஹானுபாவர்கள் தங்கள் மனங்காளாகிற காடுகளில் ஸாகேதராமனைத் தேடி, ஸ்பஷ்டமாக அவனை அங்கு கண்டு, அவனுடைய தேஜோமயமான ஸ்வரூபதர்ஸன ஜனித ஆனந்தத்தில் மூழ்குகிறார்கள். அப்பேற்ப்பட்ட பாக்ய சாலிகளான மஹான்கள் எல்லோருக்கும் நான் என் ஆழ்ந்த வணக்கங்களை தெரிவிக்கிறேன் என்று ஸத்குரு சொன்னார். மனஸான காட்டில், அசோக வனத்தில் ஸஞ்சாரம் செய்து அன்னையை கண்டானந்தித்த ஆஞ்சநேயன் போல், ஸ்ரீராமனை மஹான்கள் தேடிக் கண்டு, பூரித்து, புளகாங்கிதம் அடைந்ததை இங்கு ஸ்ரீ த்யாக ராஜஸ்வாமிகள் குறிப்பிட்டார். பல பணிவும் ஒருங்கே சேர்ந்து, ஸாதாரணமாக சேர்ந்து இருக்க முடியாத அகடித கடன குணங்களை ஒற்றுமையுடன் ஏற்று வரும் ஆஞ்சநேயரை உள் முகம் கொண்டது இந்த சரணம். உலகமாகிய தேருக்கு அச்சாக இருக்கிற ஆணி,

என் ஆஞ்சநேயன் என்று நித்யஸேவாநிரதரான லக்ஷ்மணனிடம் ஸ்ரீ ராமன் சொன்னதும் உண்டு. அப்போது "ஆணியிவ்வுலகுக் கெல்லாம்" என்று ஆஞ்ச நேயனை ஸ்ரீராமன் விவரித்தார். அப்பேற்ப்பட்ட ஆஞ்சநேயன், "அஞ்ஜனானந்தனம் வீரம், ஜானகி சோக நாசனம்" என்று வணங்கப்படும் ஆஞ்சநேயன், அசோக வனத்தில் அன்னை ஜானகியைத் தேடி தர்ஸன பாக்யம் பெற்றார். அதே மாதிரி, மஹான்கள் "ஹனுமத் ஸேவிதநிஜபத ராமா, வானரதூதப்ரேஷக ராமா" என்று ஸ்ரீநாம ராமாயணம் கொண்டாடும் ராமனைத் தங்கள் ஹ்ருதயமாகிய இருட்டு குகைக்குள் ஜகஞ்ஜோதியாய் நிற்பவனாகக் கண்டு பரமானந்த நிலையை அடைகிறார்கள்.

தன்னை அசோக வனத்தில் தேடிக்கண்டு, கணையாழியைக் கொடுத்து, ஸ்ரீ ராமனின் க்ஷேமலாபங்களைச் சொன்ன ஆஞ்சநேயனை, அன்னை ஜானகி, என்றும் சிரஞ்ஜீவியாக இரு என்று பின் வருமாறு மனதார வாழ்த்தினாள்:

" பாழிய பணைத் தோள் வீர துணையிலேன் பரிவு தீர்த்த
வாழி வள்ளலேயான் மறுவிலாமனத்தேன் எண்ணின்
ஊழியோர் பகலாயோதும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி என்றாள்"

அதே மாதிரி, அஞ்ஞானம் என்ற இருள் கப்பியிருக்கும் மனமாகிற காட்டில், தங்களுடைய ராமத்யான பலத்தால், வழி அறிந்து, பரஞ்ஜோதியான

ராமனை, அந்த காட்டின் நடுவில் உள்ள கோயிலில் அமர்ந்திருப்பவனாகக் கண்டு கொள்கிறார்கள். மஹாநுபாவர்கள். நாராயண அனுவாகம் விவரிக்கும் பின் வரும் உண்மையை தங்கள் தபோ பலத்தால், ராம சைதன்யர்கள் கண்டு அனுபவிக்கிறார்கள்.

हृदयं तद् विजानीयाद् विश्वस्यायतनं महत् ॥
सन्ततं सिराभिस्तु लम्बत्या कोशसन्निभम् ।
तस्यान्ते सुषिरं सूक्ष्मं तस्मिन् सर्वं प्रतिष्ठितम् ॥
- - - - - - - - - - - - - - - - - -
तस्याः शिखाया मध्ये परमात्मा व्यवस्थितः ।
स ब्रह्मा स शिवः सेन्द्रः सोऽक्षरः परमः स्वराट् ॥

ஹ்ருதயம் தத் விஜாநீயாத் விஸ்வஸ்யாயதனம் மஹத் 11
ஸந்ததகும் ஸிராபிஸ்து லம்பத்யா கோஸ ஸந்நிபம் 1
தஸ்யாந்தே ஸுஷிரதம் ஸூக்ஷ்மம் தஸ்மின் ஸர்வம் ப்ரதிஷ்டிதம்

..........................................................................................

தஸ்யா: ஸிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித: 1
ஸ ப்ரஹ்ம்மா, ஸ ஸிவ: ஸேந்தர: ஸோஅக்ஷர பரம ஸ்வராட் 11

நாராயணானுவாகம், கழுத்து எலும்புகளுக்கு கீழேயும், நாபிக்கு மேலேயும், பத்து அங்குல தூரத்தில், கீழ் நோக்கிய தாமரை மொட்டு போன்ற ஹ்ருதயம் தேஹத்தில் அமைக்கப்பட்டுள்ளது. (अधो निष्ट्या वितस्त्यां तु नाभ्यामुपरि तिष्ठति) என்று சொல்கிற அந்த தாமரை மொட்டைப் போன்ற ஹ்ருதயமே, எல்லாவற்றினுள்ளும் அந்தர்யாமியாக உள்ள ஸ்ரீமந்நாராயணனின் இருப்பிடமாக உள்ள அந்த தாமரை மொட்டின் அடியில்

உள்ள மிகச் சிறிய இடை வெளியில், ஸ்ரீமந்நாராயணனான ராம சந்த்ர மூர்த்தி, தன்னை தீவ்ரமாக த்யானிக்கும் மஹாநுபாவர்களுக்கு ஸேவை தருவதற்கு நிலைத்திருக்கிறார் என மேலும் ஸ்ரீ நாராயண அனுவாகம் விளக்குகிறது. அந்த இடைவெளியின் நடுவில் ஒரு நெருப்புக் கொழுந்து, நுண்ணியதாகக் காணப்படுகிறது. அந்த நெருப்புக் கொழுந்தின் மத்தியில், பரமாத்மா, தங்க மயமான தனது திருமேனியுடன் காணப்படுகிறார். அவரே எங்கும் பரந்து, எல்லா பெயரையும், உருவங்களையும் எடுத்து ஜ்வலிக்கும் பரம ஸ்வராட், சக்ரவர்த்திகளுக்கெல்லாம் சக்ரவர்த்தியாய், தெய்வத்துக்கு அரசாய் நிற்கும் பரம் பொருள். அவரே முக்தாத்மாவின் தேடுதல்களுக்கு முடிவான ஹ்ருதயாந்தர்யாமி. அவனைக் கண்டதும், அக்ஞானமாகிற முடிச்சுகள் அவிழ்ந்து, பரி பூர்ண பகவதநுபவத்தை மஹான்கள் பெறுகிறார்கள். அவர்கள் தங்கள் ஹ்ருதயத்தின் நடுவில் காணப்படும் ஜ்யோதி शान्तं ह्यनन्तं कविमजममरं शाश्वतं शब्दशून्यम् (ஸாந்தம் ஹ்யநந்தம் கவிமஜமமரம் ஸாஸ்வதம் ஸப்த ஸூன்யம்) என்ற வகைப்பட்டதாக அறிந்து கொள்கிறார்கள். அந்த ஒளியின் முன் சூர்யனோ, சந்த்ரனோ, நக்ஷத்ரங்களோ, நெருப்புக் கூட்டங்களோ தங்கள் ஒளிகளை இழந்து, அந்த ஒளியின் ப்ரதிபலிப்பாலே தங்கள் ஒளிகள் ஏற்படுவதை அறிகிறார்கள். நாசமற்றதாயும், ஞான வடிவாயும், ஜனனமரணமற்றதாயும், நித்யமாயும், ஈஸ்வரனாகவும், தங்கள் ஹ்ருதயாரண்யங்களில் சோபித்து வரும் ஒளியைக் காணும் பாக்யம் பெற்ற மஹான்கள்,

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं नेमाविध्युतो भान्ति कुतोयमाग्नि।
तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति ॥

என்ற வேதவாக்யங்களின் அர்த்தத்தை புரிந்து கொள்கிறார்கள். அப்பேற்ப்பட்ட ஈஸ்வரதர்ஸன பாக்யம் பெற்ற மஹான்களுக்கு என்னுடைய சாஷ்டாங்கமான நமஸ்காரங்களை ஸமர்பிக்கிறேன் என்று ஸ்ரீ த்யாக ராஜஸ்வாமிகள் இந்த சரணத்தில் தெரிவித்தார்.

ஸ்ரீ ராக பஞ்சரத்னக்ருதியின் மூன்றாவது சரணம்

सरगुन पादमुलकु स्वान्तमनु
सरोजमनु समर्पणमु जेयु वारेन्दरोमहानुभावुलन्दरिकि वन्दनमु

ஸரகுன பாத முலகு ஸ்வாந்த மனு, ஸரோஜமனு
ஸமர்பணமு ஜேயுவாரே எந்தரோ மஹாநுபாவுலந்தரிகி
வந்தனமு"

என்பது மூன்றாவது சரணத்தின் வாக்யங்கள்.

இங்கு பரம புனிதமான ஸ்ரீராமசந்த்ரனுடைய பாதாரவிந்தங்களில் தங்களுடைய மனதாகிற தாமரையை அர்பணிக்கின்ற மஹான்களின் கீர்த்தியைக் கொண்டாடி, அத்தகைய பெருந்தகைகளுக்கு என்னுடைய ஆழ்ந்த வந்தனங்கள் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் கூறுகிறார்.

தனது "தப்பி ப்ரதிகி போவதரமா ராம கலிலோ" என்ற தோடிராக கீர்த்தனத்தில் "ஜாஜிமல்லெ மந்தார ஸரோஜமுலனு மனஸார ராஜபதமுசேத்யாகராஜனுதனி பூஜிஞ்சக, தப்பி ப்ரதிகி போவதரமா, ராம கலிலோ" என்று கேட்டவர் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம்.

ஸ்ரீராமனின் திருவடிகளில், கணுக்கால் மறையும்

வரை, ஜாதி முல்லை, இருவாக்ஷி, மல்லிகை, மந்தாரம், தாமரை போன்ற புஷ்பங்களைத் தூவிப் பூஜிக்கும் ராஜமார்க்கத்தை விட கலியுகத்தில் உய்யும் வழி வேறு ஏதேனும் உண்டோ எனக் கேட்டவர் நமது ஸத்குஸ்வாமிகள்.

அதனால் அவருக்கு ஸ்ரீ ராமனின் பவித்ரமான பாதத் தாமரைகளின் மஹிமையும், அந்த பரம பாவனமான பாதங்களில் புஷ்பார்ச்சனை செய்வதின் ச்லாக்யமும் நன்றாக தெரியும். இந்த விசேஷமான உண்மைகளை மனதில் வைத்து ஸ்ரீ ராமனின் திவ்ய பாதாரவிந்தங்களுக்கு பின் வருமாறு நமஸ்காரம் செய்து கொள்கிறார்.

अनर्घमाणिक्यवियजमान श्रीपादुकालङ्कृतशोभनाभ्याम् ।
अशेषबृन्दारकवन्दिताभ्याम् नमो नमो रामपदाम्बुजाभ्याम् ।

அனர்க்க மாணிக்யவியஜமான ஸ்ரீ பாதுகாலங்க்ருத
ஸோபனாப்யாம் 1
அஸேஷப்ருந்தாரக வந்திதாப்யாம் நமோ நமோ
ராமபதாம்புஜாப்யாம் 11

தான் புஷ்பங்களால் தூவும் திருவடித் தாமரைகளில், மஹாநுபாவர்களின் மனதாகிற தாமரைகள் சேர்க்கப்பட்டு ஜ்வலிப்பதை ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் கண்டு பின்னர்,

"பயஹர மங்கள தஸரதராம
ஜய ஜய மங்கள ஸீதாராம
மங்கள கர ஜய மங்கள ராம
ஸங்கத ஸுப விபவோதய ராம

ஆனந்தாம்ருத வர்ஷக ராம
ஆஸ்ரித வத்ஸல ஜய ஜய ராம
ரகுபதி ராகவ ராஜா ராம
பதித பாவன ஸீதா ராம"

என்ற மஹாநுபாவர்களின் கோஷ்டி கானத்தையும் கேட்கிறார். அந்த ஆனந்தானுபவ மேலீட்டால், எத்தகைய பாக்யமுடையவர்கள் இந்த மஹான்கள் என நினைத்து, அவர்களுக்கு ராஜபாட்டையைக் காண்பித்துக் கொடுத்ததற்காகத் தனது ஆத்மார்த்தமான வந்தனங்களை செலுத்தினார்.

ஸ்ரீ ராக பஞ்சரத்னத்தின் நான்காவது சரணம்

"ஸஸநிபா - ரிஸநி பாகரீ ஸநிப" என்ற விறுவிறுப்பான ஸ்வரங்களுடன் ஆரம்பமாகும் இந்த சரணத்தில், ஸங்கீதக் கலையின் நுட்பங்களை உண்மையாக அறிந்த மஹாநுபாவர்களுக்குத் தன் வந்தனங்களை ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள் தெரிவிக்கிறார். இந்த சரண வாக்யங்கள் பின் வருமாறு:

"पतितपावनुडने परात्परुनि गुरिञ्चि परमार्थमगु निजमार्गमु ।
तोनु बाडुचुनु सल्लापमुतो स्वरलयादिरागमुल देलियु वारे" ॥

பதிதபாவனுடநே பராத்பருனி குரிஞ்சி பரமார்த்தமகு
நிஜமார்கமு
தோனு பாடு சுனு ஸல்லாபமுதோ ஸ்வர லயாதி ராகமுல
தெரியு வாரே (எந்தரோ)

மஹாபாபங்கள் செய்து, வழுக்கி விழுந்தவர்களை கை தூக்கி நிறுத்த அவர்களைப் புனிதர்களாக்கும்

பதிதபாவனராமனை, தேவாதி தேவர்களுக்கெல்லாம் தலைவனான பரமாத்மாவாக இங்கு ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமஸ்கரித்து கொள்ளுகிறார். "The redeemer of the fallen" என்ற பதிதபாவனனை நிர்மலமான மனது உடைய பாகவதர்கள், பரம பக்தியுடன் பாடிக்கொண்டு, மெய்மறந்து நிற்பதை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் அடுத்த படியாக தன் மனக்கண் முன் காண்கிறார். ஸ்வரம், லயம், ராகம் ஆகியவைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் ஸங்கீத ஸாஸ்த்ரத்தின் ரஹஸ்யங்களை நன்கு அறிந்து, அப்யஸிக்கும் பாகவத கோஷ்டியின் தர்ஸனம் பெற்று, நாதஸுதாரஸத்தைப் பருகி மெய் சிலிர்த்து நிற்கும் அந்த பெரியோர்களுக்கு நீ அளித்த ஞானத்தை நீ ஏன் கொடுக்க மாட்டேன் என்கிறாய் என பின்வருமாறு ஸ்ரீ ராமனிடம் கேட்டார்:

"எந்துகு பெத்தல வால புத்தியீயவு ? எந்து போதுனய்ய, ராமய்ய !

..........................................................................................

வேத ஸாஸ்த்ர தத்வார்த்தமு தெலிஸி, பேதரஹித
வேதாந்த முதெலிஸி
நாத வித்ய மர்மம்புலனு தெலிஸி, நாத ! த்யாகராஜநுத !
நிஜமுக (எந்துகு).

வேத ஸாஸ்த்ரங்களின் தத்வங்களையும், வேதாந்தத்தின் உட் கருத்துக்களையும், ஸங்கீதக்கலையின் மர்மங்களையும் உண்மையாக அறிந்த பேரறிஞர்கள் எங்கே, நான் எங்கே, அவர்களுடைய பாக்யத்தை நான் அடையலாகாதா என்று ஸ்ரீ ராம சந்த்ரனிடம் பணிவுடன் கேட்ட ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், பாகவதர்களின் உயரிய ஸ்தானவிசேஷத்தை நன்கறிந்தவர். அதனால்,

புன்னகவராளி கீர்த்தனம் ஒன்றில்,

"இந்த பாக்யமனி நிர்ணயிம்ப
ப்ரஹ்ம்மேந்த்ரா துலதரமா ?
சிந்தனீய ! ஸ்ரீ ராகவ ! நினுமதிஜிந்திம்சு ஸுஜனுல
பூஜிம்சினவாரிகி" என்று கூறினார்.

இங்கு, உன்னை த்யானித்து பரமானந்தத்தில் திளைக்கும் மஹாநுபாவர்களை ஸேவிக்கும் ஜனங்களின் ஸௌபாக்யத்தை ப்ரஹ்ம்மா, இந்த்ரன் முதலிய எவராலும் வர்ணிக்க முடியுமா எனக் கேட்டார்.

அப்பேற்ப்பட்ட ராமப்ரேமிகளின் உயர்வை மேலும் பின்வருமாறு விளக்கினார் :

मतिहीनुलैन नेम्मदि लेनिवारैननतिपापकृतुलैन
नेत्रटिकि सद्गतिरानि वारैन श्रीराम ! श्रुति पुराणनुत !
प्रतिलेनि निनु सन्नुति सेयु भक्तुल जतगूडिनवारि (इन्त)

மதிஹீனுலைன நெம்மதி லேனி
வாரைனநதிபாபக்ருதுலைன
நென்னடிகி ஸ்த்கதிரானி வாரைன ஸ்ரீராம !
ஸ்ருதிபுராணநுத
ப்ரதிலேனி நினு ஸந்நுதிஸேயு பக்துல ஜதகூடினவாரி
(இந்த)

ராமா ! புத்தி கூர்மை உள்ளாதவர்கள், (மந்த புத்தி உள்ளவர்கள்) சஞ்சல ஸ்வாபவம் கொண்டவர்கள், மஹாபாபிகள், முக்தி மார்க்கத்திற்கு அருகில் வராதவர்கள், இத்தனை பேரும் உன்னை ஆராதித்து அருள் பெற்ற பாகவதர்களின் கோஷ்டியில் சேர்ந்தார்களேயானால், எல்லா அமங்களங்களும்

அழிந்து, அப்ரமேயஸ்வரூபர்களாகத் தாங்களும் ஆகிவிடுவார்களே என்று "இந்த பாக்யமனி நிர்ணயிம்ப" என்ற புன்னகவராளி கீர்த்தனத்தில் மஹாநு பாவர்களாகிய பாகவதர்களின் உயர்வை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமக்கு விளக்கினார்.

இந்த சரணத்தில் நாதோபாஸனை செய்து, ஸங்கீதக்கலையின் உயர்வால் ஸ்ரீ ராமனின் அருள் பெற்ற பெரியோர்களைப் பற்றி ஸ்ரீத்யாகப்ஹ்ரம்மம் சொல்லி, அவர்களுக்கு வந்தனம் தெரிவித்தார். புரந்தரதாஸர், தாளப்பாக்கம் அண்ணமாச்சார்யார், பத்ராசல ராமதாஸ், ஸதாஸிவ ப்ரஹ்ம்மேந்த்ராள் போன்ற நாதயோகிகள், உபநிஷத்துக்களால் ஓம்கார ரூபமான சப்த ப்ரஹ்ம்மத்தை கண்டம் எழுப்பும் நாத ரூபமாக ஆராதித்து "அகண்டானந்தாநுபவம்" பெற்ற மஹான்கள். நம்முடைய நடுவில் நடமாடும் தெய்வமாக விளங்கும் காஞ்சிபுரம் பரமாச்சார்யாளும் ஸங்கீதக்கலையின் உயர்வை, அவருடைய சரளமான தனி முறையில் நமக்கு பின் வருமாறு விளக்கியிருக்கிறார் :

"ஸங்கீதக்கலை என்பது கொஞ்சங்கூட கஷ்டமில்லாமல் மோக்ஷத்தையே வாங்கி கொடுக்கக்கூடியது.... வீணாவாத்யம் ஒன்றை வைத்துக் கொண்டு ஸ்வர சுத்தியோடு கலந்து வாசித்து, ஆனந்தமயமாய் இருக்கக் கற்றுக் கொண்டு விட்டால், யோகம் பண்ண வேண்டாம்; தபஸ் பண்ண வேண்டாம்; சுலபமாக, மோக்ஷத்தை அடைந்து விடலாம். அதோடு, யோகி, யோகம் செய்தால், தபஸ்வி, தபஸ் செய்தால், அவர்களுக்கு மட்டுமே ஆத்மானந்தம் உண்டாகிறது.

ஸங்கீதம் ஒன்றில் தான், அதை அப்யஸிக்கிறவர் மட்டுமன்றி, கேட்கிற எல்லோருக்கும் அதே அளவு ஆத்மானந்தம் உண்டாகிறது. ச்ருதி, லயம், ஸங்கீதம், ந்ருத்யம் எல்லாம் உபாஸனையாக அப்யஸிக்கப்பட்டால், நம்மை (அவைகள்) ஈஸ்வர ஸந்நிதானத்திலேயே கொண்டு போய் நிறுத்திவிடும். முடிவிலே, அந்த ஸன்னிதானம் எங்கே உள்ளது? நமது ஹ்ருதயத்துக்கு உள்ளே தான்! அதற்குள்ளே அடங்கி, ஆத்மானந்தத்தை அடைய ஸங்கீதம் ஒரு வழி." இப்படியாக காஞ்சீ முனிவர் சொன்னதிற்கு ஆதாரங்களை ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்தின்" மோக்ஷமு கலதா, இந்த கன்னானந்த மேமி, நாத லோலுடை, நாதோபாஸனசே சங்கர நாராயண விதலு வெலஸிரி, விதுலகு ம்ரோக்கேத ஸங்கீத, ஆனந்த ஸாகர மீதினி தேஹமு பூமி பாரமு, ஸ்ரீ நாயகாகில நைகமாஸ்ரித ஸங்கீத ஞானமனு ப்ரஹ்மானந்த ஸாகர, ஸங்கீத ஸாஸ்த்ர ஞானமு, ஸீதாவர ஸங்கீத ஞானமு தாத வ்ராயவலேரா, ராம!, ராக ஸுதாரஸ பானமு ஜேஸி ராஜில்லவே, மனஸா, வரராக லயக்ஞுலு தாமனுக வதரே ரயா, ஸ்ரீ பப்ரிய ஸங்கீதோபாஸன சேயவே, ஸோபில்லு ஸப்தஸ்வரஸுந்தருல பஜிம்பவே" என்ற ஸாரமதி, பிலஹரி, கல்யாணவஸந்தம், பேகட, மாயா மாளவ கௌளை, கருடத்வனி, தேவகாந்தாரி ஸாவக பைரவி, ஆந்தோளிகா, செஞ்சுகாம்போஜி, அடாணா, ஜகன் மோஹினி ராககீர்த்தனங்களில் காண்கிறோம்.

நாமஸித்தாந்த மார்க்கத்திற்கும், நாதஸித்தாந்த மார்க்கத்திற்கும் உள்ள முக்தி அளிக்கும் நெருங்கிய தொடர்பை ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் விளக்கியதற்கு உள்ள

ஆதாரங்களை, நாதமுனி என்ற ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யார், அவர் வணங்கிய நம்மாழ்வார் என்ற ஜகத்குரு அவர்கள் கார்யங்களிலும், அருள் வாக்குகளிலும் காண்கிறோம். நாதமுனி என்ற மஹா திருவாய் மொழி என்ற நாலாயிர ப்ரபந்தத்திற்கு தாளமும், ராகமும் அமைத்துக் கொடுத்த மஹான். இன்றும் பாண்டிய தேசத்தில் ஆழ்வார்திருநகரில் அவர் வகுத்துக் கொடுத்த வழியில், அரையர் ஸேவை என்பதன் மூலம் ஸங்கீத உபாஸனை பகவத்ஸன்னிதானத்தில் நடை பெறுகிறது. நாதமுனி, மறைந்த நாலாயிர ப்ரபந்தத்தை அருளிய ஜகத்குருவான தென் குருகூர் சடகோபன் என்ற பெயர் கொண்ட நம்மாழ்வார் தனது பாசுரமொன்றில், "பாடீர் அவன் நாமம், வீடே பெறலாமே" என்று சுருக்கமாக நாதோபாஸனையின் மஹிமையை நமக்கு விளக்கினார். ஹரியின் நாம ஸங்கீர்த்தன மஹிமையைப் பற்றிச் சொல்ல விரும்பும் ஒரு ஸ்லோகம், எத்தனை எத்தனையோ புண்யதீர்த்தங்கள் இப்புவியில் பெயர் பெற்றவை. அவை அத்தனையும் ஹரியின் நாம ஸங்கீர்த்தனத்தால் ஏற்படும் புண்யத்தின் கோடியில் ஒரு பகுதி கூட அடையாது என பின்வருமாறு சொல்கிறது.

விஸ்ருதானி பஹூன் யேவதீர்த்தானி விவிதானிச
கோட்யம் ஸைர் நாபிதுல்யானி நாம கீர்த்தனதோ ஹரே:

திரு இசை நல்லூரில் ராம நாம ஸங்கீர்த்தன பலத்தால், கொல்லைக் கிணற்றில் புண்யதீர்த்தமான கங்கையை பொங்கவைத்த ஸ்ரீதர ஐய்யாவாள் கோவிந்தபுரத்தில் வீரசோழன் ஆற்று மணலில், ராம நாம ஸங்கீர்த்தனத்தை பெருக வைத்த ஸ்ரீ போதேந்த்ராள், காவேரிக்கரையில் ஸங்கீத வெள்ளத்தை பெருக வைத்து,

அதில் மூழ்கி "பிபரே ராமரஸம்" என்று உபதேசித்த ஸதாஸிவ ப்ரஹ்ம்மேந்த்ராள், பண்டரீபுரத்து விட்டலராயனைப்பாடி முக்தி மார்க்கம் காட்டிக் கொடுத்த ஸங்கீத பிதாமஹர், பதினாறு வயதில் ஸ்ரீனிவாஸனைத் தன் மானிடக் கண்களாலே நேரில் பார்க்கும் பாக்யம் பெற்ற தாளப்பாக்கம் மஹான், ஆகிய தனக்கு முன் சென்றவர்கள், பின் தொடருபவர்கள் ஆகிய எல்லா நாதோபாஸகர்களையும் மனதில் வைத்து, "ஸ்வர லயாதி ராகமுலெ தெலியுவாரெந்தரே மஹாநுபாவுலந்தரிகி வந்தனமு" என்று ஸ்ரீராக பஞ்சரத்னத்தின் நான்காவது சரணத்தில், ஸ்ரீத்யாக ப்ரஹ்ம்மம் நமஸ்கரித்துக் கொண்டார்.

<u>ஸ்ரீ ராக பஞ்சரத்னத்தின் ஐந்தாவது சரணம்</u>

रामचन्द्रचरितामृतपानम् सोमपानशतकोटिसमानम्

(ராம சந்த்ர சரிதாம்ருதபானம், ஸோம பான ஸதகோடிஸமானம்) என்ற உண்மையை போன சரணத்தில் விளக்கிய ஸ்ரீத்யாக ப்ரஹ்ம்மம், இந்த சரணத்தில் ராம பக்தர்களின் லக்ஷணங்களைப் பற்றி மேலும் கூறி, அவர்கள் தங்களுடைய அமிர்ததாரை பொழியும் கடாக்ஷங்களாக இந்த உலகத்தில் உள்ளோரை ரக்ஷிப்பது பற்றி விளக்கினார்.

"பமமப - ரிரிகரி -நிஸரிக -ரிரிஸநி" என்ற எடுப்புடன் ஆரம்பமாகும் இந்த சரணத்தின் வாக்யங்கள் பின் வருமாறு:

हरिगुण मणिमय सरमुल गळमुन
शोभिल्लु भक्तकोटुलिललो, तेलिवितो जेलिमितो करुणगल्गि
जगमेल्लनु सुधा दृष्टिचे ब्रोचु वारेंदरो महानुभावु

ஹரிகுண மணிமய ஸரமுலு களமுன ஸோபில்லு
பக்தகோடுலிலலோ, தெலிவிதோ ஜெலிமிதோ கருண
கல்கி
ஜகமெல்லனு சுதா த்ருஷ்ட்டிசே ப்ரோசு வாரெந்தரோ
மஹாநுபாவுலு

ஹரியினுடைய குணங்களாகிற ரத்னங்கள் சேர்ந்த துளஸி மாலை முதலியவைகளை தங்கள் கழுத்தில் அணிந்து கொண்டு, ராம நாம ஸங்கீர்த்தன மூலம் பக்தியையும், ஞானத்தையும் கருணையுடன் அகில லோகங்களிலும் பரப்பும் பக்த கோடிகள் இந்த புவியை மங்களம் பெறச் செய்கிறார்கள். அவர்களுடைய அம்ருதத்திற்கு சமானமான நயன தீக்ஷயால், மற்றவர்கள் பிழைத்துப் போய் விடுகிறார்கள் என ஸ்ரீ ஸத்குரு இங்கு சொன்னார்.

"தர்மோரக்ஷதி ரக்ஷித:" என்றபடி, ஹரியின் குணங்களைப் பற்றிய நாம ஸங்கீர்த்தனம் செய்யும் தர்மாத்மாக்கள், தர்மத்தை ரக்ஷிப்பதால், தர்மம் ரக்ஷிக்கிறவனையும், அவனுடன் ஸம்பந்தம் கொண்டவர்களையும் ரக்ஷிக்கிறது. ஹரியினுடைய குண கோஸங்களை ரத்னமாலையாக அணிந்து கொண்டிருக்கும் மஹாநுபாவர்கள், தேவர், கின்னரர், கிம்புருஷர், அஸுரர், இந்த்ரன், த்ரி மூர்த்திகள், மரம், மலை, அண்ட கோடிகள் முதல் அக்ஞானக்கடலில் மூழ்கித்தத்தளிக்கும் பாமரர் வரை உள்ள லோகங்கள் எல்லாம் உனது லீலா விசேஷங்கள் என நன்கு அறிந்தவர். இந்த மாதிரியான ஸ்தித ப்ரக்ஞர்களான ஞானிகளின் சேர்க்கையையே, ஸ்ரீராமன் தனக்கு தந்தருள வேணும் எனத்தனது (திவ்யமணி/துந்துபிராக) கீர்த்தனத்தில் பின்

வருமாறு ப்ரார்திக்து, பாகவதர்களின் உயர்வை நமக்கு விளக்கியவர் ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகள்:

"லீலகானு ஜூசுகுண சீலுல நா
பாலகல்கஜேஸிபாலிம்புமய்ய
பாலுமாலின பாமருலனெல்ல, பரமாத்மாயீலோகமுலனு
ஸுர கின்னர கிம்புருஷாஸுர நிர்ஜர ராஜ ஸிவாதி
ரமாபதுல
தருபூதரா நேகாண்டமுல ஸ்ரீத்யாகராஜநுத! ஸ்ரீ ராம !நீ

ஸ்ரீராக பஞ்சரத்னத்தின் ஆறாவது சரணம்

होयलुमीर नडलु गल्गु सरसुनि
सदा कनुल जूचुचुनु पुलक शरीरुलै
यानन्दपयोधि निमग्नुलैमुदम्बुननु यशमु गलवारेंन्दरो

ஹொயலுமீர நடலு கல்கு ஸரஸுநி
ஸதா கனுல ஜூசுசுனு புலக ஸரீருலை
யானந்த பயோதி நிமக்னுலைமுதம்புநனு யஸமு
கலாரெந்தரோ

என்பது ஆறாவது சரணத்தின் வாக்யங்களாகும்.

உல்லாஸம் மிகுந்த ஓய்யார நடையுடன் கூடிய ராமனின் நடை அழகை இங்கு ஸ்ரீஸத்குரு ஸேவித்துக் கொள்கிறார். திருவையாற்றின் திருமஞ்சன வீதியில், தான் 96 கோடி ராம நாம ஜபம் முடித்த தினத்தில் ஸ்ரீராமன், தன் தம்பியான லக்ஷ்மணனுடன் விஸ்வாமித்ரயாக ஸம்ரக்ஷணத்திற்காக, உல்லாஸம் மிகுந்த ஓய்யார நடையுடன் நடந்ததை நேரில் ஸேவித்துக் கொண்டவர் ஸ்ரீத்யாகப்ரஹ்மம். அந்த தனியான அழகு கொண்ட நடையை ஸேவித்துக் கொண்ட ஆனந்தத்தால்

"ஏலநீதயராது" என்ற அடாணா ராக கீர்த்தன மூலம் உருக்கமாக பாடினவர் நமது ஸத்குரு. அவர் நாகலாபுரத்தில் திருடர்களின் உபத்ரவித்திலிருந்து தன்னைக் காப்பாற்றி, தன் பல்லக்குடன் முன்னும், பின்னும் நடந்து வந்து, திருடர்களுக்கும் ப்ரத்யக்ஷமான ராமனின் பக்த வாத்ஸல்யத்தை "எந்த பாக்யமு மாபாலகல்கிதிவி" என்ற சாரங்கா ராக க்ருதி மூலம் கொண்டாடினர். ராமனின் மத்தகஜம் போன்ற ஒய்யார நடையை காணும் பாக்யம் பெற்ற திருடர்களின் ஸுக்ருதத்தை இந்த கீர்த்தனத்தில் கொண்டாடினார்.

ஸ்ரீராம சந்த்ரனின் நடையழகை ஸேவித்துக் கொண்டு ஸரஸ ஸல்லாபத்தை கேட்டுக் கொண்டும், அந்த அனுபவத்தால் புளகாங்கிதம் அடைந்து, ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிய பெரியோர்கள் எத்தனேயோ பேர் இந்த உலகில் உள்ளனர். அவர்கள் அத்தனை பேருக்கும் என் வந்தனங்கள் என்று இந்த சரணப்பகுதியில் கூறினார். ஸ்ரீராமனின் அழகு நடையையும், ஸரஸமாய் பேசும் பேச்சையும் கேட்ட பாக்யவான்கள் வஸிஷ்ட்ட மஹர்ஷி, விஸ்வாமித்ர முனிவர், பரத்வாஜர், அயோத்யா நகரவாசிகள், குஹன், சபரி, ஹநுமான், சுக்ரீவன், விபீஷணன், அங்கதன், நளன், ஜாம்பவான், ஜடாயு முதலானவர்கள். அத்தனை பாக்யவான்களுக்கும் எனது ப்ரணாமங்களை ஸமர்பிக்கிறேன் என்று ஸ்ரீத்யாக ப்ரஹ்ம்மம் இந்த சரண மூலம் தெரிவித்தார்.

மஹாநுபாவர்கள் கண்டனுபவித்த சுந்தரராமனின் ஒய்யார நடையையும், நீலமேகஸ்யாமள மேனியையும், முன் நெற்றி சுழல் சுற்றைகளையும், லக்ஷணமாய் திட்டவட்டத்துடன் நெற்றியில் காணப்படும் திலகத்தின்

அழகையும், கன்னாடி போல் பளிச்சென்று ப்ரகாஸிக்கும் கன்னங்களின் ஸௌந்தர்யத்தையும், கழுத்து ப்ரதேஸத்தை அலங்கரிக்கும் ஸ்வர்ணாபரணங் களையும், எனக்குக் காட்ட மாட்டாயா என "மேருஸமானதீர" என்ற மாயாமாளவகௌளை ராக கீர்த்தனையும் பின்வருமாறு கேட்டவர் ஸ்ரீத்யாக ப்ரஹ்மம்.

सारसार ओय्यारपु नडलनु नीरत कांतिनि नीठीविनि, महामेरूसमा
अलकल मुद्दुनु तिलकपुतीरूनु
तकुकु जेक्कुलचे दनरु नेम्मोमुनु
गळमुन शोभिल्लु कनक भूषणमुल
दलित दुर्मानव त्यागराजार्चिच (मेरुसमान धीर ! वरद !)

ஸார ஸார ஓய்யாரபு நடலனு, நீரதகாந்தினி நீடீவினி (மஹாமேருஸமான)
அலகல முத்துனு திலகபுதீருனு தளுகு ஜேக்குலசேதனரு நேம்மோமுனு
களமுன ஸோபில்லு கனக பூஷணமுல, தளித துர்மானவ த்யாகராஜார்ச்சித (மேருஸமான)

"பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம் மாருதிம்" (बाष्पवारिपरिपूर्णलोचनं मारुतिं) என்றபடி, ஸ்ரீராமனின் ஒய்யார நடையையும், ஸரஸமான வாக்விலாஸத்தையும் அனுபவித்து ஆனந்தக்கடலில் மூழ்கி, கண்களில் தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் சொறிந்து கொண்டு நிற்கும் ஆஞ்சநேயர், ஸ்ரீத்யாகப்ரஹ்மம் ஸேவித்துக் கொண்ட மஹாநுபாவர்களில் முதலானவர். என் அப்பனின் சௌந்தர்யம், குண ஸம்பத் இவைகளை நேரிடையே அனுபவிக்கக் கொடுத்த வைத்த மஹான்கள் எல்லோருக்கும் என் மனமார்ந்த வந்தனங்கள் என இந்த

சரணத்தில் ஸ்ரீத்யாகப்ரஹ்மம் தெரிவித்தார்.

ஸ்ரீராக பஞ்சரத்னத்தின் ஏழாவது சரணம்

परमभागवत मौनिवर शशि विभाकर सनक सनन्दन
दिगीश सुर किंपुरुष कनककशिपुसुत नारद
तुम्बुरु पवनसूनु बालचन्द्रधर-शुक-
सरोजभव भूसुरवरुलु परमपावनुलु
घनलु शाश्वतुलु कमलभव सुखमु सदानुभवुलुगाक
(एन्दरो महावनुभावुलु)

பரம பாகவத மௌனிவர ஸஸி விபாகர ஸனக ஸனந்தன
திகீஸ சுர கிம்புருஷ கனககஸிபுஸுத நாரத
தும்புரு பவன ஸூனு பாலசந்த்ரதர சுக
சரோஜபவ பூசுரவருலு பரம பாவனுலு
கனலு ஸாஸ்வதுலு கமலபவ சுகமு ஸதாநுபவுலுகாக
(எந்தரோ)

என்பது ஏழாவது சரணவாக்யங்களாகும்.

ஆறாவது சரணத்தில், ஸ்ரீராமனின் கம்பீர நடையையும், மதுர ஸம்பாஷணையும் நேரில் அனுபவித்து, ஆனந்த சாகரத்தில் மூழ்கிய கீர்த்தியை உடையவர்கள் எண்ணற்றவர்கள் எனச் சொன்னார். அந்த எண்ணற்றவர்களில் சிலரை உதாரணமாக ஏழாவது சரணத்தில் ஸ்ரீத்யாக ப்ரஹ்மம் விவரித்தார்.

அந்த மஹாநுபாவர்கள் நிர்மல சித்தமுடைய முனிச்ரேஷ்ட்டர்களும், வேதங்களை ஸ்வரம் தவறாது கற்றுணர்ந்த ப்ராஹ்மணோத்தமர்களும் ஆவர் என முதலாவதாகச் சொன்னார். அடுத்தபடியாக இவர்களுள் சிலருடைய பெயர், விசேஷம் முதலியவைகளை சொல்ல

ஆரம்பித்தார். चन्द्रमा मनसोजातः என்று புருஷஸூக்தம் அறிவிக்கும் சந்த்ரனை முதல் மஹாநுபாவனாகச் சொன்னார். விராட் புருஷனுடைய ஹ்ருதயத்திலிருந்து சந்த்ரன் தோன்றினான் என புருஷ ஸூக்தம் சொல்கிறது. சந்த்ரனின் பெருமையைச் சொல்ல விரும்பும் ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மத்தின் ஸமகாலத்தவரான ஸ்ரீமுத்து ஸ்வாமி தீக்ஷிதர், தனது அஸாவேரி கீர்த்தனத்தில், "சந்த்ரம் பஜமானஸ ஸாது ஹ்ருதய ஸத்ருஸம்" எனச் சொன்னார். ஸாது ஜனங்களின் (பரம பாகவதர்களின்) குளிர்ந்த மனதை ஒத்த சந்த்ரனை நீ துதிக்க வேணும் என்று தனது மனதிற்கு ஸ்ரீ தீக்ஷிதர் உபதேசித்தார்.

அடுத்த மஹாநுபாவராக, விராட் புருஷனின் கண்களிலிருந்து உதித்த (चक्षोः सूर्योअजायत) சூர்யனை, ஸ்ரீராமசந்த்ரனின் த்யானத்தில் திளைக்கும் பாகவதராக ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மம் குறிப்பிட்டார். மஹான்களால் பூஜிக்கப்பட்டு தனது தேஜஸ்ஸால் உலகத்திற்கு வெளிச்சம் அளித்துக் கொண்டு, மனிதர்களின் கொடிய பாபங்களை போக்கிக் கொண்டு, தீரர்களால் ஆராதிக்கப்பட்டு, எல்லா கார்யங்களுக்கும் ஸாக்ஷியாகவும் இருக்கும் ஸூர்ய மூர்த்தியை ஸ்ரீதீக்ஷிதர், "ஆர்யவினுத தேஜஸ்பூர்த்தே க்ரூரபாப க்ருஸானே.... தீரார்ச்சித கர்ம ஸாக்ஷிணே, ஸூர்ய மூர்தே நமோஸ்துதே" என வணங்கிக் கொண்டு, ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மம் குறிப்பிட்ட சூர்யனின் மஹாநுபாவ விசேஷத்தை ஆமோதித்தார்.

அடுத்தபடியாக, ப்ரஹ்ம்மாவின் புத்ரர்களான ஸனகர், ஸனந்தனர் ஆகிய இரு முனிபுங்கவர்களையும் பாகவதோத்தமர்கள் வரிசையில் ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மம்

சேர்த்தார். ப்ரஹ்ம்ம ஞானிகளான ஸனகரும், ஸனந்தனரும், ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீராமனின் திருவடி அருகில் நிற்கும் பாக்யம் பெற்றவர்கள். அவர்களுக்கு தனது வந்தனங்களை இங்கு த்யாகப்ரஹ்ம்மம் தெரிவித்தார்.

"பரம பாகவத மௌனிவர ஸஸி விபாகர ஸனக ஸனந்தன" என்ற மஹாநுபாவர்களை ஸேவித்துக் கொண்ட பிறகு, எட்டு திக்பாலகர்களை மஹாநுபாவர்களாக ஸ்ரீத்யாக ப்ரஹ்ம்மம் குறிப்பிட்டார். இந்த அஷ்ட திக்பாலகர்களின் ஸ்தானங்கள் பின் வருமாறு:




திகீஸர்கள் என்று ஸ்ரீத்யாக ப்ரஹ்ம்மத்தால் கொண்டாடப்படும் ராம சைதன்யர்களான மஹாநுபாவர்கள், வேதத்தின் பல பகுதிகளில்

உயர்த்தப்பட்டவர்கள். அவர்கள் எல்லோருக்கும், தனது வந்தனங்களை ஸ்ரீஸத்குரு தெரிவித்தார்.

அஷ்டதிக்பாலகர்களுக்கு பின் தேவர்களையும், கிம்புருஷர்களையும் ஸ்ரீத்யாகப்ரஹ்மம் நமஸ்கரித்துக் கொண்டார். முப்பத்து முக்கோடி தேவர்கள் பகவத் கைங்கர்யத்திலேயே ஈடுபட்டிருக்கும் பரம பாகவதர்கள். கிம்புருஷர்கள், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள் என்பவர்கள், ஸங்கீத மேதைகள். கிம்புருஷர்கள், பகவானின் குணங்களையும், ரூபமஹிமையையும், நாம மஹிமையையும் அத்புதமான கான ரூபமாக அப்யஸிப்பவர்கள். அதனால் கிம்புருஷர்களை, ஸ்ரீத்யாகப்ரஹ்மம் விசேஷமாக ஸேவித்துக் கொள்கிறார்.

கிம்புருஷர்களுக்கு பின், ஹிரண்ய கசிபுவின் புத்ரனாய் பிறந்த ப்ரஹ்லாதாழ்வாரை ஸ்ரீஸத்குரு வணங்குகிறார். பாகவோத்தமர்களுள் ப்ரஹ்லாதரின் உயர்வைக் கொண்டாட ப்ரஹ்லாத பக்த விஜயம் என்ற கேய நாடகத்தை செய்து நமக்கருளியவர் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள். அதனால், ப்ரஹ்லாதர், அவருடைய பாகவத கோஷ்டியின் முன்னணியில் காணப்படுவதில் ஆச்சர்யம் இல்லை.

ப்ரஹ்லாதருக்கு பின் ஸ்ரீமந் நாராயணனின் நாம ஸங்கீர்த்தனத்தை இடைவிடாது செய்யும் நாரதரையும், தும்புருவையும் ஸ்ரீஸத்குரு பாகவோத்தமர்களில் தலை சிறந்த இருவராக நமஸ்கரித்துக் கொண்டார். ஸ்ரீத்யாகப்ரஹ்மத்தின் குருவாக விளங்கிய நாரத முனி अथातो भक्ति व्याख्यास्यामः என்று ஆரம்பமாகும் பக்தி சூத்ரங்களை நமக்களித்த மஹான் स तरति स तरति, स लोकांस्तारयति என்று பாகவத லக்ஷணத்தை சொன்ன

மஹான் நாரதர். பாகவதர்கள், ஸம்ஸார ஸாகரத்தைத் தாங்கள் கடப்பது மாத்திரம் இல்லாது, தங்களுடைய தபோபலத்தால், மற்றவர்களையும் கடக்க வைக்கிறார்கள் என பக்தி சூத்ரத்தில் ஸ்ரீநாரதமுனி சொன்னார். பாகவத லக்ஷணத்தை சரியாக விளக்கி, வழிகாட்டின தனது குருநாதருக்கு ஸ்ரீத்யாகப்ரஹ்மம் இங்கு வந்தனங்கள் தெரிவித்தார்.

நாரதரையும், தும்புருவையும் ஸேவித்துக் கொண்டபின் "ராமாயண மஹாமாலாரத்னம் வந்தே அனிலாத்மஜம்" என்று துதிக்கப்படும் ஆஞ்சநேயரை, ஸ்ரீத்யாகப்ரஹ்மம் பரம வினயத்துடன் வணங்கிக் கொண்டார். "ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்ட்டம்" என்று ஸேவித்துக் கொள்ளப்படும் ஆஞ்ஜநேயர், "யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம் தத்ர தத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம்" என்று இருப்பவர். எங்கு, எங்கு எல்லாம் ஸ்ரீராமனின் சரித்ரம் பாடப்படுகிறதோ, அங்கு, அங்கு எல்லாம் ஆனந்த பாஷ்பம் நிறைந்த கண்களுடனும், கூப்பிய கரங்களுடனும் இருப்பவர் ஆஞ்சநேயர். ஸ்ரீத்யாக ப்ரஹ்மம் ஸ்ரீராமனைப்பற்றிப் பாடும் போதெல்லாம் அவர் அருகில் அமர்ந்து ஆனந்தக் கண்ணீர் விட்டவர், ஸ்ரீ ஆஞ்சநேயர். அவரிடம் தனக்கு உள்ள பரம பக்தியை, ஸ்ரீத்யாகப்ரஹ்மம், "பாஹிராமதூத" என்ற ஷட்விதமார்கிணி ராக கீர்த்தனத்தில் அத்புதமாக தெரிவித்திருக்கிறார். ஆஞ்சநேயரை அங்கு "பரமபாகவத வரேண்ய" என அழைத்து, அவர் பெருமைகளை பின் வருமாறு கொண்டாடினார்.

करधृतरघुवरसुचरण ! कलिमलाभ्रगन्धवाह !
पादविजितदुष्टग्रह ! पतितलोकपावन !
वेदशास्त्रनिपुणवर्य ! विमलचित्त सततम् (पाहि)
करुणारसपरिपूर्ण ! कांचनाद्रिसमदेह !
परमभागवतवरेण्य ! वरद ! त्यागराजनुत ! (पाहि)

கரத்ருத ரகுவர சிசரண ! கலிமலாப்ரகந்தவாஹ !
பாதவிஜிததுஷ்டக்ரஹ ! பதிதலோக பாவன !
வேத ஸாஸ்த்ரநிபுணவர்ய ! விமலசித்தஸததம்
(பாஹிராமதூத)

கருணாரஸபரிபூர்ண ! காஞ்சனாத்ரிஸமதேஹ !
பரம பாகவத வரேண்ய ! வரத ! த்யாகராஜநுத
(பாஹிராமதூத)

எப்போதும் ஸ்ரீராமனின் திருவடிகளைப்பற்றிய ஆஞ்சநேயா ! கலியுகத்தின் கொடுமைகள் என்ற மேஹக் கூட்டங்களை சிதற அடிக்கும் சூறாவளியே உமது திருவடியின் வீர்யத்தால் துஷ்ட க்ரஹங்களை தாங்கள் அடக்குகிறீர்கள். வழி தவறிய ஜனங்களை ரக்ஷித்து ஆட்கொள்பவரே ! நவவ்யாகரண பண்டிதரே, வேத ஸாஸ்த்ர நிபுணர்களில் சிறந்தவரே ! பரிசுத்தமான உள்ளம் உடையவரே ! கருணா ஸாகரமே ! பொன் மலை போன்ற தேஹகாந்தி உடையவரே ! பரம பாகவதர்களுள் தலை சிறந்தவரே ! வேண்டும் வரம் அளிப்பவரே ! த்யாகராஜனால் துதிக்கப்பட்டவரே ! ராம தூதரே ! என்னைக் காப்பாற்றும் என இந்த கீர்த்தனப் பகுதிகளில் ஸ்ரீத்யாகப்ரஹ்மம் வேண்டிக் கொண்டு, ஆஞ்சநேயரிடம் தனக்கு உள்ள விசேஷ மரியாதையை தெரிவித்தார்.

ஆஞ்சநேயருக்கு அடுத்தபடியாக "ராம நாம ரஸிகுடு" என்று தனது ஒரு பஞ்சரத்ன கீர்த்தனத்தில் வணங்கிய

பரமஸிவனை ராம சைதன்யர்களில் சிறந்தவராக ஸ்ரீஸத்குரு அஹிவித்தார். "ராமன் உள்ள இடத்தில் காமன் இருப்பதில்லை" என்று சொல்வதற்கு காரணம், காம தஹனம் செய்த தபஸ்வியான மஹேஸ்வரன், ராமன் அருகிலேயே இருப்பதால், ராமன் ஸன்னிதி ஸமீபம் மன்மதன் வர யோஜிப்பான் என்பது ஒரு விளக்கமாகும். மற்ற ஒரு வகைப்படி பார்த்தால், கோடி மன்மத ரூபம் கொண்ட ஸ்ரீராமனுக்கு, மன்மதனின் புஷ்பபாணங்களால் உபயோகம் ஏதும் இல்லை என்றும் சொல்லலாம். எது எப்படி இருந்தாலும், தன் ராம நிஷ்டையை கலைத்த காமனை நெற்றிக் கண்ணால் சாம்பலாக்கிய மஹேஸ்வரன், ராமதாரக நாமாவின் பூர்ண மஹிமை தெரிந்தவர். அம்பிகை ஸ்ரீராம என்ற ஒரு உச்சரணம், 1000 நாமாக்கள் கொண்ட விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை பாராயணம் பண்ணுவதற்கு சமமானது என்று சொன்னவர், பார்வதி பதி. அதனால் தான், காசி க்ஷேத்ரத்தில், உலகபந்தங்களிலிருந்து விடுபட இருக்கும் ஜீவனுக்கு அம்பிகாபதி உதவுகிறார். தேஹமாகிய கூட்டை ஜீவன் விட்டு பிரியும் அவகாசத்தில், வாராணசியில், அம்பிகை ஜீவன்களை மடியில் அமர்த்தி, தனது புடவையின் முந்தானையால் விசிறி ஆஸ்வாஸப்படுத்துகிறாள். அது சமயம், பரமேஸ்வரன், வலது காதில், ஜீவனுக்கு ஸ்ரீராம தாரக மந்த்ரத்தை உபதேசித்து, முக்தி சாம்ராஜ்யம் கிடைக்குமாறு செய்து விடுகிறார்.

அம்பிகைக்கு ஈசன், ராம நாம மஹிமையை உபதேசித்தாரா அல்லது ஈசனுக்கு அம்பிகை தன் அண்ணாவின் நாம ஜப மஹிமையை உபதேசித்தாளா

என்பது பற்றி ருசியான விவாதம் ஒன்று உண்டு. ஶைவ ஆகமகங்கள், சாக்தம் (சக்தி உபாஸனை) முதலியவைகளில் பாண்டித்யம் கொண்ட திருமழிசை ஆழ்வார் என்ற வைஷ்ணவ குரு, பூர்வாஸ்ரமத்தில் சிவயோக சித்தராக இருந்தது உண்டு. பின்னர் வைஷ்ணவ குருவாக மாறினார். இரண்டு ஸம்ப்ரதாயங்களிலும் நெருங்கிய உறவு கொண்ட திருமழிசை தனது பாசுரம் ஒன்றில், அம்பிகை, ஈசனுக்கு ராம நாம மஹிமையை விளக்கியதை பின்வருமாறு தெரிவித்தார்:

"காமனுடல் கொண்ட தவத்தாற் (கு) உமை உணர்த்த
வண்(டு) அலம்பும்
தார் அலங்கல் நீண்முடியான் பெயரே"

"வண்டு அலம்பும் தார் அலங்கல் நீண்முடியான்" என்பது, வண்டுகள் மொய்த்து, ரீங்காரம் செய்யும் பூமாலை அணிந்த மார்பினனாகிய ஸ்ரீ ராமபிரானை குறிக்கும். "நீண்முடியான் தன் பெயரே காமனுடல் கொண்ட தவத்தாற்கு" உமை உணர்த்தினான். அர்த்த நாரி ஸ்வரூபமான உமாமஹேஸ்வரனுக்கு, அண்ணலின் ஒரு பாகமான உமாதேவி, ஸ்ரீ ராம தாரக நாம மஹிமையை எடுத்துச் சொல்லி உதவினாள் என்று திருமழிசை ஆழ்வார் இங்கு சொன்னார்.

மஹேஸ்வரன், ஸ்ரீ ராமனை ஆனந்தத்துடன் அநுபவிக்கும் மஹாத்மாக்களுள் ஒருவன் என்று தெரிவித்த பின், ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் சுகப்ரஹ்ம்மத்தை அடுத்த மஹாத்மாவாக அறிவித்தார்.
(ஶுகப்ரஹ்ம்மம்), ஸ்ரீமத்பாகவதம், ப்ரஹ்ம்மசூத்ரம் முதலிய புனித க்ரந்தங்களை செய்த வ்யாஸ பகவானின்

குமாரர். க்ரீதாசி என்ற அப்ஸரஸ் பெண்மணி பூமியில், கிளி ருபத்துடன் பறந்து வரும் போது, வ்யாஸர் கண்ணில் பட்டு, அவருடைய ஸ்கலிதஸுக்ல மூலம் க்ரீதாசிக்கு குழந்தையாக பிறந்தவர், ஸுக .ப்ரஹ்ம்மம். கிளி முகம் கொண்ட ஸுகப்ரஹ்ம்மம், பரீக்ஷித் மஹாராஜாவிற்கு, தன் தகப்பனார் இயற்றிய ஸ்ரீ மத்பாகவத புராணத்தை காலக்ஷேபமாகச் சொன்னவர். ஆஞ்ச நேயரைப் போல் ஸ்ரீ ஸுகப்ஹஹ்ம்மம், நைஷ்டிக ப்ரஹ்ம்மசாரி. கடுமையான ப்ரஹ்ம்மசர்யத்துடன், ஸ்ரீ ராமனை ஏகாக்ரசித்தமாக த்யானித்த ஸுகப்ரஹ்ம்மம் அவனுடைய பரப்ரஹ்ம்ம தத்வத்தை முழுவதும் அறிந்து அனுபவித்த ப்ரஹ்ம்மம். ஸுகப்ரஹ்ம்மத்தின் ஞான ஸௌலப்யத்தை ஸ்ரீ ஸ்வராஜ்யஸித்தி கைவல்ய ப்ரகரணத்தின் ஒரு ஸ்லோகம் பின் வருமாறு அழகாக விவரிக்கிறது:

यथापूर्वं माया परिकलित दृष्टिर्निजसुखं
स्वयं भातं पश्यन्नपि नपरिपश्यामि सहजम् ।
तथेदानीं ज्ञानाञ्जनविमलचक्षुर्जगदिदं
चिदाकाशे पश्यन्नपि नपरिपश्यामि वितथम् ॥

யதாபூர்வம் மாயா பரிகலத த்ருஷ்டிர் நிஜஸுகம்
ஸ்வயம் பாதம் பஸ்யன்னபி நபரீபஸ்யாமி ஸஹஜம் !
ததேதானிம் ஞானாஞ்ஜன விமல சக்ஷுர் ஜகதிதம்
சிதா காஸே பஸ்யன்னபி நபரிபஸ்யாமி விததம்

ஸ்ரீ ராமனைக் குறித்து செய்த தவ மஹிமையால், விவேகக்கண்ணை மறைத்து மாயை என்ற திரை விலகியதும், அந்த கண்ணில் ஞானம் என்ற மையை தடவிக் கொண்டு, ஆத்ம சைதன்யமான பரப்ரஹ்ம்மம், உலகங்களின் பொருள்கள், ஜீவன்கள் எல்லாவற்றிலும்

சித்ஸ்வருபமாக நிறைந்திருப்பதை கண்ட ஒரு ஞானியின் அனுபவத்தை மேற்காணும் ஸ்லோகம் விளக்குகிறது. அப்பேற்ப்பட்ட ஞான சம்பத்தால், ப்ரபஞ்சம் எல்லாம் பரம் பொருளைக் காணும் பாக்யமுடைய ஸுகப்ரஹ்ம்மத்தை பாகவதோத்தமர்களில் ஒருவராக ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம், இந்த ஸ்ரீ ராக பஞ்சரத்ன சரணப் பகுதியில் வணங்கிக் கொண்டார்.

அடுத்தபடியாக சதுர்முக ப்ரஹ்ம்மாவையும், ப்ராஹ்ம்மணோத்தமர்களையும் மஹாநுபாவர்களாகக் குறிப்பிட்டு, அவர்கள் அத்தனை பேருக்கும் எனது வந்தனங்கள் என ஸ்ரீ ஸத் குரு தெரிவித்தார்.

ஏழாவது சரணமான "பரம பாகவத மௌனிவர ஸஸி விபாகர ஸனக ஸனந்தன திகீஸ சுரகிம் புருஷ கனக களிபுசுத நாரத தும்புரு பவனஸுனு பால சந்த்ரதர ஸுக ஸரோஜபவ பூஸுர வருலு பரம பாவனுலு கனுலு ஸாஸ்வதுலு கமலபவ சுகமு ஸதாநுபவுலுகா, எந்தரோ மஹானுபாவு லந்தரிகி வந்தனமு" என்பது ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் ஸ்ரீ ராமனின் திருபள்ளியெழுச்சி சமயம் கண்ட பாகவத கோஷ்டிகளைப்பற்றிய விவரணம். ஸ்ரீ ரங்கநாதனாக ஸ்ரீ ரங்க க்ஷேத்ரத்திலும், ஸ்ரீ வேங்கடேசனாக திருப்பதி என்ற திவ்யதேசத்திலும் ஸேவை தருபவன் ஸ்ரீ ராமன். அந்த ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீ மந்நாராயணனின் (ராமனின்) திருபள்ளியெழுச்சி சமயம் கூடியிருந்த பக்த, பாகவத கோஷ்டிகளை, ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விவரித்ததை படிக்கும் போது, ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் அந்த கோஷ்டிகளில் ஒருவராக இருந்து, பாகவதர்களையும் ஸ்ரீ ராமனையும் தானும் ஸேவித்துக் கொண்டதை தெரிந்து கொள்கிறோம்.

ஸ்ரீ ராமனின் திருபள்ளியெழுச்சி சமயம் கூடி இருந்த மஹாநுபாவர்களின் விபரங்களை தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரங்கள், வேங்கடேஸஸுப்ரபாத ஸ்லோகங்கள் மூலம் தெரிந்து கொள்கிறோம். அந்த மஹாநுபாவர்கள் எல்லோரையும் ஸ்ரீ ராக பஞ்சரத்னத்தின் ஏழாவது சரணத்தில் ஸ்ரீத்யாக ப்ரஹ்மம் சரியாக கணக்குப் போட்டு சொல்வதிலிருந்து. இந்த சரணத்தை, ஸ்ரீஸத்குருவின் திருபள்ளி எழுச்சி ஸேவாபாக்ய ஜனிதமான அருள் வாக்காகவே நாம் எடுத்துக் கொள்ளலாம். தொண்டரடிப் பொடி ஆழ்வார் பாசுரங்கள், வேங்கடேஸ ஸுப்ரபாத ஸ்லோக கருத்துக்களுக்கும், ஸ்ரீத்யாகப்ஹஹ்மத்தின் ஏழாவது சரணத்தில் காணப்படும் பாகவத அட்டவணைகளுக்கும் உள்ள ஒற்றுமையை பின் வரும் பாசுர/ஸ்லோக உதாரணங்களிலிருந்து நாம் ஊஹிக்கலாம்:

"அந்தரத்துமரர்கள் கூட்டங்களிவையோ, அருந்தவமுனிவரும் மருதருமிவ இந்திரனானையும் தானும் வந்திவனோ, எம்பெருமானுன் கோயிலின் வாசல், சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான் அந்தரம் பாரிடமில்லை மற்றிதுவோ அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே"

-தொண்டரடிப்பொடி, திருபள்ளி எழுச்சி, ஏழாவது பாசுரம்

வம்ப விழ் வானவர் வாயுறை வழங்க மாநிதி கபிலை
யொண் கண்ணாடி முதலா
எம்பெருமான் படிமைக் கலங் காண்டற்கு ஏற்பன
வாயின் கொண்டு நன் முனிவர்

தும்புரு நாரதர் புகுந்தனரிவரோ தோன்றி
னனிரவியும் துலங்கொளி பரப்பி,
அம்பரதலத்தில் நின்ற கல்கின்ற திருள் போய்
அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே

- தொண்டரடிப்பொடி, திருபள்ளி எழுச்சி, எட்டாவது பாசுரம்

ஏதமில் தண்ணுமை யெக்கம் மத்திளி யாழ் குழல்
முழவ மோடிசை திசைகெழும்
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கெந்தருவருமிவர் கங்குலு மெல்லாம்,
மாதவர் வானவர் சாரணரியக்கர் சித்தரும்
மயங்கினர் திருவடிதொழுவான்,
ஆதலிலவர்க்கு நாளோலக்கமருள அரங்கத்தம்மா
பள்ளி யெழுந்தருளாயே.

- தொண்டரடிப்பொடி, திருபள்ளி எழுச்சி, பத்தாவது பாசுரம்

பகவானின் திருப்பள்ளி எழுச்சியை ஸேவிக்கக் காத்திருக்கும் மஹாநுபாவர்களுள், ஏகாதசருத்ரர்கள், ஒன்பது மருத்கணங்கள், அஷ்டவஸுக்கள் சுப்ரஹ்ம்மண்யன், இந்த்ரன், மஹா தபஸ்விகளான ஸனகாதி முனிவர்கள் சாரணர் யக்ஷர்கள், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், காமதேனு, சங்கநிதி - பத்ம நிதியை கைகளில் கொண்ட குபேரன், தும்புரு, நாரதர், சூர்யன், கின்னரர்கள் ஆகியோரைத் தொண்டரடிப் பொடி காண்கிறார். கின்னரர்கள், தும்புரு, நாரதர், யக்ஷர்கள், ஸ்வர, லய, ராக மூலமாக பகவானுக்கு நாத உபசாரங்கள் செய்வதையும் தொண்டரடிப் பொடிக் காண்கிறார். இந்த

காஷியையே ஸ்ரீ த்யாக ப்ரஹ்மமும் தன் ஏழாவது சரணத்தில் விவரித்தார்.

வேங்கடேஸசுப்ரபாதத்திலும், ஸ்ரீ த்யாக ராஜஸ்வாமிகளின் விவரணம் சம்பந்தப்பட்ட மஹாத்மாக்களின் அட்டவணையைக் காண்கிறோம். அந்த ஸ்லோகங்களுள் சில பின் வருமாறு:

அத்ரயாதி ஸப்தரிஷயஸ் ஸமுபாஸ்ய ஸந்த்யாம்
ஆகாச ஸிந்து கமலானி மநோஹரானி
ஆதாய பாதயுகமர்ச்சயிதும் ப்ரபந்நா:
சேஷாத்ரி சேகர விபோ தவஸுப்ரபாதம்

(கருத்து) வெகு தூரத்தில் இருக்கும் அத்ரி முதலிய ஸப்தரிஷிகளும் காலை சந்த்யா வந்தனத்னதை முடித்துக் கொண்டு, ஆகாஸ கங்கையில் மலர்ந்த தாமரைகளை, உன் அபிகமன ஆராதனத்திற்கு எடுத்துக் கொண்டு நிற்கிறார்கள். நீ துயிலெழவேணும்.

பஞ்சானனாப்ஜபவஷண்முக வாஸவாத்யா :
த்ரை விக்ரமாதி சரிதம் விபுதாஸ் ஸ்துவந்தி
பாஷாபதி : படதி வாஸர சுத்திமாராத்
சேஷாத்ரி சேகர விபோதவ ஸுப்ரபாதம்

(கருத்து) ஐந்து முகங்கள் கொண்ட ஸதாஸிவன், பெருமாளின் திருநாபிக்கமலத்தில் உதித்த சதுர்முகப்ரஹ்மா, ஆறுமுகங்கள் கொண்ட ஷண்முகன், இந்த்ரன், தேவர்களின் புரோஹிதரான ப்ருஹஸ்பதி எல்லோரும் உன் முன் நிற்கிறார்கள். ப்ருஹஸ்பதி உனக்காக படிக்கும் பஞ்சாங்கத்தையும், ஹரன், அயன், கந்தன், இந்த்ரன் உன் விஷயமாகப்பாடும் ஸ்துதிகளையும், நீ செவி சாற்றி, துயில் எழ வேண்டும்.

सेवापराश्शिवसुरेशकृशानधर्म रक्षोअम्बुनाथपवमानधनाधिनाथा: ।
बद्धाञ्जलिप्रविलसन्निजशीर्षदेशा: श्रीवेङ्कटाचलपते तव सुप्रभातम् ॥

ஸேவாபரா: ஸிவஸுரேசக்ருசாநு தர்மர க்ஷோஅம்பு
நாதபவமான தனாதி நாதா :
பத்தாஞ்சலி ப்ரவிலஸன் நிஜ ஸுர்ஷ தேஸா: ஸ்ரீ
வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம்

(கருத்து) ஈஸானன், இந்த்ரன், அக்னி, யமன், நிர்ருதி (சூர்யன்), வருணன், வாயு, குபேரன் ஆகிய அஷ்டதிக் பாலகர்களும், உனக்கு கைங்கர்யம் செய்வதற்காக தம் கைகளை தலை மேல் கூப்பிக் கொண்டு உன் முன் கட்டளையை எதிர்ப்பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். உனக்கு நற் பொழுது புலருக !

ब्रह्मादयस्सुरवरास्समहर्षयस्ते सन्तस्सनन्दनमुखास्तव योगिवर्या:
धामान्तिके तवहि मङ्गलवस्तुहस्ता: श्रीवेङ्कटाचलपते तव सुप्रभातम् ॥

ப்ரஹ்மாதயஸ் ஸுரவராஸ் ஸமஹர்ஷயஸ்தே ஸந்தஸ்
ஸனந்தனமுகாஸ்தவ யோகி வர்யா:
தாமந்திகே தவஹி மங்கள வஸ்துஹஸ்தா: ஸ்ரீ
வேங்கடாசலபதே தவஸுப்ரபாதம்

(கருத்து) நீ துயில் எழுந்ததும் முதலாக உன் திருக்கண் மலர் பார்க்க வேண்டிய கண்ணாடி முதலிய மங்கள வஸ்துக்களை கையில் ஏந்திக் கொண்டு, நான்முகன், தேவ ஸ்ரேஷ்ட்டர்கள், யோகி ஸ்ரேஷ்ட்டர்களான ஸனந்தனர் முதலியோர் உன் ஸந்நிதானத்தில் நிற்கின்றனர். நீ திருக்கண் மலர் திறந்து, அவர்களை அனுக்ரஹி. உனக்கு

நற் பொழுது புலருக !

திருவையாற்றின் திருமஞ்சன வீதியில், தன் சிறு வீட்டினுள் அமைந்திருக்கும் பூஜாக்ரஹத்தில், அருணோதய சமயத்தில், தம்புராவை கையில் வைத்துக் கொண்டு "மேலு கோவய்ய மம்மேலுகோராம, மேலைன ஸீதாஸமேத நாபாக்யமா" என்று பௌளை ராகத்திலும் "மேலுகோ தயாநிதி, மேலுகோ தாஸரதி, மேலுகோ தயாநிதி, மித்ரோதயமென வேள" என்று சௌராஷ்ட்ர ராகத்திலும் பாடி, ஸ்ரீ ஸீதாராமனை பள்ளி எழுமாறு வேண்டிக் கொள்ளும் போது, ஏழாவது சரணத்தில் குறிப்பிட்ட அத்தனை மஹாநுபாவர்களையும் தொண்டரடிப் பொடியின் திருபள்ளியெழுச்சி பாசுரங்கள், ஸ்ரீ வேங்கடேஸ சுப்ரபாத ஸ்லோகங்கள் கொண்டாடும் அத்தனை மஹான்களையும், தன் அருகில் நின்று, ஸ்ரீ ராம சந்த்ரனின் பள்ளி எழுச்சி ஸேவைக்கும் காத்திருப்பவர்களாக ஸ்ரீ ஸத்குரு காண்கிறார். பாகவதோத்தமர்களான அந்த மஹாநுபாவர்களுக்கு அது சமயம் தனது வந்தனங்களை தெரிவித்து, திருபள்ளி எழுச்சி ஸேவை கான வரவேற்றார்.

<u>ஸ்ரீராகபஞ்சரத்னத்தின் எட்டாவது சரணம்</u>

**नीमेनु नामवैभवम्बुलनु नी पराक्रम धैर्यमुल शान्तमानसमु**
**नीवुलनु वचन सत्यमुनु, रघुवर ! नीयेड सद्भक्तियु जनिंचकनु**
**दुर्मतमुलनु कल्ल जेसिनट्टि नीमदि नेरिगि सन्तसंबुननु**
**गुण भजनानन्द कीर्तनमु जेयु वारेंदरो महानुभावु-लन्दरिकि वन्दनमु।**

நீ மேனு நாமவைபவம் புலனு நீ பராக்ரம தைர்யமுல

ஸாந்த மானஸமு நீவுலனு வசன ஸ்தயமுனு ரகுவர !
நீ யெட

ஸத் பக்தியு ஜனிஞ்சகனு துர்மத முலனு கல்ல
ஜேஸினட்டி நீமதி

நெறிங்கி ஸந்ததம்பு நனுகுண பஜனானந்த
கீர்த்தனமு ஸேயுவா (ரெந்தரோ மஹானுபாவு)

என்பது எட்டாவது சரணத்தின் வாக்யங்கள்.

ரகுவம்ஸத்தின் தீபமான ராமா ! உன்னுடைய தெய்வீகமான ஸௌந்தர்யம், உனது திருநாமத்தின் வைபவங்கள், உன் பராக்ரமம், தைர்யம், ஸாந்தமான மனது, ஸத்யவாக் பரிபாலனம், இவைகளை உள்ள படி அறிந்து, அந்த குணாதிசயங்களைப் பற்றி, ஸங்கீர்த்தனம் செய்து, ஆனந்தமடைந்து, நல்லறிவை அளிக்காத உதவாக்கரை மதங்களை எல்லாம் கனவு போல் உண்மையல்லவென்று ஒதுக்கி, உன்னிடம் சரணாகதி செய்தவர்கள் எத்தனையோ பேர், இந்த உலகில் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும், எனது மனமார்ந்த வந்தனங்கள் என ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் இந்த சரணத்தில் சொல்கிறார்.

ஸ்ரீராம சந்த்ரனின் நாமவைபவ விசேஷத்தை ஸ்ரீபோதேந்த்ராள் என்ற பெரியவாள் "ராம நாமமே கல்கண்டு அதன்ரஸம் தெரியாதவன் கல்குண்டு" என்று சொல்லியிருக்கிறார். "ராமா, ராமா" என்று ஜபம் செய்யும் போது பீதிகள் எல்லாம் அழிந்து, அகில ஸம்பத்துக்கள் சேர்ந்து, யமனும் அவனுடைய சேவகர்களும் அருகில் நெருங்க பயப்பட்டு, வெகு தூரத்தில் நிற்பதை பின்வருமாறு ஸ்ரீ போதேந்த்ராள் தெரிவித்தார்:

"பர்ஜனம் பவபீதானாம் ஆர்ஜனம் குலஸம்பதாம்
தர்ஜனம் யமதூதானாம் ராமராமேதி கர்ஜனம்"

"ராம" என்ற நாமம், "ர,அ,ம" என்ற மூன்று பீஜாக்ஷரங்களாக பிரிகின்றன. ராம் நாமத்தில், "ர" என்ற அக்னி பீஜம், தன்னுடைய பொசுக்கும் தன்மையால், ஜனங்களின் பாபங்களை சாம்பல் ஆக்குகிறது. "அ" என்ற சூர்யபீஜம், தன்னுடைய மஹாப்ரகாஸத்தால், ஜனங்களின் தாபத்ரயங்களை தீர்க்கிறது என போதேந்த்ர ஸரஸ்வதி நமக்கு விளக்கியிருக்கிறார். "ஓம் ராமாய நம: ஓம் ராமசந்த்ராய நம: ஓம்ராமபத்ராய நம:" .....என்று ஸ்ரீராம நாமாஷ்ட்டோத்தர ஸத நாம ஸ்தோத்ர மூலம் அர்ச்சனை பண்ணும் போது, எல்லாவிதமான அனுக்ரஹங்களையும் ஜனங்கள் அடைவதை பின்வரும் ஸ்லோகம் தெரிவிக்கிறது:

"ஸ்ருதி ஸ்ம்ருதி புராணேதிஹாஸாகம ஸதானிச
அர்ஹந்தி நால்பாம் ஸ்ரீராம நாம கீர்த்திகலாமபி
அஷ்டோத்ர ஸதம் நாம்னாம் ஸீதாராமஸ்யபாவனம்
அஸ்ய ஸங்கீர்த்தனாதேவ ஸர்வான் காமான் லபேந்நர:"

வேதங்கள், ஸ்ம்ருதிகள், புராணங்கள், இதிஹாஸங்கள், நூற்றுக் கணக்கான ஆகமங்கள் இவை அனைத்தும், ஸ்ரீராம நாமத்தின் கீர்த்தியுடைய ஒரு சிறு பகுதிக்கும் தகுதியாகாது. பாவனமான ஸீதாராமனின் 108 திருநாமங்களை பக்தியுடன் ஸங்கீர்த்தனம் பண்ணுபவர் களுக்கு கிடைக்காத பாக்யங்கள் ஏதும் இல்லை என இந்த ஸ்லோகம் சொல்லி, ஸ்ரீராம நாம மஹிமையை நமக்கு விளக்குகிறது. ஸம்ஸார ஸம்பந்தமான பயங்கள்

அதிகரிக்கும் போது, அகஸ்த்ய ஸம்ஹிதையில் விவரிக்கப் பட்டிருக்கும் ஆபதுத்தாரக ராம ஸ்தோத்ரத்தின் பின் வரும் ஸ்லோகம் போல் ஒன்றை ஸங்கீர்த்தனம் பண்ணுபவர்களுக்கு, ஆபத்துகள் எல்லாம் விலகி, ஸர்வ மங்களங்களும் ஸித்திக்கும் என்பது அனுபவத்தில் காணப்படும் உண்மை:

"ஸீதாலக்ஷ்மணஸம் ஸேவி பார்ஸ்வாய பரமாத்மனே
நம: பட்டாபிஷிக்தாய ராமாயாபந்நிவாரிணே
ஆபதாமபஹர்தாரம் தாதாரம் ஸர்வ ஸம்பதாம்
லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம்யஹம்"

அவனுடைய நாமவைபவ சிந்தனை மேலீட்டால், ஸ்வரூபத்யானத்தில் நிலைத்திருந்து, வாழ்வு பெறும் பெரியோர்களையும், அவர்களுடைய த்யானத்திற்கு லக்ஷ்யமான (குறியான) பட்டாபிராமனின் தர்பாரில் அமர்ந்திருக்கும் காக்ஷியை, ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை என்ற ஸ்ரீ வைஷ்ணவ குரு, திவ்ய ப்ரபந்த பாசுர ராமாயணம் என்ற தனது க்ரந்தத்தில் விவரித்திருக்கிறார். அவர், ஆழ்வார்களின் அருள் வாக்காக உதித்த வாக்யங்களால் கட்டப்பட்ட மாலையாக திவ்ய ப்ரபந்த பாசுர ராமாயணத்தை நிர்மாணித்தார். அவர் கண்டானந்தித்துப்பாடிய திவ்ய ப்ரபந்த பாசுர ராமாயணத்தின் பட்டாபிஷேக ஸேவை பின் வருமாறு:

"அங்கணெடு மதிள் புடை சூழ் அயோத்தி எய்தி
நன்னீராடிப்
பொங்கிள வாடையரையில் சாத்தித்
திருச் செய்ய முடியும் ஆரமும் குழையும்
முதலா மேதகு பல்கலனணிந்து

சூட்டு நன்மாலைகளணிந்து
பரதனும் தம்பி சத்துருக்கனனும்
இலக்குமணனும் இரவு நண்பகலும் ஆட்செய்ய
வடிவினை இல்லாச் சங்கு தங்கு முன்கை நங்கை
மலர்க்குழலாள் சீதையும் தானும்
கோப்புடைய சீரிய சிங்காதனத்திருந்து ஏழுலகும்
தனிக்கோல் செல்ல வாழ்வித்தருளினார்."

ஸ்ரீத்யாகப்ரஹ்மம் "நீ மேனு நாம வைபவம் புலனு .....கீர்த்தனமு ஸேயு வாரெந்தரோ மஹானுபாவுலந்தரிகி வந்தனமு" என்று எட்டாவது சரண ஆரம்பத்தில் சொல்லி, ஸ்ரீராமனின் திருமேனி அழகு, நாம ஜப வைபவம், இவைகளில் ஈடுபடும் மஹாநுபாவர்களுக்குத் தன் வந்தனங்களைத் தெரிவித்தார்.

அடுத்தபடியாக "நீ பராக்ரமு தைர்யமுல ஸாந்தமானஸமு நீவுஸத்யமுநு.....கீர்த்தனமு ஸேயு வாரெந்தரோ மஹாநுபாவுலந்தரிகி வந்தனமு" என்று பாடிப் போற்றினார் त्र्यम्बक समधिक घोरास्त्राडम्बर (த்ரயம்பக ஹமதிக கோராஸ்த்ராடம்பர) என்று ஸ்ரீஸ்வாமி தேசிகனால் விவரிக்கப்பட்ட பராக்ரமத்தை உடைய வீர ராகவனின் பௌருஷத்தைப் பற்றி ஸ்ரீத்யாகப்ரஹ்மம் அடுத்தபடியாக சொன்னார். பரம ஸிவனின் பாசுபதாஸ்த்ரத்தைக் காட்டிலும், அதிக பயங்கரமாயுள்ள அஸ்த்ரக் கூட்டங்களை உடையவனே என ஸ்ரீஸ்வாமி தேசிகன், ஸ்ரீவிஜய ராகவனை நமஸ்கரித்துக் கொண்டார். அப்பேற்ப்பட்ட பராக்ரம சாலியான ராமன், மஹாபலிஷ்ட்டனான கும்ப கர்ணனாகிய குல மலையை இரண்டாக பிளப்பதில் வஜ்ராயுதம் போல் உள்ள தவறாத

அம்பை தைர்யமாக உபயோஹித்தவன். அவனைப் போல தைர்யசாலிகளும், பராக்ரமசாலிகளும் இனி ஒருவரும் கிடையாது என்பதை ஸ்ரீ ரகுவீரகத்யப்பகுதிகளில் கும்பகர்ணவதத்தை விவரிக்கும் சமயம், ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் பின் வருமாறு நமஸ்கரித்துக் கொண்டது. ஸ்ரீத்யாகப்ரஹ்மமத்தின் "நீ பராக்ரம தைர்யமுல" என்பதற்கு ஆதாரமாகும்.

**वीर ! अप्रतिद्वन्द्व पौरुष ! त्र्यम्बक समधिक घोरास्त्राडम्बर कुम्भकर्ण कुलगिरि विदळन दम्भोलि भूत निःशङ्क कङ्कपत्र !**

(வீர ! ப்ரதித்வந்த்வ பௌருஷ ! த்ர்யம்பக ஸமதிக கோராஸ்த்ராடம்பர ! கும்பகர்ண குலகிரி விதளன தம்போளி பூத நி: சங்க கங்க பத்ர !)

அடுத்தபடியாக ஸ்ரீராமனின் ஸாந்தமான மனதையும், ஸத்யவாக்பரிபாலனத்தையும் குறிப்பிட்டு, ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள் ஸாந்தமானஸமுநீவுஸனு ஸத்யமது ..... கீர்த்தனமு ஸேயு வாரெந்தரோ மஹாநுபாவுலந்தரிகி வந்தனமு", என நமஸ்கரித்துக் கொண்டார். உன் ஸாந்த ஸ்வரூபத்தையும், தயா ப்ரபாவத்தையும், ஸாத்வீக பாவத்தையும் உனது பக்தர்கள் பின் வருமாறு கொண்டாடுகிறார்கள்.

**वन्दे रागविहीनचित्तसुलभं वन्दे सभानायकं ।**
**वन्दे पूर्णदयामृतार्णवमहं वन्दे सदा राघवम् ॥**
**वन्दे सात्त्विकतत्त्वमुद्रिततनुं वन्दे सुधादायकं ।**
**वन्दे चारुचतुर्भुजं मणिनिभं वन्दे षडब्जस्थितम् ॥**

வந்தே ராகவிஹீன சித்த கலபம் வந்தே ஸபாநாயகம்
வந்தே பூர்ணதயாம்ருதார்ணவமஹம் வந்தே
ஸதாராகவம்
வந்தே ஸாத்விக தத்வமுத்ரித தநும் வந்தே ஸுதாதாயகம்
வந்தே சாருசதுர்புஜம் மணிநிபம் வந்தே ஷடப்ஜஸ்திதம்

உன்னுடைய கருணாபரிபூர்ண, ஸாத்வீக, நிர்மல, சாந்த ஸ்வரூபத்தை பற்றி ஸங்கீர்த்தனம் செய்யும் மஹாநுபாவர்கள், இந்த புவியில் நிறைய உண்டு, அந்த மஹாநுபாவர்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த வந்தனங்கள் என ஸ்ரீ ஸத்குரு தெரிவித்தார்.

ஸத்யவசன பரிபாலகனான ராமன், தன்னிடம் பக்தியை வளர்க்காத ஸாரமில்லா, குதர்க்க மதங்களில் விருப்புக் கொள்ளாதவன் என்பதை அறிந்து, அவை களைத் தள்ளி விட்டு, அவன் திருவடிகளிலேயே ஸரணாகதி செய்து, அவன் கல்யாண குணங்களையே பாடி, ஆனந்த மயமான கீர்த்தனங்களை செய்கின்ற மஹாநுபாவர்கள். எத்தனையோ பேர் இந்த உலகில் உள்ளனர்; அவர்கள் எல்லோருக்கும் எனது வந்தனங்கள் என்று "ரகுவர நீ யெட ஸக்பக்தியுஜனிஞ்சகனு துர்மத மூலனு கல்ல ஜேஸினட்டி நீமதி நெறிங்கி ஸந்ததம்பு நநுகுணபஜனானந்த கீர்த்தனமு ஜேயு வாரெந்தரோ மஹாநு பாவுலந்தரிகி வந்தனமு" என்ற சரண வாக்ய பகுதி மூலம் தெரிவித்தார். உன்னுடைய "குண பஜன ஆனந்த கீர்த்தனமு ஜேயுவாரே" என்று மஹாநுபாவர்களில் ஒருவராக, ஏகாதசி தினமான இன்று ஸ்ரீ கோவிந்த மாரார் என்ற ஒரு பெரியவரை அறிமுகப்படுத்தி வைத்தாயே ராமா, உன்னுடைய

நாதோபாஸனையை அதி அதி விளம்பிதம், அதிவிளம்பிதம், விளம்பிதம், மத்யமம், த்ருதம், அதித்ருதம் என்று ஆறு காலப்ரமாணங்களிலும் செய்து கொண்டு, எங்களை மெய் மறக்கச் செய்யும் அந்த இசை மேதைக்கு எனது நமஸ்காரங்களை செய்து கொள்கிறேன் என்ற ஸ்ரீ ராமனிடம் ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் சொன்னார்.

கி.பி 1838ம் வருஷம் நடந்த ஒரு சம்பவத்துடன் கலந்து கொண்டது " எந்தரோமஹாநு பாவுலு" என்ற ஸ்ரீ ராகபஞ்சரத்னம். அந்த வருஷத்தின் ஏகாதசி தினமொன்றில், ஸ்ரீ த்யாக ப்ரஹ்ம்மத்தின் க்ருஹத்திற்கு, திருவாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள ராம மங்கலம் என்ற க்ராமத்தைச் சேர்ந்த கோவிந்த மாரர் என்ற அத்புத நாதோபாஸகர் வந்து சேர்ந்தார். காசி யாத்ரைக்காக ராம மங்கலத்தை விட்டுப் போகும் வழியில திருவையாரில் வசித்து வரும் ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகளை தர்சித்துக் கொள்வதற்கு அவர் வீட்டிற்கு வந்தார். ஸ்ரீ கோவிந்தமாரர், ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மத்தின் சிஷ்யரான கன்னையா பாகவதர் மூலமாக, திருவாங்கூர் ராஜாவின் தர்பாரில், அவருடைய கீர்த்தனங்களை பாடக் கேட்டு ஆனந்தப் பட்டதுண்டு. அந்த ஆனந்தாநுபவத்தால், இநத ஆச்சர்யமான ராமபக்தி ததும்பும் நாத ஓவியங்களைத் தீட்டிய திருவையாற்று மஹானை தர்ஸிக்க வேணும் என்ற ஆஸ்தையுடன் ஸ்ரீ கோவிந்தமாரர் ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மத்தின் க்ருஹத்திற்கு ஏகாதசி தினத்தில் வந்து சேர்ந்தார். ஏகாதசி பஜனையின் பூர்வாங்கம் முடிந்த பிறகு, தன் வீடு தேடி வந்த ஸ்ரீ கோவிந்த மாரரை பாடும் படி ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் கேட்டுக் கொண்டார். அவரும் ஏழு தந்திகள் கொண்ட தனது தம்புராவை வலது கையில் சுருதி கூட்டிக் கொண்டு,

தன் கால் இரு விரல்களுக்கிடையே இறுக்கி வைத்துக் கொண்டிருந்த கஞ்சிராவில் தாள ப்ரமாணத்தை சேர்த்துக் கொண்டு பாட ஆரம்பித்தார். மந்தாரத்தந்தி தவிர மூன்று தந்திகளும் இரட்டிப்பாக கோர்க்கப்பட்டிருக்கும் அத் தம்புராவிலிருந்து எழுந்த த்வனி, ஸ்ரீத்யாக ப்ரஹ்ம்மத்தையும், அவருடைய பஜனை கோஷ்டியில் அமர்ந்திருந்த அத்தனைப் பேரையும் ஆச்சர்யத்தில் மூழ்கச் செய்தது. தம்புராவின் ஈடு இல்லாத கம்பீரத்வனியுடன், இனிமையும் , பலமும் உள்ள தன் குரலைச் சேர்த்து, " சந்தன சர்ச்சித" என்ற பின் வரும் ஜயதேவரின் கீதகோவிந்த ஸ்லோகத்தை ஸ்ரீ கோவிந்த மாரர் ஆறு காலங்களிலும் லய சுத்தத்துடன் மெய்மறந்து பாடினார்.

चन्दनचर्चितनीलकलेवर पीतवसन वनमाली ।
केलिचलन्मणिकुण्डलमण्डित गण्डयुगस्मितशाली ॥
हरिरिह मुग्धवधूनिकरे विलसिनि विलसति केलिपरे ॥ ध्रुवं

சந்தன சர்ச்சித நீலகலேவர பீதவஸன வனமாலி
கேலிசலன் மணி குண்டல மண்டித கண்டயுகஸ்மித ஸாலி
ஹரிரிஹ முக்த வது நிகரே விலஸினி விலஸதி கேலிபரே த்ருவம்

ஸ்ரீ கோவிந்த மாரர், தனது காலப்ரமாணங்களில், அதித்ருதம் என்ற ஆறாவது காலத்தை அடைந்த போது, கூட கின்னாரி என்ற தந்தி வாத்யத்தை அனுஸரணையாக வாசித்து வந்த வாலாஜாபேட்டை க்ருஷ்ணஸ்வாமி பாகவதர் என்ற ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மத்தின் சிஷ்யர் ஆச்சர்ய மேலீட்டால், வாத்யம் வாசிப்பதை நிறுத்தி, நாத

வெள்ளத்தில் மூழ்கி அமைதியானார்.

அடுத்தபடியாக, ஸ்ரீ கோவிந்தமாரார் கனராக பஞ்சகங்கள் நாட்டை, கௌளை, ஆரபி வராளி, ஸ்ரீராகங்களில் விஸ்தாரமாக ஆலாபனை செய்து, தான வின்யாஸம் செய்தார். அதற்குப்பின், ஸ்ரீத்யாக ப்ரஹ்ம்மத்தின் வேண்டுகோளுக்கிணங்கி, நிஸ்ஸப்தமான இரவின் பிற்காலத்தில் நீலாம்புரிராக ஆலாபனை செய்து, ஸ்ரீ ஸத்குரு தேர்ந்து எடுத்த ஒரு பல்லவியை ஆறு காலங்களிலும் அனாயாஸமாகப்பாடி எல்லோரையும் ப்ருஹம்மானந்தம் அடையச் செய்தார். அவர் பல்லவியை முடிக்கும் சமயம் காலை 6 மணி. சூர்யோதய காலம். ஸ்ரீ கோவிந்த மாரர் பெருக்கிய நாத வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, எங்கு இருக்கிறோம் என்று தெரியாது மெய் மறந்து இருந்த ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம், தனது அதிதியின் வித்யானுக்ரஹம் கண்டு, வியந்து, தனது சிஷ்யர்களை "எந்தரோமஹானுபாவுலு" என்ற ஸ்ரீ ராக பஞ்சரத்ன கீர்த்தனையைப் பாடுமாறு சொன்னார். உஞ்சி வ்ருத்தி பஜனைகளில், பஞ்சரத்னத்தை அடிக்கடி பாடி, ஸாதக வலிமை பெற்ற சிஷ்யர்களும் அழகாக ஸ்ரீ ராக பஞ்சரத்னத்தைப்பாடி ஸ்ரீ கோவிந்த மாரருக்கு தங்கள் நன்றியை தெரிவித்தனர்.

"ஸ்வரலயாதி ராகமுலு தெலியுவாரே, ஸந்ததம்பு நினுகுண பஜன ஆனந்த கீர்த்தனமு ஸேயுவாரே" என்று ஸ்ரீராக பஞ்சரத்ன சரணங்களில் தான் நமஸ்கரித்துக் கொண்ட மஹாத்மாக்களில் ஒருவராக ஸ்ரீ கோவிந்தமாரரை ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மம் அறிவித்து, தன் பெருமதிப்பைக் காட்ட, ஸ்ரீகோவிந்தமாரரின் தம்புராவின் தலைப்ரதேசத்தில் ஒரு பட்டு நூலைச் சேர்த்தார்.

அதன் பின் காலை நியமங்களும், துளஸிபூஜையும், த்வாதசி பாராயணமும் நடந்தது. ஸ்ரீ கோவிந்த மாரரும், ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்துடன் சில நாட்கள் தங்கி இருந்து, பின்னர் தன் காசியாத்ரையைத் தொடங்கினார். தனது 71வது வயதில், முதிர்ந்த பக்தியும், ஸங்கீத ஞானமும் கொண்டிருக்கும் சமயத்தில் பரம வினயத்துடன், மற்ற ஒரு மஹாநுபாவரான நாதோபாஸகரின் வித்தைக்கு மரியாதை செய்த நம் ஸத்குருவைப் போன்ற விசேஷ புண்ய புருஷர்கள், இந்த புவியில் காண்பது அரிது.

<u>ஸ்ரீராக பஞ்சரத்னத்தின் ஒன்பதாவது சரணம்</u>

*ரிஷப ப்ராதான்யத்துடன், "ரீ;;-பநிஸரீ-நிஸரிகரி"* என்று ஆரம்பமாகும் இந்த சரணத்தில் नादलयान्तरस्थलगतं (நாதலயாந்தரஸ்தலகதம்) என்றபடி ஸ்ரீ கோவிந்த மாரர் போன்ற பழுத்த ஞானிகளை மறுபடியும் ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நமஸ்கரித்துக் கொள்கிறார்.

**भागवत रामायण गीतादि श्रुति शास्त्र पुराणपु**
**मर्ममुलनु शिवादिषणमतमुल गूदमुलन् मुप्पदिमुक्कोटि**
**सुरान्तरङ्गमुल भावम्बुल नेरिगि भाव राग लयादि सौख्यमुचे**
**चिरायुवुल गलिगि निरवधि सुखात्मुलै त्यागराजाप्तुलैन वारे**
**(एन्तरो)**

*பாகவத ராமாயண கீதாதி ஸ்ருதிஸாஸ்த்ரபுராணபு*
*மர்மமுலன் ஸிவாதி ஷண்மதமுல கூடமுலன்*
*முப்பதிகோடி*
*ஸுராந்தரங்க முலபாவம்புல நெரிகி பாவராக லயாதி*
*ஸௌக்யமுசே சிராயுவுல்கலிகி நிரவதி ஸுகாத்முலை*
*த்யாகராஜாப்துலைனவாரே (எந்தரோ)*

என்பது ஒன்பதாவது சரணத்தின் வாக்யங்களாகும். இங்கு

பாகவத லக்ஷணங்கள் சொல்கிறார். பாகவதர்களின் லக்ஷணங்களை நன்கு அறிந்தவர் ஸ்ரீத்யாக ப்ரஹ்மம். விசேஷமாக ஸ்ரீராம பக்தர்களான பாகவதர்களின் லக்ஷணங்களைத் தவறாது புரிந்து கொண்டு அவர்களை ஸதா போற்றி நமஸ்கரித்துக் கொண்டவர் நமது ஸத்குரு. அந்த பரம பாகவதர்கள், ஸீதாராமனின் ஸேவையில் ஈடுபட்டு, விஷய சுகங்களை விலக்கி, ஜீவன் முக்தர்களாகி, ப்ரஹ்மானந்தம் அடைவதை, "பக்துனி சாரித்ர முவினவே, மனஸா, ஸீதாராம" என்ற பேகடா கீர்த்தனத்தில் பின் வருமாறு தெரிவித்திருக்கிறார்.

ससक्तिलेक ता गोरुचु जिवन्मुक्तुडैयानन्दमु नोन्दु (भक्तुनि)
भवविभवमु निजमनि येंचरादु, अदिगाक मरि
शिव माधव भेदमु जेयगरादु ;
भुवनमन्दु दाने योग्युडननि
बोंकि पोट्ट साकग रादु ;
पवनात्मज धुतमौ सीतापति
पादमुलनु येमर रादनु हरि (भकतुनि चारित्रमु विनवे, मनसा)

"ஆ ஸக்திலேக தாகோருசு ஜீவன் முக்துடையானந்தமு நோந்து (பக்துனி)
பவ விபவமு நிஜமனி எஞ்சகராது, அதிகாக மரிஸிவமாதவ பேதமு ஜேயகராது
புவனமந்து தானே யோக்யுடனனி பொங்கிபொட்ட ஸாகக ராது,
பவனாத்மஜத்ருதமௌ ஸீதாபதி பாதமுலனு
ஏமரராதனுஹரி (பக்துனி)"

ஹே, மனதே! ஸீதாராம பக்தனின் நல்ல லக்ஷணங்களை நான சொல்லக் கேள். அவன் லோக சுகங்களில் பற்றற்று, ஸ்ரீ ராமனை ஆராதித்து, ஜீவன்

முக்தனாக மாறி, இன்பங்களுக்கெல்லாம் எல்லையான இன்பத்தை இப்புவியிலேயே அனுபவித்து வருகிறான். அவன் வேதங்களும், லோக சுகங்கள் (யௌவனம், அழகு, தனம்) நிலையற்றவை என்பதை அறிந்தவனாகிறான்.

सर्वे अस्मिन् देवा एकवृतो भवन्ति (ஸர்வே அஸ்மின் தேவா ஏகவ்ருதோ பவந்தி) என்று அதர்வ வேதம் அறிவிக்கும் வகையிலும் स ब्रह्मा स शिवः सेन्द्रः सोऽक्षरः परम स्वराट् (ஸ ப்ரஹ்ம்மா ஸ ஸிவ: ஸேந்த்ர: ஸோக்ஷர: பரம ஸ்வராட்) என்று நாராயணானுவாகம் சொல்லும் வகையில் பரம் பொருளான ராமனை புரிந்து கொண்டு, சிவன், விஷ்ணு என்ற பேத புத்திகள் கொள்ளாது வாழ்கிறான். உலகில் தானே தலை சிறந்தவன் என்று அஹங்காரம் அடையாது, தன் வயிறு வளர்ப்பதையே ப்ரதான கார்யமாக நினைத்து, காலத்தை வ்ரயமாக்க மாட்டான். ஆஞ்சநேயர் கெட்டியாக பிடித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ராமனின் பாதங்களை த்யானிப்பதை மறக்காது, ஏமாந்து போகாது இருப்பான் என பாகவத லக்ஷணத்தை இங்கு ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் விளக்கினார்.

அப்பேற்ப்பட்ட உயரிய பாகவத லக்ஷணங்களை எனக்கு அனுக்ரஹி என்று ஸ்ரீ த்யாக ப்ரஹ்ம்மம், ஸ்ரீ ராமனிடம் பல கீர்த்தனங்களில் ப்றார்த்தித்திருக்கிறார். வரட்டு புத்தியுடன் ஸாஸ்த்ரங்களை உள் அர்த்தம் தெரியாது படித்து விட்டு, பகவானிடம் ஏகமனதான பக்தி செய்யாது, தான தர்மங்களை பண்ணிக்கொண்டும், பாகவதம், ராமாயணம் முதலிய தொல்காப்பியங்களையும் படித்தும் உண்மை தெரியாது, ராம பக்தர்களாகிய பெரியோர்களோடு கூடி வாழாத ஜனங்களுக்கு தெளிந்த புத்தி ஏற்படாது என்பதை "புத்திராது புத்திராது

பெத்தலஸூத்துலு வினக" என்று தனது சங்கராபரண கீர்த்தனம் ஒன்றில் ஸ்ரீ த்யாக ராஜஸ்வாமிகள் சொல்லி, பாகவதர்களின் உயர்வை கொண்டாடியிருக்கிறார். "கருணா ஏலா கண்டே ஈவிதமே கல்யாண ஸூந்தரராம" என்ற வராளி கீர்த்தனத்திலும், தன்னை ஒரு நிமித்தமாக மதித்து ஸ்ரீ ராமனின் பரம பாவன திருவடிகள் என்ற இறுதி லக்ஷ்யத்தை கைவிடாது த்யானிக்கும் மஹான்கள், ஜீவன்முக்தர்களாக இப்புவியில் திரிந்து, இந்த பூமியை புண்ய பூமியாக ஆக்குவதை ஸ்ரீ ஸத்குரு தெரிவித்திருக்கிறார்.

निष्पापं निगमागमार्चितपदं नित्यात्मकं निर्मलं ।
निष्पुण्यं निखिलम् निरञ्जनपदं रामं भजे तारकम् ॥

என்றபடி பரம் பொருளான ராமனை ஸதா த்யானித்து ஆராதித்து சுகம் பெறும் மஹாத்மாக்களின் மஹிமைகளை ஸ்ரீ ராக பஞ்சரத்னத்தின் ஒன்பதாவது சரணத்தில் கூறி, அந்த மஹாத்மாக்கள் எல்லோரும் தனக்கு மிகவும் வேண்டியவர்கள் (த்யாகராஜாப்து லைனவரா) எனச் சொல்லி அந்த மஹான்களுக்கு தன் ப்ராணமங்களை தெரிவித்தார். அப்பேற்ப்பட்ட மஹாத்மாக்கள், பாகவதம், ராமாயணம், கீதை இவைகளின் ஸாராம்ஸங்களை நன்கு க்ரஹித்து கொண்டவர்கள். பாகவதம் பல முக்தியளிக்கும் மந்த்ரங்களை தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. அந்த மந்த்ரங்களின் அர்த்தங்களை சரியாக அறிந்து கொண்டவன் பாகவதனாகி, பகவானுடைய பரிபூர்ண அனுக்ரஹத்தை அடைந்து விடுகிறான். உதாரணமாக, பாகவதம் காண்பித்துக் கொடுக்கும் ஸங்கர்ஷண மந்த்ரத்தை ஜபித்து, அதன் அர்த்தத்தை புரிந்து

கொள்வதால் சரீரம், விஷய சுகம் இவைகளைப் பற்றிய எண்ணங்கள் விலகி, சாயுஜ்யம் கிட்டும். இந்த ஸங்கர்ஷண மந்த்ரம் பின் வருமாறு:

ओं नमो भगवते महापुरुषाय सर्वगुण .संख्यानायनन्तायव्यक्ताय नम इति ।

ஓம் நமோ பகவதே மஹாபுருஷாய ஸர்வகுண ஸங்க்யானாய அனந்தாய அவ்யக்தாய நம இதி

—பாகவதம் 5 17 17

இந்த மந்த்ரத்தின் அர்த்தம் பின் வருமாறு:

ப்ரணவத்தின் உள் நின்று, அதன் ஸாரமானவரும், புருஷோத்தமன் ஆனவரும், எல்லாவஸ்துக்களுக்கும் நாம, ரூபங்களை அனுக்ரஹித்து அவைகளை ப்ரகாஸப்படுத்துபவரும், முடிவில்லா ஆனந்தரும், இந்திரிய விஷயங்களுடைய உபத்ரவங்களுக்கு அப்பாற்பட்டவருமான பகவானுக்கு என்னுடைய இடைவிடா நமஸ்காரம். இந்த மந்த்ரத்தின் அர்த்தங்களை உள்ளுற அறிந்து சிந்தித்து, பகவதனுக்ரஹத்தை மஹான்கள் பெறுகிறார்கள்.

ராமாயணம் விவரிப்பது, தர்மமே உருவெடுத்ததாக இருக்கும் (தர்மோ விக்ரஹவான்) ராமனின் "ஸர்வாவஸ்த்த ஸக்ருத் ப்ரபந்ந ஜனதா ஸம்ரக்ஷண ஏக வ்ரதீ" என்ற சரணாகதி தர்மம். எந்த நிலையிலுமுள்ளவராயினும், சரணம் என்று ஒரு முறை கூறி தான் தாள்களில் வீழ்ந்த ஜனங்களைக் காப்பாற்றுவதையே முக்கிய வ்ரதமாக உடையவன், ராமன் என்ற உண்மையையே ஸ்ரீமத் ராமாயணம் விளக்குகிறது. அந்த அர்த்தத்தை புரிந்து கொண்டவர்கள் மஹாத்மாக்கள். அவர்கள் "ஸர்வதர்மான்

பரித்யஜ்ய மாமேகம் ஸரணம் வ்ரஜ" என்ற கீதாச்சார்யனின் உபதேஸத்தையும் நன்கு அறிந்து கொண்டு, ஏகாக்ர சிந்தையுடன், அவனிடம் சரணாகதி செய்கிறார்கள். அவர்கள் வேதங்கள் சொல்லும் பரம் பொருளின் லக்ஷணத்தை நன்கு புரிந்து கொண்டு பின் வரும் வேதவாக்யங்களை பாராயணம் செய்து, அந்த வேதவாக்யங்களின் அர்த்தங்களை மனதில் மறையாது நிறுத்திக் கொள்கிறார்கள்.

तदेवाग्निस्तदादित्यस्तद्वायुस्तदु चन्द्रमा
तदेव शुक्रं तद् ब्रह्म ता आप: स: प्रजापति:.

Yajur vedam, XXXII 1

यमे ध्यावापृथिवी जनित्री रूपैरपिशंद् भुवनानि विश्वा

-Rig vedam X 110.9

उच्छिष्टे नामरूपं चोच्छष्टे लोक: आहित:

- Atharva Vedam XI 7.1

उच्छिष्टे ध्यावापृथिवी विश्वं भूतं समाहितं ।
आप: समुद्र उच्छिष्टे चन्द्रमा वात अहिति: ॥

- Atharva Vedam XI 7.2

ऋक् साम यजुरुच्छिष्ट उद्गीथ: प्रस्तुतं स्तुतम् ।
हिङ्कार उच्छिष्टे स्वर: साम्नो मेडिश्च तन्मयि ॥

- Atharva Vedam XI 7.5

अगन्म महा नमसा यविष्ठं यो दीदाय समिद्ध: स्वे दुरोणे।
चित्रभानुं रोदसी अन्तरुर्वा स्वाहुतं विश्वत: प्रत्यञ्चम् ॥

- Sama Vedam, Uttararchika Sam 1304

"ததேவாக்னிஸ் ததாதித்யஸ்தத்வாயுஸ்தது சந்த்ரமா
ததேவ ஸுக்ரம் தத் ப்ரஹ்மமதா ஆப: ஸப்ரஜாபதி:"

என்ற யஜுர்வேத மந்த்ரம், அந்த புவனாதார விஸ்வரூபியே அக்னி, அவனே சூர்யன், அவனே வாயு, அவனே சந்த்ரன். அவனே ப்ரஜாபதியாகவும், சுக்ரனாகவும், நீராகவும், நிலனாகவும் பரவி உள்ளான் எனச் சொல்கிறது. பகவானின் விஸ்வரூபத்தை மஹான்கள், தங்கள் மனத்தகத்தே நிறுத்தி ஆனந்த பரவஸர்களாகிறார்கள்.

"யமே த்யாவாப்ருதிவீ ஜனித்ரீரூபைரபிம்ஸத் புவனானி விஸ்வா" என்ற ருக் வேத மந்த்ரத்தின் அர்த்தத்தை ஆராய்ந்து, மஹானுபாவர்கள் அவன் விண்ணையும், மண்ணையும், இடையில் உள்ளது எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கிறான், அவைகளும், அவன் ஸ்வரூபத்தைப் பெற்று ப்ரகாஸிக்கின்றன என்ற உண்மையை மனத்தகத்தே நிறுத்தி ஆனந்த பரவஸர்களாகிறார்கள்.

"உச்சிஷ்ட்டே நாம ரூபம் சோச்சிஷ்டே லோகஆஹித:
உச்சிஷ்ட்டே த்யாவாப்ருதிவீ விஸ்வம் பூதம் ஸமாஹிதம்
ஆப: ஸமுத்ர உச்சிஷ்ட்டே சந்த்ரமா வாத ஆஹித:
ருக் ஸாம யஜுருச்சிஷ்ட உத்கீத: ப்ரஸ்துதம் ஸ்துதம்
ஹிங்கார உச்சிஷ்ட்டே ஸ்வர:
ஸாம்னோமேடிஸ்ஸ்ச்சதன்மயி

என்ற அதர்வ வேத மந்த்ரத்தை ஓதி, அந்த மந்த்ரத்தின் அர்த்தங்களை ஆராய்ந்து, அவன் எல்லா நாம, ரூப வஸ்துக்களும் அழிந்த பின், எஞ்சி இருக்கும் "நித்யம், பரம், ஸர்வகதம், ஸுஸூக்ஷ்மம், நிஷ்பந்த நந்தது

மயம் பவத: ஸ்வரூபம்" என்ற ஸ்வரூப விசேஷத்தை அறிந்து கொள்கிறார்கள். என்றும் உள்ளதாய், எல்லாவற்றினும் சிறந்ததாய், எங்கும் வ்யாபித்திருப்பதாய், எல்லாவற்றினிலும் உட்பொருளாய், மாறுதலே இல்லாத பரமானந்த ஸ்வரூபாமாயுள்ள உன்னுடைய திவ்யாத்ம ஸ்வரூபம், எல்லாவற்றிற்கும் உச்சிஷ்டமாய் உள்ளதை மஹான்கள் அறிகிறார்கள். மஹாப்ரளயத்திற்கு பிறகு, எஞ்சி உள்ள நஸிக்காத உண்மை உச்சிஷ்ட பரப்ரஹ்மமே என்பதை மஹாநுபாவர்கள் புரிந்து கொள்கிறார்கள். ஆதி மத்யந்த ரஹிதமாய் உள்ள உச்சிஷ்ட பரப்ரஹ்மமே மஹாப்ரளயம் முடிந்ததும், விண்ணையும், வானையும், நீரையும், நிலத்தையும், காற்றையும், சந்த்ரனையும், சுடர்களையும், ரிக், யஜுர், ஸாமம், உத்கீதம், ஹிங்காரம், ஸ்வரம், எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு ஜ்வலிப்பதை மஹாநுபாவர்கள் தங்கள் மனத்தகத்தே அடக்கி ஆனந்த பரவஸமடைகிறார்கள்.

அந்த மஹாநுபாவர்கள், 'ஆகன்ம மஹா நமஸாயவிஷ்டம் யோ தீதாய ஸமித்த: ஸ்வேதுரோணே சித்ரபானுகும் ரோதஸீ அந்தரூர்வா ஸ்வாஹுதம் விஸ்வத: ப்ரத்யஞ்சம்" என்ற ஸாம வேத மந்த்ரத்தின் அர்த்தத்தை ஆராய்ந்து, அவன் விண்ணிற்கும், மண்ணிற்கும் அதற்கு இடையே உள்ள அந்தரிக்ஷத்திலும் அளாவியிருப்பதை அறிந்து கொள்கிறார்கள். உலகங்கள் எல்லாம் வ்யாபித்து, அதனால் விஷ்ணு என்ற பெயர் பெற்ற ஜகதாதார பரம் பொருளிடம், உன்னிடம் வினயத்துடன் நெருங்கி, உன் அருகிலேயே இருக்கும் ஸாமீப்ய மோக்ஷத்தைக் கொடு என்று வேண்டிக் கொள்கிறார்கள். அதன் பின்

அவனுடைய விஸ்வரூப தர்ஸனம் கண்டு, அவனை மனத்தகத்தே நிறுத்தி ஆனந்த பரவஸர்களாக மஹான்கள் ஆகிறார்கள்.

இம்மாதிரியான பாகவதம், ராமாயணம், கீதை, வேதங்கள் சாஸ்த்ரங்கள், புராணங்கள் விளக்கும் ரஹஸ்யார்த்தங்களை செவ்வனே கற்ற மஹாநுபாவர்கள், த்யாகராஜனுக்கு ஆப்தர்களாக இருக்கிறார்கள். அத்தனை பேர்களுக்கும், மார்க்க தர்ஸிகளாக இருப்பதற்கு என்னுடைய மனமார்ந்த வந்தன்ங்கள் என ஒன்பதாவது சரணத்தில் "பாகவத ராமாயண கீதாதி ஸ்ருதி ஸாஸ்த்ர புராண மர்ம முவன்.... த்யாகராஜாப்துலை நவா ரெந்தரோ மஹாநுபாவுலந்தரிகி வந்தனமு" என தெரிவித்தார்.

அடுத்தபடியாக, தனது சரண வாக்யங்களில், "ஸிவாதி ஷண்மத முல கூடமூலன் முப்பதி முக்கோடி ஸுராந்தரங்க முல பாவம்புலநெரிகி .... த்யாகராஜாப்துலை நவா ரெந்தரோ மஹாநு பாவுலந்தரிகி வந்தனமு" என்ற ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் மஹாநுபாவர்களை வணங்கிக் கொண்டார். இந்த வகை மஹாநுபாவர்கள் சைவம் முதலிய ஷண்மதங்களின் ரஹஸ்ய அர்த்தங்களையும், முப்பத்து முக்கோடி தேவர்களின் அந்தரங்கங்களை அறியும் பாக்யம் பெற்றவர்கள்.

निष्पापं निगमागमार्चितपदं नित्यात्मकं निर्मलं ।
निष्पुण्यं निखिलं निरञ्जनपदं रामं भजे तारकम् ॥

ஸ்ரீ ராமனையே தன் இஷ்ட தெய்வமாக வரித்து வணங்கிய ஸ்ரீ த்யாகராஜஸ்வாமி வேதமார்க்கத்தை

அனுஸரித்து ஆராதிக்கப்படும் ஸிவன், அம்பிகை கணபதி, ஷண்முகன், சூரியன் என்ற தெய்வங்களை வரித்து உபாஸிக்கும் மஹாநுபாவர்களையும், ஸமரஸமனத்துடன் இங்கு வணங்கிக் கொண்டார்.

ஷண்மத ப்ரதிஷ்டாபனாச்சார்யரான ஸ்ரீ ஆதி குரு சங்கர பகவத் பாதாள் காட்டிய ஆறுவிதமான வைதீக ஆராதனைத்தைச் செய்து முக்தி பெறும் பெரியோர்களுக்குத் தனது ப்ரணாமங்களை சேர்த்தார். இவர்கள் எல்லர்ம் தனக்கு குருக்கள் என்று அறிவித்தார், ஸ்ரீ ஸத்குரு. "கு" என்ற அக்ஷரத்திற்கு இருட்டு, அக்ஞானம் என்ற அர்த்தம். "ரு" என்ற அக்ஷரத்திற்கு, விரட்டுவது, போக்குவது என்றது அர்த்தம். இந்த மாதிரியில், தனக்கு நிஜ அறிவு அளித்த ஷண்மத உபாஸகர்களுக்கு ஸ்ரீ ராகத்தின் ஒன்பதாவது சரணத்தில் ஸ்ரீ த்யாகப்ஹ்ம்மம் நன்றி செலுத்தினார். பஞ்சாயதன பூஜையில் ஆராதிக்கப்படும் விஷ்ணு, ஸிவன், அம்பிகை, ஸுப்ரஹ்ம்மண்யன் கணபதி ஆகியோர்களைப் பற்றி ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மம் கீர்த்தனங்கள் செய்து நமக்கருளியதுண்டு. இத்தனை தெய்வங்களும், ஸூர்யனுடன் சேர்ந்து ஆறாகி, வேதங்களால் கொண்டாடப்பட்ட தெய்வங்கள். அவர்கள் எல்லோரும் ப்ரணவத்தின் பொருள்.

இந்த ஷண்மதங்களை ஸ்ம்ருதி முக்தாவளி விளக்கி, வீட்டில் பஞ்சாயதன பூஜை செய்ய வேண்டும் எனப் பின் வருமாறு சொல்கிறது:

आदित्यमम्बिकां विष्णुं गणनाथं महेश्वरं ।
पञ्चयज्ञपरो नित्यं गृहस्थ पञ्च पूजयेत् ॥

ஆதித்யமம்பிகாம் விஷ்ணும் கணநாதம் மஹேஸ்வரம்
பஞ்சயக் ஞபரோ நித்யம் க்ருஹஸ்ய பஞ்ச பூஜயேத்

இந்த தெய்வங்களையும், சூர்யனையும் தன்னுள் கொண்ட ஷண்மதங்கள் பக்தி மார்க்க மூலம் முக்தி அடைய எவ்வளவு இன்றியமையாதவை என்பதை பின் வரும் ஸ்லோகம் விளக்கி "ஶிவாதி ஷண்மதமூலகூட மூலன் .... த்யாகராஜாப்துலைநவா ரெந்தரோ மஹாநுபாவுலு" என்பதற்கு ஆதாரம் அளிக்கிறது:

शैवं च वैणावं शाक्तं सौरं वैनायकं तथा ।
स्कान्दं च भक्तिमार्गस्य दर्शनानि षडेव हि ॥

ஶைவம் ச வைஷ்ணவம் ஸாக்தம் ஸௌரம் வைநாயகம் ததா
ஸ்காந்தம் ச பக்தி மார்கஸ்ய தர்ஸானானி ஷடேவஹி

ஷண்மதங்கள் கொண்டாடும் தெய்வங்களுள் முதலானவர் ரிக் வேதம் பின்வரும் வகையில் கொண்டாடும் "Seer of Seers, poet of poets, king of kings" என்ற கணபதி:

गणानां त्वा गणपतिं हवामहे कविं कवीनां उपमश्रवस्तमम् ।
ज्येष्टराजं ब्रह्मणां ब्रह्मणस्पत आनः शृण्वन्नूतिभिस्सीदसादनः ॥

கணானாம் த்வா கணபதிம் ஹவாமஹே கவிம்
கவீனாம் உபமஶ்ரவஸ்தமம்
ஜ்யேஷ்ட்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத
ஆன: ஸ்ருண்வந்நூதிபிஸ் ஸீதஸாதனம்

கணபதியை "கிரிராஜஸுதாதனய" என்ற

பங்காளராக கீர்த்தனை மூலம் நமது ஸத்குருவும் வணங்கியதுண்டு.

ஷண்மதங்கள் கொண்டாடும் தெய்வங்களுக்குள் அடுத்தவர் கணபதியின் தகப்பனாரான शिवं प्रशान्तम् चिदानन्दम् उमासहाय: என்று கைவல்யோபநிஷத் நமஸ்கரித்துக் கொள்ளும் உமா மஹேஸ்வரன். ஞான உபதேஸம் செய்து கொண்டு, ஆல மரத்தின் அடியில் சின் முத்ரையுடன் திகழும் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபனான ப்ரஸாந்தரை, சிதானந்த மயராக ஸ்வேதஸ்வதார உபநிஷத் பின் வருமாறு வணங்குகிறது.

तमी श्वराणां परमं महेश्वरं तं देवतानां परमं च दैवतम् ।
पतिं पतिनां परमं परस्तात् विदेम देवं भुवनशमीडयम् ॥

தமீஸ்வராணாம் பரமம் மஹேஸ்வரம் தம் தேவானாம்
பரமம் சதைவதம்
பதிம் பதீனாம் பரமம் பரஸ்தாத் விதேமதேவம்
புவனேஸமீட்யம்

மஹேஸ்வரனை தனது கோவூர் பஞ்சரத்ன கீர்த்தன மூலம் நமது ஸத்குரு வணங்கியது உண்டு.

மஹேஸ்வரனின் பாதி உடலைக் கொண்ட சக்தியை, சாக்தம் என்ற ஷண்மதங்களில் ஒன்றை கடைபிடிக்கும் மஹான்கள் உபயோகப்படுத்தி தேவி ஸாயுஜ்யம் அடைகிறார்கள். "இரு நாழி நெல் கொண்டு எண் நான்கு அறம் இயற்றினாள்" என்று கொண்டாடப்படும் காமாக்ஷியை ஆராதித்து முக்தி அடைந்த பெரியோர்கள் அநேகர். இரண்டு மரக்கால் நெல்லை வைத்துக் கொண்டு, 32 தர்மங்களையும் வளர்த்த ஸ்ரீ சக்ர

நிவாஸினியான அம்பாளை, தேவி உபாஸகர்களான ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரும், ஸ்ரீ ஸ்யாமா ஸாஸ்த்ரிகளும், மூககவியும், ஆதி சங்கரரும் ஆராதித்து அருள் பெற்றிருப்பதை இங்கு ஸ்ரீ . த்யாக ப்ரஹ்மம் குறிப்பிட்டார்.

அடுத்தபடியாக, அம்பிகையின் மற்றொரு பாலனான ஸ்ரீ ஸ்கந்தனை ஷண்மதங்கள் கொண்டாடும் நான்காவது தெய்வமாக நாம் அறிகிறோம். "அரும் பெறல் மரபிற் பெரும் பெயர் முருகன்" என்பது அவனது விவரணம். முருகு, முருகன் என்ற பெயர், தெய்வீக மணம், திகட்டாதருசி, இணையில்லா பேரின்பம் "இவைகளை எல்லாம் குறிப்பிடும் "பெரும் பெயர்". வேதத்தின் மஹாவாக்யங்களான "தத்வமஸி" என்பவைகளுக்கு "பெரும் பெயர்" என்பது பொருத்தமானது. ஸ்வாமி மலையில் வேத மஹாவாக்யங்களுக்கு அர்த்தம் சொன்ன ஸ்வாமி நாதனை குருவாக வரித்துக் கடைத் தேறினவர், நக்கீரர், குமரகுருபரர், அருணகிரி நாதர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் என்ற மஹான்கள். "முத்தமிழால் வைதாரையும், அங்கு வாழ வைப்பான்" என்று அருணகிரி நாதரால் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழனின் தனிப் பெரும் தெய்வமான கார்த்திகேயனை சாந்தோக்ய உபநிஷத் பின் வருமாறு போற்றி, அவனுடைய வேத ஸம்பந்தத்தை தெரிவிக்கிறது:

तस्मै मृदितकषायाय तमसः पारं दर्शयति भगवान् ।
सनत्कुमारः स्कन्दः इत्याचक्षते स्कन्द इत्याचक्षते ॥

தஸ்மை ம்ருதிதகஷாயாய தமஸ: பாரம் தர்ஸயதி
பகவான்
ஸனத்குமார: ஸ்கந்த: இத்யாசக்ஷதே ஸ்கந்த
இத்யாசக்ஷதே

ஸன்யாஸ ஆஸ்ரமம் ஏற்றுக் கொண்டிருக்கும் கஷாயதாரிகளுக்கு ஞான ஸன் மார்க்கத்தை காட்டிக் கொடுப்பவன் ஸ்கந்தன் என இங்கு உபநிஷத் வணங்குகிறது.

ஆறுபடை வீடுகளாகிய திருப்பரங்குன்றம், திருச்சீர் அலைவாய் (திருச்செந்தூர்), திருஆவினங்குடி (பழனி), திருவேரகம் (ஸ்வாமி மலை) குன்று தோராடல் (திருத்தணி), பழமுதிற் சோலை (அழகர் கோவில்) ஆகியவைகளில் கோயில் கொண்ட சரவணப் பெருமாளை

"திருக்குழந்தையுமென அவர் வழிபடு
குருக்களின் திறமென வரு பெரியவ
திருப்பரங்கிரி தனிலுறை சரவண பெருமானே!

என்று வணங்கிப் பேறு பெறும் ஸ்கந்தனின் பக்தர் களாகிய மஹாநுபாவர்களுக்கு தன் நமஸ்காரங்களை ஸ்ரீத்யாகப்ரஹ்மம் தெரிவித்தார். தனது தோடி ராக கீர்த்தனமொன்றில் ஷண்முகப்பெருமானை "நீ வண்டி தைவமுனு ஷடானன நே னெந்து காஎரா, பாவிஞ்சி கூட தரமுகானி ப்ரஹ்மபுரி நிலய கிரிஜாதனய" என்று ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் நேரிடையே நமஸ்கரித்ததும் உண்டு.

ஷண்மதங்களில் நான்காவது ஸ்ரீ சக்ர நிவாஸினியான ஸ்ரீ ராஜராஜேஸ்வரியைப் பற்றிய ஸாக்தமாகும். மூலத்ரயகலேபரா என்று ஸ்ரீ லலிதா

ஸஹஸ்ரநாமம் போற்றும் அம்பாள், சந்த்ரகூடம், ஸூர்யகூடம், அக்னி கூடம் என்ற மூன்று விதமான மந்த்ரப்பகுதிகள் கொண்ட ஸூக்ஷ்மஸ்வரூபம் உள்ளவள். அவளே அர்ச்சா ரூபஸௌந்தர்யத்துடன் தர்ம ஸம்வர்த்தினி என்ற பெயருடன் திருவையாற்றிலும், நீலாயதாக்ஷி என்ற பெயருடன் நாகப்பட்டிணத்திலும், த்ரிபுரஸுந்தரி என்ற பெயருடன் திருவொற்றியூரிலும், காமாக்ஷி என்ற பெயருடன் காஞ்சியிலும், ப்ரவ்ருத்த ஸ்ரீமதி என்ற பெயருடன் லால்குடியிலும், ஸ்ரீ த்யாகப்ரஹ்மத்திற்கு ஸேவை அளித்து அவரை பரமானந்தத்தில் ஆழ்த்தினாள். அவரும் ஸ்ரீ சக்ரத்தின் நடுவில், பைந்தவஸ்தானத்தில் தேஜோமயமாக ஜ்வலிக்கும் அம்பாளை அத்தலங்களில் ஸேவித்துக் கொண்டு பல அத்புத கீர்த்தனங்களை, அவள் திருவடிகளில் ஸமர்பித்தார். பின்னர் "பரா ஸக்தி ஈஸ்வரி ஜகஜ்ஜனனி பராதி சத்வாரி வாக் ஸ்வரூபிணி", "பராத்பரி பாஹி மாம் ஸங்கரி" என்றும் " காம கோடிபீட நிவாஸினி கல்யாணி ச்யாமக்ருஷ்ண ஸோதரீ தேவி நீவேகதியனி நெர நம்மி நானு ஜகதம்ப, நீவநாத ரக்ஷிமாயம்மா" என்றும்,

"ஸ்ரீ மாதா ஸ்ரீ மஹாராக்ஞீ ராஜ்ஞீ ஸ்ரீமத்
ஸிம்ஹாஸனேஸ்வரி"

..........................................................................................

ஸ்ரீ ஸிவா ஸிவ ஸக்த்யைக்ய ரூபிணி லலிதாம்பிகா பாஹி"

என்றும் போற்றுகிற அகஸ்தியர், துர்வாஸர், ஆதி சங்கரர் ஸ்ரீ தீக்ஷிதர், ஸ்ரீ ஸ்யாமா சாஸ்திரிகள் முதலிய தேவீ பக்தர்களான மஹான்களுக்கு தனது நமஸ்காரங்களை இந்த சரணத்தில், ஸ்ரீ ஸத்குரு செலுத்தினார்.

ஷண்மதங்களில் ஐந்தாவது ஸ்ரீ வைஷ்ணவம் என்ற மதம் மூன்று முறைகள் மூலம் மங்கள ஸ்வரூபம் (श्रवणमङ्गलम्, ध्यानमङ्गलम्, विग्रमङ्गलम्) கொண்ட பக்த ஸுலபனான விஷ்ணுவை ஆராதிக்கும் மதம் ஸ்ரீ வைஷ்ணவம். "லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம் வந்தே குருபரம்பராம்" என்ற வகையில் ஸ்ரீலக்ஷ்மீ நாராயணனிடமருந்து ஆரம்பமாகி ஸ்ரீதேவி விஷ்வக்ஸேனர், நம்மாழ்வார், நாதமுனி, ஆளவந்தார், ஸ்ரீ ராமாநுஜர், ஸ்ரீ வேதாந்த தேசிகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஆதிவண் சடகோபயதீந்த்ரர் போன்ற பெரிய ஆச்சார்யர்களை குரு பரம்பரையாகக் கொண்டது ஸ்ரீ வைஷ்ணவம். ஸ்ரீ ஆதி சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட பத்து ஸன்யாசி ப்ரம்பரைகளாலும் "நாராயண ஸ்மரணத்தை" அடிப்படையாகக் கொண்ட பெருமை கொண்ட மதம், ஸ்ரீவைஷ்ணவம்.

ஷட்பதி என்ற ஸ்லோகமாலையில், ஆதி சங்கரரால் போற்றப்பட்ட விஷ்ணு, வேத புருஷன். அவரை ஷட்பதி ஸ்லோகம் ஒன்றில் ஸ்ரீ ஆதி சங்கரர் பின் வருமாறு வேண்டிக் கொண்டார்.

अविनयं अपनय विष्णो दमय मनः शमय विषयमृगतृष्णाम् ।
भूतदया विस्तारय तारय संसारसागरतः ॥

"அவினயம் அபனய விஷ்ணோ தமய மன: ஸமய
விஷயம்ருகத்ருஷ்ணாம்
பூததயாம் விஸ்தாரய தா்ரய ஸம்ஸார ஸாகரத:

எங்கும் பரந்துள்ள விஷ்ணுவே! என்னுடைய அஹங்காரத்தை அழித்து விடு. என்னை வினய ஸம்பத் நிறைந்தவனாகச் செய்து, என் மனதை விஷய சுகங்களாகிற பாலைவனத்தின் கானலில் அடிபடாது

காப்பாற்று. எல்லா ஜீவ ராசிகளிடமும் என்னுடைய அன்பு அபிவிருத்தி அடைவதாகச் செய். என்னை ஸம்ஸாரமாகிற கடலின் அக்கரைக்கு சேர்த்துவிடு என மேற் காணும் ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் ப்ரார்தித்தார். விஷ்ணுபுஜங்கம், பஜகோவிந்தம், லக்ஷ்மீந்ருஸிம்ஹ கராவலம்பனஸ்தோத்ரம் முதலிய விஷ்ணு ஸ்துதிகளை எழுதி, பின் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கும் பாஷ்யம் எழுதிய ஆதி சங்கரர், தனது குல தேவதையான குருவாயூரப்பனை, கோவிந்ததாஷ்டகம் என்ற தனது ஸ்துதியில், அத்யத்புதமாக பின் வருமாறு ஸேவித்துக் கொண்டார்.

सत्यं ज्ञानं अनन्तं नित्यमनाकाशं परमाकाशं
गोष्ठप्राङ्गणरिङ्गणलोलमनायासं परमायासम् ।
मायाकाल्पितनानाकारमनाकारं भुवनाकारं
क्षमा मा नाथं अनाथं प्रणमत गोविन्दं परमानन्दम् ॥

ஸத்யம் ஞானம் அனந்தம் நித்யம் அனாகாஸம்
பரமாகாஸம்
கோஷ்ட்ட ப்ராங்கணரிங்கண லோலம் அனாயாஸம்
பரமாயாஸம்
மாயா கல்பித நானாகாரம் அனாகாரம் புவனாகாரம்
க்ஷ்மா மாநாதம் அநாதம் ப்ரணமா கோவிந்தம்
பரமானந்தம்

ப்ரேம பாண்டுரங்கனான ஸ்ரீ கோபலனைப் போற்றும் ஆதி சங்கரரின் மேற் காணும் ஸ்லோகத்தின் அர்த்தம் பின் வருமாறு:

" Gopala - He who incarnated as Krishna, a cowherd protecting the cows - is truth, knowledge, Infinity, eternity, space

and that beyond space. He, the facile play boy in the cow - pen is also the numerous other forms in which he is thought of and the cosmos itself is nothing but his form. I worship him, the Lord of Bhudevi and Sri Devi beyond whom is no over lord, my Govinda, who is Supreme bliss."

ஸ்ரீ ஆதி சங்கரர் 'ஸேவித்துக் கொண்ட ஸ்ரீ கீதாச்சார்யனை பரம் பொருளாகக் கொண்டாடும் விஸிஷ்டாத்வைதம் reconciles the devotion to a personal God with the abstract philosophy of Vedantha.

ஸ்ரீ த்யாகப்ரஹ்மம், நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களை, ஸ்ரீ ராமனைப் பற்றியும் ஸ்ரீ க்ருஷ்ணனைப் பற்றியும் செய்து அருளியுள்ளார்.

ஷண்மதங்களுள் கடைசியானது, ஸுர்யனை ஆராதிக்கும் ஸௌரம் என்பது. சூர்யனைத் தனித் தெய்வமாக உபாஸிப்பது, ஸ்ரீ ஆதி சங்கரர் காலத்தில், வழக்கத்தில் இருந்தது. இப்போது, நவக்ரஹ ஸன்னதிகளிலிலும் சூர்ய நயினார் கோயில் என்ற தஞ்சாவூர் ஜில்லா கிராமம் ஒன்றிலும், சூர்யனுக்கு தனியான ஆராதனம் நடை பெறுகிறது. வேதங்களில், அதர்வவேதமும், ஆரண்யகங்கா தைத்ரீய ஆரண்யகமும், ஸ்ரீ ஸுர்யனின் புகழை வெகுமாகப் பாடுகின்றன. உதாரணமாக பின்வரும் அதர்வ வேதப்பகுதிகள், அவனைக் கொண்டாடுகின்றன.

चित्रं देवानामुदगादनीकं चक्षुर्मित्रस्य वरुणस्याग्नेः ।
आ प्रा ध्यावापृथिवी अन्तरिक्षं सूर्य आत्मा जगतस्तस्थुशश्च ॥
उद्वेति सुभगो विश्वचक्षाः साधारणः सूर्यो मानुषाणाम् ।
चक्षुर्मित्रस्य वरुणस्य देवः चर्मेव यः समविव्यक् तमांसि ॥

சித்ரம் தேவானாமுதகாதனீகம் சக்ஷுர்மித்ரஸ்ய வருணஸ்யாக்னே:
ஆப்ரா த்யாவா ப்ருதி வீயந்தரிக்ஷம் ஸூர்ய ஆத்மா ஜகதஸ்தஸ்துஷஸ்ச்ச
உத்தேதி சுபகே.ா விஸ்வசக்ஷா: சாதாரண: ஸூர்யோ மானுஷாணாம்
சக்ஷுர்மித்ரஸ்ய வருணஸ்ய தேவ: சர்மேவய: ஸமவிவ்யக் தமாம்ஸி

(கருத்து) அதிசயமான தெய்வீக ஒளி உடைய சூர்யன் மித்ரனுக்கும், வருணனுக்கும் கண்களாக இருந்து ஜகத்தின் ஸ்தாவர, ஜங்கமப்பொருள்களின் ஆத்மாவாக விளங்குகிறான். ஜகங்களுக்கெல்லாம் ப்ரபுவுமான சூர்யன், இதோ, எழுகிறான்.

ஜகத் கர்ம ஸாக்ஷியாக இருக்கும், ஆதித்யன், வருணனுக்கும், மித்ரனுக்கும் கண்களாக இருந்து, லோகங்களைப்பரவி இருக்கும் இருட்டை, ஒரு தோல் ஜமக்காளத்தை விரிப்பது போல் சுலபமாக அகற்றுகிறான். "விஸ்வ சக்ஷு:" என்று வேதங்களால் போற்றப்படும் சூர்யன், தர்ம மார்க்கத்தை நிலை நாட்டிக்கொண்டு, பரதெய்வமாக விளங்குவதை ருக் வேதப்பகுதி ऋतेन आदित्यस्तिष्ठन्ति என தெரிவிக்கிறது. அந்த லோகங்களின் கண்ணாக, ஸர்வ கர்ம ஸாக்ஷியாக நிற்கும் ஸூர்யனை, மற்ற ஒரு ரிக் வேதப்பகுதி, நம்மையெல்லாம் காத்து, நூறு வருஷங்கள் கொண்ட ஆயுஸ் ஆரோக்யம் கொண்ட வேதப்ராயத்தை அனுக்ரஹிக்குமாறு பின் வருமாறு வேண்டிக் கொள்கிறது.

तच्चक्षुर्देवहितं शुक्रमुच्चरत् । पश्येम शरदः शतम् । जीवेम शरदः शदम् ॥ Rig Vedam VII. 66.16

ஸவிதா என்ற மற்ற ஒரு பெயர் கொண்ட ஸுர்யனை அழிவிலாமுக்தி (Immortality) அடைய மற்ற ஒரு ரிக்வேதப்பகுதி तत् सविता वोऽमृतत्वमासुव (தத்ஸவிதா அம்ருதத்வமாஸுவ) என வேண்டிக் கொள்கிறது.

ஸுர்யனின் உபாஸனை, ஆராதனக்ரமங்களை ஸுர்யோபநிஷத், ஸுர்யதபினி உபநிஷத், சாந்தோக்ய உபநிஷத், தைத்ரீய ஆரண்யகம், ப்ருஹதாரண்ய உபநிஷத், ஆதித்யஹ்ருதயம் முதலிய க்ரந்தங்கள் விவரிக்கின்றன. ஸுர்ய வம்ஸத்தில் உதித்த ராமனைப்பற்றி ஆயிரக்கணக்கானக்ருதிகள் செய்த ஸ்ரீத்யாகப்ரஹ்மம், ஸ்ரீஸுர்யமூர்த்திக்கும், தன் (Indirect) நமஸ்காரத்தை தெரிவித்ததாகச் சொல்லலாம்.

இப்படியாக "ஸிவாதி ஷண்மதமுல கூட முலன்முப்பதி முக்கோடி ஸுராந்தரங்க பாவம்புல நெரிகி ...... த்யாகராஜாப்துலைனவா ரெந்தரோ மஹானுபாவுலந்தரிகி வந்தனமு" என்று ஒன்பதாவது சரணத்தில் நமஸ்கரித்துக் கொள்ளும் போது, ஆறுவிதமான மதாசாரங்கள் மூலம் பரம் பொருளைத் தேடி அடைந்த மஹான்களை, முப்பத்து முக்கோடி தேவர்களின் அந்தரங்க அபிப்பிராயங்களை அறிந்தவர்களாக ஸ்ரீ ஸத்குரு விளக்கினார். மிகுந்த ஒன்பதாவது சரணத்தின் வாக்யபகுதி

भाव राग लयादि सौख्यमुचे चिरायुवुल गलिगि निरवधि सुखात्मुलै त्यागराजाप्तुलैनवारेंदरो महानुभावुलन्दरिकि वन्दनमु என்பது.

ஷண்மதங்களின் அனுஷ்ட்டானங்களை கடை பிடித்து, பாவ, ராக லயத்தோடு, ஆனந்தமயமான கீர்த்தனங்களைப் பாடி, பரம் பொருளைக் கொண்டாடி, அவன் அனுக்ரஹத்தால் நீண்ட ஆயுளைப் பெற்று, அழிவே இல்லாத ஸுகத்தை அடைந்து, த்யாகராஜனுக்கு மிகவும் வேண்டியவர்களாக இருக்கும் அத்தனை பெரியோர்களுக்கும் ஸ்ரீ ஸத்குரு தனது வினயம் மிகுந்த வணக்கங்களை தெரிவித்தார்.

ஸ்ரீராக பஞ்சரத்னத்தின் கடைசி சரணம்

प्रेम मुप्पिरिगोनु वेळ नाममु दलचुवारु
रामभक्तुडैन त्यागराजनुतुनि निजदासुलैन वारॆंदरो
महानुभावुलन्दरिकि वन्दनमु

என்பது ஸ்ரீராக பஞ்சரத்னத்தின் பத்தாவது சரண வாக்யங்களாகும்.

பக்தி நிறைவால், மெய்மறந்து, ராம நாமத்தையே த்யானிக்கும், "ப்ரேம முப்பிரிகோனு வேள நாமமு தலசுவாரு" என்ற ராம சைதன்யர்கள், ராம பக்தி மிகுந்த த்யாகராஜனால் போற்றப்பட்ட ஸ்ரீராம சந்த்ரனுடைய உண்மைபக்தர்கள் (ராமபக்துடைன த்யாகராஜநுதுனி நிஜதாஸுலு) என இங்கு ஸ்ரீஸத்குரு சொன்னார்.

அப்பேற்ப்பட்ட உண்மையான ராம பக்தர்கள் रामनाम च सदा स्मरणीयम्, लीलया भवजलं तरणीयम् என்று உபதேஸித்து ராம த்யானத்தால், சுலபமாக ஸம்ஸார ஸாகரத்தை கடக்கும் வழியை நமக்கு காண்பித்திருக்கிறார்கள். அப்பேற்ப்பட்ட முக்தி மார்க்க தர்ஸிகளான பாகவதோத்தமர்கள் எல்லோருக்கும் எனது

தாழ்ந்த வணக்கங்கள் என ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மம் இங்கு கூறினார். அவர்கள் வழியை கடைபிடித்து "தெலிஸி ராம சிந்தனதோ நாமமுசேயவே" ई मेनु गलिगिनन्दुक सीताराम-नाममे वल्कवलेनु (வராளி), மேலுமேலு ராம நாம ஸுகமீ தரவோ மனஸா பால லோசன फाल लोचन வால்மீகாதி பாவா बाला நிலஜாதுலு ஸாக்ஷிக (ஸௌராஷ்ட்ர ராகம்), ராம ! நீயெட ப்ரேம ரஹிதுலகு நாமருசி தெலுஸுனா ? (கரஹரப்ரியா), சுகி யெவரோ ராம நாம சுகியெவரோ (கானட), ராம நாமம் பஜரே மானஸ (மத்யமாவதி) ஸ்மரணே சுகமு பாம நாம (ஜனரஞ்சனி) என்ற தனது கீர்த்தனங்கள் மூலம், ஸ்ரீத்யாகப்ரஹ்ம்மம் ராம நாமத்தின் ருசியை நமக்கும் தெரிவித்தார்.

ஸ்ரீராம தாஸர்களின் உயர்வை அறிந்து, அவர்களுடைய கோஷ்டிகளைத் தேடிச் சேர வேணும் என்ற உண்மையை நமக்கறிவித்த ஸ்ரீத்யாகராஜர் தனது கன்னட ராக கீர்த்தனத்தில் "இதே பாக்யமுகாகேமி யுன்னதிரா ராம, ஸதா நீ பதபங்கஜமுலனு ஸம்மதமுகா ஸேவிஞ்சு வாரிகி" என்று சொன்னார். ஹே, ராமா ! உனது பாதத்தாமரைகளை எப்போதும் பூர்ண மனதுடன் ஆராதிப்பவர்கள், ப்ரஹ்ம்மானந்தத்தை அனுபவிக்கும் பாக்யசாலிகள். அவர்களுக்கு வேறு ஏதும் தேவை இல்லை என ஸ்ரீ ஸத்குரு தெரிவித்தார்.

"ஸுந்தர தஸரத நந்தன ஹ்ருதயாரவிந்தமுன
நின்னுஞ்சிதானே ப்ரஹ்ம்மா
னந்த மனுபவிஞ்சி அதியுகாக இந்து தருமொலந்தரினி
ஸுரப்ருந்தபூஸுர
ப்ருந்தமுல தானெந்து கனி ஆனந்தமுக நீயந்து

பாவனஜெந்துத்ஸ"ண்டுவாரி (இதேபாக்யமுகா)

ஆஸ பாஸமுலதெக கோஸி அன்னியுமதி ரோஸிகர்மமு
பாஸி நினுகருணா

வாரா ஸியனி பூஜஜேஸிதுஸ்ஸங்கதி 'ஜேஸிமேனு
காஸிஜெந்தக ஸ்ரீஸ தேவா

தீஸ நினு காசீஸநுதுடனி ஆஸ நீயெடகீஸ பக்தியு
ஜேஸினவாரிகி (இதேபாக்யமுகா)

போகீஸயன நீவேகதியினி பட்டி ராகாதுல
தோடிபூரிதபவ

ஸாகரமுனு தாடி ஸந்ததமுனு யாகபாலன ஜாகருக
ஸதாகதிஜஹித யோகிநுத

வேதாகமாதுல வேகநுதினிடு பாகவதுடகு
த்யாகராஜு"னி (இதேபாக்யமுகா)

அழகு மிகுந்த தஸரத குமாரனான உன்னைத்தங்கள் ஹ்ருதயத்தாமரையில் அமர்த்தி, அந்த அனுபவத்தின் மூலம் பேரின்பம் அனுபவிப்பவர்கள் இளம்பிறையைத் தனது ஜடையில் அணிந்த மஹேஸ்வரன், தேவகணங்கள் நரோத்தமர்கள் ஆவர்கள். உன்னிடம் தணியாத பக்தி கொண்ட பாகவதோத்தமர்கள், நான் என்ற அஹங்கார சிந்தனைகளை வேருடன் அறுத்து, தம் ஸ்தானங்கள் எதற்கு என்ற உண்மையை புரிந்து கொண்டு உன்னிடமுள்ள அசலபக்தியால் பேரானந்தம் அடைகிறார்கள். लभन्ते ब्रह्मनिर्वाणमृषयः क्षीणकल्मषाः । छिन्नद्वैधाः यतात्मानः सर्वभूतहिते रताः । என்ற கீதாச்சார்யன் வாக்யப்படி தங்கள் தோஷங்களை எல்லாம் விலக்கி, தங்களுடைய ஸந்தேஹங்கள் எல்லாம் அழிந்து, புலன்களை எல்லாம் அடக்கி, காம்யகர்மாவில் பற்றுகள் அழிந்து, கருணைக் கடலான உன்னிடமே மனதை செலுத்தி,

துஷ்டர்களுடைய கோஷ்டியை வெறுத்து, தனது தாயை உறுதியாகப் பற்றிக் கொண்டு இருக்கும் குரங்குக் குட்டியைப் போல் நீயே ஜீவனம், ரக்ஷணம் என்ற அனன்யபக்தியுடன் உன்னிடம் பரந்யாஸம் செய்தவர் களுக்கு வேறு தேவை ஏது என்று ஶ்ரீத்யாகப்ரஹ்ம்மம் கன்னட ராக கீர்த்தனத்தில் சொன்னார். தங்கள் ஆயுளின் ஒவ்வொரு வினாடியிலும், வேத, வேதாந்தங்களின் அர்த்தங்களை நன்றாக புரிந்து கொண்டு, விசேஷ ஞான சம்பத் அடைந்து, ஸம்ஸாரக் கடலைத் தாண்டும் உன்னடியார் போன்ற பாக்யஸாலிகளுக்கு வேண்டுவது ஒன்றும் கிடையாது என இங்கு ஶ்ரீ ஸத்குரு சொன்னார்.

இப்படியாக, பாகவதோத்தமர்களின் வாழ்க்கை களின் உயர்வு பற்றிய உண்மைகளை நன்றாக தெரிந்து கொண்ட ஶ்ரீ த்யாகப்ரஹ்ம்மம், "எந்தரோ மஹானுபாவு லந்தரிகி வந்தனமு" என்ற அத்புதமான ஶ்ரீராக பஞ்சரத்ன கீர்த்தனத்தில், ஶ்ரீராம பக்தர்களாகிய ஸத்குருக்களின் மஹிமைகளை நமக்கு எடுத்துச் சொல்லி, அவர்களுடைய திருவடியை ஆஸ்ரயித்து இருப்பதால், பாகவத நிஷ்டை என்ற ஸரணாகதி மார்க்கம் மூலமாக நாம் எல்லோரும் ஶ்ரீராம சந்த்ரனின் திவ்ய அனுக்ரஹங்களை தவறாது பெற்று, முக்தனாகி, शुभाँल्लोकान्प्राप्नुयात्पुण्यकर्मणाम् என்ற கீதாச்சார்யன் சொன்ன மேலான நிலையை அடைந்து விடுகிறார்கள்.

மஹாபாகவதரான ஶ்ரீ த்யாகப்ரஹ்ம்மம் நமக்கு உதவுவதற்காக பரம கருணையுடன் அருளிய பஞ்சரத்ன கீர்த்தனங்களைப்பற்றி எழுத புத்தியையும், சக்தியையும் அளித்த நமது ஸத்குருவையும், அவருடைய ஜீவாதாரமான ஶ்ரீ ஸீதா லக்ஷ்மண ஹனுமத்

ஸமேதராமசந்த்ர மூர்த்தியையும், தெண்டனிட்டு வணங்குகிறேன். ஸ்ரீ த்யாகப்ரஹ்மம் போன்ற ராம பக்தர் களுடைய பாதாரவிந்தந்தங்களை ஆஸ்ரயித்தவர்களுக்கு, ஆரோக்யமும், ஐஸ்வர்யங்களும், கீர்த்திகளும் அமோஹமாக சேர்ந்து, கடைசியில், அவர்கள் ஸ்ரீராம சந்த்ரனின் பொற்றாமரைத் திருவடிகளை அடைவார்கள் என்பதை பின் வரும் ஸ்லோகம் தெரிவிப்பது, தலை சிறந்த உண்மையாகும்:

श्री राम भद्राश्रितसद्गुरुणां पादारविन्दं भजतां नराणाम् ।
आरोग्यमैश्वर्यमनन्त कीर्तिरन्ते च विष्णोः पदमस्ति सत्यं ॥

ஸ்ரீராம பத்ராஸ்ரித ஸத்குருணாம் பாதாரவிந்தும் பஜதாம் நராணாம்
ஆரோக்யமை ஸ்வர்யமனந்த கீர்த்திரந்தே சவிஷ்ணோ: பதமஸ்தி ஸத்யம்

இந்த பஞ்சரத்ன கீர்த்தனைகள் பற்றிய கடிதங்களில், தெரியாது செய்யப்பட்ட அர்த்த வித்யாஸங்கள், கருத்து வேற்றுமைகளை, பெரியோர்கள் க்ஷமிக்க வேண்டுகிறேன்.

कायेन वाचा मनसेन्द्रियैर्वाबुद्ध्यात्मना वा प्रकृतेः स्वभावात् ।
करोमि यध्यत् सकलं परस्मै नारायणायेति समर्पयामि ॥
यदक्षरपदभ्रष्टं मात्राहिनं तु यद्भवेत् ।
तत्सर्वं क्षम्यतां देव नारायण नमोऽस्तुते ॥
विसर्गबिन्दुमात्राणि पदपांदाक्षराणि च ।
न्यूनानि चातिरक्तानि क्षमस्व पुरुषोत्तम ॥

அபராத க்ஷாமண ப்ரார்த்தனையுடனும், ஸ்ரீ த்யாக ப்ரஹ்மம் நமக்கு அருளியிருக்கும் ஸ்ரீராம சந்த்ர மங்கள ஹாரத்தி கீர்த்தனத்துடனும் இக்கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

பல்லவி: "நீ நாம ரூபமுலகு நித்ய ஜய மங்களம்

அனுபல்லவி: பவமான ஸுதுடுபட்டு பதாரவிந்த முலகு

சரணங்கள்: (1) பங்க ஜாக்ஷி நெலகொன்ன யங்கயுக முனகு

(2) நவிவாரி கேருசிரு நவ்வுகலமோமுனகு

(3) நவமுத்தாஹாரமுலு நடியிஞ்சே யுரமுனகு

(4) ப்ரஹ்லாத நாரதாதி பக்துல பொகடுகண்டே

(5) ராஜீவ நயன த்யாக ராஜ்விநுதமைன (நீ நாம ரூபமுலகு)

## ஸௌராஷ்ட்ர ராக மங்களாஸாஸன கீர்த்தனம்

(கருத்து) பல்லவி

ஹே ராம சந்த்ரா, உனது பாவனத்திருநாமத்திற்கும், உன்னுடைய திவ்யஸௌந்தர்ய ரூபத்திற்கும் எப்பொழுதும் மங்களம் உண்டாகட்டும்.

அனுபல்லவி

ஆஞ்ஜநேயர் என்ற உனது பரம பக்தன் பற்றிய உனது பாதகமலங்களுக்கும் எப்பொழுதும் மங்களம் உண்டாகட்டும்.

சரணம் (1) ஹே, லக்ஷ்மீ நாராயணா! ஸ்ரீ தேவி அமர்ந்திருக்கும் உனது திருமடி ப்ரதேஸத்திற்கும் எப்பொழுதும் மங்களம் உண்டாகட்டும்.

சரணம் (2) சந்த்ரனை ஜயிக்கும் புன்னகை உள்ள உன் வதனாரவிந்தத்திற்கும்
எப்பொழுதும் மங்களம் உண்டாகட்டும்.

சரணம் (3) ஜ்வலிக்கும் நவரத்னங்கள், முத்துக்கள் இழைத்த ஹாரங்கள்
உனது திருமார்பில் அசைந்தாடுகின்றன.
அந்த அழகான ஹாரங்களுக்கும்
எப்பொழுதும் மங்களங்கள் ஏற்படட்டும்.

சரணம் (4) ப்ரஹ்லாதர், நாரதர் போன்ற பரம பாகவதர்களால்
ஸேவித்துக் கொள்ளப்படும், உனது திருநாமத்திற்கும்,
உனது திருஉருவிற்கும் எப்பொழுதும் மங்களம் உண்டாகட்டும்

சரணம் (5) செந்தாமரைக் கண்ணனே !
த்யாகராஜனால் துதிக்கப் படுபவனே !
உனது திருநாமத்திற்கும், உனது திருஉருவிற்கும் எப்பொழுதும் மங்களம் உண்டாகட்டும்.

ஆடிமாதத்தின் பதினெட்டாம் பெருக்கு தினமான இன்று, நமது ராம பக்தி, ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்மத்தின் ஆசீர்வாதத்தால் வெள்ளமாக பெருக வேணும். ஸ்ரீ த்யாகப்ரஹ்ம்ம பரமாசார்யாய நம:

உனதன்புள்ள தம்பி,
சடகோபன்

AUGUST 1989 சுக்ல ஆடி மீ 18

Dr. Varadachari Sadagopan hails from Sri Oppiliappan Sannadhi in Tanjore District. He has been a resident of USA since 1958. Presently, he is serving as the Divisional Manager for Technical Relations of IBM Research Division in New York, USA. He is scientist by training and has earned six degrees, the highest of which is the Doctor's degree from Massachusettes Institute of Technology. He has published 60 Technical papers in the field of Electronic Materials and has 6 U.S. Patents to his credit.

He has also served as Special Assistant to the Secretary General of the United Nation's Conference on Science and Technology at Geneva, Switzerland.

He is deeply interested in the Tamil and Sanskrit works of Azhwars, Nayanmars and other Acharyas.



|| ஸ்ரீ ராமஜெயம் ||

# Picture Index and References

All images are digitally manipulated using GIMP. (http://www.gimp.org)

| Sl No | Picture | Source |
|---|---|---|
| 1 |  | From varahappaiyer lane Thanjavur where the AarAdhana Moorthy of Sri Sadhguru Thyagaraja Swamigal, Sri SithA SamEtha Raamachandran is present even today. Picture courtesy Sri Thyagaraja Iyer, one of the descendants of swamigal’s family and one who conducts daily araAdhana to the moorthy’s. Art belongs to Sri Nandyala Ramamurthy Bangalore. |
| 2 |  | From the BrundhAvanam of Saint ThyagarAja at ThiruvayyARu. |
| 3 |  | Photo taken during a visit to the ancestral house of Saint ThyagarAja at Thiruvarur where he was born and brought up. Artist - R.Natarajan Chennai 64 |
| 4 |  | From the BrundhAvanam of Saint ThyagarAja at ThiruvayyARu. |
| 5 |  | Scanned from a take-home flyer from Rangachari Silks Malleshwaram, Bangalore. |
| 6 |  | From the BrundhAvanam of Saint ThyagarAja at ThiruvayyARu. |
| 7 |  | Forwarded by the author from the website www.pbase.com/svami. |
| 8 |  | From the cover page of the first edition book. |

## About the Author

Dr.Varadachari Sadagopan hails from Sri Oppiliappan Sannadhi in Thanjavur district. He is a resident of the USA for a long time. At the time of retirement in 1994 from IBM Research Division, He was the University Relations Executive as the interface with the world wide academic community . He is scientist by training and has earned six degrees, the highest of which is the Doctor's degree from Massachusetts Institute of Technology. As a Research Scientist , he has published 50 technical papers in the field of Electronic materials and has 6 US Patents to his credit. Since his retirement, he is serving the position of the President of Networked Multimedia Services, a company dedicated to Asynchronous Learning in the fields of Computer Science , Information Technology and Telecommunications .

Prior to his service with IBM, He has served as special assisitant to the Secretary General of the United Nation's Conference on Science and Technology at Geneva, Switzerland.

He is deeply interested in the Tamil and Sanskrit works of Azhwars and other acharyas. He is the Vice Chairman of Sri Ranganatha Temple in Pomona, NewYork and is on the Board of Trustees of Sri Nrusimha Priya Trust, Chennai . He is active in many temple kaimkaryams in dhivya dEsams of India .

